Qvbm211,M82
M82
161994

# நற்போதகம்.

௨. பெபுருவரி மீ. ௲௮௮௨௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### விசுவாசப்பிரமாணம்.

### ௰-ம் பிரிவு.

### சரீரம் உயிர்த்தெழுதலும், நித்தியஜீவனும் உண்டு என்பதைப் பற்றி.

(தொடர்ச்சி.)

வினா. உயிர்த்தெழுதலில் நீதிமான்களுக்குக் கிடைக்கும் பங்கென்ன?

விடை. அவர்கள் நித்திய சந்தோஷத்துக்கென்று உயர்ப்பிக்கப்பட்டு, மோட்சத்தில் தேவதூதர், பரிசுத்தவான்களோடு ஒரே நகரத்தாராவார்கள்.

உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. சங். 16: 11.

சிலர் நித்தியஜீவனுக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாயமண்டலத்து ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும், என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். தானி. 12: 2, 3.

மத். 13: 43. 25: 33, 46. யோவா. 3: 36. 5: 29. ரோ. 8:

17, 18. 1 கொரி. 2: 9. 13: 12. கலா. 6: 8. 2 தீமோ. 4: 8.
2 பேது. 1: 11. வெளி. 7: 15—17. 21: 4.

விஞ. தேவபக்தர் எல்லாரும் சம மகிமையடைந்திருப்பார்களா?

விடை. அப்படி நினைக்க ஏதுவில்லை. ஆனாலும் அவர்களுடைய பக்தி வைராக்கியம், பரிசுத்தம் என்பவைகளின் அளவுக்குத்தக்கதாக அவர்களுடையும் மகிமையுமிருக்கும் என்று எண்ணலாம். எப்படியும் மோட்சத்திலுள்ள பேரின்பத்தின் தாழ்ந்தபடி நாம் நினைக்கக்கூடியதிலும் மிகவும் அதிகமாகவேயிருக்கும்.

அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். மத். 16: 27.

லூக். 19: 16—19. யோவா. 14: 2. 1 கொரி. 15: 41, 42.

விஞ. பொல்லாதவர்களுடைய பங்கு எப்படிப்பட்டதாயிருக்கும்?

விடை. அவர்கள் நித்திய நிந்தைக்கும், தண்டனைக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பிசாசுக்களோடு அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடத்துக்குப் போய்ச் சேருவார்கள். அங்கே அவர்கள் பிசாசினாலும், ஒருவராலொருவரும், தங்கள் சொந்த மனச்சாட்சியினாலும் பகலிலாவது இரவிலாவது இளைப்பாறுதலில்லாதவர்களாக ஓயாத வேதனையை அடைந்துகொண்டிருப்பார்கள்.

பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார். மத். 3: 12. லூக். 3: 17.

மத். 10: 28. 25: 46. லூக். 12: 5, 46. 13: 28. 16: 24.

(நம்முடைய இரட்சகர் இலாசரு, ஐசுவரியவானைப்பற்றிச் சொன்ன உவமை முழுமையையும் பார். லூக். 16: 19—31.)

யோவா. 3: 36. 5: 29. ரோ. 2: 8, 9. கலா. 6: 8. 2 தெச. 1: 8, 9. வெளி. 14: 10, 11. 20: 10.

விஞ. ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டவர்களுடைய துன்பத்தில் பல அளவுகள் இருக்குமா?

விடை. இருக்கும். அப்படி நினைக்கும்படி வேதவாக்கியம் நமக்கிடங்கொடுக்கிறது. ஆனால் அந்த வேதனையில் மிகவும் தாழ்ந்த வகை நாம் நினைக்கக் கூடியதிலும் பயங்கரமானதாயிருக்கும்.

நியாயத்தீர்ப்புநாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும். மத். 10: 15.

மத். 11: 21, 22. லூக். 12: 47, 48.

மேற்சொல்லிய வேதவாக்கியங்கள் மரணத்துக்குப் பிற்பாடு...
ல்லாதவர்களுக்குண்டாயிருக்கும் நிலைமை எவ்வள...
கரமானதாயிருக்கும் என்ற எண்ணத்தை உண்டா...

# நற்போதகம்.

க. ஜனுவரிமீ. ௲௮௮௨ ௵.

Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினுவிடை வியாக்கியானம்.

### கூ-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

கூ-ம் பிரிவு.

பாவமன்னிப்பைப் பற்றி.

(தொடர்ச்சி.)

விஞ. பாவம் தேவனுக்கு விரோதமாகச் செய்யப்பட்டதென்றால், பாவமன்னிப்பை யாரிடத்திலிருந்து பெறும்படி பார்க்கவேண்டும்.

விடை. தேவன் ஒருவரேயன்றி பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? மாற். 2: 7.

விஞ. பாவமன்னிப்பையும், தேவனால் அங்கீகரிக்கப்படுதலையும் அடையும்படியான வகையைக்குறித்து என்ன குறிப்புகளைத் தேவன் மனுஷருக்குக் கொடுத்திருக்கிறார்?

விடை. பழையஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு, பல முன்னடையாளங்களினாலும், சடங்காசாரங்களினாலும் அதைத் தெரியப்படுத்தியிருக்கிறார்.

ஆதாமுக்கு. ஆதி. 3: 15.
ஆபேலுக்கு. ஆதி. 4: 4.
நோவாவின் பேழையினால். ஆதி. 15: 1, 10.
ஈசாக்குக்கு. ஆதி 22: 7, 8.

161994

யாக்கோபுக்கு. ஆதி. 28: 12.
பஸ்கா ஆட்டினால். யாத். 12 5.
கிருபாசனத்தினால். யாத். 25: 22.
பிரதான ஆசாரியனால். யாத். 28: 1.
போக்காடாக விடப்படும் வெள்ளாட்டுக் கடாவினால் லேவி. 16: 8—22.
வெண்கலச் சர்ப்பத்தினால். எண். 21: 6—9:
அடைக்கலப் பட்டணங்களால். எண். 35: 12.
ஏசாயாவுக்கு. ஏசா. 53: 5, 6, 10. 59: 16.
சகரியாவுக்கு. சகரி. 13: 1.

ஆனால் பாவியின் இரட்சணிய வழியைப் பற்றிய தெளிவான அறிவு, கிறிஸ்துவின் வருகைவரைக்கும் அடக்கிவைக்கப்பட்டிருந்தது.

ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார். மத். 1: 21.

மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். மத். 20: 28. மாற். 10: 45.

மத். 26: 28. யோவா. 3: 16. 15: 13. அப். 10: 43. 13: 38. 20: 28. ரோ. 4: 25. 5: 8, 10. 8: 32. 1 கொரி. 6: 20. 7: 23. 15: 3. 2 கொரி. 5: 21. கலா. 1: 4. 3: 13. 4: 4, 5 எபே. 1: 7. கொலோ. 1: 20. 1 தீமோ. 1: 15. 2: 6. தீத். 3: 5. எபி. 7: 27. 9: 22, 26. 10: 12. 1 பேது. 1: 18, 19. 3: 18. 1 யோவா. 4: 10. வெளி. 1: 5. 5: 9. 13: 8.

வினா. தேவன், இயேசுகிறிஸ்துவின்மூலமாய் தம்மண்டைக்கு பாவமன்னிப்பின் அவசியத்தை உள்ளபடி உணர்ந்து, வருகிறவர்களின் பாவங்களை மன்னிப்பார் என்பதற்கு, என்ன நிச்சயத்தைக் கொடுத்திருக்கிறார்?

விடை. ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர். யாத். 34: 7. எண். 14: 18.

ஆண்டவரே, நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர். சங். 86: 5.

5L— ME 2—

சங். 130: 4. ஏசா. 1: 18. 43: 25. 44: 22. 55: 7. எரே. 33: 8. 50: 20.

எசே. 18: 21, 22. தானி. 9: 9, 10. மீகா. 7: 18. அப். 5: 31. 1 யோவா. 1: 9.

பாவிகள் தேவகோபத்துக்கும், சாபத்துக்கும் உள்ளானவர்களாயிருக்கிறார்கள் என்பதை நீதானே உணருகிறாயா? அல்லது



"தேவன் அதைப்பற்றி கவலைப்படார்" என்று, உன் இருதயத்தில் சொல்லி, பரலோகத்தின் இராஜாவை எதிர்த்து, வல்லமையுள்ள கரத்தினால் பாவஞ்செய்கிறாயோ? உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்று நீ நினைத்தாயானால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பாவமன்னிப்பைத் தேடினாயா? அப்படித் தேடவில்லை என்றால் இப்பொழுதே பாவமன்னிப்புக்காக கேள். ஏனென்றால் (வெளி. 22: 17.) "விருப்பமுள்ளவன் வரக்கடவன்" என்று சொல்லியிருக்கிறார். அவர் தாவீது, மனாசே, பேதுரு என்பவர்களுக்கு மன்னித்தார். உனக்கும் மன்னிப்பார். அவர் தம்மேல் உன்னுடைய சுபாவத்தை எடுத்துக்கொண்டார்.—அவர் தம்மை உனக்குப் பதிலாக வைத்துக்கொண்டார்.-நீ மீறின நியாயப்பிரமாணத்தை அவர் நிறைவேற்றி, உன்னுடைய குற்றங்களினிமித்தம் வரவேண்டிய தண்டனையை அவர் பட்டு இவ்விதமாய் தேவனுடைய நீதிக்கு திர்ப்திசெய்தார். நீ அவரிடத்தில் அடைக்கலத்துக்காக ஓடினால் அவர் உன்னைப் பார்த்து (மத். 9: 2.) "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது.—கர்த்தர் உன் பாவத்தை நீக்கினார்" என்று சொல்லுவார். ஆனால் உன் பாவங்கள் மன்னிக்கப்படாதவனாய் நீ மரிக்கவேண்டுமானால், நீ மறுபடியும் பிறவாதவனாக இருந்திருக்கவேண்டும்.

தேவனே, எப்பொழுதும் இரக்கஞ்செய்கிறதும், மன்னிக்கிறதும் தேவரீருடைய தன்மையும் இலட்சணமுமாயிருக்கிறது. நாங்கள் எங்கள் பாவங்களாகிய சங்கிலியால் கட்டுண்டிருந்தாலும் உமது உருக்கமான மிகுந்த இரக்கத்தினால் எங்களைக் கட்டவிழ்த்தருளும். ஆமென்.

---

## ௰-ம் பிரிவு.

---

### சரீரம் உயிர்த்தெழுதலும், நித்தியஜீவனும் உண்டு என்பதைப் பற்றி.

---

வினா. விசுவாசப்பிரமாணத்தின் கடைசி இரண்டு வாக்கியங்களெவை?

விடை. சரீரம் உயிர்த்தெழுதலும், நித்தியஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்.

வினா. மனுஷன் எந்தவகையில் மற்றப் பிராணிகளைவிட வித்தியாசமுள்ளவனாயிருக்கிறான்?

விடை. மனுஷனுக்கு ஜீவாத்துமாவுண்டு. அது நித்தியகாலமிருக்கும். ஆனால் மிருகாதிகளுடைய ஆவி, அவைகளின் தேகத்தோடேயே அழிந்துபோகிறது.

நித்தியஜீவனுக்கு உயிர்த்தெழுந்திருத்தல், கிறிஸ்துவின் முக்கியமான உபதேசங்களிலொன்றும் (எபி. 6: 2.) கிறிஸ்துவின் அவயவங்கள் அடையும் நன்மைகளில் ஒன்றுமாயிருக்கிறது.

வினா. மரணமென்றாலென்ன ?

விடை. ஆத்துமா சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோவதே.

இந்தப்பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பவரப்பண்ணும். 1 இராசா 17: 21.

இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும்.

வினா. மனுஷர் மரித்தபின் அவர்களுடைய சரீரங்களுக்குச் சம்பவிப்பதென்ன ?

விடை. அவைகள் அழிந்துபோவதினால் கரைந்துபோய், மறுபடியும் தூளாய் மாறிப்போகும்.

அழிவைப் பார்த்து, நீ எனக்குத் தகப்பன் என்கிறேன்; புழுக்களைப் பார்த்து, நீங்கள் எனக்குத் தாயும் எனக்குச் சகோதரியும் என்கிறேன்; அப்போது தூளில் ஏகமாய் இளைப்பாறுவோம். யோபு 17: 14, 16.

மாம்சமான யாவும் ஏகமாய்ச் ஜீவித்துப்போம். மனுஷன் தூளுக்குத் திரும்புவான். யோபு 34: 15.

சங். 22: 15. 2 கொரி. 5: 1.

மரணமானது வேதத்தில், சில சமயங்களில் நித்திரை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆத்துமாவின் நித்திரையையல்ல, கடைசி நாள்வரைக்கும் சரீரத்தின் இளைப்பாறுதலையே குறிக்கிறது.

இப்பொழுதே மண்ணில் படுத்துக்கொள்வேன். யோபு 7: 21.

நான் மரண நித்திரை அடையாதபடிக்கு என் கண்களைத் தெளிவாக்கும். சங். 13: 3.

நம்முடைய சகோதரனாகிய இலாசரு நித்திரையடைந்திருக்கிறான். யோவா. 11: 11.

இது ஏனோக் (ஆதி. 5: 24.) எலியா (2 இரா. 2: 11.) என்பவர்கள் தவிர மற்றெல்லாருக்குமுரிய பொதுவான பங்காயிருக்கிறது. அதற்கு தப்பிக்கொள்ளுதல் இல்லை.

நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய். ஆதி. 3: 19.

சங். 89: 48. ரோமர் 5: 12. எபி. 9: 27.



வினா. மரணத்தில் மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு நேரிடுவதென்ன ?

விடை. அவைகளுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற பாக்கியமுள்ள இடத்துக்காவது, நிர்ப்பாக்கியமுள்ள இடத்துக்காவது போகும்.

இலாசருவையும், ஐசுவரியவானையும் குறித்து இரட்சகர் சொல்லுகையில்—ஐசுவரியவான் நரகத்தில் வேதனைப்பட்டான்; இலாசரு தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான் என்று சொல்லுகிறார். லூக். 16: 23.

லூக். 23: 43, 46. அப். 7: 59. எபி. 12: 23. வெளி. 6: 9, 10.

வினா. மனுஷருடைய சரீரங்கள் எவ்வளவுகாலம் கல்லறைகளிலிருக்கும் ?

விடை. உயிரோடெழுந்திருக்கும் காலம்வரைக்கும் இருக்கும்.

அறுப்பு உலகத்தின் முடிவு. மத். 13: 39.

வினா. உயிர்த்தெழுதலாவதென்ன ?

விடை. பிரிந்துபோன சரீரமும் ஆத்துமாவும் திரும்ப ஒன்றாய்ச் சேர்வதே.

பள்ளத்தாக்கு எலும்புகள் நிறைந்ததாயிருந்தது. அவைகள் உயிரடைந்து, காலூன்றி நின்றன. எசே. 37: 1, 7, 8, 10.

முதலாவது சரீரத்தையும் ஆத்துமாவையும் ஒன்றாய் இணைப்பது எப்படி தேவனுக்கு இலகுவோ, அப்படியே பிரிந்துபோன சரீரத்தையும் ஆத்துமாவையும் திரும்ப இணைப்பதும் அவருக்கு இலேசான காரியமே.

தேவன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாத காரியமென்று நீங்கள் எண்ணுகிறதென்ன ? அப். 26: 8.

வினா. இப்பொழுது நமக்கு இருக்கிற இந்தச் சரீரமே எழுந்திருக்குமா ? அதில் மாறுதல் இருக்கமாட்டாதா ?

விடை. நம்முடைய சரீரம் முன்னிருந்ததாகவே இருக்கும். ஆனால் அழிவுக்கேதுவான சரீரமாயிராமல், என்றைக்குமிருக்கத்தக்கதான சாயலையுடையதாக இருக்கும்.

பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் மேன்மையும், நித்தியமுமான கனமகிமையைத் தாங்கத்தக்கவைகளாகவும், பொல்லாதவர்களுடைய சரீரங்கள் சொல்லிமுடியாததும், நித்தியமுமான வேதனையை அனுபவிக்கத்தக்கவைகளாயும் இருக்கும்.

இல்

சென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்து, திருக்கும். 1 கொரி. 15: 44.

, 53.

1 கொரி. 15: 51, 52, 53. பிலி. 3: 21. 1 தெச. 4: 16, 17.

நாம் மரணசமயத்தில் இருந்த அதே குணங்களோடும் எழுந்திருப்போம்.

பொதுவான உயிர்த்தெழுதலைப்பற்றிய ரூபகாரங்கள் அநேகமுண்டு. இச்சீவகாலத்தில் பொல்லாதவர்கள் வாழ்வதும், நீதிமான்கள் துன்பங்கள் அடைவதும் உயிர்த்தெழுதல் உண்டு என்பதைப்பற்றிய பலமான எண்ணத்தைக் கொடுக்கிறது. பாவஞ்செய்த தூதர் தண்டிக்கப்பட்டார்கள்: ஏனென்றால் நீதிபரரும், பரிசுத்தருமாகிய தேவன் பாவமானது இஷ்டப்படி செல்லும்படி இடங்கொடுக்கக்கூடாது; மனுஷ சாதிக்கு பொதுவாக நன்மைகள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டும், தண்டனைகள் எச்சரித்து அறிவிக்கப்பட்டும் இருக்கின்றன. ஆதலால் இம்மையில் செய்கைக்குத்தக்க பலாபலன் செய்யப்படாததினாலே உயிர்த்தெழுதலிருக்கவேண்டுமென்பது தெளிவாகிறது. உயிர்த்தெழுதலில் ஒவ்வொருவனும் தன் சரீரத்தில் நன்மையானாலும், தீமையானாலும், தன் கிரியைகளுக்குத்தக்க பலனைப் பெற்றுக்கொள்வான். 2 கொரி. 5: 10. இதைப்பற்றி சந்தேகத்தைக் கொடுக்கத்தக்க யாதொன்றுமில்லை.

கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். யோவா. 12: 24.

1 கொரி. 15: 36.

ஆதாம் உண்டாக்கப்பட்ட மண்ணானது, இப்பொழுது இருக்கிற எவ்வகையான மண்ணையும்போலவே மாம்சத்தின் தன்மைக்கு வித்தியாசமானதாகவேயிருந்தது.

உயிர்த்தெழுதலின் உபதேசம் பழையஏற்பாட்டிலும் புதியஏற்பாட்டிலும் போதிக்கப்பட்டிருக்கிறது.

[ஆபிரகாம்] தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து [ஈசாக்கை] அவனைப் பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான். எபி. 11: 19.

யோபு 19: 25, 26. சங். 17: 15. 49: 15. ஏசா. 26: 19. தானி. 12: 2. ஓசே. 13: 14.

சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்று மறுதலித்தார்கள். ஆனால் பரிசேயரும், மற்ற யூதரும் உயிர்த்தெழுதல் உண்டென்று உறுதியாய் நம்பினார்கள். மத். 22: 23. மாற். 12: 18. அப். 23: 8. 1 கொரி. 15: 12.

மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றி: நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? தேவன் மரித்தோருக்குத்



தேவனாயிராமல் ஜீவனுள்ளோருக்கு தேவனாயிருக்கிறார். மத். 22: 31, 32. லூக். 20: 37, 38.

மோசே இதைச் சொன்னபோது, யாக்கோபு மரித்து இருநூறு வருஷமாயிருந்தது.

மத். 25: 31, 32. லூக். 14: 14. யோவா. 5: 28, 29. 6: 39. 11: 24. அப். 4: 2. 17: 18. ரோமர் 4: 17. 6: 5. 8: 11. 1 கொ. 6: 14 15: 13, 21, 42, 51. 2 கொரி. 4: 14. 1 தெச. 4: 13-16. யூதா 14.

வினா. இந்த பயங்கரமான நாளில் உயிரோடெழுப்பப்படுபவர்கள் யார்?

விடை. எக்காலத்திலும் ஜீவனோடிருந்த எல்லாரும்-ஆதாமுடைய சந்ததியில் பிறந்த நல்லார், பொல்லாருமாகிய ஒவ்வொருவருமே.

சகல ஜனங்களும் அவருக்குமுன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மத். 25: 32 அப். 24: 15. ரோ. 14: 10. 1 கொரி. 15: 22. 2 கொரி. 5: 10. வெளி. 20: 12, 13.

நம்முடைய உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் பலத்தினாலே உறுதிப்படுகிறது.

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். யோவா. 11: 25.

1 கொரி. 15: 21, 2 கொரி. 1: 9.

மரித்தோர் உயிர்த்தெழுந்ததைப் பற்றிய பல திருஷ்டாந்தங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனோக்கும், எலியாவும் தேகத்தோடு பரமண்டலத்துக்கேறினதைப்பற்றி முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

சறெப்தா ஊர் விதவையின் குமாரன் எலியாவினாலே உயிர்ப்பிக்கப்பட்டான். 1 இரா. 17: 22.

சூனேமியாளின் மகன் எலிசாவினால் உயிர்ப்பிக்கப்பட்டான். 2 இரா. 4: 35.

எலிசாவின் எலும்புகள் பட்டு, மரித்தவன் எழுந்திருந்தான். 2 இரா. 13: 21.

யாவீரின் மகளும், நாயீன் ஊர்விதவையின் மகனும், இலாசருவும் இரட்சகரால் உயிர்ப்பிக்கப்பட்டார்கள். மாற்கு 5: 42. லூக். 7: 12. யோவா. 11: 43.

தொற்காள், பேதுருவினால் உயிர்ப்பிக்கப்பட்டாள். அப். 9: 40.

ஐத்திக், பவுலால் எழுப்பப்பட்டான். அப். 20: 9, 12.

கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்பட்டிருக்கையில் அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் உயிர்த்தெழுந்து, பரிசுத்த பட்டணத்தில் காணப்பட்டார்கள். மத். 27: 52, 53.

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

இப்பரிசிவனேக எதிரொரு சிறுகுன்றம்
ஒப்பதோர் உயர்பூமி உளதென அதை நாடி
அப்பண வனுமோடி அணுக அத்திடர் மேலே
அப்புறம் குருசொன்று தோன்றுவ தெதிர் கண்டான். 507

மற்றதன் அருகெய்தி மானத விழியாலே
கொற்றவன் ஒருசேய் அக்குருசினில் அறையுண்டு
முற்றுகு செஞ்சோரி முழுகிய திருமேனி
குற்றுயி ரொடு நையக் கண்டனன் ஒருகோலம். 508

அக்கணம் வெரிந் மீதுற்றவினை கணிதொக்க
பொக்கணம் விழுந் தொல்லை பன்முறை புரண்டோடிப்
பக்கலி லுறுமீமப் படுகுழி யிடையாழ்ந்து
புக்குழி தெரியாமற் போயது புதைபட்டே. 509

விஞ்சிய கொடுஞ்சும்மை விழுதலு மறைவாணன்
நெஞ்சக மகிழ்ந் தியாக்கை சிமிர்ந்து நின்மலதேவின்
மஞ்சனிங் குதித்திட்டும் வரம்பில் புண்ணியத்தாலே
உஞ்சனன் அளியேனென் றுருகி யுள்ளுவந்தேந்தி. 510

மன்பதை உயிர்வாழ வரும் அருள் மணி மல்கும்
அன்புததியை நோக்கி ஆவியின் அனலாற்றி
என்புநெக்குள மாழ்கி யிருவிழிபுனல் கொள்ளப்
பொன்புனை சரணிழல் புக்கனன் புகலுற்றான். 511

வேறு.

சொல்லொன்றால் அனைத்துலகுந் தோற்றுவித்தாய் தோற்றியவை
எல்லாம் இங்கொரு படித்தா யின்றளவும் நின்றியல
வல்லாய் நீயோர் வரம்பு வைத்தாய் உன் வல்லமையைப்
புல்லேனே சொல்லிப் புகழ்ந்துரைக்கும் போதத்தேன். 512

உருட்டுவாய் வையகத்தை ஒருநொடியில் உலகொன்றும்
சுருட்டுவாய் ககனத்தைச் சூழ்சுடரை நிறுத்துவாய்
திருட்டுவாய் மனத்தினரைத் திரையாழி இடையமிழ்த்தித்
தெருட்டுவாய் அடியனையுன் திறஞ் செப்பற் பாலதோ. 513

ஆக்கவும் வல்லவனீ யிங்காக்குவித்த அனவரதம்
காக்கவும் வல்லவனீ யின்கருதுங்காற் கணப்பொழுதிற்
போக்கவும் வல்லவனீ யிப்பொல்லாங்கு பொறுத்துமுடி
சாய்க்க வருந்திறனென்னே தருமத்தின் தனிமூர்த்தி. 514



எப்பொருட்கும் இறைநீ சர்வேசனும் நீயென்றிருக்கச்
செப்பரிய பெருந்துன்பம் உனைச்சேருந் திறனென்னே
ஒப்பரிய திரியேகத் தொருவா உன் உள்ளன்பின்
வெப்பமிகும் அனலன்றோ இவ்வாறு விளைத்ததுவே. 515

நீதியால் மனுநாசம் நேருமெனப் பிணைநின்று
சாதியால் எந்தாயுன் தண்ணளியின் தகையேனும்
ஆதியானீ படும்பாடத்தனையும் அறிந்துள்ளம்
பேதியா தனையிங்ஙன் விடுத்ததுவே பெரிதம்மா. 516

வாழ்வாராம் நரப்புலையர் வந்துநடு நின்றொருவர்
தாழ்வாராம் அவர்பொருட்டுத் தாதைமுறை தப்பாமற்
போழ்வாராம் பட்டயத்தாற் பொன்றியொரு பரமசுதன்
வீழ்வாராம் ஈதென்னை வேந்தன் செங்கோன்முறைமை. 517

வானாடு தொழுதிறைஞ்சும் மகிமையெலாம் புறம்நிறுவிக்
கானாடு மலர்க்குழலோர் கன்னிகருப்பாசயத்துற்று
ஊனாடு முடலெடுத்திங் குயிர்ப்பலி நேர்ந்துதவினைநீ
ஆ! நாடற் கெளிதோநின் அன்புநிலை அச்சோவே. 518

மூன்றாய கவடுடைய முதுமூலத் தனிப்பொருளே
தேன்றோயு மலர்ப்பொழில் வாய்த்திருவுள்ளந் துயர்மேவி
ஊன்றோயுந் திருமேனி உதிரவெயர் உகுத்ததும்போய்
ஆன்றோய் இத்தனை துயரும் வேண்டுமோ அச்சோவே. 519

பாவிகளிற் பிரதான பாவிகொடும் பாவிமுழுப்
பாவி துணிகரப் பாவி பகுத்தறிவில் நின்மூடப்
பாவி விசுவாசமிலாப் பாவியதி சண்டாளப்
பாவியான் வந்தடைந்தேன் குமரேச பரிந்தருளே. 520

உசுவாசம் இனியிலை யென்றுயிரொடுங்கி உடற்றுருத்தி
நிசுவாசம் அகல்காறும் நின்அன்பை நெகிழவிடா
விசுவாச மெனக்கருளி வியனுலக மயலனைந்த
பசுவாசனையை யகற்றிப் பதியுலகம் பரிந்தருளே. 521

கைம்மாறு முளகொல்லோ கணிப்பரு நின்பேருதவிக்
கெம்மாவி யுடல்பொருள் மற்றிவை யொருமூன்றையுமின்னே
தம்மானின் னருளுக்கே தக்கணையாச் சமர்ப்பித்தேன்
வெம்மாய வினைதொலைத்துன் வீட்டுலகங் கூட்டுகவே. 522

ஆவலொடும் அருள்வேத அறநெறியைக் கடைப்பிடித்து
ஜீவலயம் வருமெனினும் திருவடிப்பற் றொழியாமே
பூவலயத் திடையுனக்காய்ப் பொன்றுமொரு சான்றாகக்
காவலநீ அடியேனைக் கடைக்கணிக்கக் கடவாயோ. 523

வேறு.

இன்னன திபகர்ந்திறைஞ்சு மெல்லையிற்
பொன்னிலத் தவரொரு புனிதர் மூவர்போந்
தன்னவன் விழிப்படஇ யஞ்சல் நின்வயின்
மன்னுக நம்சமாதான மாண்பென்றார். 524

மூவரி லொருவரா முதல்வன் மூர்த்தியுன்
ஜீவனுக் கழிவுசெய் தீய வெவ்வினை
யாவையுந் தொலைத்தனம் இடர்ப்படேலெனத்
தாவருங் கருணையிற் சாற்றினாரோ. 525

உந்து பேரன்பினுலுருகி யாங்கவன்
கந்தையைக் களைந்தொரு கவின்கொள் வெள்ளுடை
விந்தையாய்ப் புனைந்தனர் விசித்தவெங்கொடும்
பந்தமிற்றுக நடுநின்ற பண்ணவன். 526

மற்றொரு தூயவர் மகிழ்ந்து வேதியன்
நெற்றியிலொருகுறி நிலவக் கோட்டிவின்
பற்று செந்நெறி திகழ் பயணப் பத்திரம்
தெற்றென வருளிமற்றிது செப்புவார். 527

செந்நெறி யிதுவெனத் தெரிக்குமாதலில்
உன்னெறிக் குறுதுணையா மிதோர்ந்து நீ
நன்னெறிப் படில்வரும் நவையின்றும் விரைந்
திந்நெறி கடைப்பிடித் தேகற்பாலையால். 528

புண்ணிய நகரைநீ பொருந்து போதவண்
நண்ணிய வாயிலோர்க் கிதனை நல்கிடின்
உண்ணிலவிட வுனை உய்ப்பராமெனத்
திண்ணிதின் உணர்த்திநீ சேறியென்றனர். 529

இவ்வகை மூவரும் எதிர்ந்து தொண்டனுக்
குய்வகை உவந்தருள் புரிந்தவ் வொல்லையில்
செவ்விதின் மறைந்தனர் சிந்தையுள்ளுளே
நைவரும் அடியரை நாடும் நம்பிரான். 530

நாந்தமை வேதியன் கருதிக் கண்கனீர்
சொரிந் திருகரந் தலைசூடித் தோத்திரித்
தரந்தை நீத்தகங் களித் தடியனேனையும்
புரந்தமை யேயருட் புதுமையென்றனன். 531

வெரிதுறு சும்மையை விழுத்தி வெண்டுகில்
பரிவொடு நல்கியோர் பயணப் பத்திரம்
தெரிவுற அருளிய சீர்மையாவையும்
பிரிவற உள்ளினன் மறப்பில் பெற்றியான். 532



[illegible]கு சிலுவையை யெய்து முன்னர்யான்
செ[illegible] சஞ்சலச் சுமை சுமந்து தேம்பிய
அத்தனை துயரமும் அகன்றதே அஃதெத்
தெத்தனை பெரிய பாக்கிய மென்றேத்தினான். 533

புல்லியல் உலகமீயாத பொற்புறு
நல்லியல் மெய்ச் சமாதானம் நண்ணுமாற்
றல்லியல் மனத்தெளி வருளிக் காத்த அவ்
வெல்லையில் கருணையை இதயத்துள்ளினான். 534

காண்டகும் இரும்பினைக் கவருங் காந்தமொத்
தாண்டகை திருவருள் அகத்தை யீர்த்திட
மாண்டகு சாதனம் வகுத்துக் காட்டிய
சேண்டரு நெறிக் கொடு திருமினனரோ. 535

விள்ளருந் தீவினை விளைத்த வெந்துயர்
தள்ளுறப் படுதலில் தளர்ச்சி யின்றியே
உள்ளுறு முவகை முன்னுந்த உந்தலால்
கள்ளமில் உணர்ச்சியான் கடிதுபோயினான். 536

அருத்தியிற் பற்பல் யோசனை அகன்றுபோய்க்
கருத்தில் புன்மாக்களாற் கடப்பதற் கொணு
வருத்தமென்றொரு தடமலையை வானுறத்
திருத்தகு வேதியன் தெரியக் கண்டனன். 537

அம்மலைச் சாரலை அடுத்தங் கோர்சிறை
மும்மலத் தளையொடு முடங்கிப் பாந்தள்போல்
அம்ம! கேடுணர்கிலா அசடர் மூவர்தாம்
கைம்மிகு துயில் கொளக் கருதி நோக்கினான். 538

ஐயகோ இவர்நிலை அளிய ஆழியான்
வெய்ய கோபாக்கினி சுலவு மேலைநாள்
உய்யவோ மதிதுயில் உணர்த்தல் நன்றெனு
மெய்யவா உடன் அடுத்துரைத்து விள்ளுவான். 539

(இன்னும் வரும்.)

---

## தாவீதரசன் சரிதை.

### 5. சவுல் இராசா தாவீதைக் கொல்லும்படி பின்தொடரல்.

1 சாமு. 23, 24-அதி. கி. மு. 1059—8.

---

தாவீது ஆரேத் (வெட்டு) என்ற காட்டிலிருக்கையில், பெலிஸ்தர் கேகிலாவின் (கோட்டை) மேல் யுத்தம்பண்ணுகிறதாகச் செய்தி

கேட்டு, அப்பியத்தாரைக் கொண்டாவது, காத் திர்க்க[illegible] கொண்டாவது, தேவஉத்தரவு பெற்று கேகிலாவை இரக்ஷித்த பெலிஸ்தர் தேவனும், தாவீதும் சவுலை விட்டார்களென்று அறிந்து, துணிந்து வரவே தாவீதால் முறியடிக்கப்பட்டார்கள். களஞ்சியங்கள் பொதுப்பட பட்டினங்களுக்கு வெளியே இருக்கும். நியாயாதி. 6: 11. ரூத். 3: 2. தாவீது இராசாவானதால் சனங்களை காக்கும்படி பிரயாசப்பட்டான். சவுலோ கவலையற்றவனாயிருந்தான். நோப் பட்டினம் அழிந்ததுபோல கேகிலாவும் அழியாதபடிக்கு தாவீது இரக்ஷித்தார். தாவீது கேகிலாவை இரக்ஷித்ததற்காக தாவீதை கனம்செய்யவேண்டியதற்குப் பதிலாக அவனுக்குப் பொல்லாப்புச்செய்ய சவுல் ஆரம்பிக்கிறான்.—தாவீது செய்த நன்மைக்குப் பதிலாக சவுல் தீமைசெய்கிறான். அச்சமயத்தில் தாவீது பண்ணின செபம். சங். 140.—தாவீது ஊரீம் தும்மீம் என்ற ஆசாரியச் சால்வையிலுள்ள வெளிச்சங்களினால் சவுலுடைய துரோகத்தை அறிந்துகொண்டான். இந்தச் சமயத்திலும் அநேகர் தாவீதைச் சேர்ந்துகொண்டார்கள். எல்லாம் 600-பேர்.

சவுல் அநுதினமும் தாவீதைத் தேடியும் தேவன் அவனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. சீப்-(இரவல்) வனாந்தரத்திலிருக்கையில் யோனத்தான் 3-ம் தரமாக வந்து தாவீதை ஆறுதல்படுத்தினான். சீப்பூரார் தாவீது ஆகிலா (இருட்டு) என்ற மலைக்காட்டிலிருப்பதாக சவுலுக்கு கோட் சொல்ல, தாவீது தேவனைப் பற்றும் நம்பிக்கையினால் 54-ம் சங்கீதத்தைப் பாடினார். இதில் சீப் பட்டினத்தார் இஸ்ரவேலராயினும் அவர்கள் துரோகத்தினிமித்தம் அவர்களை அந்நியரென்கிறார். சங். 54: 3.

தாவீது அதைவிட்டு மாகோன் (தங்குமிடம்) வனாந்தரத்தில் தங்கினான். சவுல் இப்போது மலையின் இந்தப் பக்கத்திலும் தாவீதும் அவன் மனுஷரும் மலையின் அந்தப் பக்கத்திலும் நெருக்கவே, தாவீது பட்சியைப்போல மலைக்குப் பறந்துபோக என்று துன்மார்க்கர் சொல்வதாக, 11-ம் சங்கீதம் பாடினார். இதற்குள்ளாக சவுல் யுத்தசெய்தி கேட்டுப் போய்விட்டான். 2 இரா. 19: 9. ஆதலால் அந்த இடத்துக்கு சேலா அம்மாலிகோத் அதாவது பிரிவின் கன்மலையென்று பெயரிட்டார்கள்.

தாவீது இப்படி அதிசயமாய்க் காப்பாற்றப்பட்டபின்பேரில் என்கேதி (ஆட்டுக்குட்டியின் ஊற்று) யிலுள்ள அரணான இடங்களில் தங்கினான். அங்கிருக்கையில் தேவன்மேல் பற்றுதலுள்ளவராய் 63-ம் சங்கீதத்தைப் பாடினார். சவுல் பெலிஸ்தியரை முறியடித்தபின்பு 3000-பேருடன் தாவீதைத் தேடப்போனான். தேவசெயலினாலே தாவீதிருந்த கெபிக்குச் சமீபமாக சவுல் தூங்கவோ, மலசலாதிக்கிருக்கவோ போயிருந்தான். நியாயாதி. 3; 24. இங்கே தாவீதுடைய விசுவாசம், பொறுமை, தயவு பரீக்ஷிக்கப்பட்டது. சவுலைக் கொல்லாமல் அவன் சால்



வையின் தொங்கலை மாத்திரம் அறுத்துக்கொண்டான். சவுலுக்கு வெட்கமுண்டாக இப்படிச் சம்பவித்தன. 1 இரா. 11: 37-40. தாவீது சவுலை சத்துராதியாகவல்ல, இராசாவாக மதித்து அவனைக் கனப்படுத்தி தன்னைத் தாழ்த்துகிறார். தாவீது தன் குற்றமில்லாமையை விபரமாய்ப் பேசி, தன்னை அற்பனென்று சொல்லவே சவுல் வெட்கப்பட்டு தன் குற்றத்தை உணர்ந்தவனாயும், தாவீது இராசாவாகிறதை அறிந்தவனாயுமிருந்து தன் சந்ததிக்கு தீமைசெய்யக் கூடாதென்று தாவீதிடத்தில் ஆணை வாங்கிக்கொண்டு போய்விட்டான். இந்த ஆணைக்கு விரோதமாக 2 சாமு. 21: 8, 9-லுள்ள சங்கதி நடந்ததென்றால் அது தேவஉத்தரவுப்படிக்கு நடந்தது.

## கேள்விகள்.

1. தாவீது சவுலுடைய துன்பங்களுக்கு அதிசயமாய்க் காப்பாற்றப்பட்டதை விபரமாய்ச் சொல்லும்? அந்தப்படி தேவசெயலாய்க் காப்பாற்றப்பட்டவர்களார்?
2. இந்த சரித்திரத்தில் தாவீதுடைய பத்திக்குரிய இலட்சணங்களைச் சொல்லும்?
3. தாவீது சீப் வனாந்தரத்திலும், என்கேதியிலுமிருக்கையில் பாடின சங்கீதங்களெவை? அதற்கிசைவாய் சங்கீதங்களில் குறிப்பு.
4. தாவீது சவுலுக்குமுன்பாக தன்னைத் தாழ்த்தும்போது தன்னை எப்படிச் சொல்லுகிறார்? அப்படியே சொன்னவர்களுமார்? ஏன்?
5. "ஆகாதவனிடத்தில் ஆகாமியம் பிறக்கும்." சொன்னதார்? ஏன்?
6. "கர்த்தர் நடுநின்று நியாயம் விசாரிப்பாராக" என்று சொன்னவர்களார்? எந்தெந்த சமயங்களிலிப்படிச் சொன்னார்கள்?
7. முற்காலத்தில் தேவனிடத்தில் ஆலோசனை கேட்பதெப்படி?

---

## 6. தாவீதுக்கும் நாபாலுக்கும் நடந்த காரியம். தாவீது சவுலை தப்புவித்தல்.

1 சாமு. 25, 26-அதி. கி. மு. 1057.

---

தாவீது பாரான் வனாந்தரத்திலிருக்கையில் அவனுக்கும் அவன் சனங்களுக்கும் ஆகாரமில்லாதபடியால் நாபாலிடத்தில் கேட்டு வாங்கிவரும்படியாக ஆட்களை அனுப்பினான். இந்த நாபால் (பைத்தியம்) யூதாக்கோத்திரத்திலுள்ள காலேப்பின் வம்சத்தான். அவன் காலேப்புக்குரிய சொத்தை கர்மேலில் உடைத்தாயிருந்தாலும், (யோசு. 15:

54, 55.) அவனுடைய நற்குணங்கள் இவனுக்கில்லை. இவன் ஐசுவரியவான். இவன் பெண்சாதியோ நற்குணசாலி. அவள் பேருக்கு அர்த்தம் சந்தோஷத்தின் தகப்பன். அத்தேச வழக்கப்படி தாவீது தாழ்மையாகவும், மரியாதையாகவும், நாபாலுக்குச் செய்த தயவுகளையும் ஞாபகப்படுத்தியும், ஆளனுப்பவே அவனோ நன்றிகெட்டவனாயும், வந்த ஆட்களை உபசரியாமல், புத்தியீனமாயும் நிந்தையாயும் பேசி, வெட்கத்தோடே அனுப்பிவிட்டான். தாவீது சகல இஸ்ரவேலராலும் கனமாய் எண்ணப்பட்டவராயிருக்க, பெலிஸ்தியரால் ஜெயவீரனென்றும் புகழப்பட்டிருக்க, இவனோ நிந்திக்கிறான். (ஏசா. 32: 5—7.) தாழ்மையும், பொறுமையும், தீமைக்குப் பதிலாக நன்மைசெய்கிறவருமான தாவீதோ இந்தச் சமயத்தில் தன் புத்தியீனத்துக்கு விடப்பட்டு நாபாலையும் அவன் சனங்களையும் நாசம்பண்ணிப்போட மூர்க்கமாய் வந்தார். ஞானமுள்ள பெண் தன் புருஷனுக்கு கிரீடமென்றபடி அபிகாயில் தன் தாழ்மையினாலும், ஞானத்தினாலும், உதார குணத்தினாலும் தன் புருஷனையும் தன் சொத்தையுங் காப்பாற்றிக்கொண்டாள். "அந்தரங்கமாய்க் கொடுக்கப்பட்ட வெகுமதி கோபத்தை தணிக்கும்." நீதி. 21: 14. இப்படியே யாக்கோபும் தன் தமையன் ஏசாவுடைய கோபத்தையும் தணித்தான்.

தாவீது தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்க அவரை, நாபால் நிந்தித்தது, தேவன் தம்மை நிந்தித்ததாக எண்ணி, அவனை வாதித்ததினால் 10-நாளுக்குள் செத்துப்போனான். அவன் குடிவெறியினாலோ, மனச்சாட்சியின் வாதையினாலோ, பயங்கரமான வியாதியினாலோ செத்தான்.

தாவீது அவனுடைய மரணசெய்தி கேட்டு, அவனுடைய பெண்சாதி அபிகாயிலை தனக்கு மனைவியாக சேர்த்துக்கொண்டான். அத்தேசத்து கெட்ட வழக்கப்படிக்கு அகினோகாமையும் (கிருபையின் சகோதரன்) விவாகஞ்செய்தான். சவுலோ, தாவீதுமேலுள்ள பகையினாலே இனித் தான் அவனுக்கு மாமனாயிராதபடிக்கு தன் மகள் மீகாளை (சின்ன நீரூற்று) பலத்திக்கு (தேவவிடுதலை) கொடுத்துவிட்டான். இதின்பேரில் தான் தாவீது வேறு பெண்களை விவாகஞ்செய்ய நேரிட்டது.

அபிகாயிலுடைய சொத்து இருந்த மலங்காட்டிலிருக்க தாவீதுக்கு வசதியிருந்தது. அதை சிப்பூரார் சவுலுக்குத் தெரியப்படுத்தின பேரில் சவுல் 3,000-பேருடன் தாவீதைப் பிடிக்கும்படி வந்து பாளையமிறங்கியிருக்கையில் தேவன் அயர்ந்த நித்திரையை சவுல்மேல் விட தாவீது சவுலுடைய ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்து; படைத்தலைவனாகிய அப்னேர் (வெளிச்சத்தின் பிதா) அஜாக்கிரதையாயிருந்ததைப்பற்றிக் கண்டித்து, தன்னைக் குற்றமற்றவனாக விளங்கச்



செய்தான். சவுலோ உணர்ச்சியுள்ளவன்போல் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டு போய்விட்டான்.

## கேள்விகள்.

1. தாவீது நாபாலுக்குச் செய்த நன்மைகளென்ன? அதற்கு அவன் செய்த பதில் தீமைகள் எவ்வகள்? இப்படியே செய்தவர்களார்?

2. ஒருவரண்டை மற்றவர்கள் போகையில் சொல்லுகிற உபசார வார்த்தைகளெவை? அப்படிச் சொன்னவர்களார்? ஏன்?

3. என்னென்ன விசேஷங்களுக்காக எந்தெந்த ஸ்திரீகள் புகழப்பட்டிருக்கிறார்கள்.

4. தாவீதுடைய ஞானம், பத்திக்குரிய குறிப்புகளென்ன?

5. சவுலுடைய குணப்படுதல் எப்படிப்பட்டது? அப்படிப்பட்ட குணப்படுதல் பாவியை இரட்சிக்க உதவாதென்று காண்பி?

6. கர்மேல், சீப், எங்கேதி, பாரான், எஸ்ரயேல், அதுல்லாம் எங்கே? அங்கே நடந்த விசேஷங்களென்ன?

---

## The World's Birth.

## உலகப் பிறப்பு.

### XI. அதிகாரம்.

மனிதன் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டது.

ஆதி. 1: 26—28.

(தொடர்ச்சி.)

நாம், நம்முடைய என்ற வார்த்தைகள் கவனிக்கத்தக்கது. வேதத்தில் சிருஷ்டிப்பின் கிரியை சிலவேளை பிதாவுக்கும், சிலவேளை குமாரனுக்கும், சிலவேளை பரிசுத்தஆவியானவருக்கும் உரித்தானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வார்த்தைகள் மனுஷனைப் பற்றி ஆலோசனைசெய்யும்போது மாத்திரம் உபயோகிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆதி. 1: 26. 11: 7. ஏசா. 6: 8.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் தேவன் அல்ல என்று பிதற்றுகிற சிலர் இப்படிப்பட்ட வாசகம் தேவதூதர்களைக் குறிக்கும், தேவன் தேவதூதர்களோடே ஆலோசித்தார் என்று சாதிக்கிறார்கள். தேவதூதர்களால் எந்தச் சீவப்பிராணியையாவது சிருஷ்

டிக்க இயலுமா? அது தேவனால் மாத்திரம் செய்யப்படக்கூடியது. மேலும் தேவன் மனிதனை தேவதூதரின் சாயலாக சிருஷ்டிக்கவில்லையே. தம்முடைய சாயலாக அல்லவா சிருஷ்டித்தார்.

வேறு சிலர் தற்காலத்து இராஜாக்கள் பேசுவதுபோல பேசியிருக்கிறார் என்பார்கள். பூர்வகாலத்தில் இராஜாக்கள் அப்படிப் பேசியிருப்பதேயில்லை. பன்மையில் பேசுவது மோசேயின் காலத்தில் வழக்கப்படவில்லை. மேலும் நாம் என்கிற வார்த்தையின் சரியான கருத்தை மூன்றாம் அதிகாரம் 22-ம் வசனத்தினாலே அறியலாம். மனிதன் நம்மில் ஒருவனைப்போலானான் என்று சொல்வதில் யாராவது என்னைப் போலானான் என்பதற்கு நம்மில் ஒருவனைப் போலானான் என்று சொல்வார்களா? மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் இந்த வாசகத்தில் நமக்குச் சந்தேகமிராதபடிக்கு, அதின் சரியான கருத்தை விளக்கியிருக்கிறார். அவர் தமது தெய்வீகத்தைப் பற்றிப் பேசி விண்ணப்பம் செய்கையில், பிதாவே நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல என்று வழங்கிய வார்த்தைகள் திரித்துவ தேவன் தன்மையில் ஒருவராயிருக்கிறார் என்பதையும் அவர் தத்துவத்தில் மூவராயிருக்கிறார் என்பதையும் பல வேதசாட்சிகளினால் அறிகிறோம்.

இப்போது தேவனுடைய சாயல் என்பதைப்பற்றிக் கவனிப்போமாக.

1. மனித ஆத்துமா தேவசாயலாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கலாம். ஆத்துமா சடப்பொருளல்ல, ஆவிப்பொருள் தேவன் ஆவியாயிருக்கிறார்.

2. சாகாத வரத்தைக் குறிக்கலாம்.—மனிதன் பாவஞ்செய்யாதிருந்தால் மரிக்கமாட்டான்.

3. ஆவிக்குரிய அறிவின் ஈவைக் குறிக்கலாம். தாபர வர்க்கங்களுக்குச் சீவனிருக்கிறது. மிருகங்களுக்கு இயற்கை அறிவு உண்டு. அவைகள் தேவனுடைய சாயலின்படி சிருஷ்டிக்கப்படவில்லை. அவைகள் தேவனை அறியமாட்டாது. மறுபடியும் பிறந்த மனுஷனைப்பற்றி "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்கள்" என்று சொல்லியிருக்கிறது. கொலோ. 3: 10.

4. பரிசுத்தத்தைக் குறிக்கலாம். அதாவது தேவன் விரும்புகிறதை நாம் பிரியப்பட்டு விரும்பும் நிலைமையைக் காட்டலாம். பரிசுத்த பவுல் அப்போஸ்தலன் குணப்படுதலில் தேவனுடைய சாயல் மனிதனில் உண்டாகிறதென்பதைக் காட்ட "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று எழுதியிருக்கிறார்.

5. ஆதிக்கத்தைக் குறிக்கலாம்.—26-ம் வசனத்தில் மச்சங்கள், பறவைகள், மிருகஜீவன்கள், ஊர்வனங்கள் இவைகளை ஆளக்கடவர்கள் என்று சொல்லியிருக்கிறது. ஆதிதந்தை தாய் பாவஞ்செய்யுமுன் சகல சிருஷ்டிகளின் மேலும் ஆதிக்கம்செலுத்தி வந்தார்கள்.

6. பூரண பாக்கியத்தைக் குறிக்கலாம்.—மனிதன் பாவஞ்செய்யாதிருந்தால் ஏதேனில் ஒப்பற்ற பாக்கியத்தை அநுபவித்து வந்திருப்பான்.

தேவனுடைய சாயல் இப்போது நம்மிடத்தில் எங்கேயிருக்கிறது? சாவாமை எங்கே? பரிசுத்தமெங்கே! பாக்கியம் எங்கே? ஆத்துமா தேவனைவிட்டுத் தூரமாய்ப் போயிருக்கிறது. பெருமை, துர்க்குணம், குரோதம், பகை முதலியவற்றால் கறைப்பட்டுப்போயிருக்கிறது. சரீரம், பெலவீனம், வியாதி, மரணம் முதலியவற்றால் ஈனப்பட்டிருக்கிறது. உலகத்தில் நாம் அழுகையோடே வந்தோம். தவிப்போடும், பெருமூச்சுகளோடும், வேதனையோடும் அதைவிட்டுப் போகிறோம். சிலவேளைகளில் மிகுந்த உபத்திரவங்களை அடைந்து, சரீரம் மண்ணுக்குத் திரும்பி புழுக்களுக்கு இரையாகிறது.



இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து ரக்ஷகர் உலகத்துக்கு வந்ததை நினைத்து, பூமிக்குரிய சாயலைத் தரித்த நாம் வானத்துக்குரிய சாயலையும் அவர் மூலமாய்த் தரித்துக்கொள்ளும்படி அவரில் நம்பிக்கை வைப்போமாக.

வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும், வல்லமையுள்ளவரும் தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரக்ஷகராகிய தேவனுக்குக் கனமும், மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும், இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.

---

## XII. அதிகாரம்.

### தேவனுடைய கிரியையின் நிறைவு.

தேவன் மனிதனைச் சிருஷ்டித்து இந்த அலங்காரமான பூமியில் வைத்தார். அவன் பரிசுத்தனும் நேர்மையுமுள்ளவனும், சுகபெலத்தில் பூரணமும், சரீரத்திலும், மனதிலும் பூரண அழகுபொருந்தினவனும் அறிவிலும், பாக்கியத்திலும் பூரணனுமிருந்து, தேவனைப் பணிந்து அவரை மகிமைப்படுத்தி வந்தான். கர்த்தர் அவனுக்கு பூமியின்மேல் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருக்ஷங்களையும் ஆகாரமாகக் கொடுத்தார்.

மனிதன் மாசற்றவனாயிருந்த காலத்தில், தாபரவர்க்கங்களின் கனிகளை அவனுக்குப் போசனமாகக் கொடுத்தார். பூமி பாவத்தினால் இரண்டுதரம் சபிக்கப்பட்டபிற்பாடு அவனுக்கு மாம்சத்தைப் போசனமாகக் கொடுத்தார். அங்கஜீவ சாஸ்திரிகள் வெகுகாலமாய் நுட்பமாக ஆராய்ச்சிசெய்ததின்பேரில் மனிதன் ஆதியில் பூண்டுகளையாவது, மாம்சத்தையாவது புசித்தவனல்ல, பழவர்க்கங்களைப் புசித்தவன் என்று சொல்லுகிறார்கள். பரிசுத்த வேதமும் அப்படியே சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். "பூமியிலுள்ள சகல மிருகஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள பறவைகளுக்கும் பூமியின்மேல் ஊர்வன எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தார்.

மனிதன் பாவத்தினால் சாபத்துக்குள்ளானபின்பு பறவைகள், மிருகங்களுடைய மாம்சத்தைப் புசித்தான். பாவஞ்செய்யுமுன்னே மிருகங்கள் பறவைகளின்மேல் ஆதிக்கம்செலுத்திக்கொண்டு வந்தான். இப்போது பலவந்தமாய் அவைகளை ஆண்டுவருகிறான். ஜலப்பிரளயத்துக்குப் பின்புதான் அவன் ஆடுமாடுகள் முதலானவைகளை அடித்துச் சாப்பிடத் தொடங்கினான்.

மனிதன் பாவஞ்செய்யுமுன் பூமியின் விளைவு இப்போதிருக்கிறதைவிட கொழுமையாயிருந்திருக்கவேண்டும். ஏனென்றால் ஆதாம்

பாவஞ்செய்தபின்பு தேவன் பூமியைச் சபித்தார். ஆதலால் பிந்திய காலத்தில் தாபரவர்க்கங்களின் கொழுமை வெகுதூரம் குறைந்திருக்கவேண்டும். என்றாலும் தேவன் கிருபையாய் நம்முடைய உயிரைப் பாதுகாக்க இன்னமும் அநேக வகை தாபரங்களைப் பூமியில் வைத்திருக்கிறார்.

கொய்யா, சீத்தா, மாதளை, மா, பேரீந்து கனிகளும், தானியதவசங்களும் இயல்பாய் நம்முடைய ஜீவனைப் பிழைப்பூட்டத்தக்கவைகள் தானே என்று ஒருவேளை சொல்லப்படும். அவைகள் நம்முடைய உடலில் செய்யும் கிரியைகள் அற்புதமாயிருக்கிறது. போசனங்கள் தேகக்கூறுகளில் சேருமுன் அவசியமாய் வெகு மாறுதல்கள் அடைகின்றன. போசனம் வாய்க்குள்ளே போனபின்பு, பற்கள் அதை அரைக்க உமிழ்நீர் நனைத்து இளக்க இரைக்குழல் வழியாய் இரைப்பைக்குள் செல்லுகிறது.

இரைப்பையில் சவ்வுகள் இறுகி நசிப்பதினால் இரை பிதுங்கி உருண்டு, திரண்டுவர இரைப்பையின் உட்பக்கங்களிலிருந்து புளிப்புள்ள ஒரு விசேஷமான நீர் உண்டாகி அதினுடனே கலந்து அதைப் பாகு ஆக்குகிறது. அந்தப்பாகு இரைப்பைக்கு அடுத்துத் தொடுத்திருக்கும் அணைக்குக்கி என்று சொல்லப்படும் சிறு குடலில் சென்று பித்த நீருடனேயும் கணையம் என்று சொல்லப்படும் இன்னொரு வகை நீருடனேயும் கலந்து பேதப்பட்டு பால்நிறமான அன்னரசமாகவும் மலமாகவுமாகி சிறு குடலுக்குள் சென்று அதின் நழுவலான புரட்சியினாலே குடல்வழியாய்ப் போகையில் சிறு குடலுக்கூடாகச் செல்லும் சிறு குழல்கள் அன்னரசத்தை உறிஞ்சிக்கொள்ளும். மலமானது பெருங்குடலுக்குட்பட்டு கழிகின்றது. அன்னரசம், அடிக்கழுத்தின் முன்பக்கத்திலுள்ள இடக்காறை எலும்பின் பின்னாக இருக்கும் ஒரு நாளத்தினுட் சென்று, அதின்வழியாய் இரத்தாசயத்துக் கூடாகச் சுவாசப் பைக்குட் செல்லுகின்றது. இங்கே சுவாசிக்கும் காற்றுப்பட்டு அது இரத்தமாகின்றது. இரத்தாசயத்திலிருந்து செவ்விரத்தத்தை இரண்டு பெரும்நாடிகள் வாங்க, அவைகளிலிருந்து அநேக நாடிகள் கிளைக்குமேல் கிளையாய்ப் படர்ந்து, உடம்பெங்கும் செலுத்துகின்றன. இரத்தம் சரீரம் எங்கும் சுற்றி ஓடினபின்பு, மறுபடியும் இரத்தாசயத்திலே வந்து சேருகிறது. எப்படியென்றால் இரத்தாசயத்தின் வலச்சிரவம் என்ற ஒரு அறையிலிருந்து வலச்சரமென்ற இன்னொரு அறைக்குட் சென்று அதிலிருந்து கருமையான அசுத்த இரத்தம், சுவாசப்பை நாடிக்குட் செல்ல, அதின் கிளைகள் இரத்தத்தை இடது சுவாசப் பைக்கும், வலது சுவாசப் பைக்கும் கொண்டுபோகின்றன. அதன்பின்பு இரத்தமானது சுவாசப் பையிலுள்ள சிறு குழல்களினால் செவ்விரத்தமாகி, அவைகளின் வழியாய் சுவாசப்பை நாளங்களிலே சேர்ந்து, இவைகளின் வழியாக இரத்தாசயத்திலுள்ள இடச்சிரவத்துக்குள் விழுகிறது. இதிலிருந்து சுத்த ரத்தம் இடச்சடரத்துக்குட் சென்று, பிரதான செவ்விரத்தக் குழல் வழியாய் சரீரத்தின் உறுப்புகள் அடங்கலும் செல்லுகிறது. இப்படிச்சென்று நம்முடைய தோல், சதை, எலும்பு, நரம்புகள், நாளங்கள் முதலியவைகளைப் போஷித்து வளரச் செய்கிறது.



## சமாசாரத்திரட்டு.

**ஐரோப்பா.**—அயர்லாந்தில் உண்டான கலகம் இன்னும் அமையவில்லை. அதினால் பின்னும் அநேகர் கைதுசெய்யப்படுகிறார்கள். நியூசிலாந்திலும் பூர்வ குடிகளுக்குள் கலகங்கள் உண்டுபட்டிருக்கிறது. தீவுத்தி என்னும் தலைவன், கலகத்திற்குக் காரணனென்று குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையிலிருக்கிறான். லெயோப்போல்டு என்னும் ராஜ பிரபு பிரின்செஸ் எலினு ஆப் வால்டெக் என்னும் பெருமாட்டியை விவாகஞ்செய்யப்போகிறதாய்ச் சமாசாரம். பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்னும் இளவரசரின் புத்திரரிருவர் பூச்சக்கரத்தைச் சுற்றிவரும் பாதையில் ஜாப்பான் தீவையும் சிறிது நாட்களுக்குமுன் சந்தித்துப் போனார்களாம். இத்தாலிய அரசன் அவுஸ்திரியாவுக்கு சிந்தாயாத்திரையாய்ப் போனார். அங்கே அவருக்கு மிகக் கரிசனையுடன் உபசரணை நடந்தது.

**இந்தியா.**—சென்னை ராஜதானியின் சேனா சமுகாதிபதியாக நியமனம்பெற்ற ஸ்ரீ பிரடிரிக் ராபெர்ட்ஸ் தளபதி, சென்ற நவம்பர் ௴ 27உயில் சென்னை நகர் சேர்ந்து, மறுநாள் வழக்கமான பிரமாணத்துடன் தமது உத்தியோகம் கைப்பற்றினார். சிற்றூர் மகாராஜாவுக்கு இந்திய நட்சத்திர பட்டத்தின் உயர்பதவி அளிக்கப்பட்டது. சென்னையிலுள்ள மகமதியர் கூடி புதிய கவர்னராகிய கிராண்டு டப் பிரபு அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் ஒன்று சமர்ப்பித்தனர். இந்தியாவுக்கும் மோரீஷ் தீவுக்கும் இடையில் நூதனமாய் நிருபிக்கப்பட்ட நாணய உண்டியல் ஏற்பாடு நாளது மாசம் 1உமுதல் நடக்குமாம். விஜாகபட்டினத்துக்கும் ரேய்ப்பூருக்கும் இடையில் இருப்புப்பாதைபோட வழி பார்வையிடும் செலவுக்காக இந்திய துரைத்தனத்தார் 15௲ ரூபாய் அனுமதிசெய்திருக்கிறார்கள். திருநெல்வேலிக்கும் மலையாளத்துக்கும் ஆரியங்காவு மலைவழியாய் ரெயில்வே போடும்படிக்கான முயற்சி நடக்கிறதாம். நாளது மாசாரம்பந் தொடங்கி மின்தபால் விஷயமான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தந்தி சமாசாரங்கள் இனி "அவசர சமாசாரம்." "சாதாரண சமாசாரம்." "பிந்தியனுப்பக்கூடிய சமாசாரம்" என்று மூன்று வகுப்பாக வகுக்கப்படும். கூலி விகிதம் முறையே ரூபாய் 2, 1, அணா 8 ஆம். எட்டு வார்த்தைகள் அனுப்பலாம். மேல்விலாச வார்த்தைகளுக்குக் கூலியில்லை.

ஜனுவரி நாள்-31. மார்கழிமீ 19உ முதல், தைமீ 20உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௧௯ | ஒன்றும் குறைவாயிருந்ததில்லை என்றார்கள். லூக்கா 22: 35. |
| தி | 2 | ௨0 | இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய். 23: 43. |
| செ | 3 | ௨௧ | நீர் எங்களுடனே தங்கியிரும். 24: 29. |
| பு | 4 | ௨௨ | இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலன். யோவான் 1:47. |
| வி | 5 | ௨௩ | அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். 2: 23. |
| வெ | 6 | ௨௪ | ஒளியானது உலகத்திலே வந்திருந்தும், 3: 19. |
| ச | 7 | ௨௫ | அவரை வந்து பாருங்கள். 4: 29. |
| ஞா | 8 | ௨௬ | குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். 5: 21. |
| தி | 9 | ௨௭ | என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. 6: 37. |
| செ | 10 | ௨௮ | என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். 7: 37. |
| பு | 11 | ௨௯ | நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள். 8: 24. |
| வி | 12 | ௧ | ஒருவனும் கிரியைசெய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. 9: 4. |
| வெ | 13 | ௨ | என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது. 10: 27. |
| ச | 14 | ௩ | நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். 11: 25. |
| ஞா | 15 | ௪ | அவருடைய கட்டளை நித்தியஜீவனாயிருக்கிறது. 12: 50. |
| தி | 16 | ௫ | நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். 13: 34. |
| செ | 17 | ௬ | என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். 14: 9. |
| பு | 18 | ௭ | என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். 15: 23. |
| வி | 19 | ௮ | சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, 16: 13. |
| வெ | 20 | ௯ | என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள். 17: 10. |
| ச | 21 | ௧0 | சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான். 18: 37. |
| ஞா | 22 | ௧௧ | இதோ, இந்த மனுஷன் என்றான். 19: 5. |
| தி | 23 | ௧௨ | என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். 20: 28. |
| செ | 24 | ௧௩ | நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? 21: 16. |
| பு | 25 | ௧௪ | எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். அப்போஸ். 1: 8. |
| வி | 26 | ௧௫ | அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு. 2: 4. |
| வெ | 27 | ௧௬ | நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். 3: 20. |
| ச | 28 | ௧௭ | தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். 4: 31. |
| ஞா | 29 | ௧௮ | அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். 5: 16. |
| தி | 30 | ௧௯ | விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள். 6: 7. |
| செ | 31 | ௨0 | கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும். 7: 59. |

## விசேஷ நாட்கள்.

1. கிறிஸ்து ஜநநதிருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.
   கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.
4. பௌரணமி.
6. பிரசன்னத் திருநாள்.
8. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 1-ம் ஞாயிறு.
15. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 2-ம் ஞாயிறு.
19. அமாவாசை.
22. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 3-ம் ஞாயிறு.
25. பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
29. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், 4-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௨. பெப்ருவரிமீ. ௲௮௱௮௨ ௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை
### வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணம்.

௰-ம் பிரிவு.

சரீரம் உயிர்த்தெழுதலும், நித்தியஜீவனும் உண்டு என்பதைப் பற்றி.

(தொடர்ச்சி.)

வினா. உயிர்த்தெழுதலில் நீதிமான்களுக்குக் கிடைக்கும் பங்கென்ன?

விடை. அவர்கள் நித்திய சந்தோஷத்துக்கென்று உயர்ப்பிக்கப்பட்டு, மோட்சத்தில் தேவதூதர், பரிசுத்தவான்களோடு ஒரே சுகரத் தாராவார்கள்.

உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு. சங். 16: 11.

சிலர் நித்தியஜீவனுக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாயமண்டலத்து ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும், என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். தானி. 12: 2, 3.

மத். 13: 43. 25: 33, 46. யோவா. 3: 36. 5: 29. ரோ. 8:

17, 18. 1 கொரி. 2: 9. 13: 12. கலா. 6: 8. 2 திமோ. 4: 8. 2 பேது. 1: 11. வெளி. 7: 15—17. 21: 4.

வினா. தேவபக்தர் எல்லாரும் சம மகிமையடைந்திருப்பார்களா?

விடை. அப்படி நினைக்க ஏதுவில்லை. ஆனாலும் அவர்களுடைய பக்தி வைராக்கியம், பரிசுத்தம் என்பவைகளின் அளவுக்குத்தக்கதாக அவர்களடையும் மகிமையுமிருக்கும் என்று எண்ணலாம். எப்படியும் மோட்சத்திலுள்ள பேரின்பத்தின் தாழ்ந்தபடி நாம் நினைக்கக்கூடியதிலும் மிகவும் அதிகமாகவேயிருக்கும்.

அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். மத். 16: 27.

லூக். 19: 16—19. யோவா. 14: 2. 1 கொரி. 15: 41, 42.

னா. பொல்லாதவர்களுடைய பங்கு எப்படிப்பட்டதாயிருக்கும்?

டை. அவர்கள் நித்திய நிந்தைக்கும், தண்டனைக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பிசாசுக்களோடு அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இடத்துக்குப் போய்ச் சேருவார்கள். அங்கே அவர்கள் பிசாசினாலும், ஒருவராலொருவரும், தங்கள் சொந்த மனச்சாட்சியினாலும் பகலிலாவது இரவிலாவது இளைப்பாறுதலில்லாதவர்களாக ஓயாத வேதனையை அடைந்துகொண்டிருப்பார்கள்.

பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார். மத். 3: 12. லூக். 3: 17.

மத். 10: 28. 25: 46. லூக். 12: 5, 46. 13: 28. 16: 24.
(நம்முடைய இரட்சகர் இலாசரு, ஐசுவரியவானைப்பற்றிச் சொன்ன உவமை முழுமையையும் பார். லூக். 16: 19—31.)

யோவா. 3: 36. 5: 29. ரோ. 2: 8, 9. கலா. 6: 8. 2 தெச. 1: 8, 9. வெளி. 14: 10, 11. 20: 10.

வினா. ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டவர்களுடைய துன்பத்தில் பல அளவுகள் இருக்குமா?

விடை. இருக்கும். அப்படி நினைக்கும்படி வேதவாக்கியம் நமக்கிடங்கொடுக்கிறது. ஆனால் அந்த வேதனையில் மிகவும் தாழ்ந்த வகை நாம் நினைக்கக் கூடியதிலும் பயங்கரமானதாயிருக்கும்.

நியாயத்தீர்ப்புநாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும், சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும். மத். 10: 15.

மத். 11: 21, 22. லூக். 12: 47, 48.

மேற்சொல்லிய வேதவாக்கியங்கள் மரணத்துக்குப் பிற்பாடு, பெ
ல்லாதவர்களுக்குண்டாயிருக்கும் நிலைமை எவ்வளவு பய
கரமானதாயிருக்கும் என்ற எண்ணத்தை உண்டாக்குகிற



அது உன்னைத் திடுக்கிடச் செய்கிறதில்லையா? நீ தானே உன்னைக் கேள்.

நித்தியசுவாலைக்கு முன்பாக நம்மில் தாபரிப்பவன் யார்? ஏசா. 33: 14.

தேவனுடைய கோபாக்கினையானது, இனிவரும் நித்திய கோபாக்கினையாயிருக்குமென்று நினைத்துக்கொள். 1 தெச. 1: 10.

எவ்வளவு பயங்கரம்! அல்லவா?

ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே. எபி. 10: 31.

இனிமேல் நீ வேதனையடையாதபடி, இப்பொழுதே நரகத்தின் பயங்கரங்கள் உன்னைத் திடுக்கிடப்பண்ணக்கடவது. தேவசன்னிதியில் நீ காணப்படும்படி உன்னை அழைத்துக்கொண்டுபோகும் மரணம் உனக்கு தூரமானதல்ல.

மரமானது தெற்கே விழுந்தாலும், வடக்கே விழுந்தாலும், விழுந்தவிடத்திலேயே மரம் கிடக்கும். பிர. 11: 3.

மரணமானது உன்னுடைய குணத்தை மாற்றமாட்டாது. நீ பரிசுத்தமில்லாதவனாய் மரித்தால், பரிசுத்தமில்லாதவனாகவே எழுப்பப்படுவாய்.

தேவனிடத்தில் மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதினாலே, அந்தப் பெரிய நாளுக்கு ஆயத்தமாகும்படி நடந்துகொள்வதே, நமது ஜீவகாலத்தின் வேலையாயிருக்கவேண்டும்.

தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு, மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். 2 பேது. 3: 12.

உன்னுடைய மனது இடைவிடாமல் இந்த விசேஷித்த சத்தியத்தின்மேல் ஊன்றப்பட்டிருக்கட்டும். பரி. பவுலின் மாதிரியைப் பின்பற்றி, அவருடன் பின்வருகிற வார்த்தைகளைச் சொல்ல திராணியுள்ளவனாயிரு.

இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன். அப். 24: 16.

நரகம் பயங்கரமுள்ள இடமானபடியினாலே, அதைவிட்டு நீங்கிக்கொள்ள கவலையோடு தேடி, மோட்சத்தை அடையும்படி ஜாக்கிரதையோடு விசாரி. வேதத்தை வாசி, அதில் மோட்சமார்க்கம் பூரணமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. உன்னுடைய போதகர்களின் போதகங்களுக்குச் செவிகொடு. அவர்கள் உனக்கு அதை விளக்கிக் காட்டும் விருப்பமுள்ளவர்க

ளாய் இருக்கிறார்கள். கிறிஸ்துநாதராலே மனுஷ ஜாதியாருக்கு உண்டாக்கப்பட்டிருக்கிற மீட்புக்காக ஸ்தோத்திரம் செலுத்து. உனக்கு முன்னோடினவராகிய இயேசுவை நோக்கிப் பார். அவருடைய மரண புண்ணியத்தில் நம்பிக்கை வை. அவரை உன் முன்மாதிரியாக வைத்து அவரைப் பின்செல். எபி. 12: 1, 2.

வினா. ஆமென் என்ற வார்த்தையின் அர்த்தமென்ன ?

விடை. நிச்சயமாய் என்பதே அதின் அர்த்தம். விசுவாசப்பிரமாணத்தின் கடைசியில் ஆமென் என்று சொல்வது, அதில் அடங்கிய எல்லா வாக்கியங்களின் பேரிலுமுள்ள நம்முடைய விசுவாசத்தை விளக்குகிறதாயிருக்கிறது.

நீ விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லும்பொழுது, அதில் அடங்கிய சத்தியங்களின் முக்கியத்தைப்பற்றி, தகுந்த யோசனையும், உணர்வுமுள்ளவனாயிருப்பாயாக. உன்னுடைய இருதயத்தோடு எப்பொழுதும் ஆமென் என்று சொல்லும்படி திராணியுடையவனாயும் இருப்பாயாக.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

வேறு.

அந்தோ அந்தோ என்னிதுறக்கம் அறிவில்லீர்
முந்தோராதே வந்தபின் எண்ணுமுழுமுடச்
சந்தாபத்தாலென்பயன் உண்டாம் தலைதூக்கி
நந்தா இன்ப நன்னெறிசேர்மின் நமரங்காள். 540

உடலை உருக்கிக் குருதிவடித்திட் டுயிர்தந்த
கடலை நிகர்க்குங் கருணை இருப்பைக் கருதாமே
புடவி மயக்கிற் சுழல விடுக்கும் புலைமார்க்க
நடலையை நச்சிச் சுடலை புகாதீர் நமரங்காள். 541

மஞ்சன் மகாதேவற் கொருவள்ளல் மறுவேலன்
கஞ்ச மலர்த்தாள் தஞ்சமென் றுள்ளங் கசியாமே
வஞ்ச மனப்பேய்க் கஞ்சலிநல்கல் மதியோ கொல்
நஞ்சமுதாகக் கொள்வது நாசம் நமரங்காள். 542

சிந்தனை யின்றிக் கண்படை கொள்வீர் தெறுகாலன்
வந்தெதிர் நிற்பின் என்கொல் செய்கிற்பீர் மதியில்லீர்
இந்த மயக்கைச் சிந்தும் இரக்ஷைக் கிதுகாலம்
நந்திடுமுன்னே நம்பனை நாடும் நமரங்காள். 543



இன்மையில் நின்றும் ஆன்மவிவேகத் தெழில் கொண்ட
ஜென்மமெடுத்தீர் மெய்வழி கண்டும் தெருமந்து
கன்மவசத்தால் இன்றொரு மிக்கக் கவிழ்கின்றீர்
நன்மதியோ இத்துன்மதி சொல்லும் நமரங்காள். 544

செல்கலிர் இன்னே சிந்தை திரும்பும் சிற்றின்பம்
அல்கலில் துன்ப ஆழியமிழ்த்தி அடுவிக்கும்
மல்கு மெய்ஞ்ஞான சிற்சுகபோகம் வரைவின்றி
நல்கு கிறிஸ்தெம்மான் அருள் நாடும் நமரங்காள். 545

நின்று சுகிக்கும் ஆத்தும வாழ்வை நினைகில்லீர்
பொன்றுடல் இங்கோர் புற்புதம் என்னும் பொருளுன்னீர்
தின்று கொழுத்துத் தீச்சிறைவேட்டுத் திரிகின்றீர்
நன்றிதுவாமோ பேதையரோ நீர் நமரங்காள். 546

வெம்பு மிருத்தாம் ஆழிகிளம்பி விடும்ஆயுள்
அம்பி அலைக்கச் செய்வன செய்யா தலைகூம்பின்
கொம்பில் உறங்குங் கொள்கையரானீர் குணநாடில்
நம்பனை நம்பிக் கும்பிடுங் கூவி நமரங்காள். 547

நிமலி கும்பியூடு புகுத்தித் தெறுதீமை
ஆமவை யாவும் சேர வெறுத்திட்டருளாளன்
கோமகன் யேசுசாமி கிறிஸ்து குமரேசன்
நாமம் வழுத்தி நல்வழி கூடும் நமரங்காள். 548

மேக்குயர் வாழ்வும் ஈடணையாவும் விடுபட்டிங்
காக்கை தளர்ந்தே சாக்கிடையாகி அலமந்து
மீக்கிளர் மூச்சும் விக்குளு மேவி விழிகுன்றி
நாக்குழறுமுன் நம்பனை வாழ்த்தும் நமரங்காள். 549

கலங்கலிர் வஞ்சப் பேயிடுவித்த கடுமாய
விலங்கை அறுக்கத் தக்கதிதென்கை மிளிர்கட்கம்
இலங்கருள் வேந்தனுணை தலைக்கொண் டெழுந்துள்ளம்
மலங்கலிராகிச் சேசுவை நம்பி வழிக்கொண்மின். 550

காலம் விரைந்து தூமம் நிகர்ப்பக் கடிதோடும்
சீலம் அறிந்து சிந்தை திரும்பித் திருவுள்ளம்
சால மதித்து மெய்வழி கூடில் தகைசான்ற
மேலுலகத்தைச் சேருவிரொன்றும் விளிவின்றால். 551

உலகை மயக்கிக் கலகம் விளைத்திட் டுயிர்மாய்க்கும்
அலகை கருச்சித் தடரும் நெருக்குற் றரியேறு
சுலவுவதைப் போன்றிதை யுணர்வற்றுத் துயில்கின்றீர்
விலகி யுயற்குத் தருணம் விழித்து விரைமின்னே. 552

இத்தகையான வித்தக போதம் எடுத்தோதிப்
பத்தன் விளிக்க நித்திரை பங்கப் படுமாறு
கத்துவ தென்னீ சொற்றவை முற்றுங் கனவென்னாப்
பித்துறு பேதை விண்டு துயின்றான் பிணமாக. 553

எஞ்சா தெம்பியேன் இனைகின்றாய் இருகண்போல்
துஞ்சா வாய்மற்றியாண்டு படைத்தாய் துயருண்டென்
றஞ்சேல் செல்நீ தூங்குவல் சற்றிங் கயர்ந்தென்றா
விஞ்சா நின்ற அமக்கம் விளைத்தான் மிகுசோம்பன். 554

ஏங்கி யிரங்கிக் கூவிளி கொண்டிங் கெமையுய்யத்
தாங்குகி போலாம் எப்பொருளும் தம்தானத்தில்
ஊங்கு தரிக்க உற்றறியுங் கண்டுணர் கென்னாப்
பாங்குணர் வில்லாத் துணிகரனுங் கண்படை கொண்டான். 555

மற்றிவர் சொன்ன வாசகமுந் தீவருமென்று
சொற்றவை கொள்ளாத் துணிகரமுங் கண்துயில் கொள்ளும்
பெற்றிமையுங் கண்டுன்னத இன்பம் பெறநாடும்
நற்றவன் நெஞ்சில் தன்வழிகூடி நவில்வானால். 556

என்னே என்னே கைவருமோச மெதிர்காட்டி
முன்னேயாகச் செந்நெறி கூடி முடுகும்மின்
இன்னே யென்னப் பன்னிய செஞ்சொல் இயல்பெல்லாம்
கொன்னே போக்கி நித்திரை கொள்ளுங் குணம் அம்மா. 557

தேகமெடுத்தென் ஆயுள் படைத்தென் திகழ்செல்வ
போகமடுத்தென் பல்கலை கற்றுப் புகழ்பெற்றென்
மாகதலத்து ஜீவசுகத்தை மதியாமே
ஊகம்விடுத்துச் சாகுமனித்தர் உலகூடே. 558

காவலன் ஆணை பேணலர் ஜீவகதிமார்க்கம்
மேவலர் சொற்ற மெய்யுரை கொள்ளார் விழிதுஞ்சிச்
சாவை விளிப்பார் இவரை யுணர்த்தும் தகவோரில்
கூவலிறைத்து வீண்விழலுய்க்குங் கொள்கைத்தால். 559

வருத்து வகுத்துச் சொல்லிய வாய்மை மதிகேடர்
பகுத்துணர் வில்லார் ஆதலினன்றோ பழுதென்றா
உகுத்தனர் எல்லாங் கவிழ்த்த குடத்தின் உழுந்தேபோல்
அகத்துறலின்றிப் போய திவர்க்குய் வரிதம்மா. 560

இன்ன நினைத்தே பச்சை மரத்தேறிடும் ஆணி
என்னும் வகைத்தாய்த் தெய்விக போதம் இகலின்றித்
தன்னுள் அழுந்தத் தன்னருள் தந்து தனியாவி
மன்னும் நலத்தை உன்னிவழுத்தி வழிபோனான். 561



வேறு. (அமார்க்கர்.)

ஆயிடை யொருபால் நின்றும் அடுத்தவோர் வழிவந் தண்மி
ஏயபேர் அழகு வாய்ந்த ஈடேற்ற மதிலைத் தாண்டி
மாய சாலகனும் பூண்ட மாயவேடனு மென்றோது
தீயர் ஓர் இருவர் ஜீவ பாதையில் திருமிகின்றார். 562

அங்கவர் தம்மைக் காணா ஆத்தும விசாரி நீவிர்
எங்குறைகின்றீர் நும்பேர் யா? எதுகுறித்துச் செல்வீர்
பண்சயில் இடுக்கவாயில் வழிவராப் பான்மையென் நீர்
அங்கண் வானகத்து வேந்தன் ஆணையை அறியீர் போலும். 563

சேயுயர் கதியைக் கூட்டும் செந்நெறி முகப்பு வாய்ந்த
வாயிலை விடுத்து வேறோர் வழி நுழைபவ ரெல்லாரும்
மாயமார் திருடர் என்று மறைமொழி வகுத்துக்கூற
நீயிர் அர்நியம மீறிப் புகுவது நீர்மைத் தன்றால். 564

என்ன ஆண்டுரைத்த லோடும் இருண்டவன் மனத்தர் யாங்கள்
மின்னென மிளிர்ந்து குன்றும் வீண் மகிமையிலே தோன்றி
மென்னடை பயின்றுமேலாம் விழுத்தவ வேடம் பூண்டேம்
தொன்னெறி விடாதுபற்றிச் சுருதிமார்க்கத்து வந்தேம். 565

எட்டிரண் டறியார் போலும் எண்ண மொன்றின்றி வாயில்
விட்டிடை வழியிற் சேர்வோர் விட்புலத் தமரர்கோமான்
கட்டளை இகந்துநின்ற கள்ளமார்க்கத்தராய
துட்ட ரென்றிகழ்ந்து பேசத் துணிந்தனை தருமம் அன்றால். 566

சுருக்கனை தின்று பித்தம் சாந்தமாம் என்னில் கைத்த
கருக்கிளர் வேம்பு தின்று கழித்திடக் கருதுவோர் யார்?
சுருக்கம் இக்குறுக்கு மார்க்கமென்பது துணிந்து வந்தேம்
நெருக்குறும் வாயில் சுற்றிச் சுழல்வதே நீர்மைத் தன்றால். 567

உற்பவ பேதமான உபநதி பல ஓராற்றில்
பொற்புறப் பொருந்தி யேகிப் புணரியிற் கலக்குமாபோல்
அற்பத்திற் பேதமான அருநெறி அநேகம் வேத
விற்பத்தி நெறியைக் கூடி வீட்டிலை கடையுமன்றே. 568

மூர்க்கம் இங்கெதுவானாலும் மனமொழி மெய்களாலே
பார்க்கொரு முதலாய் நின்ற பரமநாயகனைப் போற்றிப்
போர்க்கும் மெய்ஞ்ஞான வேட புராதனமுறை சாதிக்கும்
தீர்க்கரோ அன்றோ மேலாம் சிற்சுக போகந்துய்ப்பார். 569

மரம்பயில் குரங்குபோல மார்க்கங்கடோறும் வாவித்
திரம்பயி லாத சிந்தை திரியவிட்டிடாது செவ்வே
உரம்பயி லுடுமு போலும் ஒருதலையாக முன்னோர்
பரம்பரை நெறியைப் பற்றில் பயன்படுமிம்மை மாதோ. 570

கண்ணையே கண்ணுக் கொண்டு காக்கின்ற இமையைப்போலப்
புண்ணிய மூர்த்தி யெல்லாப் புவனமும் புரக்குமாட்சி
எண்ணலை போலும் எம்மூர் ஒழுக்கினுக்கிசைய நின்ற
பண்ணவராய எம்மை ஒறுப்பரோ பரிவிலார்போல். 571

வெவ்விடர் உழத்தலின்றி வேறதர் பிடித்தன்றேனும்
ஒவ்வ வந்ததற்றே மென்று உள்ளுளே புழுங்குகின்றாய்
அவ்வியம் இரும்பைத் தேய்க்கும் அரமென அறிநற்பெற்ற
செவ்விய ஆக்கமெல்லாம் சிதைக்குமென்றறியாய் கொல்லோ. 572

இந்நின்ற நிலையி லெம்மோ டிணையன்றி யேற்றமில்லாய்
முன்னின்ற வழியு மெம்மில் முதிருவாயல்லை யென்றுங்
கன்னின்ற நெஞ்ச நஞ்சங் கள்வர் தாம்புகலக் கேட்டு
வெந்நின்ற சுமடுநீத்த வேந்தியன் விளம்பலுற்றான். 573

கண்ணிலான் கருத்திலானோர் சித்திரங் கவினத் தீட்டும்
வண்ணமாம் புலவர் நீதி வாக்கிய மெடுத்துக் காட்டிப்
புண்ணிய பாவம் தாய்க்கும் பலாபலம் புலப்படுத்தி
நுண்ணிய தருமம் நீவிர் நுவலுதல் அழகிற்றம்மா. 574

தலப்பெருமையும் சீர்பூண்ட தவப் பெருமையுமைம்மிக்க
குலப்பெருமையும் வீண் செல்வக் குப்பையான் மலிந்த கோலக்
கலப்பெருமையும் என்றின்ன களுக்கிறங் கருதில் கங்குல்
உலப்புற ஒழிபு மாபோல் ஒருங்கவிந் தொழியுமன்றே. 575

அயிலெயிற் றரவுள் வீட்டும் அழல்விட மனைய நெஞ்சிற்
குயிலுமிம் மாயசால கோலத்தின் குணங்களெல்லாம்
வெயில் முனம் மஞ்சட்போல வெளிறுமாற் காலதண்டம்
பயிலுமப்பொழு தென்செய்வீர் ஏழைகாள் பாவம்பாவம். 576

கள்ளமில் நெஞ்சும் நெஞ்சிற் கலந்த மெய்ச்சொல்லும் சொல்லொத்
தெள்ளரும் ஒழுக்கும் தந்தம் உளக்கரிக் கிசைந்துளாரோ
வள்ளல் எம்மிளங் கோமான் செம்மலரடிச் சுவடு தோய்ந்த
ஒள்ளிய நெறி சென்றந்தத் துயர்பர கதியிற் சேர்வார். 577

முறைத்திறம் பிறழா நித்த முத்திசாதன மாயுள்ள
அறத்திறம் பயின்று தூயராதல் விட்டகத்தை மூடிப்
புறத்தவ வேடம் பூண்டு நடித்தலான் தோலைப் போர்த்து
மறத்திறம் பயிலும் வெங்கை வன்வெருகில் மாறுமன்றே. 578

வேட்டுவன் புதன் மறைந்து விடாது புட்பிடித்தல் போலக்
காட்டுமித்தவ வேடத்திற் கரந்தலகின்பங் கொளவுங்
கேட்டினீர் சுருதி யுண்மை கிளப்பினும் உணரீர் நன்மை
வீட்டுதிர் என்றும் நீங்கா விழுமமே விளைந்து நின்றீர். 579

(இன்னும் வரும்.)

---

# தாவீதரசன் சரிதை.

## 7. தாவீது பெலிஸ்தர் தேசத்துக்குப் போனது.

1 சாமு. 27—31 அதி. 2, சாமு. 1-அதி. கி. மு. 1056.

தாவீது சவுலுடைய தீராப்பகையையும், இனத்தாருடைய துரோகக் குணத்தையும் பார்த்து, தான் எந்த நாளிலாகிலும் மடிய நேரிடுமென்று பயந்து பெலிஸ்தர் தேசத்துக்குப்போக யோசித்தான். இவன் தேவன் தனக்குச் செய்த வாக்குத்தத்தங்களையும், தன் பத்தில் பலவிசை காப்பாற்றின தயவுகளையும் மறந்து அவநம்பிக்கையாய் யோசித்தது தப்பிதம். தீர்க்கதரிசியால், குடியிருக்கும்படி சொல்லப்பட்ட தேசத்தை விட்டுவிடுகிறதும் அவன்மேல் தப்பிதம். (22: 5.) பலபல சோதனைகளுக்கும் கண்ணிகளுக்கு மேதுவாக சபிக்கப்பட்டவர்களிடத்தில் போனதும் தப்பிதம். (26: 19.)-இப்படிக்கெல்லாம் தேவனால் சம்பவித்தது. எப்படிப்பட்ட நல்ல மனிதரும் பெலவீனரென்று நாம் அறியும்படியாகவும், பெலிஸ்தரால் சவுலும் அவன் மனுஷரும் மடியும்படிக்கேதுவாயும் நடந்திருக்கலாம்.

தாவீதும் அவன் படையும் காத்தின் இராசாவாகிய ஆகீஸ் அண்டை போனார்கள். ஆகீஸ், தாவீது சவுலுக்குப் பகைஞன் என்று தெளிவாய் அறிந்திருந்தபடியாலும், செயவீரனான தாவீது தன் சேனையிலிருப்பது நல்லதென்றும், இவனைப்போலவே அநேகர் தன்னண்டை வருவார்களென்றும் யோசித்தபடியாலும், அவனை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான். சவுலே தாவீது பெலிஸ்தியரால் மடிந்துபோவானென்று நினைத்து சந்தோஷமாயிருந்து விட்டான்.

தாவீது இராஜதானி பட்டணத்தில் பெலிஸ்தரோடே குடியிருக்க மனமில்லாமல் நாட்டுப்புறத்திலே தனித்திருக்க இராசாவிடத்தில் உத்தரவு கேட்டான். இது நல்ல விருப்பம். பெலிஸ்தருடைய விக்கிரகாராதனையினால் தன் சனம் சிக்கிக்கொள்ளாதபடிக்கும், தன் ஆத்துமா அங்கே வேதனைப்படாதபடிக்குமிருக்கக் கேட்டான். அந்தப்படிக்கு ஆகீஸ் சிக்லாகை கொடுத்தான். இந்தப் பட்டணம் முன் யூதாவையும் (யோசு. 15: 31.) பின்பு சிமேயோனையுஞ் சேர்ந்தது. யோசு. 19: 5. எந்த முகாந்தரத்தினாலோ அது இந்நாள்வரையும் பெலிஸ்தர் வசமிருந்தது. இந்த எல்லைப் பட்டணம தாவீதுக்கு வசதி. தன் சனங்களோடே போக்குவரவு செய்துகொள்ளத் தகுதி. இந்தச் சமயத்தில் அநேகர் தாவீது வசம் வந்தார்கள். 1 நாளா. 12: 1—22. அங்கே தாவீது ஒரு வருஷம் 4-மாதமுமிருந்தார், சிலர் 4-மாதமும் சிலநாளுமென்று வாசிக்கவேணுமென்பார்கள்.

அங்கிருக்கையில் தாவீது அழிவுக்கு நியமிக்கப்பட்ட சாதியாரை அழித்து அவர்கள் பொருட்களைக் கொள்ளையிடுவான். இவன் இராசாவானதால் தேவநியமப்படி செய்ததால் குற்றமில்லை. 1 சாமு. 15-ல் தப்பியோடின ஆமலேக்கியரும் அவர்கள் வகுப்பாரும் யோசு. 12: 2. 16: 3. அல்லது கானானியரின் வகுப்பாரும் அழிக்கப்பட்டார்கள். இது சவுலுக்கும் விரோதமல்ல; பெலிஸ்தருக்கும் விரோதமல்லவே. தாவீது பெலிஸ்தருக்குப் பயந்து ஆகீசுக்கு ஈரடிப்பயனுள்ள வகையாய் மறுமொழி கொடுத்தான். இஸ்ரவேலர் தன்னை வெறுக்கும்படிக்கும், ஆகீஸ் தன்னை உத்தமனென்று நம்பும்படிக்கும் ஏதுவாகப் பேசி உபாயமாய் நடந்துகொண்டான். "எராமியேலர்" யூதாவின் வம்சத்திலுள்ள எஸ்ரோனின் வம்சத்தாராம். 1 நாளா. 2: 9, 25. "கேனியர்" எத்ரோவின் வம்சத்தார். யூதாவுக்குத் தெற்கில் வாசம்பண்ணினவர்கள். நியாயாதி. 1: 16. எண். 24: 21. ஆகீசின் மனுஷர் இப்போது இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய பிரயத்தனம் பண்ணுகையில் எவனாவது போய் தாவீது சனங்களைக் கொலைசெய்து கொள்ளையடிப்பதை பெலிஸ்தருக்கு அறிவித்தால் தங்களை ஆக்கினை செய்வார்களென்று பயந்து ஒருவரும் மீதியிராதபடிக்குச் சங்காரம் பண்ணினான். ஆகீஸ் தாவீது உண்மையும், அதிகாரமுமுள்ளவனென்று நம்பினான். பெலிஸ்தரோ சாமுவேல் மரணமடைந்தபடியாலும் சவுல் கலக்கமுடையவரானதினாலும், தாவீது ஆகீஸண்டை வந்திருப்பதாலும் தைரியங்கொண்டு இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யத் திரளாய்க் கூடினார்கள்.

இந்த யுத்தத்துக்கு தாவீது வரும்படி ஆகீஸ் சொல்ல, தாவீது இஸ்ரவேலருக்கு விரோதமாய்த் தான் யுத்தஞ்செய்யப்போவது தனக்குப் பிரியமில்லையென்றாலும், தான் அப்படி யுத்தஞ்செய்யும்படி மனமுள்ளவனென்பதை ஆகீஸ் நம்பும்படிக்கு ஈரடிப்பயனுள்ள வகையாய் "உமது அடியான் செய்யப்போவதை நீர் நிச்சயமாய் அறிந்துகொள்வீர் என்றான். 28: 10. தாவீது ஆகீசுக்கு மெய்காவலனும், 28: 2. தளகர்த்தனுமானதால் ஆகீசோடே பின் தண்டிலே போனான். பெலிஸ்தரின் மற்ற அதிபதிகளோ, தாவீது கூடவருவது தங்களுக்கு மோசமான காரியமென்று பயந்து, ஆகீஸ் எவ்வளவாய் தாவீதின் உண்மையைப்பற்றிப் பேசினாலும், அதை நம்பாமல் தாவீதும் அவன் மனுஷரும் தங்கள் தானத்துக்குப்போய்விடச் செய்தார்கள். தாவீது இஸ்ரவேலருக்கு விரோதமாய் கையெடுக்காதபடிக்கும், ஆமலேக்கியரால் சிறைப்பட்டவர்களை மீட்கும்படிக்கும் தேவன் ஞானமாயும் கிருபையாயும் திரும்பும்படிக்கு வகைசெய்தார்.

சிக்லாக் வெகுதூரமானதால் 2 சாமு. 1: 2. தாவீதுடைய படை எல்லாரும் காலாட்களானதால் மீதியான ஆமலேக்கியர் சிக்லாகை சுட்டெரித்து, அதிலுள்ளவர்களை சிறைப்பிடித்துப்போனதை, 3-நாளுக்குப்பின் அறிந்தார்கள். இவர்கள் தாவீதைப்போல சர்வசங்காரஞ்செய்யாமல், அவர்களை அடிமைகளாக விற்று லாபமடையவும், கெட்ட இச்சைகளை நிறைவேற்றவும், தாவீதுக்கு நிந்தையுண்டாக்கவும் நோக்கமாய் சிறைபிடித்துப்போனார்கள். இதுவும் தேவசெயலால் நடந்தது. ஆமலேக்கியருக்குச் செய்த அநியாயம் தங்களுக்கு வந்ததென்றும், பட்டணத்தை காக்கும்படி வகைசெய்யாமல் தாவீது போய்விட்டானென்றும் அறிந்து, சனங்கள் அவனைக் கல்லெறியவேண்டுமென்று சொல்லிக்கொண்டார்கள். தாவீது ஆகீஸண்டை போனபோதும், அவனோடுகூட யுத்தத்துக்குப் போனபோதும், தேவனிடத்தில் கேளாமல் போனதுபோல், இந்தச் சமயத்தில் செய்யாமல், தன் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு தேவனிடத்தில் உத்தரவு கேட்கிறான். எண். 27: 21. தேவன் இப்போது கிருபையாய் வெகு தீவிரத்தோடே நல்ல வாக்குக்கொடுத்தபடியால் ஆமலேக்கியரை பின்தொடர்ந்து போய் சிறைகளை மீட்டு, கொள்ளைகளை எடுத்து, தங்களுக்குள்ளும் பங்கிட்டு யூதாவின் பிரபுக்களுக்கும் வெகுமதியனுப்பினான். அவர்கள் முன் செய்திருந்த தயவுகளை நினைத்தும், அவர்களுடைய பட்சத்தை பெறும்படிக்கு நோக்கமாயும் அப்படிச்செய்தான்.



பெலிஸ்தருடைய இந்த யுத்தத்தில் இஸ்ரவேலர் அபஜெயப்பட்டார்கள். சவுலும் அவன் மக்களும் இறந்தார்கள். தாவீதுடைய தயவைப் பெறும்படிக்கு ஒரு ஆமலேக்கியன் பொய்யாய் வந்து தான் சவுலைக் கொன்றதாகச் சொல்லி, பாளையத்திலிருந்த சவுலுடைய கிரீடத்தை எடுத்து வந்து காட்டவே, தாவீது அதிகமாய்த் துக்கப்பட்டு, செய்தி சொல்லவந்தவனைக் கொன்றுபோட உத்தரவுசெய்தான். தாவீது சவுலின்பேரிலும் யோனத்தான் பேரிலும் புலம்பல் பாடினார். யூதா புத்திரர் இராசகோத்திரமானதாலும், பெலிஸ்தருக்கு இவர்களே அதிக பக்கமாயிருக்கிற சத்துருக்களானதாலும், எல்லா இஸ்ரவேலரிலும் இவர்களே முக்கியரானதினாலும், அந்த புலம்பல் பாட்டை கற்றுக்கொடுக்க கட்டளையிட்டான்.

## கேள்விகள்.

1. தாவீது துன்பப்பட்ட காலமெவ்வளவு? அதில் அவர் காட்டிய நற்குணங்களெவை?

2. தேவன் தாவீதை துன்பப்படும்படி இடங்கொடுப்பானேன்? இப்படியே துன்பப்பட்ட பரிசுத்தவான்களார்? துன்பத்தினாலுண்டாகிய நன்மைகளை விபரமாய்ச் சொல்லும்.

3. துன்பகாலங்களில் தாவீதுடைய பலவீனங்களென்ன? அதற்கவர் எப்படித் தண்டிக்கப்பட்டார்?

4. ஆகீஸ் தாவீதுடைய ஞானம் உண்மையைப்பற்றி எப்படிப் புகழ்ந்தான்? இப்படியே புகழப்பட்டவர்களார்? ஏன்?

5. தாவீதை அவன் மனுஷர் கல்லாலெறியப் பேசினதுபோல் வேதத்தில் யார் யார் கல்லால் எறியப்பட்டார்கள்? ஏன்?

6. சவுல் இராசாவாகுமுன் இஸ்ரவேலர் யாரால் ஆளப்பட்டார்கள்? எவ்வளவுகாலமென்பதை விபரமாய்ச் சொல்லும். அந்த ஆளுகைக்கும் இராச ஆளுகைக்கும் வித்தியாசமென்ன?

7. தாவீது யார் யாருக்குக் கொள்ளைப்பொருட்களை பங்கிட்டுக்கொடுத்தான்? அந்தப் பட்டணங்களின் விசேஷம். கிறிஸ்துநாதரும் தமது சீஷருக்கு அப்படி வரமளித்தாரென்பதை ருசுப்படுத்தும்?

---

## 8. தாவீது எபிரோனில் இராசாவானது.

2 சாமு. 2—4 அதி. கி. மு. 1055—1048.

---

சவுலும் யோனத்தானும் மரித்தபிற்பாடு, தாவீது முன்னமே தேவனால் இராசாவாக்கப்பட்டிருந்தும், எல்லா கோத்திரங்களுக்கும் ஆட்களை அனுப்பி தன்னை இராசாவாக்கிக்கொள்ள அவசரப்படாமல் தேவசெயலுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து, சுட்டெரிக்கப் பட்ட சிக்லாக் பட்டணத்தில் தாவீது (3) நாள் தாமதிக்கவே, பலபல கோத்திரங்களிலிருந்து வலியவே அநேகர் தாவீதுக்கு உதவியாக அவரண்டை வந்து சேர்ந்தார்கள். 1 நாளா. 12-அதி. 1—22. இந்தச் சமயத்தில் தாவீது தேவனிடத்தில் உத்தரவுபெற்று எபிரோனுக்குப் போகவே, யூதா புத்திரர் அவரை தங்களுக்கு மாத்திரம் இராசாவாக அபிஷேகம்பண்ணினார்கள். இந்த எபிரோன் அந்த கோத்திரத்துக்கு தலைமையானது. யோசு. 21: 11, 12. அது பின்பு ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்டது. தாவீது யூதாக்கோத்திரத்தில் மாத்திரம் இராசாவாயிருந்தது, இஸ்ரவேல் இராச்சியம் இனி பிரிக்கப்பட்டு இந்தப்படிக்கு இருக்குமென்று காட்டும்படிக்கும் பக்தியுள்ள இராசாக்கள் இளக்கரித்துப் போகாமல் தாவீதைப்போல இந்தக் கோத்திரத்தில் மாத்திரம் மனரம்மியமாயிருந்து ஆளும்படிக்கும் இப்படித் தேவசெயலாய் நடந்திருக்கலாம்.

அவர் இராசாவானவுடன் கிலேயாத் யாபேசின் மனுஷர் சவுல்மேல் வைத்த தயவுக்காக அவர்களை வருவித்து புகழ்ந்துகொண்டார். இதினால் சவுல்மேல் பகையுள்ளவரல்ல, பட்சமுள்ளவரென்று எல்லாருக்கும் காண்பித்தார். தான் இராசாவானது பெருமையினாலல்ல, தேவநியமிப்பினாலுண்டானதென்றுங் காண்பித்தார்.



தாவீது எபிரோனில் இராசாவானபோது அப்னேர் இஸ்போசேத்தை (வெட்கத்துக்குரிய மனிதன்) இஸ்ரவேலருக்கு இராசாவாக்கினான். இவன் மாத்திரம் சவுலின் மக்களில் மீதியானவன். எல்லா இஸ்ரவேலரும் அறியவும், சனம் தாவீதை பின்பற்றிப்போகாதபடிக்கும் மக்னாயீமில் (இரட்டைச் சேனை) இஸ்போசேத் ஆளுகைசெய்தான். அப்னேர் தாவீதுமேலுள்ள பகையினாலும், சவுலின் வீட்டார்மேலுள்ள பட்சத்தினாலும் பெருமையினாலும் அப்படிச்செய்வித்தான். இஸ்போசேத்துக்கு 1 நாளா. 8: 33-ல் 9: 39-ல் எஸ்பால் என்று பேர். பாகால் விக்கிரகத்தின் பேர். போசேத்துக்கு அர்த்தம் வெட்கம். அவன் அங்கே (2) வருஷம் ஆளுகைசெய்தான். தாவீது அரசாண்ட 7-வருஷங்களிலும், அப்னேருடைய ஏவுதலால் சிலகாலங்களில் ஓயாத கலகமுண்டாயிருந்தபடியால், நெடுநாள் யுத்தம் நடந்ததாகச் சொல்லியிருக்கிறது. III. இப்படி நெடுநாள் யுத்தமானது தாவீது இராசாவுடைய விசுவாசத்தையும், பொறுமையையுஞ் சோதிக்கவும், தாவீதுக்கு இராச்சியத்தைப் பலப்படுத்தவும் உதவிற்று.

## கேள்விகள்.

---

1. தாவீது இராசா தன் இராச்சியத்தைப் பலப்படுத்தவும், விஸ்தாரமாக்கவும், என்ன நடபடிக்கைகள் செய்தார்?

2 தாவீதுக்கு இராச்சியபாரம் ஒருமிக்க கிடைப்பதற்கு தடைகளென்ன? அப்படியே கிறிஸ்துவின் இராச்சியமும் உடனே பிரபலியமாகாததற்கு தடைகளென்ன?

3. தாவீது வெகுநாள் துன்பப்பட்டு பின்பு உயர்த்தப்பட்டதுபோல் மேன்மையடைந்தவர்களார்?

4. அப்னேர், யோவாப், அமாசா இவர்களார்? இவர்களுடைய குணகுணங்களென்ன?

5. தாவீதுடைய இராச்சியம் படிப்படியாய் உயர்ந்து வந்தது எதற்குக் குறிப்பு? அதை விபரமாய் ரூபியும்.

6. யாபேஸ், கிலேயாத், எங்கே? அந்தச் சனங்களுடைய முன்பின் சரித்திரங்களைச் சொல்லும்.

7. இஸ்போசேத், மேவிபோசேத், இவர்களார்? இவர்களைப்பற்றி என்ன தெரியும்?

8. தாவீது தம்முடைய சத்துருக்களை சிநேகித்தாரென்பதற்கு ரூபகாரமென்ன? அப்படியே சத்துருக்களை நேசித்த பரிசுத்தர் யார்?

---

## 9. தாவீது உடன்படிக்கைப்பெட்டியை சீயோனுக்கு கொண்டுவந்து வைத்த நடபடிக்கை.

2 சாமு. 6-அதி. 1 நாளா. 13, 15, 16-அதி. கி. மு. 1045.

கீரியாத் யெயாரீமில் உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்ட நாள்முதல் 1 சாமு 14: 18-லுள்ள சங்கதி தவிர வேறொன்றும் அதைப் பற்றித் தெரியாது. இப்போது தாவீது எல்லா இஸ்ரவேலருக்கும் இராஜாவானதால், சபை கூடி ஆலோசித்து 30,000-பேருடன் அதை தமது நகரத்துக்கு எடுத்துவரப்போனார்.

அது பாலே யூதாவிலிருப்பதிலும் எருசலேமில் வைப்பது மிகவும் ஏற்றது. எருசலேம் பட்டணம், இராஜதானியாயும், இராச்சியத்துக்கு மத்தியமுமானதாலும், எப்போதும் தேவனை வணங்கவும், அவரிடத்தில் ஆலோசனை கேட்கவும் வசதியே. இது ஒரு பண்டிகையின் நாளில் நடந்ததென்பார்கள். எல்லாரும் வெகு சந்தோஷத்துடன் புது இரதத்தின்மேல் உடன்படிக்கைப்பெட்டியை வைத்து வந்தார்கள். பெலிஸ்தியர் அப்படிச்செய்தபோது தண்டிக்கப்படவில்லையே என்று அறிந்தபடியாலும், ஆசாரியர் அதைத் தோளில் சுமக்கவேண்டுமென்ற சட்டத்தைக் கவனியாதபடியாலும், எண். 4: 14, 15. 7: 9. சந்தோஷத்தின் மிகுதியால், அவசரமாய் கொண்டுவரவே, இடையில் மாடுகள் மிரண்டு, பெட்டியை அசைத்தபடியால், எப்போதும் பழக்கமாயிருந்த ஊசாய் என்ற லேவியன் அதைப் பிடிக்க, தேவன் அவனை அடிக்க அவன் செத்தான்.

ஊசாவின்மேல் தேவனுக்கு இப்படிப்பட்ட கோபம் வரவேண்டியதென்ன? ஆசாரியர் தவிர வேறொருவரும் உடன்படிக்கைப்பெட்டியைத் தொடக்கூடாதென்று சட்டமிருக்க, எண். 4: 15. 18: 3 லேவியனாகிய இவன் தொட்டதாலும், இருதயத்தைப் பார்க்கிற தேவன், ஊசாயுடைய அகங்காரம், கவனீனம், பெருமை முதலானதை அறிந்தபடியாலும்; தோளில் சுமந்துவரவேண்டிய பெட்டியை வண்டியில் கொண்டுவந்தபடியால் எல்லாருக்கும் பயமுண்டாகவும்; இப்படிச் செய்ய ஊசாய் தலைவனும், ஆலோசனைக்காரனுமிருந்திருப்பானாதலினும்; எண். 4: 6-ல் சொல்லியபடி பெட்டிக்குச் சரியான மூடிபோடாததாலும், தேவன் ஊசாயைக் கொன்றார். இது பயங்கரமான செய்கையென்று நாம் ஒருவகையாய் எண்ணினாலும், தேவனுடைய தீர்ப்புகள் நமக்கு மறைவாயிருக்கிறதென்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

தாவீது இராஜாவோ, உடன்படிக்கைப்பெட்டியை எடுத்து, அதை தமது பட்டிணத்துக்குக் கொண்டுவருவது தேவனுக்குப் பிரியமில்லை



யோ என்றும், தனக்கும் தன் சனங்களுக்கும் அந்தப் பெட்டியைக் கொண்டுபோவதால் என்ன தண்டனை வருமோவென்றும் பயந்து, தேவனிடத்தில் வழக்கப்படி ஆலோசனைசெய்யாமல், தன் இஷ்டப்படி அதை ஓபேத் ஏதோமின் வீட்டில் வைத்தார்.

இந்த ஓபேத் ஏதோம் பெட்டிக்காகப் பயப்படாமல், ஊசாயின் கவலையற்றதனத்துக்காக அவன் செத்தானென்று அறிந்து, சந்தோஷமாய் அதை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டான். பெலிஸ்தர் உடன்படிக்கைப்பெட்டியினால் வாதிக்கப்பட்டதும், பேத்சேமேஸ் ஊரார் அழிக்கப்பட்டதும், ஊசாய் விழுந்து செத்ததும் இவனுக்குத் தெரியும். அப்படியிருந்தும் விசுவாசத்தோடும் பத்தியோடும் வணக்கத்தோடும் அதை ஏற்றுக்கொண்டதால் தேவன் அவனை ஆசீர்வதித்தார். இவன் லேவியன் 1 நாளா. 15: 18, 21. 16: 5. 26: 4. இங்கே அவன் கீத்தியனென்னப்படுகிறான். இவன் பெற்றோர், காத் பட்டணத்தில் பிறந்ததினாலோ அல்லது அங்கே பிரயாணம்பண்ணினதினாலோ, யோசு. 21: 24, 25-ல் சொல்லிய லேவியரின் பட்டினமாகிய காத் ரிம்மோனிலுள்ளவனானதினாலோ, கேகாத்தின் புத்திரனானதினாலோ அப்படி அழைக்கப்பட்டிருப்பான்.

தேவன் ஓபேத் ஏதோமை ஆசீர்வதித்தபடியால் தாவீது இராஜா தன்னுடைய முந்தின குற்றங்களை அறிந்து, மறுபடியும் உடன்படிக்கைப்பெட்டியை எடுத்துவர திரளான சனங்களுடன் போய், முன் செய்த குற்றங்களுக்காகவும், தேவதயவு கிடைக்கவும், பலிகள் செய்து நியாயப்பிரமாண ஒழுங்குப்படி வெகு சந்தோஷமாய் எடுத்துவந்தார். இந்தச் சமயத்தில் இராஜ வஸ்திரமெல்லாம் களைந்து, தேவஊழியக்காரனுக்கேற்றதான, ஏபோத் உடையை தரித்துக் கொண்டார். ஆசாரியர்தவிர சாமுவேலும் இதைத் தரித்துக்கொண்டிருந்தார். 1 சாமு. 2: 18.

உடன்படிக்கைப்பெட்டியை தாவீது இராஜா போட்ட கூடாரத்துக்குள்ளே வைத்தார்கள். மோசே செய்த ஆசரிப்புக்கூடாரமோ கிபியோனிலிருந்தது. 1 நாளா. 16: 39, 21: 29. 2 நாளா. 1: 3. தாவீது எருசலேமில் தேவாலயங் கட்ட நோக்கமாயிருந்தபடியால், அதை எடுத்துவரவில்லை.

உடன்படிக்கைப்பெட்டி வைக்கப்பட்டபின்பு தாவீது இராஜா சனங்களை தேவன் ஆசீர்வதிக்கும்படி செபம்பண்ணி, சமாதான பலிகளிலுள்ள பங்கையும் சந்தோஷமாய்ச் சனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து அனுப்பிவிட்டார்.

### கேள்விகள்.

1. உடன்படிக்கைப்பெட்டியின் சரித்திரம் சொல்லும்?
2. அதை தாவீதின் நகரத்தில் கொண்டுவரவேண்டிய முகாந்தரமென்ன?

3. கிருபையின் எத்தனங்கள் சிலருக்கு ஜீவவாசனையாயும் சிலருக்கு மரணவாசனையாயுமிருக்கிறதென்பதற்கு உதாரணமென்ன? ஏன்?

4. தாவீது இராசா நடனம்பண்ணினது சரியா? அதைப் பரியாசம்பண்ணினதற்கு தண்டிக்கப்பட்டதார்? அவ்வாறுபோல நடனமாடினவர்களார்?

5. உடன்படிக்கைப்பெட்டியை எடுத்துவருகையில் பாடின சங்கீதங்களென்ன? எப்படி?

6. பாலே யூதா, கேத்தியன், நாகோன், அபினதாப், பேரேஸ் இந்தப் பேர்களைப் பற்றிய விபரம்சொல்லும்?

---

## The World's Birth.

## உலகப் பிறப்பு.

## XII. அதிகாரம்.

### தேவனுடைய கிரியையின் நிறைவு.

(தொடர்ச்சி.)

நாம் சாப்பிடுகிற போசனமாவதென்ன? அது அரிசி, தண்ணீர், உப்பு இவைகள் கலந்தது. அவைகளில் தானியமாவது கரியும், தண்ணீருக்குக் கருவியாயிருக்கிற இருவகை வாயுவும் சேர்ந்தது. அடுப்புக் கரியை வாயிலே போட்டு சவைத்தால், மணலை மெல்லுகிறதுபோலிருக்கும். கரியும் வாயுவும் சேர்ந்து, தானியமாகி நம்முடைய சரீரத்தை வளர்க்கும்படி செய்கிறது, தெய்வீக வல்லமையினாலாகிறது. உப்பில் இருவகை லோகங்களிருக்கிறது. அவைகளுக்குச் சோடியம் என்றும் ஹைட்ரோ குளோரிக் என்றும் பேர். அவைகளைப் பிரத்தியேகமாய் உட்கொண்டால் நமக்குச் சேதத்தை வருவிக்கும். அவைகள் இரண்டும் நிறைப்படி சேர்க்கப்பட்டிருப்பதால் நமது தேகத்தை வளர்க்கும்படி தானியத்தோடே உபயோகப்படுகிறது. ஷை இருவகை லோகங்களையும் தனித்தனியே எடுத்து அளவின்படி ஒன்றாய்ச் சேர்த்தால் அடியில் உப்பு உறையும். ஹைட்ரோ குளோரிக்கை உட்கொண்டால் அது குடலை எரித்துப்போடும். அதை உள்ளங்கையில் ஏந்தினால் ஊடுருவத் துளைத்துப்போடும். இப்படிப்பட்ட வஸ்து சோடியத்தோடே சேருகையில் நம்முடைய சுகத்துக்கு அநுகூலமாயிருக்கிறது. நாம் போசனம்பண்ணும்போதெல்லாம், அந்த அன்னத்தை உண்டாக்கி நமக்குத் தந்த வல்லமையுள்ள தேவனைத் தோத்திரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது." இந்த வார்த்தை மனித சிருஷ்டிப்பை மாத்திரம் குறிக்காது, எல்லாச் சிருஷ்டிப்பையும் குறிக்கிறது. ஆறாம்நாள் முடிவில் ஓய்வுநாளுக்குமுன் தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும்பார்த்து, மிகவும் நன்றாய் இருக்கிறதாகக் கண்டார். நமது செய்காரியங்களுக்கும் தேவனுடைய கிரியைகளுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. நம்முடைய காரியங்களை நாம் முடிவில் பார்த்தால், நம்முடைய மூதற்றமானவைகளிலும் பாவம் கலந்திருப்பதைப் பார்க்கலாம்; தேவனுடையவைகளிலோ மாசு மறுவில்லை.

"நன்றாயிருக்கிறது" என்று தேவன் ஆறுதரம் சொன்னார். வெளிச்சத்தைச் சிருஷ்டித்த முதல்நாள் முடிவில் முதலாவதாயும், கடலையும் தரையையும் உருவாக்கின மூன்றாம்நாளில் இரண்டாவதாயும், அந்தநாளில் புல்பூண்டு விருக்ஷங்களை உண்டுபண்ணினபின்பு மூன்றாவதாயும், நாலாம்நாளில் வானஜோதிகளான சூரிய சந்திரனுக்கு வெளிச்சமேற்றினபோது நாலாவதாயும், ஐந்தாம் நாளில் பறவைகளையும் மச்சங்களையும் பிறப்பித்தபோது ஐந்தாவதாயும், ஆறாம்நாளில் மிருகங்களைச் சிருஷ்டித்தபோது ஆறாவதாயும் கூறப்பட்டிருக்கிறது. ஆறாம்நாளில் கடைசி விசையாக தேவன் தாம் உண்டாக்கின எல்லாம் மிகவும் நன்றாயிருக்கிறதென்று கண்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் தன்னிலேயும், ஒன்றுக்கொன்றுக்கு இருக்கிற சம்பந்தத்திலேயும், ஐக்கியத்திலேயும் மிகவும் நன்றாயிருந்தது.

தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பற்றிச் சொல்லவேண்டுமானால் அநேக வருஷங்கள் செல்லும். தேவன் அவைகளையெல்லாம் தமது அளவற்ற ஞானத்தின்படியே படைத்தார். அவர் ஒவ்வொன்றையும் அளவுப்பிரமாணத்தின்படி செய்திருக்கிறார். அளவில் ஒன்று கொஞ்சம் மிஞ்சுகிறதாயிருந்தால் இந்தச் சிறந்த உலகம் நாசமாய்ப் போயிருக்கும். அதில் ஒரு ஜீவப்பிராணியும் உயிரோடே இருக்கமாட்டாது.

இதை விளக்கும் திருஷ்டாந்தங்கள் ஏராளமாயிருக்கின்றன. இரண்டொன்றை இங்கே சொல்லுகிறேன். நாம் சுவாசிக்கிற ஆகாயம் ஏறக்குறைய 50-மயில் உயரமட்டுமிருக்கிறது. அது சில மயில் தூரம் மாத்திரமிருந்தால் மனிதரும் மிருகங்களும் மூச்சு அடைத்துச் சாகவேண்டியதாய் நேரிடும். ஆகாயம் அதிகமான தொலைதூரம் எட்டினால் சூரியனுடைய காந்தியை நாம் சகிக்கக்கூடாமல் மாண்டுபோவோம். ஆகாயம் இன்னமும் அதிகத் தொலைவரைக்கும் எட்டுகிறதாயிருந்தால் எதிர்க்கப்படாத புசலுண்டாகி நம்முடைய வீடுகளும், விருக்ஷங்களும் விழுந்துபோம். நம்முடைய இருதயத்திலும் எரிவுண்டாகும். நம்மைச் சூழ்ந்திருக்கிறவைகளிலெல்லாம் மாறுதலையும் காணலாம்.

இன்னொரு திருஷ்டாந்தத்தைப் பார்ப்போம். தேவன் மூன்றாம் நாளில் சமுத்திரத்தையும் தரையையும் உண்டாக்கினார். தரை இப்போதிருக்கிறதைவிட கடினமாயிருந்தால் நாம் அதைச் சாகுபடி செய்யக்கூடாததாயிருக்கும். அதை உழவாவது வெட்டவாவது ஏலாதவர்களாயிருப்போம். பூண்டுகள் வேர் அடிக்கவும் ஏலாது. தரை மிகவும் இளக்கமுள்ளதாயிருந்தால் நாம் அதில் அமிழ்ந்திப்போகவேண்டியதாயிருக்கும். நம்முடைய வீடுகள், விருக்ஷங்கள் தரையில் பலமாய் நிற்கமாட்டாது.

கடல் தண்ணீர் இப்போதிருக்கிறதைவிட கனதியாயிருந்தால் மச்சங்களெல்லாம் மிதக்கும். அதில் நீந்தவும் சக்தியற்றிருக்கும். தண்ணீர் லேசாயிருந்தால் மச்சங்கள் அமிழ்ந்து அடியில் மாண்டுபோம்.

இவைகளைப் பார்க்கும்போது கர்த்தருடைய கிரியை எல்லாம்

எவ்வளவு நிறைவுள்ளதாயிருக்கிறது என்பதை அறியலாம். அவைகள் மிகவும் நன்றாயிருக்கிறது. உலகத்தையும் திருச்சபையையும், தம்முடைய ஜனங்களையும் அவர் பாதுகாப்பதையும், ஆண்டு நடத்துவதையும் பார்த்தாலும் அது மிகவும் நன்றாய்த் தானிருக்கிறது. நம்முடைய இராஜாவாகிய ஆண்டவருடைய வழிகளெல்லாம், அவர் பார்வையில் நன்மையும், செம்மையுமாயிருக்கிறது. அவர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலத்தையும் நன்மைக்கேதுவாக நடத்திக்கொண்டு வருகிறார். அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது. அவர் வழிகளெல்லாம் நியாயம். அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன். அவர் நீதியும் செம்மையுமானவர். ஆதலால் இராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும், என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன். நாடோறும் உம்மை ஸ்தோத்திரித்து, எப்பொழுதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன். கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார். அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது. தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள். உம்முடைய சிறந்த மகிமைப்பிரதாபத்தையும், உம்முடைய அதிசயமான கிரியைகளையும் குறித்துப் பேசுவேன். ஜனங்கள் உம்முடைய பயங்கரமான கிரியைகளின் வல்லமையைச் சொல்லுவார்கள். உம்முடைய மகத்துவத்தை நான் விவரிப்பேன். அவர்கள் உமது மிகுந்த தயவை நினைத்து வெளிப்படுத்தி, உமது நீதியைக் கெம்பீரித்துப் பாடுவார்கள். கர்த்தர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். கர்த்தர் எல்லார்மேலும் தயவுள்ளவர். அவர் இரக்கங்கள் அவருடைய எல்லா கிரியைகளின் மேலுமுள்ளது. கர்த்தாவே உம்முடைய கிரியைகள் எல்லாம் உம்மைத் துதிக்கும், உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள். மனுப்புத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது இராச்சியத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு உமது இராச்சியத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள். உம்முடைய இராச்சியம் சதாகாலங்களிலுமுள்ள இராச்சியம் உம்முடைய ஆளுகை தலைமுறைதலைமுறையாகவுமுள்ளது. கர்த்தர் விழுகிற யாவரையுந் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையுந் தூக்கிவிடுகிறார். எல்லாச் சீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது. ஏற்றவேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்கிறீர். கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார். தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை இரக்ஷிக்கிறார். கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையுங் காப்பாற்றி, துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார். என் வாய் கர்த்தரின் துதியைச் சொல்வதாக. மாம்சதேகமுள்ள யாவும் அவருடைய பரிசுத்த நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கக் கடவது.

என் தேவனே, உமது கிரியைகள் அதிசயமானவைகள். அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

---



# சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—இந்திய ராஜபிரதிநிதி அவர்களுக்கும் அமீர் அதிபதிக்கும் சென்ற வருஷத்தின் முந்தின பாகத்தில் துரைத்தன சம்பந்தமாய்ப் போக்குவரவான கடிதங்கள் பிரசுரமாயின. அமீரிடத்திலிருந்து வந்த காகிதம் ஒன்றில், தாம் பிரிட்டிஷ் அரசாட்சியாரின் அநுமதியின்றி யாதொன்றிலும் கையிட்டுக்கொள்வதில்லை என்பதாகவும் அப்கானிஸ்தானின் காரியாதிகளில் நன்மை தீமையான எந்தச் சம்பவத்தையும் பிரிட்டிஷ் அரசாட்சியாருக்கு தாம் உடனுக்குடனே தெரியப்படுத்துவதாகவும் மாறாத நிர்ணயம்பண்ணியிருக்கிறதை வெளியிட்டிருக்கிறார்.—இந்திய சமஸ்தானங்களிலிருந்து மோரிஷ் தீவுமுதலிய இடங்களுக்கு பரதேசம் போகும் கூலி ஜனங்கள் சம்பந்தமாய் சமீபகாலம் இந்திய அரசாட்சியார் நிருபித்த சட்டதிட்டங்கள் வெகு கண்டிதமாய் இருப்பதையிட்டு மிகுந்த மனவெழுச்சி தோன்றியது.—சென்னையில் கீர்த்திபெற்ற ஒரு வர்த்தகக் கூட்டத்தாரால் கடுதாசிசெய்யும் இயந்திரம் ஒன்று ஸ்தாபிக்கப்படப்போகிறது.—டிசம்பர்மீ 31ௗ காலையில் பலத்த பூகம்ப அதிர்ச்சியொன்று சென்னையிலும் தென்இந்தியாவின் வேறநேக இடங்களிலும் உண்டாயினது. சேதபாதம் அதிகமில்லை. அசைவு தோன்றினது தெற்கிலிருந்து வடதிசை நோக்கியாம்.—பரோடாவின் புதிய கைக்குவார் அரசன் டிசம்பர்மீ 28ௗ பொம்பாய் கவர்னராகிய ஸ்ரீ ஜேம்ஸ் பெர்குசன் துரையினால் பட்டாபிஷேகம் பெற்றார்.—சிம்லாவில் கூடின ராணுவ கமிஷனர்கள் பொம்பாய் சென்னை சமஸ்தானங்களின் சிரேஷ்ட தளபதி உத்தியோகங்களை ஒழிப்பிக்கவேண்டும் என்று உசாவினதின்பேரில் பிறந்த தீர்மானம் இவ்வருஷ ஆரம்பத்தில் ஊர்ஜிதத்துக்கு வரும் என்பதாய் பிரஸ்தாபித்திருக்கிறது. மேற்படி உத்தியோகங்களில் அமர்ந்திருப்போர் இனிமேல் குறைந்த சம்பளத்தில் ஒவ்வோர் சைனியத்தின் தளகர்த்தர்களாகவே இருப்பார்கள்.—ஸ்ரீஹென்ரி டேலி துரை மத்திய இந்தியாவில் புரிந்த சத்கிருத்தியங்களுக்கு ஞாபகமாக இந்தூரில் சாதாரண கையொப்ப ரூபமாய் பணஞ்சேர்த்து கட்டுவதற்காய் தீர்மானித்த "டேலி கல்விச்சாலை" என்ற வித்யாஸ்தாபனத்துக்கு வேலை தொடங்கப்போகிறது.—இந்திய ராஜபிரதிநிதி அவர்கள் காசி நகரத்தைப் பார்த்துவந்ததின் கண்ணியத்துக்காக மேற்படி நகரத்து வங்காளி சமுதாயத்தாரின் பிரதானிகள் கூடி அங்குள்ள சமஸ்கிருத வித்யாசாலையில் "ரைப்பன் வெகுமதி" என்ற நாமதேயத்தால் ஒரு நிதி ஸ்தாபிக்க கையொப்ப ரொக்கம் கொடுத்துதவினர்.—மைசூர் மகாராஜாவின் மாளிகையிலும் பரோடாவின் கைக்குவார் அதிபதியின் புதிய அரமனையிலும் மின்வெளிச்சத்தினால் தீபமேற்றப்படுமாம்.

**ஐரோப்பா.**—கிராபோர்ட் ஏர்ல் பிரபுவின் தேகம் கிரயம் வாங்கலாம் என்கிற நோக்கத்தோடே அபர்டீன் நகரத்திலுள்ள கோரியினின்று திருடப்பட்டுப்போனதாக உத்தேசம்.—வியன்னா நகரத்தில் ஒரு நாடகசாலை தீப்பற்றி அழிந்தது. வாசாப்பு ஸ்தலத்தில் விளக்கு கட்ட அறுந்து விழுந்ததே மேற்படி அக்கினிவாதைக்கு காரணமாம். கட்டடத்தின் சிதைவுக்குள்ளிருந்து மீண்டெடுத்த உடல்கள் 500. ஒருவேளை இத்தொகை 700-பேர் வரைக்கும் அதிகரிக்கும். 917-ஜனங்களைக்காணவில்லை என்று துரைத்தன வர்த்தமானத்தில் கண்டிருக்கிறது.

பெப்ருவரி நாள்-28. தைமீ 21உ-முதல், மாசிமீ 18உ-வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | உக | அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள். அப்போஸ்தலர் 8: 17. |
| வி | 2 | உஉ | நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். 9: 15. |
| வெ | 3 | உ௩ | உன் ஜெபம் கேட்கப்பட்டது. 10: 31. |
| ச | 4 | உ௪ | கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது. 11: 21. |
| ஞா | 5 | உ௫ | தேவவசனம் வளர்ந்து பெருகிற்று. 12: 24. |
| தி | 6 | உ௬ | பரிசுத்தஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள். 13: 52. |
| செ | 7 | உஎ | கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள். 14: 23. |
| பு | 8 | உஅ | தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு. 15: 40. |
| வி | 9 | உ௯ | கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். 16: 14. |
| வெ | 10 | ௩0 | வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். 17: 11. |
| ச | 11 | க | நான் உன்னுடனேகூட இருக்கிறேன். 18: 10. |
| ஞா | 12 | உ | கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. 19: 17. |
| தி | 13 | ௩ | என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும். 20: 24. |
| செ | 14 | ௪ | கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது. 21: 14. |
| பு | 15 | ௫ | ஞானதிருஷ்டியடைந்து அவரைத் தரிசித்தேன். 22: 17. |
| வி | 16 | ௬ | நாம் தேவனுடனே போர்செய்யலாகாது. 23: 9. |
| வெ | 17 | எ | குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்க, 24: 16. |
| ச | 18 | அ | இராயருக்கு அபயமிடுகிறேன் என்றான். 25: 11. |
| ஞா | 19 | ௯ | இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார். 26: 26. |
| தி | 20 | க0 | மனுஷரே, திடமனதாயிருங்கள். 27: 25. |
| செ | 21 | கக | தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான். 28: 15. |
| பு | 22 | கஉ | விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். ரோமர் 1: 17. |
| வி | 23 | க௩ | தேவனிடத்தில் பட்சபாதமில்லை. 2: 11. |
| வெ | 24 | க௪ | விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான். 3: 28. |
| ச | 25 | க௫ | நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது. 4: 15. |
| ஞா | 26 | க௬ | தேவனிடத்தில் சமாதானம்பெற்றிருக்கிறோம். 5: 1. |
| தி | 27 | கஎ | கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறீர்கள். 6: 14. |
| செ | 28 | கஅ | நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். 7: 4. |

## விசேஷ நாட்கள்.

2. பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள்.
3. பௌர்ணமி.
5. செப்துவகெசிமா ஞாயிறு.
12. செக்சகெசிமா ஞாயிறு.
18. அமாவாசை.
19. கின்குவகெசிமா ஞாயிறு.
22. லெந்தென்னும் நாட்களில், முதலாம் நாள்.
24. பரி. அப். மத்தியாவின் திருநாள்.
26. லெந்தென்னும் நாட்களில், 1-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲௮௱௮௨ ௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### எ-ம் அதிகாரம்.

விசுவாசப்பிரமாணத்தின் சுருக்கம்.

திரித்துவத்தைப் பற்றி.

வினா. நீ விசுவாசிக்கிற இந்தச் சத்தியங்களினாலே பிரதானமாய் அறிந்துகொள்ளுகிறதென்ன?

விடை. முதலாவது.—என்னையும் உலகம் அனைத்தையும் படைத்த தேவனாகிய பிதாவை விசுவாசிக்கவேண்டும் என்றும்;

இரண்டாவது.—என்னையும் மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்ட தேவனாகிய குமாரனை விசுவாசிக்கவேண்டும் என்றும்;

மூன்றாவது.—என்னையும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எல்லாரையும் பரிசுத்தம்செய்கிற தேவனாகிய பரிசுத்தஆவியையும் விசுவாசிக்கவேண்டும் என்றும் அறிந்துகொள்ளுகிறேன்.

வினா. திரித்துவத்திலுள்ள இம்மூவரும் நமக்கு என்ன சம்பந்தமுள்ளவர்களாயிருக்கிறார்கள்?

விடை. க-வது. "தேவனாகிய பிதா நம்மையும் உலகம் அனைத்தையும் உண்டாக்கினார்."

மனுஷசாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்தார். அப். 17: 26.

௨—வது. "தேவனாகிய குமாரன் நம்மையும், மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்டார்."

நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர். வெளி. 5: 9.

நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதார பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார். 1 யோவா. 2: 2.

அவர் சிலுவையிலே ஒரேதரம் தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தியிருக்கிறார். அதினாலே: குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. யோவா. 6: 40.

௩—வது. "தேவனாகிய பரிசுத்தஆவி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எல்லாரையும் பரிசுத்தஞ்செய்கிறார்."

நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும், இரட்சிப்படையும்படிக்கு ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டார். 2 தெச. 2: 13.

வினா. எத்தனை தேவர்கள் உண்டு?

விடை. ஜீவனுள்ள மெய்யான தேவன் ஒருவரே உண்டு.

கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை. உபா. 4: 35.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உபா. 6: 4.

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. 1 கொரி. 8: 6.

உபா. 10: 17. சங். 18: 31. ஏசா. 44: 6, 8. 45: 5, 6, 18, 21. 46: 9. 48: 12. மாற். 12: 29, 32. யோவா. 17: 3. 1 கொரி. 8: 4. எபே. 4: 6.

அஞ்ஞானிகள் அநேக தேவர்களைத் தொழுதுகொள்ளுகிறார்கள்.

அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களும் உண்டாயிருக்கிறார்கள். 1 கொரி. 8: 5.

ஆனால் இவர்கள் பொய்த்தேவர்களும், மனுஷரின் கைவேலையாகிய விக்கிரகங்களுமாயிருக்கிறார்கள்.



வினா. ஆனால், இயேசுகிறிஸ்துநாதரும், பரிசுத்தஆவியுமாகிய இருவரும் தேவனில்லையா?

விடை. ஆம். தேவன்தான்.—பிதாவாகிய தேவனுக்குச் சொல்லப்பட்டிருக்கிற தேவஇலட்சணங்களே இவர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர் [கிறிஸ்து] என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கு மேலான தேவன். ரோ. 9: 5.

தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. கொலோ. 2: 9.

இயேசுகிறிஸ்து அநாதியாயிருக்கிறவர், எல்லாப் பொருட்களையும் சிருஷ்டித்தவர். எல்லா வஸ்துக்களையும் தாங்குகிறார், ஆதரிக்கிறார். அவர் சர்வவியாபகர், சர்வஞ்ஞர். தேவாராதனைக்குரியவர், (கிறிஸ்துவின் தேவதன்மையைப்பற்றிச் சொல்லிய அதிகாரத்தைப் பார்க்கவும்.)

அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் "பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்" என்றார். யோவா. 16: 15.

அவர் எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிறார். அப். 10: 36.

எல்லாருக்கும் நியாயாதிபதியாகவும் இருப்பார்.

பரிசுத்தஆவியானவர் சிருஷ்டித்தார், சர்வவியாபகமுடையவர், சர்வஞ்ஞராயிருக்கிறாரென்றும், விசுவாசிகளின் ஆத்துமாக்கள் அவருடைய கிருபையுள்ள செயலினாலே பரிசுத்தமாக்கப்பட்டவைகளாயிருக்கின்றனவென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. (பரிசுத்தஆவியானவரைப்பற்றிச் சொல்லிய அதிகாரத்தைப் பார்க்கவும்.)

நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய். அப். 5: 3, 4.

"என் மகிமையை நான் வேறொருவருக்கும் கொடேன்." (ஏசா. 48: 11) என்று, தம்முடைய மகத்துவத்தைக்குறித்து இவ்வளவு கண்டிப்பாய்ச் சொன்ன தேவன், இயேசுகிறிஸ்துவானவரும், பரிசுத்தஆவியானவரும் சிருஷ்டிக்கப்பட்டவர்களாய் இருந்தால், அவர்கள் தேவதன்மையுடையவர்கள் என்று இவ்வளவு பலமாய் தமது பரிசுத்த வசனத்தில் காண்பிப்பாரென்று நாம் நினைக்கக்கூடாது. ஆகையால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், 'பிதா தேவன், குமாரனும் தேவன், பரிசுத்தஆவியும் தேவன்; ஆனாலும் மூன்று தேவர்களில்லை, ஒரே தேவன்.' தேவத்துவத்தில் அவர்கள் மூவராயிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் முந்தினவருமல்ல, பிந்தினவருமல்ல. ஒருவரிலும் ஒருவர் மேன்மையானவருமல்ல, தாழ்மையானவருமல்ல என்பதே.

வினா. தேவத்துவத்தில், ஒன்றுக்கு மேலான ஆட்களுண்டு என்று நீ எப்படி ரூபிகரிப்பாய்?

விடை. பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியே யும் மனுஷனை உண்டாக்குவோமாக என்றார். ஆதி. 1: 26.

பின்பு தேவனாகிய கர்த்தர், இதோ, மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போலானான். ஆதி. 3: 22.

ஆதி. 11: 6, 7. தானி. 4: 26. 5: 18, 20.

இப்படி பன்மையாகச் சொல்லப்படுகிறதைக்கொண்டு, தேவத்துவத்தில் பலர் இருக்கிறார்களென்று அறியலாம்.

வினா. தேவத்துவத்திலுள்ள மூவரும் எந்த வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறார்கள்?

விடை. குருவானவரால் வழங்கும்படி குறிக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாத ஜெபத்தில், தேவத்துவத்திலுள்ள மூவரின் நாமத்தினாலும் ஆசீர்வதிக்கப்படுகிறோம். (2 கொரி. 13: 14.)

கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.—கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.—கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவார். எண். 6: 24—26.

சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். ஏசா. 6: 3.

இந்த வணக்கம் திரித்துவத்திலுள்ள மூவருக்கும் செலுத்தப்பட்டிருக்கிறதாக யோவா. 12: 41. அப். 28: 27-வாக்கியங்களால் விளங்குகிறது.

ஏசா. 34: 16. 48: 16. மத். 28: 19. ரோ. 15: 16. 2 கொரி. 13: 14. எபே. 2: 18. 2 தெச. 3: 5 எபி. 9: 14. 1 பேது. 1: 1, 2. 1 யோவா. 5: 7.

தேவத்துவத்திலுள்ள மூவரும் போதிக்கிறவர்களாக சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள். யோ. 6: 45.

இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். கலா. 1: 12.

பரிசுத்தஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார். யோவா. 14: 26.

திவ்விய கற்பனை, மூவரின் பிரமாணமாயிருக்கிறது.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ரோ. 7: 22.



கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் கலா. 6: 2.

ஜீவனுடைய ஆவியின் பிரமாணம். ரோ. 8: 2.

பாவமானது, திரித்துவத்துக்கு விரோதமான செய்கையாயிருக்கிறது. உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சைபாராதிருப்பீர்களாக. உபா. 6: 16.

நாமும் கிறிஸ்துவை பரீட்சைபாராதிருப்போமாக. 1 கொ. 10: 9.

கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? அப். 5: 9.

திரித்துவத்திலுள்ள மூவரும் விசுவாசிகளுடன் ஐக்கியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

எங்களுடைய ஐக்கியம் பிதாவோடு இருக்கிறது. 1 யோவா. 1: 3.

அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. 1 யோ. 1: 3

பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. 2 கொரி. 13: 14

---

## இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி)

மருள் பரம்பரையினோடு மறைநெறி மயங்கு மாயின்
இருள் நனி யியங்கும் வானத் திருங் கதிர் இரவி முன்னர்
தெருளிலா மனத்தீர் நுங்கள் தீச்செயல் ஒருவீராகி
அருள் வழிப்பட்டேம் என்றல் அகந்தையின் மடமை யாமால். 580

இந்நிலம் புரந்து நிற்கும் இரக்ஷண்ய கிரியிற் றேன்றி
மன்னு பன்னதியும் ஒன்றாய் மருவியோர் முகமாயோடி
உன்னரும் பரமானந்த உததிபுக் கொடுங்கும் நீர்சொல்
அன்னிய கான்யாறெல்லாம் அளறுபுக் கழுந்து மன்றே. 581

எதிரெதிராகச் செல்லும் இடைநெடுந் தூரமுள்ள
நதிநதம் ஒருங்குகூடா கூடினும் நாமம் வேறாம்
கதியுறு மார்க்கத் தோடு கதறெரிக் கவிழ்த்து மார்க்கம்
எதிருறீஇப் பொருந்து மென்றல் ஏழமைப் பாலதேயாம். 582

வேத மார்க்கத்தின் மேய வேதிய ரொழுக்கம் வேதம்
ஓதற நெறியைப் பற்றி உற்பவ தோடத்தாலே

சாதக மானபாவம் சருவிடா தகற்றி ஒல்லும்
தீதில் நற்கருமம் யாவும் சிந்தையாற் செய்தல்வேண்டும். 583

அகில காரணராந்தூய ஆண்டவைக் கடங்கா திட்டு
சகல பொல்லாங்கும் உள்ளிச் சஞ்சலித் தழுதுள் நைந்து
புகலிடமானயேசு புண்ணிய பலத்தை நாடி
இகலி முப்பகையை வென்றிங் கிடைவிலா தோடல்வேண்டும். 584

ஒளிக்குறி வாயிலூடு புகுந் தொரு வழிப்பட்டுள்ளம்
தெளிக்கும் நல்லுரை கேட்டான்ம தீக்கை பெற்றளவி லின்பம்
அளிக்கும் நற்கருணை பாய ஆரயிர்தூண்டு வேந்தன்
விளிக்கும் நாளளவும் தூயவிதி விலக்கோம்பல் வேண்டும். 585

ஜீவன் முத்தருக்கு நல்கும் திவ்விய சிந்தை ஞானம்
மேவரும் குணங்கள் தீர்க்க விசுவாசம் விரதம் சீலம்
தாவரும் நலங்க ளெல்லாம் தந்தருள் புரிந்து காக்கும்
தேவ நல்லாவி யுள்ளந் திகழ்தர ஜெபித்தல் வேண்டும். 586

இவ்வகை ஜீவமார்க்கத் தியல்வதே ஜீவன்முத்தர்
செவ்வி யென்றறிமின் ஈண்டு செப்பிய இவற்றொன்றேனும்
ஒவ்வலின் றும்பாலிந்த உண்மை வற்புறுத்துமென்னை
அவ்விய னென்றுதூறும் அவமதி அழகிற்றம்மா. 587

கண்டிலிரோ என்னெற்றி கவினும் ஓர் ராஜசின்னம்
பண்டைய நர்மை நீக்கிப் பரிவின் நல்கிய இத்தூய
வெண்டுகில் கையிலிந்தோ விளங்குசாஸன மிவ்வெல்லாம்
அண்டர் நாயகனே பாலித்தருளிய அருட்பேறுமால். 588

மிருத்தெனும் நதியைத் தாண்டி வியன் திருநகர வாயில்
அருத்தியிற் கண்டு சேரும் அளவை யிவ்வடை யாளத்தால்
திருத்தகு பரமராஜன் திருவடித் தொழும்ப னென்றுக்
கருத்துற அறிந்துள் ளுய்ப்பர் கணிப்பருங் கடை காப்பாளர். 589

இத்திற அடையாளங்கள் எவர்க்கிலை அவர்தாம் ஈசன்
முத்தி மாநகர வாயில் முகப்புற அடுத்தபோதும்
வித்தக விமலன் சொற்ற விதிவிலக் கோம்புகில்லாப்
பித்த ரென்றெரிபாதால பிலத்திடைப் புகுத்துவாரால். 590

ஆரணம் சொன்னவாறிங் கடுத்தனன் அளியனேன் யான்
சோர மார்க்கத்து வந்து சுவரேறிக் குதித்தீர் நீவிர்
காரணங் கருதி யென்னைக் கடைக்கணித் தருள்வர் நம்மைக்
கோர வெஞ்சிறை யிலுய்ப்பர் முடிவில் எங்கொற்றவேந்தன். 591

வேதியரல்லீர் கள்ள உள்ளத்தீர் விபுதராயன்
ஆதரம்பெற்றீ ரென்றற் கடையாளம் யாதுமில்லீர்



கோதொரீஇ நன்மைகூடுங் குணமுமின்றதலாலே
வேதனை உழக்க நின்றீர் வேறினிப் புகல்வதென்னே. 592

பொருளிலார்க் கில்லை இந்தப் பூவுலகதுபோல் யாண்டும்
அருளிலார்க் கில்லாதாகும் அவ்வுலகென்ன ஆன்றோர்
தெருளுரை யேனுங்கொண்டு தேடலீர் அருளை வாளா
இருளுளார் ஒளியைப்பேறார் என்பது சரதமாமால். 593

மறங்குலா மனத்தீரின்னே திரும்புமின் மரபின் ஞானத்
திறங்குலாம் அநுமானத்தின் திரவியங் கொண்மின் போர்த்த
புறங்குலாம் தவவேடத்தைப் போக்குமின் புனிதமார்க்கத்
தறங்குலாம் விரதசீலம் அகத்துற அநுட்டித்துய்ம்மின். 594

காயத்தை விடுமுன் உள்ளக் கள்ளத்தை யொருவி மேற்கொள்
மாயத்தை உதறித் தூய வளமலிபரம கானன்
தேயத்தை நோக்கிச் சென்று ஜீவமாநதியின் புண்ய
தோயத்தைப் பருகி யென்றுந் தொலைவிலா இன்பந்துய்ம்மின். 595

இற்றிதே அமையும் மேல்நும் இட்டமென் றியம்பிவேத
நற்றவன் வழியைக் கூடி நனிவிரைந் தேகலோடும்
சொற்றிறம் அறியாராய சோரமார்க்கத்தர் தம்மில்
எற்றிவன் றுணிவென் றெள்ளி யெதிருரையாது சென்றார். 596

குக்கல்வால் மட்டைகட்டி நிமிர்ப்பினுங் கோணல்தீரத்
தக்கதோ மூடருள்ளத் தன்மையும் அன்னதேயாம்
பக்குவ நிலத்திலன்றிப் பாழ்படு கருங்கற்பாறை
உக்கவை நல்வித்தேனும் பயன்படா தொழியுமன்றே. 597

களங்கமில் மதியைக் காணுங் கண்ணிலா அவர் தம்பாட்டில்
விளங்கு முட்பன்றிபோல விடாப்பிடியாக வோடி
வளங்கெழு தடத்தை நீங்கி வருத்தமென் றுரை பெற்றோங்கு
துளங்கலில் கிரியைக்கிட்டி யேங்கினர் துணுக்கமுற்றார். 598

வெருவருங் காட்சித்தாய வெற்பிதன் மீதுசெல்லும்
அருநெறி பிடித்தியார் இவ்வவஸ்தையை அடைவொன்றுப்
பெருவழி யிரண்டு பாலும் பிரிந்துபோவதைக் கண்டந்தோ
இருவரும் பிரிந்து சென்றங் கிடைவழிப் பிணமாய்ப்போனார். 599

பிரிந்த அப்பெருவழிக்குப் பெயர் நாசமோசமென்பர்
விரிந்த மோசத்தில் மாயசாலகன் விழுந்தான் வேடம்
புரிந்தவன் நாசமெய்திப் புதையிருள் மலிந்தகானில்
திரிந்திட் டுழந்தான் பின்னர்த் திரும்பினானில்லை யாண்டும். 600

பேசரும் வருத்தம் துன்பம் பிறங்கினும் பிதாவின் சித்தம்
ஈசனார் செயலெல்லாம் என்றீடேற்றத் திசையுமென்று

நேசமோடமைய வேண்டும் நிலைபிசகிடுவராயின்
நாசமோசம் பொல்லாங்கும் நரகும் வாய்திறக்குமன்றே. 661

இடையில் வந்திடையிற் போனஇருவர் தங்கதியீதாக
உடையவன் திருவாக்கொன்றே உறுதுணையாகக்கொண்டு
நடைவழிபிடித்துச்சென்ற நலங்கிளர் மறைவலாளன்
மிடைதரு வருத்தமென்னும் வியன்கிரியருகர் வந்தான். 602

வேறு. (ஜீவபுஷ்கரிணி.)

அங்கணோர் சிறை மீக்கிளர்ந் துயர் விசும்பணவி
மங்குல் தோய்ந்தெழில் மறிதரத்தண்ணிழல் மருவிக்
கொங்குயிர்த்துவான் மீனெனப்பன்மலர் குழுமும்
பொங்கர் ஒன்றுளதாதுலர் புகலிடம் போலும். 603

வேங்கை சந்தனம் காரகில் தேக்கொடு மிடைந்த
கோங்கு சண்பக மாப்பலா அத்தி குங்குலிகம்
ஓங்கும் ஏழிலம்பாலை குங்குமம் புலவோமை
பூங்குருந் தசோகந் தமரத்தை பூங்கடம்பு. 604

வன்னி பாதிரி இலவங்கம் வன்மரை வகுளம்
புன்னை வாதுமை இருப்பை வான்றெங்கு மடற்பூகம்
தென்னை ஆமலகங் கடுத்தான்றி திந்திருணி
பொன்னிணர்ப்படு கொன்றை அச்சுவத்தம் ஆல்புன்கு. 605

புலந்தொகுத்தபல் ஜாதிய விருக்கங்கள் பொதுளி
நலந்தொகுத்தபன் மலர்க்குலை நாற்றிசை கமழ
இலர் தொகுத்த மன்பதைக்கெலாம் அகமகிழ் நிலவப்
பலந்தொகுத்துதவிடுவதோர் பைம்பொழிற் பழுவம். 606.

பொங்கு ஜீவ புஷ்கரிணியின் புதுப்புனல் தேக்கி
அங்குரித்த புற்பூண்டு தண்டலைக் குலமனைத்தும்
கொங்குலாய் வரும் வசந்தமென் கால்படுங் கோட்பால்
பங்கமில் பசும்பொன் மயமய தப்பழுவம். 607

அண்ணல் வானகத்தரசன் இவ்வகலிடம் புரக்கும்
தண்ணளிக்குடை கவிந்தன வாமெனத் தயங்கிக்
கண்ணகன்ற எப்பாங்கருங் கவினுறக் கவிந்து
நண்ணுவார்க் குறு வெப்பநோய் தணிக்கும் அந்நறுங்கா. 608

மூந்து முத்தலைச் சிகரியின் மூளைத்து மூதுலகின்
பந்த றுதிடு ஜீவமா நதிமுகம் படிந்து
விந்தையாய் நாஜீவர்க்கு விழுமநோய்துடைக்கும்
மந்தமாருதம் மலிந்த அம்மதுமலர்ச் சோலை. 609

அலர்ந்த செவ்வியில் அகத்தெழு மளிய மென்குரலில்
புலர்ந்த டைந்தவர் விடாய் தணித்துள்ள எப்பொருளும்



உலர்ந்த வான்பயிர்க் குதவுமோர் மழையென உதவி
மலர்ந்த செய்கையில் வள்ளலைப் பொருவு மாண்பொதும்பர். 610

மண்டலத் துறமுடங்கு தாளூன்றி வாய்மலர்ந்து
விண்டு தூமலர்க்கட்டுளி வடித்து மெய்யரும்பித்
தண்டளிர்க் கரம் விரித்துயர் சினைத்தலை தாழ்த்திக்
கொண்ட செவ்வியிற் பரவுதொண்டரைப் பொரும்கொழுங்கா. 611

புண்ணியன் திருவடி மலர்க் கன்புசெய் புனிதர்
உண்ணிகழ்ந்த மெய்ப்பத்தியின் ஒள்ளிய செயல்போல்
வண்ண வான்றருக் குலமலர் நறுமணமலிந்து
கண்ணகன் புவிமுழுவதும் நறுங்கடி கமழும். 612

பொன்னிலத் தரசன் திருவோலக்கப் பொதுவில்
மன்னு பல்லியங் கலித்தெனச் சினைதொறும் வதிந்த
பன்னிறத்த புள்ளினஞ் சிலம்பிய வொலிபம்பித்
துன்னுவோர் உளங்களிப்புறச் செவிக்கின்பந் தொகுக்கும். 613

வனமடங்கலும் போதகம் வரியளிமருவும்
வனமடங்கலும் போதகக் குருளையும் மயங்கும்
கனமடங்கலும் போதகவுங் களிமயில்கள்
கனமடங்கலும் போதகம் தரும் பலகாட்சி. 614

அமரர் யாவரும் கைபுனைந்தியற்றிய ஆதி
குமர நாயகன் திருமணப் பந்தலோ குறிக்கில்
தமர நீருலகத்து வாழ் சபையெம்பிராட்டி
விமல லீலை உய்யானமோ யாதென விரிப்பாம். 615

இனைய கற்பகப் பொதும்பரின் நடுவண தியைந்த
நனைமலர்த் தடவாவியைச் சிந்தையுள் நாடில்
கனைகடற்புவி முழுவதுங் கதிக்கரை யேறும்
புனையும் வாசகம் அன்றிது புராதன சுருதி. 616

ஆழி நாயகன் ஞானத்தில் அருளில் தூய்மையினில்
வாழி அன்பினில் ஆழ்ந்து நீர்நிறைந்து நிர்மலமாய்ப்
பாழி அம்புவி ஆத்துமப் பயிர்வளஞ் சுரப்ப
ஊழி ஊழி பாய்ந்துறுவது ஜீவநீருதகம். 617

ஜீவனுக் குலவா வொரு நித்தியஜீவன்
நாவினுக் கமுதச் சுவை நினைவிற்கு நறுந்தேன்
தீவினைக் கொரு மருந்து வன்சிறையளி மூரல்பைங்
காவினுக் கணியாய இச்சீவநீர்க் கங்கை. 618

புனித மாயது புண்ணியம் பொலிவது பாவத்
துனித விர்ப்பது சுகிர்தத்தை விளைப்பது துய்க்கும்

மனித ஜீவரை வானவராக்கிடும் வலத்தத்
இனிதினெங்கணுஞ் சுரப்பது நாடுவோரொவர்க்கும். 619

பாசம் வீசிய பான்மைய பளிங்கெனத் தெளிந்த
தேசுலா முழுமதிக் கதிரொருவழித் திரண்டு
மாசிலா மடுவெனப் பெயர்வதிந்தன அனைய
ஆசில் வெண்மணற் குவால்பொரும் அலைபுரள் கரைய. 620

(இன்னும் வரும்.)

---

# தாவீதரசன் சரிதை.

## 10. தாவீது தேவாலயங் கட்ட யோசித்ததும் தடுக்கப் பட்டதும்.

2 சாமு. 7. 1 நாளா. 17-அதி. கி. மு. 1044.

---

தாவீது இராசா, ஈராமுடைய மனிதரால் தமக்கொரு அரண்மனையையும், தன் வேலைக்காரருக்கு ஒரு பட்டணத்தையுங் கட்டின பின்பு, உடன்படிக்கைப்பெட்டியை வைக்கும்படி தேவாலயங் கட்ட யோசித்தான். தேவன் தனக்கு இளைப்பாறுதலையும் சனத்தையும் தந்ததை நன்றாய் உணர்ந்தவராய் தேவனை மகிமைப்படுத்தும் வகையை யோசிக்கிறார். நேபுகாத்நேச்சார் தனக்கு இளைப்பாறுதல் கிடைத்தபோது தனக்குப் பெருமையுண்டாகப் பேசினான். தானி. 4: 29. தாவீதோ கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் காணுமட்டும் என் கண்களுக்கு நித்திரையையும் வரவிடுவதுமில்லை, மி. என்பதாய் பொருத்தனைபண்ணினார். சங். 132. ஞானமுள்ள தாவீது, தமது யோசனைப்படி உடனே வேலையைத் துவக்காமல், நாத்தான் தீர்க்கதரிசியிடத்தில் ஆலோசிக்கிறார். ஆலோசனைக்காரரின் திரட்சியில் சுகமுண்டு. இவரோ தேவனிடத்தில் ஆலோசியாமல் தமதிஷ்டப்படி அவருடைய எண்ணம் பத்தியுள்ளதென்பதாய் நம்பி அவருக்கு இணங்கப் பேசினார். இதினால் பரிசுத்த தீர்க்கரும் சொல்வதெல்லாம் தேவாவியினாலுண்டானதென்று நம்பக்கூடாதென்றும் அவர்களும் அறிவீனத்தினால் தவறுதலுள்ளவர்களென்றும் அறிகிறோம். 1 சாமு. 16: 6. 2 இராசா 4: 27.

நாத்தான் நிந்திக்கப்படாதபடிக்கே, தேவன் அவனைக்கொண்டே உடனே தாவீதுடைய எண்ணத்தை தடுக்கச்செய்தார். அவருடைய விருப்பம் நல்லதென்று தேவன் ஒத்துக்கொண்டாலும், 1 இரா. 8: 18. தாவீது இராசா செய்யவேண்டிய வேலை இன்னும் அதிகமிருப்பதால் அவருடைய மகனே அதைக் கட்டச்சித்தமானார். தாவீது இராசா யுத்தவீரனானதால், இன்னும் ஜெயிக்கவேண்டிய தேசங்களை ஜெயித்து, இஸ்ரவேலருக்கு எல்லையை விஸ்தாரமாக்கவேண்டியிருந்தது. அவர் இன்பமான சங்கீதக்காரனானதால், பின்பு கட்டப்போகிற தேவாலயத்தில் பாடும்படி சங்கீதங்களை ஆயத்தம்பண்ணவேண்டியிருந்தது. தேவாலயத்தில் வேலைசெய்யும்படி லேவியரையும், ஆசாரியரையும் ஒழுங்குப்படுத்தவேண்டியிருந்தது. தாவீது அதிகமாய் இளக்கரித்



துப்போகாதபடி அருமையாய் தாவீதை என் தாசன் என்று தயவாய் அழைக்கிறார். அவருக்குச் சந்தோஷமும் ஆறுதலுமுண்டாக, நியாயாதிபதிகள் காலத்திலும், சவுலின் காலத்திலும் இஸ்ரவேலர் சத்துருக்களால் துன்பமும் இடுக்கணுமடைந்ததுபோலில்லாமல், நிலையாய் கானானில் குடியிருக்கச்செய்வேனென்கிறார். தாவீதுக்கும், அவன் வீட்டை பெருகச்செய்யவும், தாங்கவும், அவருடைய வம்சத்தில் நிலையான இராச்சியம் கட்டப்படுமென்று வாக்குத்தத்தஞ்செய்கிறார். 1 இராசா 11: 38. அவன் வித்திலே என்றைக்கும் சாலோமோனிலும் கிறிஸ்துவிலும் இராச்சியத்தை நிலைப்படுத்துவதாக வாக்களிக்கிறார். 1 இராசா 8: 20. சங். 132: 11. தேவனுடைய நாமத்துக்காக சாலோமோன் தேவாலயத்தைக் கட்டினான். ஆவிக்குரிய திருச்சபையாகிய மாளிகையை கிறிஸ்துநாதர் கட்டினார். எபி. 3: 3—6. சங். 2: 5. ஏசா. 9: 7. தானி. 2: 44. லூக். 1: 32, 33. தாவீதுக்கு இன்னும் ஆறுதலுண்டாக, இராசாவாகப்போகிற மகன் குற்றஞ்செய்தால் கடினமாயல்ல பிதாவடைவாக தண்டிப்பதாயும் சொல்லுகிறார். எபி. 12: 6. ஆனால் சினத்தின் கோலால் மனிதர் தண்டிப்பதுபோல் அல்லவென்கிறார். சங். 39: 11: ஏசா. 47: 3. எபி. 10: 31. 12: 29. தேவன் தாவீதுக்கு மோசே, யோசுவா, மற்ற யாருக்குஞ் செய்யாத பெரிய தயவைச் செய்திருக்கிறார். தேவன் தாவீதின் ஆயுசின் காலத்திலேயே சாலோமோன் இராசாவாகவும் 1 இராசா 39: 40. ஆபிரகாம் விசுவாசத்தினால் கிறிஸ்துநாதரைக் கண்டதுபோல, தாவீதும் மேசியாவைக் காணவும் தேவன் அவருக்கு கிருபைசெய்திருக்கிறார். சங். 110: 1. அப். 2: 30. நாத்தான் தீர்க்கதரிசி தான் முன்சொன்ன ஆலோசனைக்கு இது விரோதமாயிருந்தாலும், இது தன்னுடைய புத்தியீனத்தையும் நிந்தையையும் காட்டத்தக்கதாயிருந்தாலும் ஒன்றையும் மறையாமல் தேவன் சொன்ன எல்லா வார்த்தைகளையுஞ் சொன்னார்.

தாவீது சந்தோஷத்தினாலும் நன்றியறிதலினாலும் நிறைந்தவராய், தேவனுடைய சமுகமிருக்கிற உடன்படிக்கைப்பெட்டியிருக்கிற இடத்துக்குப்போய் உளுக்கார்ந்து தியானஞ்செய்து முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணுகிறார். சங். 95: 6. சாலோமோன் அப்படியே செய்தார் 1 இராசா 8: 54. 2 நாளா. 6: 13. பரிசுத்தவான்கள் இருந்தும் ஜெபம்பண்ணுகிறதுண்டு. யாத். 17: 12. 1 இராசா 19: 4. தாவீது தேவனுடைய பெரிதான தயவை நினைத்து அவரைத் தோத்திரிக்கவும் அவரை நோக்கி ஜெபிக்கவும், ஒன்றுஞ் சொல்ல ஏதுவில்லாமல் ஆச்சரியத்தோடே "நான் உம்மிடத்தில் சொல்லவேண்டியதென்ன" என்கிறார்.

## கேள்விகள்.

---

1. தேவாலயங் கட்டும்படி தாவீதுக்கு மனம் வந்ததற்கு முகாந்தரமென்ன? அவரெப்படி தடுக்கப்பட்டார்?

2. தேவன் தாவீதை தடுத்ததால் அவர் வெறுப்படையாதபடி செய்த வாக்குத்தத்தங்களென்ன?

3. "உன் இராசாசனம் என்றைக்கும் நிலைபெற்றிருக்கும்." இது எப்படி நிறைவேறிற்று? வேதவாக்கியங்களால் ரூபியும்.

4. தாவீது தேவாலயங் கட்டவேண்டுமென்றிருந்த மனம், நல்ல மனமென்று தேவன் அங்கீகரித்ததற்கு நியாயமென்ன?

5. இந்தச் சமயத்தில் தாவீது பாடின சங்கீதங்களெவை? அதற்கு அவைகளில் குறிப்புண்டா?

6. தாவீது இராஜா செய்த வகைப்படி ஜெபித்தவர்களார்? ஏன்? இந்த ஜெபத்தில் நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன?

## 11. தாவீது பெலிஸ்தரையும், மோவாபியரையும் சூரியரையும், ஏதோமியரையும் ஜெயித்தல்

2 சாமு. 8-அதி. 1 நாளா. 18-அதி. கி. மு. 1040.

பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு எப்போதும் விரோதிகள். சவுலின் காலத்தில் இஸ்ரவேலரை பலவகையாய் ஒடுக்கினார்கள். சிம்சோன் பெலிஸ்தரை அழிக்கத் துவக்கினான். தாவீதோ அவர்களை தலையெடுக்கவொட்டாமல் முற்றிலும் அழித்தார். பெலிஸ்தியருக்கு இராஜதானியாகிய காத் பட்டணத்தையும் அதைச் சேர்ந்த பட்டணங்களையும் பிடித்துக்கொண்டான். அம்மாவென்ற மலையில் கட்டப்பட்ட கோட்டையையும் பிடித்தார்.

மோவாபியர், இஸ்ரவேலருக்கு துரோகஞ்செய்தவர்கள். எண். 24: 17. தாவீது அடைக்கலமாய் விட்டுவந்த அவனுடைய பெற்றோரைக் கொலைசெய்தவர்கள். ஆகையால் தாவீது அவர்களைப் பயங்கரமாய் அழித்தார். இரண்டு பங்கு மனிதரை பட்டயத்தால் கொன்று, ஒரு பங்கு மனுஷரை அடிமை வேலைசெய்யவும் திட்டம்பண்ணினார். (சங். 60: 6.) இவர்கள் ஆகாப்பின் காலம்வரை கப்பங் கட்டினார்கள். 2 இராசா. 3: 4, 5. பின்பு கலகஞ்செய்து ஜெயிக்கப்படாமல் போனார்கள்.

ஆதி. 15: 18-ல் சொல்லப்பட்ட வாக்குத்தத்தப்படி ஐப்பிராத் நதிவரையும் இஸ்ரவேலருக்கு காணியாட்சி இருக்கவேண்டியதால் சூரியரை முறியடித்தார். தேவ உத்தரவுப்படிக்கும் உபா. 17: 16. யோசுவா செய்தபடிக்கும் 11: 6. குதிரைகளின் குதிங்கால் நரம்புகளை வெட்டிப்போட்டார்கள்.

ஏதோமியர் ஏசாவின் சந்ததியார். இவர்கள் இப்போது அபிசாய் என்ற படைத்தலைவனால் 6,000-யோவாப்பால் 12,000-ஆக 18,000-பேர் மாண்டார்கள். இவர்கள் வெகுகாலமாய் யூத இராசாக்களுக்கு கப்பங் கட்டினார்கள். பின்பு யோராமின் காலத்தில் கலகஞ்செய்தார்கள்: 2 நாளா. 21: 8.

தாவீது யுத்தங்கள் முடிப்பித்தபின்பு, யோனத்தானுடைய குடும்பத்துக்கு நன்மைசெய்ய ஆலோசித்து மேவிபோசேத்தை வருவித்து உபசரித்தான். 1 சாமு. 20: 14, 15.

## கேள்விகள்.

1. பெலிஸ்தர், மோவாபியர், சூரியர், ஏதோமியர் வரலாறு எழுதும்?

2. இந்த ஜெயங்களை நினைக்கப் பாடப்பட்ட சங்கீதங்களெவை? அதற்கு சங்கீத வார்த்தைகளைச் சொல்லும்.

3. இந்த யுத்த நடபடிக்கையில் தேவனுடைய எந்த கட்டளைகள் கைக்கொள்ளப்பட்டன?



4. இக்காலத்திலிருந்த பிரதான ஆசாரியர் யார்?

5. கிரேத்தியர், பெலேத்தியர் என்பவர்களார்?

## 12. அம்மோனியரை முறியடித்தல், அதின் இராஜதானி முற்றிக்கை போடப்படல்.

2 சாமு. 10, 11-அதி. 1 நாளா. 19, 20-அதி.
கி. மு. 1038—1035 வரையும்.

அம்மோனின் இராஜாவாகிய நாகாசுக்கும் சவுலுக்கும் பகையுண்டே. 1 சாமு. 11: 2. அந்தப் பகையினால் அவன் தாவீதுக்கு பட்சங் காண்பித்திருப்பான்: அந்த இராஜா இறந்துபோனதால் தாவீது அவன் மகனுக்கு மினவுதல் சொல்ல தானுபதிகள் அனுப்பவே அம்மோனியர், இஸ்ரவேலரின் மேலுள்ள பகையினாலும், 1 சாமு. 11: 2. தாவீதுடைய ஜெயங்களினாலும், உபா. 23: 6-ல் தங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய கண்டிப்பான நியாயப்பிரமாணத்தினாலும், சந்தேகமுள்ளவர்களாய் தங்களைப்போல அவர்களும் புலம்பவும், தேவகற்பனைக்கு மீறுதலாகவும், லேவி, 19: 27. உபா. 14: 1 இஸ்ரவேலருக்கு நிந்தையாகவும் ஏசா. 20: 4. 47: 2 50: 6. தானுபதிகளுடைய தாடியைச் சிரைப்பித்து, அவர்கள் வஸ்திரங்களைக் கத்தரித்துப்போட்டார்கள். ஆகலால் அவர்கள் 1 இராசா 16: 34-னால் பின்னால் கட்டப்படப்போகிறதும், இப்போது எண்ணப்படாமலிருக்கிறதுமான எரிகோவில் தங்கியிருக்க கற்பிக்கப்பட்டார்கள். இந்த முகாந்தரத்தால் அம்மோனியர்மேல் படையெடுக்க நேரிட்டது. அம்மோனியருக்குத் துணையாக வந்த சூரியரும் பயங்கரமாய்த் தாழ்த்தப்பட்டார்கள். அநேகம் இராஜாக்கள் தாவீதுக்குக் கப்பங் கட்டினார்கள். யோசு. 1: 4-ல் சொல்லிய எல்லையுங் கிடைத்தது. அடுத்த வருஷத்தில் அம்மோனியர் முறியடிக்கப்பட்டபின் அவர்களுடைய தலைநகரியும் முற்றிக்கைபோடப்பட்டது. இக்காலத்தில் பாடப்பட்ட சங்கீதங்கள். 20: 21.

## 13. தாவீது இராஜாவுடைய பாவம்.

2 சாமு. 11: 2—27. கி. மு. 1035.

தாவீது இராஜா, தம்முடைய ஜனங்கள் அம்மோனியரோடே யுத்தஞ்செய்துகொண்டிருக்கையில், தேவன் ஜெயத்தை அளிக்கும்படியாக கவலையோடே ஜெபிக்கவேண்டியவர், கவலையற்றவராயும், பெருந்தீனி தின்று தூக்கமயக்கமுள்ளவராயுமிருந்தபடியால் பசாசானவன் அவருக்குள் தகாத பாவஇச்சையை உண்டாக்கி பத்சேபாளோடு விபசாரஞ்செய்ய படுகுழியில் விழத்தள்ளினான். நிற்கிற தண்ணீர் சேற்றை உண்டாக்கும். சோம்பலாயிருக்கிறவனுக்குப் பசாசு வேலைகொடுக்குமென்பதை அறியாமல்போனார்.

விபசாரமாகிய பாவம் நியாயாதிபதிகளால் தண்டிக்கப்படவேண்டிய பாவம். யோபு 31: 11. தாவீது நியாயாதிபதியானதால் இருபேரையுங் கொலைசெய்ய தீர்ப்புசெய்யவேண்டியது. லேவி. 20: 10. தாவீது இராஜாவுடைய பாவம் மகா வெட்கமும் பயங்கரமுமானது.

அவர் இப்போது 50-வயதுக்கு மேற்பட்ட கிழவராயும், அநேக பெண்டுகளையும் மறுமனையாட்டிகளையுமுடையவராயும் 12: 8. அவருக்கும், அவர் இராச்சியத்துக்கும் மேன்மையுண்டாகும்படி, தன் உயிரைப் பாராமல் யுத்தத்துக்குப்போயிருந்த சனவானான உரியாவுடைய மனைவியை எடுத்துக்கொண்டவராயும்,-கற்பும் கனமுமுள்ள பத்சேபாளை கற்பழித்தவராயும், தேவனால் நீதிசெய்யும்படிக்கு நியமிக்கப்பட்ட இராசாவாயுமிருந்தபடியால், அவருடைய குற்றம் பெரியதுதான். ஆகையால் நாம் நாடோறும், "தேவனே நான் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று என்னை இரட்சித்துக்கொள்ளும்" என்று ஜெபிக்கவேண்டியது அவசியமே.

பத்சேபாளோ தன் புருஷன் வெகுகாலமாய் தன்னோடிராதிருக்க, தனக்கு கற்பமுண்டானதைக் கண்டு, தன் புருஷன் அறிந்தால் தன்னைக் கொலைசெய்துபோடுவானென்று பயந்தும், உரியா பழிவாய்க்கும்படிக்கு தாவீது இராஜாவுக்கு விரோதமாய் கலகஞ்செய்வானென்று அறிந்தும், தான் கர்ப்பவதியென்று செய்திசொல்லி அனுப்பவே, தாவீது தன் குற்றத்தை மறைக்கும்படி உரியாவை வரவழைத்து பல உபாயங்கள்செய்தும், சித்தியாதபோது உரியாவை படைமுகத்தில் நிறுத்தி, கொலைசெய்துபோட யோவாபுக்கு உத்தரவுசெய்தான். யுத்தத்துக்கு புறப்படுகையில் தீதான காரியங்களுக்கு விலகியிருப்பாயாகவென்ற கட்டளையையும் மறந்துபோனார். உபா. 23: 9. முன் சவுலைக் கொல்லும்படி விரும்பினவர்களை தடுத்தவர். 1 சாமு. 24: 4. 15: 26. 8: 20. இப்போது அனிகரமாயும், தந்திரமாயும் உரியாவையும், அவனைச் சேர்ந்தவர்களையும் கொலைசெய்தார். பாவமான இச்சை தாவீதுடைய கண்களை குருடாக்கிற்று, இருதயத்தை கடினப்படுத்திப்போட்டது.—மனச்சாட்சியை காயப்படுத்திப்போட்டது. பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டிற்று. நீதி. 6: 32. துக்கநாட்கள் (7) ஆதி. 50: 10. 1 சாமு. 31: 13. முடிந்தபோது தாவீது அந்த விதவையையுங் கலியாணஞ்செய்தான்.

## கேள்விகள்.

1. தாவீது இராஜா செய்த பாவத்துக்கினமான பாவங்களையெல்லாம் வரிசையாய் எழுதுங்கள். அந்தப் பாவம் வெட்கமும், நிந்தையுமானதென்று ரூபியுங்கள்?

2. பரிசுத்தவான்கள் பாவத்தில் விழுந்ததற்கு வேறு திருஷ்டாந்தமுண்டா? அதினால் என்ன படிக்கிறோம்?

3. கண்களின் இச்சையினால் கெட்டவர்களார்? எப்படி? அது நீக்க மருந்தென்ன?



### கிறிஸ்து சிலுவையில் மரணமடைந்த நாளாகிய

## பெரிய வெள்ளிக்கிழமைக்குரிய தியானம்.

"அப்பொழுது அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி இயேசுவையோ வாரினால் அடிப்பித்து சிலுவையிலறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்."

இயேசுவே! நீர் பரபாசைவிட ஏழை யூதர்களால் குறைவாய் எண்ணப்பட்டதென்ன? நீர் அழகில் குறையோ? வாக்குச் சாதுரியத்தில் தாழ்ச்சியோ? நன்மைசெய்ததில் பின்வாங்கினதுண்டோ? எல்லா மனுப்புத்திரரிலும் அழகுள்ள நீர் ஒருவேளை கன்னங்கரிய பாவத்தை ஏற்றுக்கொண்டதினால் அழகில் குன்றிப்போனீராக்கும். பதினாயிரம் பேரில் சிறந்த உம்முடைய தேகம் இந்த நீசனுடைய தேகத்தை எடுத்துக்கொண்டதினால் குறைவடைந்துபோனதாக்கும். நீர் பேசினதுபோல் ஒருக்காலும் ஒருவனும் பேசினதில்லையே. மௌனமாயிருந்துவிட்டீரோ?

ஆ, அன்புக்குரியவா! நீர் வாய் திறந்திருப்பீரானால் பிலாத்துதான் எங்கே போவான்? யூதர்கள்தான் எவ்விதமாயிருக்கமாட்டார்கள். காற்றுக்குமுன் துரும்பு எம்மாத்திரம்? மௌனப் பிரபுவே! உம்முடைய சத்தம் வீதியில் ஒருவனாலும் கேட்கப்பட்டதில்லை. நீர் கூக்குரலிட்டதுமில்லை. ஆ! என் இரட்சிப்பே உமது ஆவல் ஆகையால் மௌனமாயிருந்துவிட்டீர். நன்மைச் சொரூபியே! உமது சத்துராதிகளுக்கும் நன்மைசெய்திருக்க எல்லாரும் இவனை யகற்றும். இவனை யகற்றும் என்று கேட்டுக்கொண்டதென்ன? இயேசுவே! அந்த யூதர்களல்ல, என் பாவமே இவனைச் சிலுவையிலகற்றும், சிலுவையிலகற்றும் என்று கேட்டுக்கொண்டது. ஆ, யேசு அன்பனே, பாவியின் நேசனே! கன்னங்கரிய என் பாவத்துக்காக பிரலாபித்தழுகிறேன். ஆ, பாவமே! பாவமே! நீ என்னைவிட்டுத் தூரப்பட்டுப்போகக் கூடுமானால் நான் எத்தனை பாக்கியவானாயிருப்பேன்!

ஆ யூதரே! நீங்கள் பரபாசை விடுதலையாக்கவும், இயேசுவைச் சிலுவையிலறையவும் கேட்டுக்கொண்டதென்ன? இது இருளின் வல்லமையும், அந்தகாரத்தின் வேலையுமாயிருந்ததாக்கும். உங்களுக்கு நன்மைசெய்த அருளை நீங்கள் கொலைப்படுத்தும்படியாகத் துணிந்து, கொலைபாதகனை விடுதலைசெய்யவேண்டுமென்று கேட்கிறீர்களே. ஆம், இப்போது இயேசுவை விடுதலையாக்கி, பரபாசைச் சிலுவையிலறைந்தால் என் இரட்சிப்பு நிறைவேறுமோ? ஆ என் இரட்சிப்பே, என் நேசரே! நீர் உம்மைச் சிலுவையில் மனதார ஒப்புக்கொடுத்ததினால் உமக்குமுன் சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து என் பாவத்தை அறிக்கையிடுகிறேன்.

"பிலாத்து வாரினால் அடிப்பிக்கிறான்." என் ஆத்துமாவே, பாதகன் பரிசுத்தனை வாரினால் அடிப்பிக்கிறதைப் பார்க்கிறாயா? பாதகன் வேறொரு கொடிய பாதகனைக்கொண்டு இயேசுவை அடிப்பிக்கிறதை உணருகிறாயா? ஆ, ஆண்டவரே! "ஏரோதும், பொந்தியுப்பிலாத்தும் புறச்சாதிகளோடும் இஸ்ரவேல் ஜனங்களோடுங்கூட நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோதமாய் மெய்யாகவே கூட்டங்கூடினார்கள்." இயேசுவே! வாரினால் அடிபட நீர் செய்த குற்றமென்ன? ஆ, என் பாவமே, என் கொ

டிய பாவமே, எலிசா தன்னைப் பரிகாசம்பண்ணின பிள்ளைகளைக் கரடியைவிட்டு நாசம்பண்ணச் சொல்லியிருக்க உம்மை வாரினால் அடிப்பித்தவனையும் அடித்தவனையும் ஒரே அடியாய் அடியாமற்போனதென்ன? ஆ உம்முடைய பொறுமைக்கு நாங்கள் என்னசொல்ல! ஆழ்ந்த எங்கள் பாவங்களைக்குறித்து நாங்கள் பிரலாபிப்பதுடன் ஆழ்ந்த உமது பொறுமையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, நன்மை செய்து நாங்களும் பாடுபடும்போது அந்தப் பொறுமையைக் காட்டக் கிருபைகொடுக்க உம்மை மன்றாடுகிறோம் சுவாமி!

"சிலுவையிலறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்."

புண்ணியநாதா, பாவத்தினால் வந்த எங்கள் உபத்திரவத்தை நீக்க நீர் உபத்திரவப்பட்டது போதாதோ! ஆ, சாவுக்குத் தீர்ப்பிடப்பட்ட என் மரணத்தை உத்தரிக்க ஆம் நீசமரணத்தையும் உத்தரிக்க சித்தங்கொண்டீர். என்னை நேசித்த பெருமானே! நீர் உம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தம் அவர்களிடத்தில் அன்புவைக்கச் சித்தங்கொண்டீர். ஆ, உம்முடைய நேசம் மரணத்திலும் வலிமையுள்ளது.

பிலாத்துவே, சீஷர்கள் மயங்கி நிற்க தாயார் ஏங்கி நிற்க, உத்தமஸ்திரீகள் திகில்கொண்டேங்க, பத்தர்கள் அங்கலாய்க்க, புண்ணியநாதனைக் கொலைக்களத்துக்கு அனுப்பிவிட்டாயே. மரணத்தை ஜெயமாக விழுங்க மரணத்தீர்ப்பிடப்படுகிறாரென்பதை நீ அறியாயாக்கும்.

இப்போது பாதகர் கூடிக்கொள்கிறார்கள். அவருடைய வஸ்திரங்களைக் கழற்றி பரிகாச அங்கியை உடுத்துகிறார்கள். முள்ளுக்களால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசில் வைக்கிறார்கள். அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து, யூதருடைய ராஜாவே வாழ்கவென்று அவரைப் பரிகாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, கோலை எடுத்துச் சிரசில் அடிக்கிறார்கள், தாடிமயிரைப் பிடுங்குகிறார்கள். உழுகிறவர்கள் அவர் முதுகின்மேல் உழுது தங்கள் படைச்சால்களை நீளமாக்குகிறார்கள்.

ஓ பாவி! உன் இரட்சகனை இப்போது நோக்கு. அவர் குலம், நிறம் இன்னதென்று தெரிகிறதில்லை. இவர் தன் சகோதரருக்கு வேற்று மனுஷனும், தமது தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமாகும்படியான வேளை இதுவாக்கும். ஆயினும் பாவி! இது என் இரட்சகரல்லவென்று சொல்லாதே. இந்த வேளையில் நீ அவரை மறுதலித்தால் உன்னையும் அவர் மறுதலிப்பார்.

இதோ நடு மதியமாகிறது. சிரசிலிருந்து இரத்தம் தாரை தாரையாக வடிகிறது. வேர்வை அதனுடன் சேர்ந்து பிரளயமாகிறது. உமிழ்நீர் அவர் முகத்திலிருந்து இறங்குகிறது. பாதகர் அவரைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோக இருகரங்களையும் அழுந்தக் கட்டுகிறார்கள்.

ஓ பாவி! நீ பரிகாசம்பண்ணப்படுவதற்குப் பதிலாக அவர் பரிகாசம்பண்ணப்படுகிறார். நீ துப்பப்படுகிறதற்குப் பதிலாக அவர் துப்பப்பட்டார். நீ இகழ்ச்சியடைவதற்குப் பதிலாக அவர் இகழ்ச்சியடைந்தார். நீ பொற்கிரீடம் தரிக்கப்பட அவர் முண்முடி சூட்டப்பட்டார். நீ மகிமைப்பட அவர் அசட்டைபண்ணப்பட்டார்.

"அவரை எண்ணாதேபோனார்கள்."

அவரைச் சிலுவையிலறையும்படி கொண்டுபோகிறார்கள். தலை கொதிக்கிறது. இறுகக் கட்டப்பட்ட கரங்கள் நோகிறது. குடல்



பொங்குகிறது. சிலுவையைத் தூக்கவோ பெலனில்லை. என்றாலுஞ் சந்தோஷத்தோடு சிலுவையைச் சுமந்துகொண்டுபோகிற இரட்சகனைப் பின்சென்று கொல்கதாவுக்குப் போவோமாக. ஒருவன் முன்னுக்குத் தள்ளுகிறான். வேறொருவன் பக்கத்தில் தள்ளுகிறான். ஒருவன் விரைவாய்ப் போவென்கிறான். வேறொருவன் நீயோ தேவாலயத்தை இடித்து மூன்றுநாளைக்குட் கட்டுகிறவனென்கிறான்.

பாவி! சிலுவையைச் சுமக்கப் பெலனில்லாத இவரை நோக்கிப் பார். அநேகங் காளைகள் அவரைச் சூழ்ந்துகொண்டது. பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் அவரை வளைந்துகொண்டது. பீறிக்கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் தங்கள் வாயை அவர்மேல் திறந்தார்கள். தண்ணீரைப்போல் ஊற்றுண்டார். அவர் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. அவர் இருதயம் மெழுகுபோலாகி அவர் குடல்களின் நடுவே உருகுகிறது. அவர் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது. அவர் நாவு மேல் வாயோடு ஒட்டிக்கொண்டது. நாய்கள் அவரைச் சூழ்ந்துகொண்டது. பொல்லாதவர்களின் கூட்டம் அவரை வளைந்துகொண்டது. அவர் கைகளையும், கால்களையும் உருவக்குத்தினார்கள். வீணாய் அவருக்குச் சத்துருக்களானவர்கள் அவருக்கு நேரிட்ட ஆபத்தைக் கண்டு சந்தோஷித்தார்கள். அவர் இருதயம் அவருக்குள் வியாகுலப்பட்டது. மரணத்திகில் அவர்மேல் விழுந்தது. ஆழமான உளையில் அமிழ்ந்தினார். நிலையாத ஜலத்தில் ஆழ்ந்தார். வெள்ளங்கள் அவர்மேல் புரண்டது. கூப்பிடுகிறதினால் இளைத்தார். அவர் தொண்டை வரண்டுபோயிற்று. நிந்தையைச் சகித்தார். இலச்சை அவர் முகத்தை மூடிற்று. தன் சகோதரருக்கு வேற்று மனுஷனும் தன் தாயின் பிள்ளைகளுக்கு அன்னியனுமானார். நிந்தை அவர் இருதயத்தைப் பிளந்தது. மிகவும் வேதனைப்பட்டார். பரிதபிக்கிறவர்களுக்குக் காத்திருந்தார், ஒருவனுமிருந்ததில்லை. தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தார், ஒருவரையுங் கண்டதில்லை. பகையுண்டாக்கும வார்த்தைகளால் சூழ்ந்துகொண்டு அவரோடு போர் செய்தார்கள். அவர் சிநேகத்துக்குப் பதிலாக அவரை விரோதித்தார்கள். நன்மைக்குப் பதிலாக அவருக்குத் தீமைசெய்தார்கள். அவர்களுக்கு நிந்தையானார். அவரைப் பார்த்துத் தங்கள் தலையைத் துலுக்குகிறார்கள். நீசரும் அவர் அறியாதவர்களும் அவருக்கு விரோதமாய்க் கூடுகிறார்கள். அநேகருடைய அவதூறைக் கேட்டார். தன் அயலகத்தாருக்கு நிந்தையும் அவருக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானார். செத்தவனைபோல் எல்லாராலும் மனதார மறக்கப்பட்டார், உடைந்த பாத்திரம்போலானார்.

ஆ பாவி! உன்னிமித்தம் பட்ட பாடுகள் கஸ்திகளைப் பார்க்கிறாயா? ஆகிலும் அவருக்காக அல்ல, உனக்காகவும் உலக மக்களுக்காகவும் அழுதுகொண்டு உன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்செல்லுவாயாக.

"அவரைச் சிலுவையிலறைந்தார்கள்."

ஓ பாவி! நடுக்கூட்டத்துக்குட் சென்று சற்றே நோக்கு. சிலுவையைப் பாட்டிலே போட்டு இயேசுவைக் கிடத்துகிறார்கள். சேவகர் அவர் கைகளையும், கால்களையும் இழுத்து ஆணியடிக்கிறார்கள். மறுபடியும் நேரே தூக்கிவெட்டப்பட்டிருக்கிற குழியிலே திடீரென்று போடுகிறார்கள். தலையைத் தாங்க ஒன்றுமில்லை, தலை சாய்கிறது. வானலோகம் பூலோகம் இரண்டுக்கும் நடுவே ஆகாயத்தில் தொங்குகிறார். தேகத்தின்பாரத்தால் அது கீழே போகிறது. கை நரம்புகளெல்லாம் இழுபடு

கிறது, வேதனைப்படுகிறார். அவர் கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள்.

ஆ இயேசுவே! உம்மைச் சிலுவையிலறைந்தது உமதன்பே. என் பாவத்தினிமித்தம் உமது பிதாவே உம்மைச் சிலுவையிலறைந்தார். ஓ பாவி! உன்னைத் தேவனோடும் பரலோக வாசிகளோடும் ஒப்புரவாக்க அவர் ஆகாயத்தில் தொங்குகிறார். உன்னை நாசப்படுத்தின ஆகாயத்தின் அதிபதியை மடங்கடிக்க ஆகாயத்தில் தொங்குகிறார். உன்னைத் தம் மண்டை இழுத்துக்கொள்ள அவர் உயர்த்தப்பட்டிருக்கிறார். அதோ தொங்குகிறாரே, அவரைக் கவனி. தமது தாயைத் தமதன்பான சீஷனுக்கு ஒப்புக்கொடுக்கிறார். ஆ பாவி! தமது கடை இக்கட்டிலும் அவர் உன்னைக் கைவிடவில்லை. நீதான் அவருக்குத் தாய், சகோதரன், சகோதரி. அவர் அன்பு உன்னை நெருக்கி ஏவுவதாக. அவர் உன்மேல் தாகங் கொண்டார், உன் மீட்பே அவர் சிந்திப்பு. உன் இரட்சிப்பே அவர் எண்ணமாயிருந்தது. இதோடு யூதருடைய சதி முடிந்தது. அவர் பாடும் முடிந்தது. முன் குறிப்புகளோ முன்னடையாளங்களோ தீர்க்கதரிசனமோ எல்லாம் முடிந்தது. பாவப்பிராயச்சித்தம் முடிந்தது. இவ்வுலகத்தில் அவருடைய ஜீவியம் முடிந்தது. அவர் வேலை யாவும் முடிந்தது. உன் இரட்சிப்பு முடிந்தது.

"பிதாவே, இவர்கள் செய்கிறதின் தன்மை இன்னதென்றறியாதிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு மன்னித்தருளும்." ஆ, இது எப்பேர்ப்பட்ட வாய்! எப்பேர்ப்பட்ட வார்த்தை! இவனை யகற்றும் இவனை யகற்றுமென்கிறார்கள். அவர்கள் பாவங்களை மன்னிக்கவேண்டுமாம். பாவி! இப்போதே உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும் உன் முழு இருதயத்தோடு தேவனிடத்திற்குத் திரும்பு. அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிறார்.

"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்." எவ்வளவு சமாதானமாய் உன் இரட்சகர் தம் ஜீவனைவிட்டிருக்கிறார். இப்போது தேவாலயத்தின் திரைச்சீலை கிழிகிறது. பூமி அதிர்கிறது, கல்மலை பிளக்கிறது. சூரியன் இருளடைகிறது, பூமி அந்தகாரப்பட்டுவிட்டது.

ஓ பாவி! எல்லாம் இந்த அருமைநாதரின் மரணத்துக்காக துக்கங்கொண்டாடுகிறதே. சூரியன் தன் ஒளியை மறைத்துக்கொண்டது. உன் பாவத்துக்காக துயரப்படாயோ பாவி! தேவனுக்கும் உனக்குமுள்ள பகை நீங்கிற்று. நீ தேவனோடு ஒப்புரவானாய். ஆகையால் போர்ச்சேவகனோடு நீயுஞ் சேர்ந்து மெய்யாகவே இவர் தேவகுமாரனென்று சத்தமிட்டுத் தேவனை மகிமைப்படுத்து.

கிறிஸ்தவனே! நீயும் மரிக்குங்காலம் வரும். மரண நதி உன்மேல் புரளுங்காலமுண்டு. அப்போது நீயும் சாந்தத்தோடும் அமைதலோடும் சந்தோஷத்தோடு உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். சத்தியபரனாகிய கர்த்தாவே நீர் என்னை மீட்டுவிட்டீரென்று சொல்லத்தக்கவனாயிருப்பாயாக.

என் மூச்சொடுங்கும் அந்த
கடை இக்கட்டிலும்
நீர் எனக்காய் இறந்த
உருவைக் காண்பியும்.
அப்போது நான் உம்மைப் பார்த்து
கண்ணோக்கி நெஞ்சிலே
அணைத்துக்கொண்டு சாய்ந்து
தூங்குவேன் யேசுவே.

---



# சமாசாரத்திரட்டு.

**இந்தியா.**—பம்பாய் கவர்னரின் பத்தினியார் ஜனுவரி மாசத்தில் விஷபேதி கண்டு மரித்தார்கள். சிலநாட்களுக்குப்பின் அந்த அம்மாளின் மருமகளாகிய ரிச்சுமான் கன்னிகையும் அதே ரோகங் கண்டு ஜீவித்துப்போனார்கள். கவர்னரவர்கள் குடும்பத்தில் நேரிட்ட இவ்வித துக்க சம்பவங்களினால் ஜனங்களுக்கு அதிக மனத்துயர் உண்டாய் ஜனசமுதாயத்தின் நானாவகுப்பாரிடத்திலிருந்தும் அனுதாபக் கடிதங்கள் கவர்னரவர்களுக்கு அனுப்பப்பட்டன. இருப்புப்பாதையில் பிரயாணம்பண்ணுகிற ஸ்திரீ ஜனங்களிடத்தில் சீட்டுவாங்குகிற வகைக்காக இனிமேல் பெண்பிள்ளைகளை நியமிக்கும்படி தீர்மானித்திருக்கிறார்களாம்.—நேபாளத்தில் சிலநாளுக்குமுன் நடந்த ராஜ துரோகத்தைக்குறித்து எட்டிய வர்த்தமானங்களில், மேற்படி சர்ப்பனையில் சேர்ந்தவர்களாக 80-பேர் பிடிபட்டு, 5-பேர் விடுதலையாகவே, 21-பேர் சர்ப்பனை அபத்தமானதையிட்டு தாங்கள் கிலேசப்படுவதாக வெளியிட்டதாய்க் கண்டிருக்கிறது. மற்றவர்கள் இன்னும் விசாரணையிலிருக்கிறார்கள். மேற்சொல்லிய 21-பேரும் தேசத்து மந்திரியையும் தளகர்த்தனையும் அவர்களோடு சம்பந்தப்பட்ட யாவரையும் வன்கொலைபுரிய பல வருஷங்களாய் சதியோசனைபண்ணியும் வாய்க்காமல், கடைசியில் அவர்கள் காட்மந்து நகரத்தில் ஆலோசனைச் சபை கூடியிருக்கும் தருணம் பார்த்து சட்டிப்பீரங்கிக் குண்டினால் அவர்களை ஒருமிக்க அதமாக்கிவிட யோசித்திருந்தார்களாம். இந்த சர்ப்பனையை அது நடக்கச் சற்று முன்னதியாக சதிகாரரில் ஒருவனே வெளிப்படுத்திவிட்டான். தோஷ அறிக்கைசெய்த 21-பேரும் அங்குள்ள பட்டாளத்தில் கர்னல்முதல் சுபேதார்வரைக்கும் பற்பல வரிசையான சேவகஞ்செய்த ராணுவ உத்தியோகஸ்தர். அவர்கள் ஜனுவரிமீ 16உ மரணாக்கினை அடைந்தார்கள். போர்ச்சேவகர் கூட்டத்தில் யாதொரு குழப்பமும் உண்டாகவில்லை. பிரிட்டிஷ் ஸ்தானாபதி துரையின் வாசஸ்தானத்தில் எல்லாம் க்ஷேமம்.—இந்திய ராஜபிரதிநிதியவர்களை முகதாவில் கண்டுபேசிக்கொள்ளும்படி இத்தேசத்துக்குப் பிரயாணம்பண்ண அமீர் அதிபதி ஆயத்தஞ்செய்வதாக கபூலிலிருந்து வந்த கடிதங்களால் விளங்குகிறது. இது நடக்குமாகில், அவரை உபசரிக்கிறதற்காக வசந்தகாலம் அம்பல்லா அல்லது லாகூர் நகரத்தில் விசேஷித்த தர்பார் சபை கூடுவதாயிருக்கும்.

*மார்ச்சு நாள்-31. மாசிமீ 19உமுதல், பங்குனிமீ 19உவரை.*

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௯ | கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப்பிரிப்பவன் யார்? ரோ. 8:35. |
| வி | 2 | ௨௦ | புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறுரே. 9:24. |
| வெ | 3 | ௨௧ | யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லே. 10:12. |
| ச | 4 | ௨௨ | இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். 11:26. |
| ஞா | 5 | ௨௩ | ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறேம். 12:5. |
| தி | 6 | ௨௪ | இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று. 13:12. |
| செ | 7 | ௨௫ | நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும். 14:11. |
| பு | 8 | ௨௬ | அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்கள். 15: |
| வி | 9 | ௨௭ | நான் கர்த்தருக்குள் உங்களை வாழ்த்துகிறேன். 16:22. (20. |
| வெ | 10 | ௨௮ | உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். 1 கொரி. 1:9. |
| ச | 11 | ௨௯ | உங்கள் விசுவாசம் தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு. 2:4. |
| ஞா | 12 | ௩௦ | நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். 3:23: |
| தி | 13 | ௧ | உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? 4:7. |
| செ | 14 | ௨ | புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். 5:7. |
| பு | 15 | ௩ | பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். 6:11. |
| வி | 16 | ௪ | நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள். 7:23. |
| வெ | 17 | ௫ | பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. 8:6. |
| ச | 18 | ௬ | நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன். 9:26. (10:31. |
| ஞா | 19 | ௭ | எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் |
| தி | 20 | ௮ | கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். |
| செ | 21 | ௯ | ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். 12:13. (11:26. |
| பு | 22 | ௧௦ | அன்பு ஒருக்காலும் ஒழியாது. 13:8. |
| வி | 23 | ௧௧ | புத்தியிலோ தேறினவர்களாயிருங்கள். 14:20. |
| வெ | 24 | ௧௨ | கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். 15:22. |
| ச | 25 | ௧௩ | விசுவாசத்திலே நிலைத்திருங்கள். 16:13. (1:5. |
| ஞா | 26 | ௧௪ | கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. 2 கொரி. |
| தி | 27 | ௧௫ | நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறேம். 2: |
| செ | 28 | ௧௬ | எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது. 3:6. (15. |
| பு | 29 | ௧௭ | காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். 4:18. |
| வி | 30 | ௧௮ | கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது. 5:14. |
| வெ | 31 | ௧௯ | கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? 6:15. |

## விசேஷ நாட்கள்.

5. லெந்தென்னும் நாட்களில், 2-ம் ஞாயிறு. பௌர்ணமி.
12. லெந்தென்னும் நாட்களில், 3-ம் ஞாயிறு.
19. லெந்தென்னும் நாட்களில், 4-ம் ஞாயிறு. அமாவாசை.
25. பரி-கன்னிமரியாள் மங்களவார்த்தைத் திருநாள்.
26. லெந்தென்னும் நாட்களில், 5-ம் ஞாயிறு.

161994


# நற்போதகம்.

எ. சூலாய்மீ. ௲௮௱௮௫.


**Exposition of the Church Catechism.**

## ஞானோபதேசவினுவிடை

வியாக்கியானம்.

### ௩-ம் அதிகாரம்.

கர்த்தருடைய ஜெபம்.

உ-ம் பிரிவு.

முகவுரை.

வினு. என் இந்த ஜெபத்தைக் கர்த்தருடைய ஜெபம் என்று சொல்லுகிறேம்?

விடை. கர்த்தர் தாமே அதைச் சொல்லிக் கொடுத்ததினுலேயே. நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியது இன்னதென்று அறியாமலிருக்கிறபடியால், (ரோ. 8: 26.) நம்முடைய இரக்ஷகர் தம்முடைய சீஷர்களுக்கு அவர்களுடைய ஜெபங்களில் என்னென்ன விண்ணப்பங்கள் இருக்கவேண்டுமென்று போதிக்கும்படிக்கு மத். 6: 9-ல் நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது என்று சொல்லி, இந்த ஜெபத்தை நாம் செய்யவேண்டிய ஜெபங்களுக்கு மாதிரியாகச் சொல்லிக்கொடுத்தார். லூக். 11: 2.

வினு. இந்த ஜெபம் எத்தனை பங்குகளுள்ளது?

விடை. மூன்று பங்குகளுள்ளது.

(1) முகவுரை.
(2) ஆறு விண்ணப்பங்கள்.
(3) முடிவுரை.

O/bm 211, M82
M82

வினு. முகவுரையைச் சொல்லு?

விடை. பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே.

வினா. எந்தவகையில் மெய்க்கிறிஸ்தவர்கள் தேவனைத் தங்க
பிதாவென்று சொல்லப் போதிக்கப்படுகிறார்கள்?
விடை. 1 அவர் சிருஷ்டிப்பினாலே அவர்களுடைய பிதாவாயிருக்
நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ, ஒரே தேவ
மைச் சிருஷ்டித்ததில்லையோ. மல்கி. 2: 10.
ஏசா. 44: 24. அப். 17: 28. 1 கொரி. 8: 6.
2. மறுபிறப்பினால் அவர்களுடைய பிதாவாயிருக்கிறார். தேவனுடை
பிள்ளையென்ற இந்த உயர்ந்த உறவுக்கு மறுபிறப்பு அவசியம்.
பரிசுத்தஆவியினுடைய வல்லமையினாலேயே இது உண்டாக
வேண்டும்.
ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்
யத்தைக் காணமாட்டான். யோவா. 3: 3.
யாத். 4: 22. 1 யோ. 3: 2. 5: 1. யாக். 1: 17. 1 பே. 1: 2, 
3. புத்திரசுவிகாரத்தினாலே அவர்களுடைய பிதாவாயிருக்கிறார்.
அப்பாபிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகா
ரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். ரோ. 8: 15, 16.
உபா. 32: 6. ஏசா. 63: 16. லூக். 11: 2. கலா. 3: 26. 4: 6, 7.
எபே. 1: 6. 3: 14, 15. 1 யோ. 3: 1.
அவர்கள் பிள்ளைகளுடைய சலாக்கியங்களுக்கெல்லாம் உரியவர்களா
கிறார்கள்.
ஒரு தகப்பன் தன் பிள்ளைக்காக வேண்டியவைகளைச் சம்பாதிக்கி
றான்.
உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு
முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்தி
ருக்கிறார். மத். 6: 8.
மத். 7: 9 லூக். 11: 13.
அவன் தன்னுடைய பிள்ளைகளைச் சிட்சிக்கிறான்.
ஒருவன் தன் புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல உன் தேவ
னாகிய கர்த்தர் உன்னைச் சிட்சிக்கிறார். உபா. 8: 5. எபி. 12:
6, 9.
ஆனாலும் அவர்களுக்கு இரங்குகிறான்.
தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்
குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். சங். 103: 13.
மகன் தன் தகப்பனைக் கனஞ்செய்யக் கடமைப்பட்டவன்.
குமாரன் தன் பிதாவையும் ஊழியக்காரன் தன் எஜமானையும்
கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே?
மல்கி. 1: 6.
பிள்ளைகள் தங்கள் பெற்றோரின் சாயலை உடையவர்களாயிருந்து, அவர்
களுக்கு ஒப்பாகும்படி பிரயாசப்படுகிறார்கள்; ஆகலால் நாம்
தேவனுடைய பிள்ளைகளானால் நாம் அவருடைய சாயலைப் பின்
பற்றவும் அவருடைய சாயலுக்கு இசையும்படி பிரியப்படவும்
வேண்டும்.
ஆதாம் தன் சாயலாக ஒரு குமாரனைப் பெற்றான். ஆதி. 5: 3.
நான் பரிசுத்தன், ஆகலால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.
லேவி. 11: 44. 19: 2. 1 பே. 1: 16.
எபே. 5: 1.



கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளுகிற எல்லாருக்கும்
பிள்ளைகளுக்குரிய சுயாதீனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யோவா.
1: 12.
நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்களா என்று உங்களைத் தா
னே கேளுங்கள்.
உங்களைச் சூழஇருக்கிற உலகத்தாரைப்போல நீங்கள் பாவத்தில் நிலைத்
திருந்தால், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளென்ற பேருக்குப்
பாத்திரரல்ல; ஏனென்றால் நீங்கள் பிசாசாகிய பிதாவை உடை
யவர்களாயிருக்கிறீர்கள். என்றாலும் உங்களுக்குச் சொல்லப்படு
கிற எச்சரிப்பாவது;
நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய்,
அசுத்தமானதைத் தொடாதிருங்கள். அப்பொழுது நான் உங்
களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள்
எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்
லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். 2 கொரி. 6: 17, 18.
கெட்டகுமாரன் சொன்னதுபோல (லூக். 15: 18.) நான் எழுந்து, என்
தகப்பனிடத்திற்குப்போய்த் தகப்பனே, பரத்துக்கு விரோதமாக
வும் உமக்கு முன்பாகவும் பாவம்செய்தேன் என்று சொல்வீர்களா
னால், நீங்கள் அவனைப்போலிருந்தாலும் அவர் உங்களை ஏற்றுக்
கொள்ளுவார். ஏனென்றால் கிறிஸ்து நான் என் பிதாவினிடத்திற்
கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்
கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன் என்று யோவா. 20:
17-ல் சொல்லியிருக்கிறார்.
வினா. ஏன் தேவனை எங்கள் பிதா என்று சொல்லப் போதிக்கப்பட்
டிருக்கிறோம்?
விடை. 1. நாம் அவரிடத்தில் மனச்சந்தோஷமாய்ச் சேரவேண்டும் என்
பதற்குக் குறிப்பாகவும்;
2. நாம் தேவனிடத்தில் ஒன்றைக் கேட்கும்போது அவர் நம்மைத் தள்
ளமாட்டார் என்ற தைரியத்தோடும், கேட்பதைக் கொடுப்பார்
என்ற நம்பிக்கையோடும் வரவும்;
3. நாம் எல்லா மனிதரிடத்திலும் அன்புகூரக் கடமையுடையவர்கள்
என்று காட்டவும்;
4. நாம் நமக்காக ஜெபம்பண்ணுவதுபோல மற்றவர்களுக்காகவும்
ஜெபம்பண்ணக் கடமையுள்ளவர்கள் என்று காண்பிக்கவுமே.
மெய்க்கிறிஸ்தவர்கள் தங்கள் சத்துருக்களிடத்திலும் வைக்கும் அன்
பின் ஆவியை உடையவர்களாகும்படி பிரயாசப்படவேண்டும்.
அப்படியானால் தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களிடத்
தில் எவ்வளவு அதிகமாய் அன்புகூரவேண்டும்.
நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரரா
யிருக்கும்படி, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் ஜெபம்பண்
ணுங்கள். மத். 5: 44, 45. எபே. 4: 1—. 6: 18. 1 பே. 3: 8, 9.
வினா. தேவனைப் பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதா என்று சொ
ல்ல ஏன் போதிக்கப்பட்டிருக்கிறோம், அவர் எங்கும் இருக்கிறவர்
அல்லவா?
விடை. ஆம். அவருடைய சமுகம் வானத்தையும் பூமியையும் நிரப்புகி
றது. அவருடைய சிங்காசனம் பரமண்டலத்திலிருக்கிறது. அங்

கே அவருடைய மகிமை விசேஷ முக்கியமாய் விளங்குகிறது. அவருடைய நன்மைகள் பரிசுத்த தூதருக்கும் பூரணராக்கப்பட்ட பரிசுத்தவான்களின் ஆவிகளுக்கும் அருளப்படுகிறது. அவர் பரமண்டலத்தில் எல்லா வல்லமையையும் உடையவராயிருந்து, தம்மை நோக்கிக் கூப்பிடுகிற எல்லாருக்கும் அவர்கள் கேட்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மேலாக ஏராளமாய்க் கொடுக்கக் கூடியவராயிருக்கிறார்.

ஆகையால் நம்முடைய பரமபிதாவினுடைய மகத்துவத்தை நாம் கவனிக்கையில் நாம் அவரிடத்தில் பயபக்தியோடும், தாழ்மையோடும் சேரவேண்டும்.

நீ தேவாலயத்திற்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோல பலியிடுவதைப் பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தேவன் வானத்திலிருக்கிறார், நீ பூமியிலிருக்கிறாய். பிர. 5: 1, 2.

ஆதி. 18: 27. லேவி. 10: 3. 2 நாளா. 6: 18. சங். 11. 4. 123: 1. 139: 7—10. எசா. 57: 15. எபி. 4: 14. 12: 1, 28.

வேதத்தில் தேவனுடைய மகிமையான லட்சணங்களைச் சொல்லி அநேக ஜெபங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன;

| | |
|---|---|
| சாலொமோன். 1 இரா. 18: 23. | எரேமியா. எரே. 32: 17. |
| எசேக்கியா. 2 இரா. 19: 15. | தானியேல். தானி. 9: 4. |
| யோசபாத். 2 நாளா. 20: 6. | நம்முடைய இரக்ஷகர். மத். 11: 25. |
| நெகேமியா. நெகே. 1: 5. | பேதுரு, யோவான். அப். 4: 24. |

நாம் இராஜாதி இராஜாவினுடைய சமுகத்தில் நம்முடைய விண்ணப்பங்களைச் சொல்லப்போகும்பொழுதெல்லாம், நம்முடைய மனதில் அவருடைய மகத்துவத்தை நினைக்கிறவர்களாயிருக்கவேண்டும்.

நாங்கள் எப்பொழுதும் உம்முடைய பரிசுத்த நாமத்தைப்பற்றிய பயபக்தியும் அன்புமுள்ளவர்களாயிருக்கும்படி செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## எசாயாவின் தீர்க்கதரிசனம்.

### எசாயா. 58-அதிகாரம்.

(தொடர்ச்சி.)

13, 14. பாபிலோனிலுள்ள யூதர்கள் தேவனுக்கு மகிமையும், கனமுமுண்டாக ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கக் கட்டளை. (56: 1, 2.) சிலர் இது முந்தின பங்கில் சொல்லிய உபவாசத்துக்கிசைவாய் ஓய்ந்திருக்கவேண்டிய பாவநிவர்த்தியின் நாளைக் குறிக்குமென்கிறார்கள். லேவி. 23: 32. இப்படிப்பட்ட நாட்கள் சிறையிருப்புக்கு முன்பும் பிரித்து



வைக்கப்பட்டன. 22: 12. எரே. 36: 9. சிறையிருப்பிலும் சகரி. 7: 5. பிரித்துவைக்கப்பட்டன.

இது விசேஷமாய் வாரத்தின கடைசி நாளாகிய ஓய்வுநாளைக் குறிக்கும். அந்தநாளில் இஷ்டப்படி பிரயாணஞ்செய்யாதபடிக்குக் காலை விலக்கிக் காக்கவேணும். காலென்பது மனம், பிரியமென்றுங் கருத்துக்கொள்ளும். சங். 119: 101. பிர. 5: 1. அதை ஆசரிப்பதில் நமக்குப் பாரமாகத் தோனாமல், உச்சாயமும் சந்தோஷமுமிருக்கவேண்டியது. சங். 27: 4. 36: 8. 42: 1. அந்தநாள் பரிசுத்த ஆராதனைக்கென்று பிரித்தெடுக்கப்பட்டதால் பரிசுத்த ஓய்வுநாள். தேவனை மகிமையாக எண்ணி, அதில் அவரை ஆராதிப்பதால் அது மகிமையான நாள். யாத். 20: 8. அறி. 1: 10. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பவர்களுக்கு வரும் பலன். (1) கர்த்தரில் மனமகிழ்ச்சி வரும். கர்த்தருடைய நாளை மனமகிழ்ச்சியாய் ஆசரிப்பவர்களுக்குக் கர்த்தருடைய நன்மை வரங்களிலும், விசுவாசத்தினால் அவருக்குட் பிழைப்பதிலும் மனமகிழ்ச்சியிருக்கும். சங். 37: 4. தேவனுடைய தயவு அன்பில் நிச்சயமிருப்பதால் மகிழ்ச்சி. சங். 33: 21. தேவாலயத்திலுள்ள சம்பூரணத்தால் திருப்தியடைகிறதால் மகிழ்ச்சி. சங். 36: 8. துன்மார்க்கருக்கோ மகிழ்ச்சியில்லை நீதி. 14: 10. (2) மகிமையுமுண்டு. (a) பத்திரமாய்க் காக்கப்படுவார்கள். எசா. 33: 16. ஒரு தீங்கும் அணுகாது. (b) உயர்ந்த மலைநாட்டுப் பூமியாகிய (லூக். 23: 44.) யூதேயா தேசத்தின் பள்ளத்தாக்கிலுள்ள பாபிலோனில் சிறைப்பட்ட யூதர் விடுதலையாவதால் கனமுண்டு. (c) அல்லது பூமியின் உயர்ந்த இடங்களில் ஏறியிருக்கிறது சத்துருக்களை மேற்கொள்ளுவதைக் குறிக்கும். உபா. 33: 29. சங். 45: 4. அறி. 6: 2. யூதர் பாபிலோனிலிருந்து பதுக்கமாயல்ல, ஜெயகெம்பீரமாய் எகிப்திலிருந்து ஒழுங்காய் இரதமேறி வந்ததுபோல வருவதைக் குறிக்கும். உபா. 32: 12, 13. (3) யாக்கோபுடைய சுதந்தரமாகிய கானான்தேசத்து நன்மைகளைச் சுதந்தரிப்பார்கள். 35: 12. ஆபிரகாமில் இஸ்மாவேலல்ல ஈசாக்கில் ஏசாவல்ல யாக்கோபில் எல்லாரும் கானானைச் சுதந்தரித்தபடியால் அவன் பேர் மாத்திரம் சுட்டிக் காட்டியிருக்கிறது. பொய்சொல்லாத தேவன் தீர்க்கதரிசியைக்கொண்டு உரைத்திருப்பதால் இது நிச்சயம்.

## கேள்விகள்.

1. 57-ம் 58-ம் அதிகாரங்களில் யூதர் என்னென்ன பாவங்களுக்காகக் கண்டிக்கப்படுகிறார்கள்? குணப்படுகிறவர்களுக்கு ஆறுதல்களென்ன?

2. யூதர்கள் என்ன நோக்கங்களுக்காக உபவாசம்பண்ணுவார்கள்; ஓய்வுநாட்களை ஆசரிப்பார்கள். உண்மையான உபவாசமெது? அதற்குரிய பலன்.

3. ஓய்வுநாளை மகிழ்ச்சியாகவும், மகிமையாகவும் ஆசரிப்பதின் பொருளென்ன? அப்படி ஆசரிப்பவர்களுக்கு வரும் பலன்களென்ன?

4. கணங்கள், மஞ்சம், நிபச்சொல், உதடுகளின் பலன், வழவழப்பான சிலைகள் இவைகளின் பொருட்களென்ன? என்ன சம்பந்தமாய் வருகிறது.

5. மாய்மால யூதர் உபவாச நாட்களில் செய்த குற்றங்களென்ன? மாய்மாலமென்ன?

---

ஏசாயா. 59-அதிகாரம்.

---

சிறைப்பட்ட யூதர் தங்களுடைய விடுதலைக்குத் தாங்கள் உபவாசித்தாலும், ஜெபித்தாலும் (எசா. 58: 3.) தங்களுடைய இரக்ஷிப்பு இன்னும் நடந்தேறாமலிருப்பதைப்பற்றி தேவனோடு போராடுகிறவர்களுக்குத் தீர்க்கதரிசி நியாயம் பேசுகிறார். 1—8.

(1) இரக்ஷிக்கக் கூடாதபடி தேவனுடைய கை, (பெலம்) பெலவீனமாகவில்லை. சங். 136: 12. (2) கேட்கக்கூடாதபடி விக்கிரகங்கள் போல தேவனுடைய செவி மந்தமாகவுமில்லை. தேவன் எப்போதும் ஜெபத்தைக் கேட்கிறவர். (எசா. 65: 24) (3) யூதருடைய பாவங்களே தேவன் நன்மைசெய்யாதபடி விலக்கிப்போடுகிறது. நீதி. 15: 29. கொலை பாதகம், பொய், தந்திரமுதலிய பாவங்களைச் செய்தார்கள். பாபிலோனில் மாயையாகிய விக்கிரகங்களை வணங்கினார்கள். (4-வச.) 1 கொரி. 8: 4. எரேமி. 16: 11—18. அநியாயங்களும் கொடுமையும் மிகுதி. அவர்கள் அவைகளை வெகு சந்தோஷத்தோடே செய்தார்கள். யாக். 1: 15. "அவர்கள் கட்டுவிரியன் முட்டைகளை அடைகாத்தார்கள்." விஷமும் மற்றவர்களுக்குத் தீமைசெய்யத்தக்க குணங்களையுமுடையவர்கள். சிலந்திப்பூச்சி, ஈக்களைப் பிடித்துத் தின்பதற்கு வலைகளைச் செய்கிறதுபோல மற்றவர்களை ஒடுக்கத் தந்திரங்களைக் கையாடினார்கள். கட்டுவிரியன் முட்டைகள் வெடித்தவுடனே செத்துப்போவதுபோலும், சிலந்திப்பூச்சி தன்னிலுள்ள நூல் கழிந்தவுடன் அழிந்துபோவதுபோலும், அக்கிரமஞ்செய்கிறவர்களும் தங்களுக்கே அழிவை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.

9—15. அவர்கள் செய்த பாவத்தினாலுண்டாகிய நிர்ப்பாக்கியம். சத்துருக்களால் மிகவும் நெருக்கப்பட்டார்கள். (2) விடுதலையாகிய வெளிச்சத்துக்கு எதிர்பார்த்திருந்தும் விடுதலையேயில்லை. (3) தங்களைத் தாங்களே இரக்ஷிக்கமாட்டாத குருடர்போலிருந்தார்கள். (4) பாழ் இடங்களாகிய பாபிலோன் சிறையிருப்பில் செத்தவர்களாயிருந்தார்கள். (எசே. 37: 1.) விடுதலையடைவோமென்ற நம்பிக்கை அற்றுப்போயிற்று. குட்டிகள் பறிகொடுத்த கரடிபோலும், துணையிழந்த புறாப்போலும், யூதர் தங்கள் துயரங்களில் புலம்புவார்கள். எசே. 7: 16. துயரப்பட்ட யூதர்கள் தேவனுக்கு விரோதமாய்ச் செய்த தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறார்கள். 12—15. பொல்லாப்பைவிட்டு விலகுகிறவனை எல்லாரும் பரியாசம்பண்ணிக் "கொள்ளையடிப்பார்கள். மூலத்தில் பைத்தியகாரனென்பார்கள்.

16—19. பாவம் பெருகினவிடத்தில் கிருபை மிகவும் அதிகமாய்ப் பெருகிற்று. தேவன் இஸ்ரவேலருடைய பாவங்களைப் பாராமல் தமது இரக்கத்தினிமித்தமே அவர்களை இரக்ஷித்தார். அவர்களுக்காகப் பரிந்து பேச மனிதரிலொருவனுமில்லை. எசே. 22: 29, 30. தேவன் தாமாகவே (எசா. 51: 5.) தமது நாமத்துக்கு மகிமையுண்டாகவே 1 சாமு. 25: 26. அவருடைய புயமாகிய கிறிஸ்துநாதராலே இரக்ஷிப்புண்டாக்கினார். உபா. 9: 5. தேவன் தமது ஜனங்களைத் துன்பப்படுத்துகிற பாபிலோனியருக்கு நீதி சரிகட்டும்படி யுத்த மனிதனாக மார்க்கவசம் அணிகிறார். இருதயத்



தைக் காக்க மார்க்கவசமிருப்பதுபோல, மூளையைக் காக்கத் தலைச்சீராவுண்டு. மார்ப்பதக்கத்தால் தேவன் தமது உண்மையையும் சத்தியத்தையுங் காக்கிறார். தலைச்சீராவினால் தமது அதரிசனம், வல்லமையைக் காண்பிக்கிறார். யூதருடைய சத்துருக்களை அழிப்பதில் தமது கனத்துக்கும், தமது ஜனங்களுக்கும் வைராக்கியமாகக் கோபமாகிய வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டார். திகிரிஸ் ஐப்பிராத்து என்னும் நதிகளுக்கிடையிலிருக்கிற தீவுபோன்ற தேசமாகிய பாபிலோனியருக்குள் அடக்கமான மேசோப்பொத்தாமியா முதலிய தூரமான தேசங்களுக்கும் நீதிசரிக்கட்டுவார். ஆதி. 10: 5

19. கிழக்கும் மேற்குமான சகல உலகத்தாரும், தங்கள் விக்கிரகங்களைத் தள்ளிப்போட்டுத் தேவனை ஆராதிப்பார்கள். பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து யூதர் விடுதலையாகி வரும்போதும், கிறிஸ்துநாதரால் சகலரும் மீட்கப்படும்போதும் இது நடக்கும். மல்கி. 1: 11. யூதருடைய விடுதலைக்காகப் பாபிலோனியலை அழிக்கும்படி, கோரேசும் அவன் சேனையும் வெள்ளம்போல திரளாய் வந்தார்கள். அல்லது தமது ஜனங்களுக்கு விரோதமாய்ச் சனகெரிப் திரளாய் வந்ததைக் குறிக்கும். (எசா. 8: 7, 8.) திருச்சபைக்குப் பசாசு செய்யும் விரோதங்களைக் குறிக்கும். அறி. 12: 15. இந்த மூன்று கருத்துப்படி தேவனுடைய ஆவி (கோபம், வைராக்கியம்) தமது ஜனங்களுக்கு நடுவே உதவிசெய்யவும், சத்துருக்களை அழிக்கவுமிருப்பார். எசா. 37: 36, 37. சங். 48: 3—5. எசா. 17: 12—14. சகரி. 4: 6.

20. காலம் நிறைவேறினபோது மேசியாவாலுண்டாகும் பெரிய இரக்ஷிப்பைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. கிறிஸ்துநாதராகிய மீட்பர் (ரோமர் 11: 26.) சீயோனாகிய திருச்சபைக்கு வருவார். பழைய புதிய ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்களுக்குரிய மொத்தம் மீட்பராகிய கிறிஸ்துவின் வருகையைப் பற்றியே. இதைப் பவுல் அப். வியாக்கினித்துப் பேசுகிறார். ரோ. 11: 26. அவர் சீயோனில் இராஜாவாக நியமிக்கப்படுவார். சங். 2: 6. மூலைக்கல் சீயோனில் வைக்கப்பட்டது. 1 பேது. 2: 6. அவர் தமது தேவாலயத்துக்கு வருவார். மல்கி. 3: 1. "நான் சீயோனில் இரக்ஷிப்பைக் கட்டளையிடுவேன்". எசா. 46: 13. சீயோன் சுவிசேஷ சபைக்கு முன்னடையாளமானது. அவர் சீயோனுக்காக அவர்கள் பாவத்தைவிட்டு நீக்க வருகிறார். அப். 3: 26. புறஜாதியார் நிறைவாய்ச் சபையில் சேரும்போது யூதரும் உலகத்தின் முடிவிலே தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பி இரக்ஷிக்கப்படுவார்கள்.

21. தலைமுறைதோறும் தேவன் தமது ஜனங்களுக்குத் தமது ஆவியையும் வார்த்தையையுங் கொடுப்பதாக உடன்படிக்கை செய்திருக்கிறார். லூக். 11: 13. பாவத்தைவிட்டு மனந்திரும்புவோர்களுக்கு இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் அளிக்கப்படுகிறது. யோவா. 14: 16—18. ஆவி இருதயத்தில் கிரியைசெய்யும்; வார்த்தையோ அதை வெளிப்படுத்தும். எண். 11: 17, 25. 2 இரா. 2: 15. தேவன் தமது திருச்சபையின் நடுவிலிருப்பது அதற்குரிய விசேஷித்த சலாக்கியம். தேவன் தமது திருச்சபையின் தீர்க்கர், அப்போஸ்தலர், போதகர், சுவிசேஷகர் எல்லாரோடும் எக்காலமும் தமது ஆவியினாலும் வார்த்தையினாலுங் கூடவிருப்பதாக உடன்படிக்கை செய்திருக்கிறார். சங். 89: 29, 36. யோவா. 14: 6.

## கேள்விகள்.

1. யூதருடைய மீட்பு தாமதப்பட்டதற்கு நியாயமென்ன?

2. கட்டுவிரியன், சிலந்திபூச்சி, கரடி, புறா இந்த ஜெந்துக்கள் என்னென்ன சங்கதிகளுக்குரிய உவமானங்களுக்கு எப்படி வசனிக்கப்படுகின்றன?

3. இதில் கிறிஸ்துநாதரைப்பற்றிய தீர்க்கதரிசனமும், நிறைவேறுதலுமென்ன?

4. தேவன் தமது சத்துருக்களுக்குச் சரிகட்டினதெப்படி? சத்தியம் தள்ளுபடியானது எப்படி?

5. சத்துரு வெள்ளம்போல வந்தபோது கர்த்தருடைய ஆவியானவர் கொடியேற்றினதின் பொருளென்ன? எப்படி?

---

### ஏசாயா 60-அதிகாரம்.

---

இது தேவன் தமது சபையோடே செய்த உடன்படிக்கையின் தொடர்ச்சி. (59: 21.) இதில் வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட ஆசீர்வாதங்கள் ஆவியினாலும், வசனத்தினாலுமுண்டான பலனே. சபையானது சிலகாலம் துன்பம் சகித்தபின்பு அநுபவிக்கும் மேன்மையைப்பற்றிக் காட்டியிருக்கிறது. இது யூதர் விடுதலையானபின்பு அடைந்த சலாக்கியத்தால் தெரியும். விசேஷமாய்ப் புறஜாதியார் திருச்சபையில் சேருவதினால் சபையின் பெருக்கம், மேன்மை, பரிசுத்தம் துலங்கினதில் தெரியும்.

1. "ஒளி வந்தது." யூதருக்கு விடுதலை கிடைக்கும்போது சந்தோஷமும் கனமுமுண்டாகும். அது வெகு சமீபம். சூரியனும் சந்திரனும் வெளிச்சங்கள் தருவதுபோல ஆதி. 1: 16. கிறிஸ்துநாதரும் மெய்யான ஒளியாய் நம்மைப் பிரகாசிப்பிக்கிறார். யோவா. 1: 9. யோவா. 8: 12. எபேசி. 5: 11. "கர்த்தருடைய மகிமை" கனமான மகிமை. கர்த்தருடைய பருவதம், கர்த்தருடைய கேதுரு என்றால்போல. அறி. 21: 11. கர்த்தருடைய மகிமையென்பது கிறிஸ்துநாதரே. சங். 85: 6—9. சூரியன் இருளை நீக்கிப் பிரகாசம் தருவதுபோல, மகிமையான சுவிசேஷமும் மகிமையான வெளிச்சந் தரும். 2 கொரி. 4: 4. ஆகையால் நாம் எழும்பி விடுதலையாகி, சந்தோஷமாய்ப் பிரகாசிக்கவேணும். மத். 5: 16. பிலி. 2: 15.

2-வச. எகிப்தில், தேவனுடைய ஜனங்களுக்கு வெளிச்சமும் எகிப்தியருக்குக் கார் இருளுமுண்டானதுபோல, பாபிலோனியருக்குச் சஞ்சலமும் யூதருக்குச் சந்தோஷமுமுண்டாகும். உபத்திரவம், நிற்பாக்கியம், அறிவீனம், விக்கிரகாராதனை எல்லாம் இருளே. எபேசி. 4: 18, 19. இது யூதருக்குக் கோரேசால் விடுதலையையும், முக்கியமாய் மேசியாவால் புறஜாதியாருக்குக் கிடைத்த சலாக்கியங்களையுங் குறிக்கும். மல்கி. 4: 2. லூக். 1: 77—79.

3. யூதர் விடுதலையடைந்தபோது ஜாதிகள் அவர்களை மினவ, அவர்களோடே சேர்ந்துகொள்ள வந்தார்கள். கோரேஸ், தரியு, அலெக்சந்தர், எகிப்தின் இராஜாக்கள் யூதர் பட்சமாய் நடந்தார்கள். இது கிறிஸ்துவண்டை புறஜாதியார் சேருவதைப்பற்றிய தீர்க்கதரிசனம். ஏசா. 49: 6, 23. அறி. 21: 24.



4. யூதர் விடுதலையாகி எருசலேமுக்கு வந்தபின் நாலாதிசைகளிலிருந்தும் ஜாதிகள் வந்தார்கள். ஏசா. 49: 20—22. அப்படியே சுவிசேஷகாலத்திலும் கிறிஸ்துவண்டை வருகிறதை அப்போஸ்தலர் மி. பார்த்தார்கள். யோ. 4: 36. அப். 2: 5.

5. கடற்கரையோரமாயிருக்கிறவர்களும், தீவாரும், கடலில் வியாபாரம்பண்ணுகிறவர்களும், திருச்சபையில் சேர்ந்து, தங்கள் ஆஸ்திகளால் தேவனைக் கனஞ்செய்வார்கள். புறஜாதியாரின் பலத்த சேனை திருச்சபைக்கு அநுசாரிகள். நீதி. 16: 7. லூக். 11: 22.

6-வச. கப்பல் வியாபாரம் மாத்திரமல்ல, தரை வியாபாரத்தினாலும் தேவனுக்குக் காணிக்கையும், திருச்சபைக்கு மேன்மையுங் கிடைக்கும். மீதியான தேசத்துக்கு ஒட்டகம் மிகுதி. நியா. 7: 2. சிறிதும், வேகமும், நாலு நாளைக்காவது தாகத்தை அடக்கக்கூடியதுமான ஒட்டகத்துக்குப் பேர் (Dromedaries.) மீதியான ஏப்பாக் குடிகள் ஆபிரகாமுக்குக் கேத்தூராளால் பிறந்தவர்கள் வம்சம். ஆதி. 25: 2. சேபா சபிக்கப்பட்டகாமின் மகன் கூஷின் வம்சம். 1 இரா. 10: 1. அந்த இராஜ ஸ்திரீ சாலொமோனுக்குக் காணிக்கை கொண்டுவந்ததில் முன்னடையாளமானவள். மத். 2: 11.

7-வச. கேதாரின் குடிகள் இஸ்மவேலரின் வம்சம். அரபி பெத்தேரோயாவில் வாசம்பண்ணினவர்கள். அவர்கள் மேய்ப்பர். நேபேயோத்தியரும் இஸ்மவேலின் வம்சமே. ஆதி. 25: 13. இவர்களும் திருச்சபையில் சேர்வார்கள். மல்கி. 1: 11. இப்படிப்பட்ட திரளான பலிகளால் தேவன் மகிமைப்படுவார். சங். 29: 9. திருச்சபை மகிமைப்படும். 1 பேது. 2: 5. இந்த ஜாதியார் தேவாலயத்துக்குக் காணிக்கைகொடுக்கத் தரியுவால் கற்பிக்கப்பட்டவர்களாமே. எஸ்றா. 6: 9. ரோ. 15: 16.

8. மேகத்தைப்போல தீவிரமாயும் ஏசே. 38: 9. திரளாயும் எபி. 12: 1. புறஜாதியார் மேசியாவண்டை சாய்வார்கள்.

10-வச. அந்நியரான கோரேஸ், தரியு, ஆகாஸ்வேரு எஸ்றா. 6: 7. தேவாலயத்தைக் கட்டவும், எருசலேமின் மதில்களைக் கட்டவும் உதவி செய்தார்கள். அப்படியே திருச்சபைக்கும் கொனஸ்தந்தீன், வாலந்தீன், தேயோடோசியு இராயர்களும் உதவிசெய்தார்கள்.

11-வச. சத்துருக்களுக்குப் பயப்பட அவசியமில்லாததாலும், நாளடைவாய்ப் பல திக்கிலிருந்தும் அநேகர் திருச்சபையில் இரக்ஷிக்கப்பட வருகிறதினாலும் இரக்கத்தின் வாசல் எப்போதும் திறந்திருக்கும். வாசல் காவலராகிய போதகர்கள் திருச்சபையில் சேர வருகிறவர்களை ஏற்றுக்கொள்ள விழிப்பாயிருக்கிறார்கள்.

12. கிறிஸ்துநாதருக்குக் கீழ்ப்படிந்து அடங்காதவர்கள் என்றைக்குங் கெட்டுப்போவார்கள். பேழைக்குள் வராதவர்கள் அழிந்ததுபோல், இரக்ஷிக்கப்படும் பேர்கள் சபையில் சேர்க்கப்பட்டார்கள். அப். 2: 47. வெளி. 21: 24.

13-வச. எருசலேம் தேவாலயம் லீபனோனின் சகலவகை மரங்களால் கட்டப்பட்டும் அலங்கரிக்கப்பட்டுமிருந்ததுபோல 2 நாளா. 2: 16. சங். 132: 13, 14. தேவஸ்தானமாகிய திருச்சபையும், உலக மகிமையுள்ள இராஜாக்கள், பிரபுக்கள் திருச்சபையில் சேருவதால் மகிமையுண்டு. 2 கொரி. 6: 16. மல்கி. 3: 1. மகா பரிசுத்தஸ்தலம் தேவபாதஸ்தானம். ஏசே. 43: 7. 2 நாளா. 28: 2. சங். 132: 7. பக்தியுள்ளவர்கள் விருக்ஷங்களென்னப்படுகிறார்கள். ஏசா. 61: 3.

14-வச. யூதர் விடுதலையானபோது அவர்களை ஒடுக்கின பாபிலோனியர், பார்சியருக்குப் பயந்து, யூதர்களிடத்தில் அடைக்கலஞ் சேர்ந்திருப்பார்கள். அப்படியே திருச்சபையின் சத்துருக்களும், தங்கள் பாவங்களுக்காகத் தங்களைத் தாழ்த்தி, திருச்சபையில் சேர்ந்து, அதை மகிமைப்படுத்துவார்கள்.

15, 16. திருச்சபையின் பாக்கியமும் மகிமையுமான நிலைமை. எருசலேம் பாழானபோது சிநேகிதரும் சத்துருக்களும் அதை இகழ்ந்தார்கள். புலம். 1: 2. விடுதலையானபோதோ அது மகிமைப்பட்டது.

அப்படியே திருச்சபையானது, ஜாதிகளின் பாலைக் குடித்து, அதாவது அவர்களுடைய ஆஸ்திகளையும், இராஜாக்களின் வல்லமைகளையும் பெற்று மகிமையடையும்.

17. யூதசபை முன் எளிமையாக்கப்பட்டது. விடுதலையானபின் பற்பல சலாக்கியங்களால் ஐசுவரியமானது எசா. 1: 21—23. செருபாபேல், எஸ்று, நெகேமியா என்ற துரைகளின காலத்தில் சமாதானம். அப்படியே திருச்சபைக்கும், மகிமையும், சமாதானமும் வரும் 2 கொரி. 3: 10. அவர்களுடைய முந்தின அதிபதிகள் ஒடுக்கினார்கள். 59: 14. இனி அப்படியிராது.

18. யூதசபை மற்றவர்களால் ஒடுக்கப்பட்டு, ஜெயிக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டதுபோல இனியிராது. தேவனே தமது சபைக்கு இரக்ஷிப்பாயிருப்பார். எசா. 26: 1. சங். 14: 7.

19. தேவன் தமது திருச்சபைக்குக் கேடக மாத்திரமல்ல, அவர்களுக்குச் சூரியனுமாயிருக்கிறார். சங். 84: 11. பூமிக்குரிய சூரியனும் சந்திரனும் அவர்களுக்கில்லையென்றல்ல. ஆவிக்குரிய திவ்விய வெளிச்சம் அந்தகாரத்தை நீக்கிச் சுவிசேஷ உபதேசங்களால் பிரகாசிப்பித்து, ஆவியின் வரங்களால் நிரப்பி, என்றும் அவர்களோடுகூட இருப்பதைக் குறிக்கும். “அவர்களுடைய சூரியன் இனி அஸ்தமிப்பதில்லை.” இப்போதிருக்கிற சூரியன் மேகத்தால் மறையும், பாதி இருட்டைக் காண்பிக்கும், காங்கை தரும். தேவனாகிய சூரியனோ என்றும் அஸ்தமிப்பதில்லை. யாக். 1: 17. பரத்துக்குரிய ஆறுதலும், சந்தோஷமுங் குறையாது.

21-வச. சிறைப்பட்டுப்போன யூதர் பொல்லாதவர்களாயிருந்து, பாபிலோனில் அநேகர் மரித்துப்போனார்கள். திரும்பிவந்தவர்களோ குணப்பட்டு வந்தவர்களானதால் நீதிமான்கள். 1: 25—27. திருச்சபையில் அழைக்கப்படுகிற யாவரும் பரிசுத்தரானதினால் நீதிமான்களே. கிறிஸ்துவின் நீதியை அடைகிறபடியால் நீதிமான்கள். சங். 1: 5. இதற்குமுன் யூதசபை பூமியைவிட்டுத் துரத்தப்பட்டதுபோல இனி நடவாது. ஆவிக்குரிய திருச்சபையானது என்றும் நாட்டப்பட்டிருக்கும். எபேசி. 2: 10. பரதீசில் என்றும் நிலைத்திருப்பார்கள்.

22. சபையானது துவக்கத்தில் சிறிதாயிருந்தாலும், வரவரப் பெருகிப்போகும். அநேகர் குணப்பட்டுத் திருச்சபையில் சேர்வார்கள். தாழ்மையும் அற்பமுமான சில மனிதரால் அநேகர் சேருவார்கள். தொகையில் மாத்திரமல்ல, சிறியவன் பலத்திலும் பெருக்கமாயிருப்பான். எகிப்தில் 70-பேர் ஏராளமானதுபோலும், அப். 2-ல் 3000-பேர் ஒருமிக்கக் குணப்பட்டதுபோலும் ஏற்றகாலத்தில் தேவன் செய்வார்.



## கேள்விகள்.

1. யூதர் விடுதலைபெற்றுத் திரும்பிவந்தபின் அவர்களுக்கிருந்த சலாக்கியங்களென்ன? அதெப்படித் திருச்சபைக்கு முன்னடையாளம்.
2. வெளிச்சம், இருள், சூரியன், ஜாதிகளின் பால் என்ன பொருளைத் தரும்?
3. கேதார், நெபாயோத், தர்சீஸ், லீபனோன், எப்பா, சேபா, எங்கே? அந்தப் பேர்கள் என்ன சம்பந்தமாய் இங்கே வருகிறது?
4. தேவனே தமது சபைக்கு எப்படி மகிமையும் சூரியனுமாயிருக்கிறார்?
5. திருச்சபை மகிமைப்படும்போது, அது செய்யவேண்டிய கடமையை விஸ்தரியும்.

---

## ஏசாயா. 61-அதிகாரம்.

1—3. இதில் கிறிஸ்துநாதருடைய தன்மையையும் அவருடைய முத்தொழிலையும் பற்றித் தீர்க்கதரிசனம் அடங்கியிருக்கிறது. இதின் நிறைவேறுதல் லூக். 4: 18-பார். கோரேசுடைய விளம்பரம், சுவிசேஷ விளம்பரத்துக்குச் சரி. யூதசபையில் துயரத்துக்கு அடையாளமாகச் சாம்பலில் உளுக்கார்ந்து இரட்டை உடுத்துக்கொண்டிருந்தார்கள். விடுதலைபெற்றபோது சிங்காரமும், ஆனந்த தைலமும், துதியின் உடையுங் கிடைத்தது போல சுவிசேஷ சபைக்குமுண்டு. திருச்சபையில் சேர்க்கப்படுபவர்கள் நீதியின் விருக்ஷங்களாம். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் வேரூன்றி, நீதியின் கனிகளைக் கொடுப்பதால் விசுவாசிகள் அப்படி அழைக்கப்படுகிறார்கள்.

4—9. திரும்பிவந்த யூதருக்குரிய வாக்குத்தத்தங்கள்.

(1) அவர்கள் வீடு திரும்பக் கட்டப்படும். திருச்சபையானது சுவிசேஷ வல்லமையினாலும் ஆவியின் பெலத்தாலும் விருத்தியாகும்.

(2) அந்நியர் அவர்களுக்கு வேலைக்காரராவார்கள்.

(3) புறஜாதியாரான அந்நியர் திருச்சபையில் சேர்ந்து அதின் வேலையை நடத்துவார்கள். 1 கொரி 3: 6—9.

(4) ஆசாரிமாருக்குத் வேலையில்லாமல் பங்கு கிடைத்ததுபோல யூதசபையானது ஆசாரியரென்னப்படுவார்கள். லூக் 1: 74, 75. சங். 116: 16. யாத். 19: 5. விசுவாசிகளும் ஆசாரியரே. 1 பேது. 2: 9. வெளி. 1: 6. 5: 10. ஆவிக்குரிய பலியிடுவார்கள் ரோ 12: 1. எபி. 13: 16. (4). புறஜாதியாருடைய ஆஸ்தியும், கனமும் திருச்சபைக்கு நன்மையாக மாறும்.

(5) 60: 5, 11 காணிக்கைகொடு. பார்கள்.

(6) அவர்களுக்கு ஆறுதலும் திருப்தியுமுண்டாகும். (வச. 7.) எசா. 40: 2.

(7) தேவனே அவர்களை நடத்தி அவர்களுடன் உடன்படிக்கை செய்வார். (8-வச.) சத்துருக்களால் அநியாயப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்வார். அவர்கள் நல்ல நோக்கமாய் நற்கிரியைகளைச்செய்ய நடத்துவார். எசா. 55: 3.

(8) அவர்களுடைய சந்ததியின்மேல் ஆசீர்வாதம் அளிப்பார், திருச்சபை பெருகும்.

10, 11-வச. தீர்க்கதரிசி சந்தோஷத்தினால் பாடின தோத்திரப்பாட்டு. சிலர் இது கிறிஸ்துநாதர் தமது சபை ஜெயங்கொண்டதின்பேரில் சொன்னதென்பார்கள். இதற்கு அது முன்னடையாளந்தானே. 1 சாமு. 2: 1. ஆபகூ. 3: 18. லூக். 1: 47. இது வழக்கமான மங்களம். கிறிஸ்துநாதருடைய நீதி நமக்குத் தரிப்பிக்கப்படுகிறது. ரோ. 13: 14. திருச்சபைக்குரிய இரக்ஷிப்பின் உடை நிலையுள்ளது. எசா. 23: 18. இந்த இரக்ஷிப்பு சருவ உலகத்தாருக்கும் பிரசங்கிக்கப்படும். சங். 72: 3. 85: 11. இந்தப் பாட்டும் மோசே, அன்னாள், மரியாள், சகரியா, சிமேயோன்பாட்டுகள் போல எல்லா ஜாதியாருக்கும் தெரியவரும்.

## கேள்விகள்.

1. பாவிகள் என்னென்ன உவமானங்களால் அழைக்கப்படுகிறார்கள்? எப்படி? அவர்களுக்குக் கிடைத்த அநுக்கிரக வருஷமென்ன?

2. கிறிஸ்துநாதர் உலகில் வந்த நோக்கமென்ன? விசுவாசிகள் எப்படி நீதியின் விருக்ஷங்கள்?

3. 4-9வரையும் யூதருக்குச் சொல்லிய வாக்குத்தத்தங்கள் எப்படி யூதரில் நிறைவேறின? சுவிசேஷ சபைக்கும் எப்படி முன்னடையாளம்?

4. தீர்க்கதரிசி பாடிய பாடல்போல பாடினவர்களார்? என்? எப்படி?

---

மே.ஸ்ரீ நற்போதகத்தில் போடப்பட்டிருந்த

## வேதவினாக் கும்மிவிடை.

1. கடுக்கன் கேட்டது கிதியோன் சரடி கட்டினையானோரேழ் பிள்ளை (கள்.
மடிக்கண்ணே மடிந்தவன் சூனேமியாள் மகனறியடி ஞானப்பெண் (ணே. (நியா. 8: 24. 2 இரா. 2: 24. 2 இரா. 4: 20.)
2. உப்புவிதைத்த தபிமலேக்கு முழு லோகத்தார் போனதேசு பிறப்பு,
உப்பு விரும்பிமுன் கேட்டதெலிசாவென் றுகந்துணரடி ஞானப் (பெண்ணே. (நியா. 9: 45. லூக். 2: 3. 2 இரா. 2: 20.)
3. சேவல்கூவ ஜெகத்தார்க்கெலாம் கேட்டது தேரோதேனிலோ பேழை (யிலோ
சேவலொன்று கூவிக்குணப்பட்டோன் கேபா தெரிந்துகொள்ளடி (ஞானப்பெண்ணே. (மத். 26: 75)
4. பாடகிகள் மிரியாம் தெபொராள் மற்றோர் பாடைப்பிரேதமெழுப்பி (னதே
சாடையை விட்டுவிட்டோடினவன் யோசேப் பாகியவாலிபன் (ஞானப்பெண்ணே. (யாத். 15: 21. நியா. 5: 1. லூக். 7: 14. ஆதி. 39: 13.)



5. பாரிலற்புதம் செய்தவன்தான் மிகப் பலத்தகாக்ஷியைப் பார்த்தவன் (தான்
பாரில் பாக்கிய தேசமிழந்தவன் பக்தன் மோசேயே ஞானப்பெண் (ணே. (யாத். 4: 1—9. யாத். 3: 2. உபா. 34: 4)
6. வல்லசமர் செய்யப்போகையிலே ஒரு வாக்குறுதியுட் பண்ணிக்கொ (ண்டு
நல்ல செலிப்புடன் திரும்பும்போது மெய் நடுங்கினனெப்தா ஞா (னப்பெண்ணே. (நியா. 11: 35.)
7. ஓர்மலைமீதி லாரோன் மரித்தான் பாரான் ஒற்றபலர் வாதையுற்ற தலம் போர்செய் சவுல் தவிதிருந்த கெபிக்குப் போனான் என்கேதியில் ஞா (னப்பெண்ணே. எண் 20: 24—29. எண். 14: 37. 1 சாமு. 24: 3)
8. ஒரோபில் தண்ணீரோடிவந்தது பேயோரில் பிலேயாம் ஆசிசொன் (னான்
பாராய்த பேராவில் கர்த்தரின் அக்கினிபற்றி எரிந்தது ஞானப்பெண் (ணே. (யாத். 17: 6. எண். 23: 28. எண். 11: 3.)

வே ஞா. கு.

---

## அற்புதம் அருள்வேதத்திற்கு அத்தாட்சி.

கிறிஸ்துசமய நூலாசிரியர்கள் தெய்வகிருபையின்றிச் செய்யக்கூடாத அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். மோசேயென்ற மகானுபாவரும் அவருடைய சிஷனாகிய யோசுவா என்பவரும், எலியா எலிசாமுதலான பற்பல தீர்க்கதரிசிகளும் ஜெகத் குருவாய் விளங்கிய இயேசுகிறிஸ்துநாதரும் அவருடைய சிஷர்களும் பற்பல காலங்களில் பற்பல இடங்களில் அளவிறந்த அற்புதங்களை நடப்பித்திருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள் அற்புதங்களைச் செய்தவிதத்திற்கும் கிறிஸ்துநாதர் அற்புதங்கள் செய்தவிதத்திற்கும் வித்தியாசமுண்டு. அவைகளைக் கவனித்துப் பார்க்குமிடத்து என் கிரியைகளே என்னை இன்னாரென்று காட்டுமென்றபடி கிறிஸ்துநாதர் தேவனே என்றும், எங்கள் கிரியைகள் எங்களுடைய சுயசக்தியினாலும் சுயபக்தியினாலுமில்லை என்றபடி அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் வேதவசனத்தைப் போதித்த தேவபக்தர்கள்தான் என்றும் விளங்கும். ஆகையால் அற்புதங்கள் திவ்ய அத்தாக்ஷி என்பதற்கு ஆக்ஷேபமில்லை. அற்புதங்கள் செய்வது பெரிய காரியமல்ல; பலர் அற்புதங்களை நடப்பிக்கிறார்கள்; ஆதலால் அற்புதம் திவ்ய அத்தாக்ஷியல்ல என்பதுபோலச் சிலர் ஆக்ஷேபிப்பார்கள். அற்புதமானது இன்ன தன்மையுடையதென்று தெரியாததினாலே இப்படி ஆக்ஷேபிக்க நேரிடுகிறது. ஆகையினாலே அதைப்பற்றி இவ்விடத்தில் கொஞ்சம் பேசுவோம்

நிலத்திலே ஒரு விதையைப் போட்டால் ஒரு செடி முளைக்கிறது. இப்படி முளைப்பது இயல்பாதலால் இது ஆச்சரியமல்ல என்போம். வித்தாவது வித்திற்குச் சரியான வேறெந்த வஸ்துவாவது இல்லாத இடத்தில் ஒரு செடியும் முளைக்கிறதில்லை. நெருப்பில்லாமல் புகை கிளம்புமா என்பதுபோல் இதுவும் இயல்புதானென்றும் சொல்வோம். ஆம் நிசந்தான்.

பிரபஞ்சப் பொருட்கள் யாவற்றிற்கும் ஓர் வகையான பிரமாணமுண்டு. அந்தப் பிரமாணம் ஒழுங்குத் திட்டமானதும் ஒருமைப்பாடுடையதுமாக இருக்கிறது. மேற்சொல்லியபடி வித்தினின்று செடி முளைப்பதுபோலவே, சுரம் உள்ளவனுக்கு ஔஷதப் பிரயோகம்பண்ண, அவ்வியாதி சமனமாவதும் ஆகாயத்தில் வீசியெறியப்பட்ட கல்முதலியவைகள் மேனோக்கிப்போகாமல் தரையிலே தானே விழுந்து விடுவதும் இன்னும் இவைபோன்ற காரியங்களும் அந்தப்பிரமாணத்திற்கிசைவாகவே இருக்கிறது. அந்தப் பிரமாணத்திற்குச் சுபாவமுறைமையென்று பேர். சூரியன் உதையமும் அஸ்தமனமும் ஆகிக்கொண்டே வருவதும் சிறுபிள்ளைகள் பெரிய மனுஷராக வளர்ந்துகொண்டு வருகிறதும் ஒரு சிறிய வித்தினின்று பிரமாண்டமான விருக்ஷம் உண்டாகி வளர்ந்துவருவதும் இன்னும் இவைபோற் பலவும் சுபாவமுறைமைக்குட்பட்டவைகளாயினும் இவைகளெல்லாம் நமது கண்களுக்கு முன்பாக எப்போதும் நிகழ்ந்துகொண்டு வருவதால் அவைகள் ஆச்சரியம்போல் தோன்றுகிறதில்லை. பூமி அதிர்ச்சி உண்டாவதும் மலை உச்சிகளினின்று அக்கினி புறப்பட்டுச் சூழ்ந்த கிராமங்கள் புரங்களை யெறிப்பதும் இவைபோலும் பிறவும் இயற்கைப்பிரமாணத்திற்கு அடுத்தவைகள்தான் என்னும் அறிவு இல்லாததினாலே அவைகளெல்லாம் அனேகர்க்கு அதிசயம்போல் தோற்றுகிறதுண்டு. பேதமில்லாதிருக்கினும் பல பிரிவுகளைக்கொண்டிருக்கும் இந்தச் சுபாவமுறைமை முழுமையும் அறிந்தவர்கள் இந்த உலகத்தில் இல்லை. சமுத்திரத்தில் உண்டாயிருக்கும் முத்துச்சிப்பிகளை அப்போதைக்கப்போது முத்துச்சலாபத்தினாலே கொஞ்சங்கொஞ்சம் வாரிக்கொண்டு வருகிறார்களேதவிர சகலத்தையும் ஒரே சமயத்தில் யாவராலும் கொண்டுவரக்கூடாததுபோல சுபாவமுறைமையின் விஷயமும் இருக்கிறது. கல்வி மிகுந்து அறிவு பெருகப்பெருக இச்சுபாவமுறைமைகளில் அநேகந் தெரியவரும். வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம், அளவுசாஸ்திரமுதலிய சகலவித சாஸ்திரங்களும் சுபாவமுறைமைகளை அடுத்தவைகளாம். புகைவண்டி, மின்தபால் முதலியவைகளும் பிரமிப்பைக் கொடுக்கத்தக்கதான அனேக காரியங்களும் நூதனமாய்ப் பார்ப்பவர்களுக்கு அற்புதம்போல் தோன்றும். ஆயினும் அவைகளெல்லாம் அற்புதங்களல்ல சுபாவமுறைமைகள் என்பதாய்க் கற்றோர்க்குத் தெரியுமென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

இந்தச் சுபாவமுறைமையை அமைத்தவர் பிரபஞ்ச சிருஷ்டிகராகிய கடவுளேயல்லாது வேறொருவருமில்லை இந்தச் சுபாவமுறைமைப்பிரகாரம் நடவாமல் அதற்கு விகற்பமாய் நடப்பதே அற்புதமாம். எப்படியென்றால் விஷந் தீண்டிய ஒருவனுக்கு ஔஷதப்பிரயோகம் யாதுஞ்செய்யாமல் விஷந் தீண்டிய இடத்தில் கையை வைத்து அல்லது கையையும் வையாமல் விஷமே இறங்கு என்று சொல்ல அந்தக்ஷணமே விஷம் இறங்கி அம்மனிதன் பிழைத்துக்கொண்டால் பார்த்தோர் கேட்டோர் யாவரும் இதென்ன ஆச்சரியம் அற்புதமாக இருக்கிறதென்பார்கள். அதுதான் அற்புதம். ஏனெனில் கைக்காவது வாயிலிருந்து வரும் வார்த்தைக்காவது சுபாவமுறைமைப்படி விஷத்தை இறக்குவதற்குச் சக்தியில்லையென்பது எவருக்கும் பரிஷ்காரமாகத் தெரிந்த விஷயம். அதுபோலவே ஒரு முகமாய் ஓடிக்கொண்டிருக்கும் ஜலமானது எதிர்முகமாய் ஓடுவதும் ஓடாமலே வெகுநேரம் சலனமின்றி நிற்பதும் கல் இரும்புமுதலிய கனதியான வஸ்துக்கள் ஜலத்தின்மேல் மிதப்பதும் சலனகதியாகவே இருக்கப்பட்ட சூரிய சந்திரர்கள் ஓடாமல் ஓரிடத்தில் வெகுநேரம் தரித்து நிற்பதும்



இவைபோலும் பிறவும் அற்புதங்கள் என்பதற்கு ஆக்ஷேபமில்லை. இந்த வகையாய்ச் சுபாவமுறைமைப்படிக்கல்லாமல் அதற்கு விகற்பமாய் நடப்பிப்பதற்குத் தெய்வத்தால் அல்லது தெய்வானுக்கிரகம் பெற்றவர்களால் கூடுமேயொழிய மற்றப்படி எவராலும் எக்காலத்திலுங் கூடாததாகவே இருக்கிறது. ஆகையால் அற்புதங்களைப் பரீக்ஷித்து இது சரி இது தப்பிதமென்று அறியும்படி ஒவ்வொரு அற்புதமும் என்னென்ன லக்ஷணங்களைக் கொண்டிருக்குமென்று சர்வஜன சம்மதமான சிலவற்றைக் கவனிப்போம்.

(1) எந்த அற்புதமும் மேலே விவரித்த சுபாவமுறைமை அல்லது இயற்கைப்பிரமாணத்தின் பிரகாரம் நடவாமல் அதற்கு விகற்பமாயிருக்க வேண்டும். அப்படிக்கல்லாதவைகளெல்லாம் முன் சொல்லியபடி சாஸ்திரத்திற்குள்ளானவைகளாம்.

(2) அற்புதமானது மனிதர் பார்க்கக்கூடாத இடங்களிலல்ல, பகிரங்கமாகவே செய்யப்படவேண்டும்; ஏனெனில் தந்திரமல்லாத காரியத்தை அந்தரங்கத்திற் செய்யவே டியது அவசரமில்லை.

(3) அற்புதமானது காலதாமதமன்னியில் உடனே செய்யப்படவேண்டும். ஏனெனில் தண்ணீர் விடவிடச் சிறு மரம் பெரிய மரமாவது அற்புதமல்ல.

(4) உபகரணம் அதாவது துணைக்காரணமின்றி அற்புதங்கள் செய்யப்படவேண்டும். ஏனெனில் ஔஷதப்பிரயோகத்தினால், ஒரு வியாதிஸ்தனுக்குக் குணமுண்டானால் அது அற்புதமல்ல.

(5) யாவரும் கண்ணாற் பார்த்து மற்றும் புலன்களினாலும் பரீட்சை செய்து நிதானிக்கத்தக்கதாக இருக்கவேண்டும். அப்படிக்கல்லாத எல்லாம் மாயாத்தோற்றமென்பதற்கு ஆக்ஷேபமில்லை.

(6) அற்புதம் நடந்தது நிஜம் என்று அந்தக் காலத்திலுள்ளவர்கள் அறியும்படி ஞாபகத்திற்காக அந்த அற்புதம் நடந்த காலத்திலே சில ஏற்பாடுகள் உண்டாகி அவைகள் அக்காலமுதல் அனுசரிக்கப்பட்டுவந்தால் அதுவும் விசேஷந்தான்.

(7) செய்யப்பட்ட அற்புதங்களெல்லாம் மிகவும் விசேஷமான காரியங்களுக்காகவும் தெய்வீக தன்மைக்கு இசைந்ததாகவும் மனுஷர் உபயோகத்திற்கேற்றபடியாகவும் நடப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில் தகுந்த முகாந்தரமில்லாமல் அற்பக் காரியங்களுக்காகவும் விளையாட்டு அல்லது வேடிக்கைக்காகவும் தகாததும் அயோக்கியமுமான காரிய சித்திக்காகவும் அற்புதங்கள் செய்யப்படவேண்டியது அவசியமில்லை.

அற்புத லக்ஷணங்களைக் கவனித்த நாம் கிறிஸ்துமதத்திற் சொல்லியிருக்கப்பட்ட அற்புதங்கள் இவ்விஷயங்களைப் பொருந்தியிருக்கிறதோ எனப் பார்ப்போம்.

கிறிஸ்து சமய அற்புதங்கள் இந்த இலக்ஷணங்களைப் பொருந்தியே இருக்கின்றன.

(1) அந்த அற்புதங்களின் தன்மையைப் பார்க்குமிடத்து ஆற்றிலே ஜலமானது இரத்தமாக மாற்றப்பட்டது. கடலும் ஆறும் அதிசயமானவிதமாய்ப் பிரிந்து வழிகொடுக்க உலர்ந்த தரைவழியாய் ஜனங்கள் மறுகரைக்கு வந்திருக்கிறார்கள். சூரியன் ஒரு பகல்முழுவதும் நடுவானத்தில் தரித்து நின்றது. ஆகாயத்தினின்று பலதரம் அக்கினி வந்தது. வைத்தியர்கள் எவராலும் நீக்கப்படக்கூடாத வியாதிகளெல்லாம் நீக்கப்பட்டன. பிறவிக்குருடருக்குப் பார்வை அளிக்கப்பட்டது. நீராக்குஷ்ட வியாதி

நீங்கினது. கூனராக இருந்தவர்கள் நேராக்கப்பட்டார்கள். கைகால்முத லிய அவயவக் குறைவுள்ளவர்கள் சரியான அவயவங்களைப் பெற்றார்கள் மூர்க்கமான பிசாசுகள் துரத்தப்பட்டன. சமுத்திரத்திலுண்டான பெருங் காற்று அமர்த்தப்பட்டது. இறந்துபோனவர்கள் உடனேயும் கொஞ்சநே ரத்திற்குப் பிற்பாடும் புதைக்கப்பட்டு நாலுநாட் கழித்து நாற்றமெடுத்தபிற் பாடும் உயிரோடு எழுப்பப்பட்டார்கள். நடப்பிக்கப்பட்ட அற்புதங்கள் அனந்தம் வேதாகமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சம் பவங்கள் சுபாவமுறைமைப்படி நடக்கக்கூடியதோ யார் செய்யக்கூடும்.

(2) திரளான கூட்டங்களுக்கும் மந்திரவாதிகளுக்கும் முன்பாகவே அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டன. அவர்களிற் சிலர் சிநேகிதர்களாகவும் சிலர் அந்நியராகவும் பலர் விரோதிகளாகவும் இருந்தார்கள். கிறிஸ்துநா தரும் தாம் தேவனால் அனுப்பப்பட்டதற்குத் தம்முடைய கிரியைகளே சாஷி; அவைகளைப் பரீட்சித்துப் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அற்புதங்களில் ஏதாவது குறையிருக்குமானால் உடனே அந்த ஜனங்கள் கண்டுபிடித்திருப்பார்கள். அற்புதங்களின் எதார்த்தத்தை நிதானிக்கத்தக்க சக்தியுள்ளவர்களாயிருந்த யூதஜாதியாரும் கடவுள் சகாயம் இருந்தாலொ ழிய இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யக்கூடியது யார் என்பதுபோல் சொன்னார்களேயல்லாமல் அற்புதங்களிற் குற்றங்கண்டுபிடித்ததில்லை.

(3) பாத்திரங்களிலிருந்த ஜலம் ரசமாக மாற்றப்பட்டுப் பலர் ருசி பார்த்திருக்கிறார்கள். கூன், குருடு, குஷ்டம், ஊமைமுதலான வியாதி களையுடையவர்கள் சுகமாக்கப்பட்டபின்பு அந்தச் சுகமான ஸ்திதியிலே யேயிருந்திருக்கிறார்கள். உயிரோடு எழுப்பப்பட்டவர்கள் கொஞ்சநேர மிருந்து உடனே மரித்துப்போகவுமில்லை. ஆகையினால் கிறிஸ்துநாதரு டைய அற்புதங்களைச் சகல ஜனங்களும் பல காலங்களிலும் பரீட்சித்துப் பார்க்க ஏதுவாயிருந்தது.

(4) செய்யப்பட்ட அற்புதங்கள் ஒன்றிரண்டல்ல, அநேகமாயிருக் கின்றன. பழையஏற்பாட்டில் நாற்பதுக்குமேலும் புதியஏற்பாட்டில் ஐம் பதுக்குமேலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளையன்றி அநேகந் செய்யப்பட்டதாகவுங் குறிப்புகளிருக்கிறது. இவைகள் யாவும் ஒரே மாதி ரியாயல்ல. பற்பல வகையாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன. தெய்வஉதவி இல்லாமலிருந்தால் இப்படிச்செய்வது கூடாத காரியம்.

(5) அற்புதங்களைச் செய்தவர்கள் தங்களுக்கு யாதாமொரு பிரயோ ஜனத்தை அல்லது லௌகிக மகிமையை நாடி அப்படிச் செய்ததில்லை. அப்படியிருக்குமானால் எவ்வளவோ நன்மைகளை அடைந்திருக்கலாம். அநேகமாய்க் கஷ்டங்களை அனுபவிக்கவும் தங்களுடைய உயிரை இழக்க வும் வேண்டிய அவசரமில்லை. தெய்வசித்தத்தைத் தெரியப்படுத்தி மனு ஷர்கள் யாவரும் மோட்ச கதி சேரும்படி சீரடைந்து சன்மார்க்கத்தில் நடக்கும்படி அவர்களை ஏவுவதே அவர்களுடைய நோக்கமாய் இருந்தி னால் தாங்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்களென்பதற்கு அத்தாக்ஷியாக அற்புதங்களை நடப்பித்தார்களேதவிர வேறொன்றிற்காகவுமில்லை.

(6) வாக்கினாலே பேய்களைத் துரத்தி வியாதிகளை நீக்கி வாக்கினாலே பின்னும் அனந்தங் கிரியைகளை நடப்பித்ததினால் வாக்கைத் தவிர பெ ரும்பாலும் அவர்களுக்கு வேறே துணைக்காரணங்களிருந்ததில்லை.

(இன்னும் வரும்.)

---



# மகாகனம் சார்ஜென்றம்மாளவர்களின் தேகவியோகம்.

ஈ்ளது மாசம் 17௳ ஞாயிறு காலை ஆராதனைப் பிரசங்க முடிவில், மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் "இன்றுகாலையில் அம்மாளவர் களுக்குச் சடுதியாய் ஆயாசங் கண்டு வருத்தமான நிலைமையில் இருக்கிற படியால், டாக்டருக்கு ஆள் அனுப்பினேன்; அவரும் வந்துவிட்டார். சபையாராகிய நீங்கள் அம்மாள் அவர்களின் ஆவி கலங்காமல் சமாதானத் துடன் பிரிய ஜெபம்பண்ணுங்கள். அவர்கள நம்மைவிட்டுப் பிரிவது வருத்தமான காரியம்" என்று கண்ணீருடன் சொல்ல, அனேக ஸ்திரீகள் கண்ணீர்விட்டு அழுது ஜெபிக்கவும் மற்றோர் மனங்கலங்கிப் பிரார்த் திக்கவும் ஆராதனை முடிந்தது.

ஐரோப்பிய குருமார், துரைசானிமார், மிசிமார் அம்மாளவர்களின் உபத்திரவத்தில் கூடயிருந்து கடைசிபரியந்தம் உதவிசெய்துகொண்டி ருந்தார்கள். சுதேச ஸ்திரீகள் அம்மாளவர்களை அடிக்கடி போய்ப் பார்த் தார்கள். ஆடவர் அவர்களைப் பார்க்கக் கூடாதிருந்தாலும் அனேகர் பங் களாவுக்கு வந்து சுகத்தை விசாரிக்க அங்கங்கே நின்றார்கள். துரைமா ரின் வண்டில்கள் வரத்துப்போக்காயிருந்தன.

திங்கட்கிழமை அம்மாளவர்கள் அதிக அவஸ்தைப்பட்டார்கள். செவ் வாய்க் காலை அடைக்கலபுரம் கோவிலில் அம்மாளவர்களுக்காக ஜெபம் நடந்தது. பெரிய கோவிலில் நடந்த மாலை ஆராதனையில் கனம் ஏசுதாசன் ஐயரவர்கள் அம்மாளவர்களின் பக்தியையும், மேலான அன்பையும், உறு தியான நம்பிக்கையையும், கிறிஸ்துமார்க்க பிரபல்யத்திற்காக அவர்கள் பட்ட பிரயாசையையும், அவர்கள் நமக்கு வைத்திருக்கிற முன் மாதிரி யையும் சொல்லிச் சுருக்கமாய்ப் பிரசங்கித்து ஆறுதல் உண்டாக ஜெபம் பண்ணினார்கள்.

19௳ செவ்வாய் மாலை 8¾-மணியளவில் அம்மாளவர்கள் ஜீவஓட் டத்தை முடித்துக் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். உடனே கோ புர மணி துக்க ஓசையாய்த் தொனிக்கவே, துரை, துரைசானிமாரும் சபையாரும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் பங்களாவில் வந்து கூடி னார்கள். மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் துக்கம் நிறைந்த வாக்கோடு "அருமையான அம்மாளவர்கள் மகிழ்ச்சியோடும் விசுவாசத் தோடும் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். அவர்களுக்குச் சிலேற் பனம் கண்டு உணர்ச்சியற்றதுபோல தோன்றினபொழுது, இயேசுகிறிஸ் துவை நினைக்கிறீர்களா என்று கேட்டேன். "ஆம்" என்றார்கள். அவரில் அன்புகூருகிறீர்களா என்று கேட்டபோது, "ஆம்" என்று சொல்லி அசைந்து கைகை காட்டினார்கள் என்னவே சபையார் அழ அத்தியக்ஷ ரவர்களும் கண்ணீர் விட்டார்கள். பின்னும் அத்தியக்ஷரவர்கள் "நான் கிராமங்களுக்குப் போகும்போதெல்லாம் என் கையைப் பிடித்து முழங் காலில் இருத்தி, கருத்தாய் ஜெபித்து வழிவிட்டனுப்புவார்கள்" என்று அந்த இடத்தைச் சுட்டிச்சொல்ல, அவ்வார்த்தை முடியுமுன் பக்கத்தில் நின்ற யாவரும் ஏகமாய்க் கிலேசப்பட்டார்கள். அப்பொழுது சபையார் அத்தியக்ஷரவர்களை நோக்கி "அம்மாளவர்கள் சந்தோஷமாய்க் கர்த்தருக் குள் நித்திரை அடைந்ததால் அத்தியக்ஷரவர்களும் ஆறுதல் அடையவேண்

டும்'' என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்களோ "மெய்மெய்'' என்று சொல்லிச் சபையாரை அனுப்பிவிட்டார்கள். ஐரோப்பியரும் அம்மாளவர்களால் வேதஅறிவைப் பெற்ற அனேக சுதேச ஸ்திரீகளும் இரவெல்லாம் விழித்துக்கூட இருந்தார்கள். புதன்காலை 6¼-மணிக்கு அடக்கம் என்று வீடுவீடாய் அறிவிக்கப்பட்டது. இரவு 10-மணிக்கு ஓய்ந்த மணி காலை 6-மணிக்குத் திரும்பவும் துயரசத்தமிட்டுத் தொனித்தது. சபையார் கூடிவந்தார்கள். குருமார் சுற்றி நின்றார்கள். துரை, துரைசானிமார் விராந்தாவிலும் பள்ளிப்பிள்ளைகள் முன் பக்கத்திலும் புடைசூழ்ந்தார்கள். வேலைப்பாடுள்ள கருப்புப்பெட்டியில் அம்மாளவர்களை வளர்த்தி, ஜனங்கள் பார்க்கும்படி வைக்க, வந்த யாவரும் சமீபத்தில் போய்ப் பார்த்துத் துக்கித்தார்கள். மகாகனம் அத்தியக்ஷரவர்கள் "மேரி! என்னை விட்டுப் போகிறாயா'' என்று சொல்லி சிரத்தைத் தழுவி முத்தமிட்டு கடைவழி அனுப்பவே, ஸ்திரீகள் எல்லாரும் சஞ்சலமுற்று அன்பினால் ஏவப்பட்டு அழுதார்கள். அத்தியக்ஷரவர்கள் அவர்களை நோக்கி "அம்மாளவர்கள் இயேசு ரக்ஷகரிடத்தில் சந்தோஷமாய்ப் போயிருக்கிறார்கள். நீங்கள் ஏன் அழுகிறீர்கள். நம்பிக்கையுள்ளவர்களாய்க் கர்த்தருக்குள் ஆறுதல் அடையுங்கள்'' என்று மொழிந்தார்கள்.

கனம் ஈசாக் ஐயரவர்கள் உருக்கமாயும் சுருக்கமாயும் ஜெபம்பண்ணி முடிக்க, பெட்டியை மூடி துரைசானிமார் பத்ரபுஷ்பங்களால் விநோதமாய்ச் செய்திருந்த மாலைகளை மேலாக அலங்கரிக்கவே, வண்டிலில் வெகு மரியாதையாய் வைத்து மேலாக ஒரு பெரிய கருப்புத் துப்பட்டியை விரித்துப் புறப்படுகிறதற்கு எத்தனமாகவும் பள்ளிக்கூடத்துப் பெண்பிள்ளைகள் பின்செல்ல, இடதுபக்கத்தில் பள்ளிக்கூடத்து ஆண்பிள்ளைகள் தொடர, மற்றப் பக்கங்களில் சபையார் கூடிவர சவாரி மிகவும் அமரிக்கையாய்ச் சென்றது. கோவில் முகப்பில் கனம் கெம்பர் ஐயரவர்கள் பள்ளிக்கூடத்து மாணாக்கர் அணிவகுத்து ஆசாரமாய் வலதுபுறம் நின்றுபின்பு சேர்ந்துவர, துரை, துரைசானிமார் வண்டில்களில் ஏறி பின்னாக வரிசையாய் ரதசாரத்தியம்செய்ய, அடைக்கலபுரம், சத்திரம், கடை இவைகளிலுள்ள தெருக்களில் ஜனங்கள் கும்பல் கும்பலாய் நின்று துக்கம்கொண்டாட, துக்கப்பவனி இங்கிலிஷ் கோவிலுக்குச் சமீபிக்கவே, அத்தியக்ஷரவர்கள் ரதத்தைவிட்டு இறங்கிப் பள்ளிக்கூடத்துப் பெண்பிள்ளைகளை முன்னடக்கவிட்டு, பெட்டிக்குப் பின்னாகச் சென்றார்கள். கோவில் கம்பவுண்டு போலீஸ்காரரால் காபந்துசெய்யப்பட்டது.

வாசலில் வந்தவுடனே குருமாரும் முக்கியஸ்தரும் பெட்டியைத் தூக்க, அத்தியக்ஷரவர்கள் முன்னும், துரை, துரைசானிமார் பின்னும் சபையார் கடைசியிலும் ஒழுங்காய் வர, கனம் ஆர்க்கோட் ஐயரவர்களும், கனம் கெம்பர் ஐயரவர்களும் மரித்தவர்களை அடக்கம்பண்ணும் முறைமையை வாசித்தார்கள். அப்போது கம்பவுண்டுக்குள் சேராட்க்கர் பள்ளிக்கூடத்துப் பெண்பிள்ளைகள் எதிராகத் துக்கமுகமாய் நின்றார்கள். பின்பு அம்மாளவர்களைப் பெட்டியோடு இங்கிலிஷ் கோவிலில் வைத்து ஜெபம் வாசித்தார்கள். அப்போது சங். பம்பாய் முதலியாரவர்கள் துக்க உடுப்புடன் வந்து வினவினார்கள். பின்பு பெட்டியை எடுப்பித்து கோவிலுக்கு எதிரான சேமஸ்தானத்தில் கொண்டுபோய் வைத்து ஜெபம்பண்ணி முடித்தபோது, அத்தியக்ஷரவர்கள் ஆறுதல் அடைந்தவர்களாய்த் தங்கள் பள்ளிக்கூடத்துப் பெண்பிள்ளைகளை "Safe in the arms of Jesus'' என்ற பாடலைப் பாடும்படி உத்தரவுகொடுத்து அவர்கள் இன்னிசையாய்ப் பாட



வே அம்மாளவர்களின் சரீரம் சேமிக்கப்பட்டது. கடைசியாய்க் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஆறுதலோடு திரும்பினார்கள்.

"நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.'' சங். 37: 37.

---

## சமாசாரத்திரட்டு.

அசௌக்கியமாயிருந்த இந்திய சக்கரவர்த்தினி அவர்களுக்கு இப்போது நல்ல சௌக்கியம் உண்டாயிருக்கிறது.

இங்கிலாந்தில் கல்வி கற்கும் இந்திய சுதேசிகளின் வசதிக்காக ஆரம்பிக்கப்பட்ட நோர்த்புரூக்கிளப் என்னும் ஸ்தாபனம் இளவரசரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பவாநகர் அரசர் அதற்காக லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார். அவ்வித ஸ்தாபனம் ஒன்று ஆகஸ்போட் கல்விச்சாலை சம்பந்தமாயும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தில் நியாயசாஸ்திரம் கற்ற ஒரு இந்து மாணாக்கன் 1100-ரூபாய் பெறுமதியான ஓர் வெகுமதியைக் கெலித்துக்கொண்டான்.

நீராவிக்கப்பல்கள் இலங்கைத்தீவைச் சுற்றிப் போகாதபடி மேற்படி தீவுக்கும் ராமேசுரத்துக்கும் இடைப்பட்ட சமுத்திரவாய்க்காலை அதிக ஆழமாய்த் தோண்டுவதற்கு ஆலோசனை பிறந்திருக்கிறதாம்.

மதுரையில் அனேக வருஷம் அரும்பிரயாசத்தோடு உழைத்துவந்த கனம் ரோண்டல் ஐயர் சிலநாளுக்குமுன் பொம்பாயில் இறந்துபோனார்.

தூற்றுக்குடிக்கு மேற்கே 8-மைல் தூரமான குலையன்கரிசல் என்ற கிராமத்தில் நாளது 4உ ஒரு மகமதியப்பெண் ஒரே பிரசவத்தில் 1-ஆணும் 2-பெண்ணுமாக மூன்று குழந்தை பெற்றாள். பிரசவித்து 2-மணி நேரத்திற்குள் தாய் இறந்துபோனாள். குழந்தைகள் சௌக்கியமாயிருக்கிறது.

அமெரிக்காவிலே நியுயார்க்கு நகரத்திலிருந்து ஒருவர் நியுமெசிகோவிலுள்ள நேயரொருவருக்கு ஓர் விருக்ஷத்தின் வேரை அனுப்பினாராம். அது இரண்டு ஆட்கள் எதிர்க்கெதிராய் இருப்பதுபோலுள்ளதாம். காது, கண், மூக்கு, வாய், புயம், கை, கால், அடிமுதலிய சர்வ அவயவங்களும் செவ்வையாய் விளங்குகின்றனவாம்.

இலங்கையைச்சேர்ந்த ஓர் ஊரில் ஒரு சிங்களக் கிழவனுக்கு வயசு நூற்றாறு. 1777-ஆம் பிறந்தவன். இவன் பிதா 97-வயசில் 1840-ஆம் இறந்தான். இவன் பிதா 92-வயசில் 1783-ஆம்இறந்தான். இவன் பிதா 85-வயசில் 1741-ஆம் இறந்தான். இப்போதிருக்கிற நூற்றாறு வயசுள்ள கிழவன் மங்கிப் பெலவீனப்பட்டிருந்தாலும் புத்திகெடவில்லையாம்,

---

ஜூலைமீ நாள்-31. ஆனிமீ 18௳ முதல், ஆடிமீ 17௳ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | ௧௮ | தேவன் என் கையினால் என் சத்துருக்களை உடைந்தோடப் பண் |
| தி | 2 | ௧௯ | அவர் நமக்குள்ளே அடி விழப்பண்ணினார். 15: 13. (1 நா. 14:11) |
| செ | 3 | ௨௰ | அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும். 16: 14. |
| பு | 4 | ௨௧ | உமது நாமம் என்றைக்கும் மகிமைப்படவும் கடவது. 17: 24. |
| வி | 5 | ௨௨ | தாவீதுபோன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பா. 18: 6. |
| வெ | 6 | ௨௩ | கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக 19: 13. |
| ச | 7 | ௨௪ | (தாவீது) பட்டணத்திலிருந்து ஏராளமான கொள்ளையை. 20: 2. |
| ஞா | 8 | ௨௫ | சாத்தான்......இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்கு தாவீதை. 21: 1 |
| தி | 9 | ௨௬ | (சாலோமோன்) என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டு. 22: 10. |
| செ | 10 | ௨௭ | அவர் என்றென்றைக்கும் எருசலேமில்வாசம்பண்ணுவார் 23: 25. |
| பு | 11 | ௨௮ | அவர்கள் செய்யவேண்டிய ஊழியத்துக்கு முறைப்படி. 24: 3. |
| வி | 12 | ௨௯ | கர்த்தரைப்பாடும் பாட்டுகளைக் கற்றுக்கொண்டு. 25: 7. |
| வெ | 13 | ௩௰ | கர்த்தருடைய ஆலயத்தில் வாசல்காக்கிறவர்களாய்ச். 26: 12. |
| ச | 14 | ௩௧ | ராஜாவைச் சேவிக்கிறதற்கு வகுக்கப்பட்ட வரிசை. 27: 1. |
| ஞா | 15 | ௧ | நீ அவரைத்தேடினால் உனக்குத் தென்படுவார். 28: 9. |
| தி | 16 | ௨ | உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு 29: 12 |
| செ | 17 | ௩ | ஞானத்தையும் அறிவையும் எனக்குத் தந்தருளும். 2 நா. 1: 10 |
| பு | 18 | ௪ | எங்கள் தேவன் எல்லாதேவர்களைப்பார்க்கிலும் பெரியவர். 2: 5. |
| வி | 19 | ௫ | மகாபரிசுத்தமான ஆலயத்தையும் கட்டினான். 3: 8. |
| வெ | 20 | ௬ | ஆலயத்தின் வாசல் கதவுகளும் எல்லாம் பொன்னாயிரு. 4: 22. |
| ச | 21 | ௭ | கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிர. 5. 14. |
| ஞா | 22 | ௮ | உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையிலே மகிழ்...ர். 6: 41 |
| தி | 23 | ௯ | அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு... 7: 14. |
| செ | 24 | ௰ | கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினான். 8: 13. |
| பு | 25 | ௧௧ | உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள். 9: 7. |
| வி | 26 | ௧௨ | கர்த்தர்........தமது வார்த்தையை உறுதிப்படுத்தும்படி 1 : 15. |
| வெ | 27 | ௧௩ | கர்த்தரைத் தேடுகிறதற்குத் தங்கள் இருதயத்தை நோக்க 11: 16 |
| ச | 28 | ௧௪ | கர்த்தரைத்தேடுகிறதற்குத்தன் இருதயத்தை நோக்காமல். 12: 14 |
| ஞா | 29 | ௧௫ | நாங்கள் அவரைவிட்டு விலகவில்லை. 13: 10 |
| தி | 30 | ௧௬ | எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்குத் துணைநில்லும். 14: 11 |
| செ | 31 | ௧௭ | உங்கள் கிரியைகளுக்குப் பலன் உண்டு என்றான். 15: 7. |

## விசேஷ நாட்கள்.

1. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 6-ம் ஞாயிறு.
4. அமாவாசை.
8. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 7-ம் ஞாயிறு.
15. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 8-ம் ஞாயிறு.
20. பௌரணமி.
22. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 9-ம் ஞாயிறு.
25. பரி. அப். யாக்கோபின் திருநாள்.
29. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், 10-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

அ. | ஆகஸ்துமீ. | ௲௮௮௱ வரு.

## ஏசாயாவின் தீர்க்கதரிசனம்.

### ஏசாயா. 62-அதிகாரம்.

தீர்க்கதரிசிகளுடைய வேலை, பிரசங்கமும் ஜெபமுமே. அந்தப்படி தீர்க்கதரிசியானவர், சபையானது தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நிலைநிறுத்தப்படும்படி ஜெபிக்கிறார்.

1—5-வச. தீர்க்கதரிசிக்குச் சபையைப்பற்றியிருந்த ஆசை.

1. தீர்க்கதரிசி தனக்காகவுமல்ல, தன் குடும்பத்துக்காகவுமல்ல, எருசலேம், சீயோன் என்று அழைக்கப்படுகிற திருச்சபைக்காக (எபி. 12: 22.) மிகவும் கவலையுள்ளவராய் (சங். 122: 9. 128: 5.) பண்ணுகிற தீர்மானம். பாபிலோனிலிருந்து யூதர் விடுதலையாகும்வரையும் தீர்க்கதரிசியிருக்கவில்லை அதற்கு 200-வருஷத்துக்குமுன் ஜனங்களுக்குப் போதித்தவர். அவ்வளவு காலத்துக்கு முன்னிருந்தாலும், பாபிலோனியரை அழிப்பதிலும், யூதரை விடுதலையாக்குவதிலும் விளங்கிய தேவனுடைய நீதியையும் இரக்ஷிப்பையும், பிரசங்கிக்க மவுனமாயிருக்கவில்லை. திருச்சபையின் வாழ்வு, பாக்கியமிவைகளைப்பற்றிப் பிரசங்கிப்பதில் ஓயவில்லை. அவர் சபையின் விடுதலைவரையுமிராவிட்டாலும், அவருடைய தீர்க்கதரிசனமே பின்னடியாருக்கு நன்றாய்ப் போதிக்கப்பட்டு வந்தது. போதகன்மார் வேலை சபைக்காகத் தேவனிடத்தில் பேசுவதும், தேவனிடத்திலிருந்து சபைக்குச் சொல்லுவதுமே. ஏசாயாவைப்போல் போதகன்மார் சபைக்காக ஜெபிப்பதிலும், சபையாரைப் போதிப்பதிலும், சாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்த வேலையை நிறைவேற்றுவதில் நமக்கு அருமையான போஜனமும் பிரியமான பானமும்போலிருக்கவேண்டும். (யோ. 4: 34.)

2. தீர்க்கதரிசி எவ்வளவாய் ஜெபித்தாலும், போதித்தாலும் தேவனே அவர் ஜெபத்தைக் கேட்டு, அவர் வார்த்தையை உறுதிப்படுத்துகிறவர். சபையானது தன் இரக்ஷிப்பாகிய நீதியை அடையும்போது, புறஜாதியாரும்; யூதரைப் பரிகாசம்பண்ணின இராஜாக்களும்; திருச்சபையின் இரக்ஷிப்பு, மகிமைமுதலியவைகளைக் காண்கையில் ஆச்சரியப்படுவார்கள். அவர்கள் ஆபிரகாமின் வித்தென்றும், இஸ்ரவேல் புத்திரரென்றும் அழைக்கப்படாமல் தேவனுடைய பிள்ளைகளென்னப்படுவார்கள்.

சிலர் "உன் நீதி" என்பதை இயேசுகிறிஸ்து என்று வாசிப்பார்கள். திருச்சபையின புத்திரர் மூன் சுபாவத்தினுல் தேவர்கோபாக்கினையின் பிள்ளைகள். இப்ப கிருபையினுலே தேவனுடைய பிள்ளைகளாம். அல்லது நவமான பாஷைகளைப் பேசக்கூடியவர்கள்போல, புதுப் பர்தாலும் அழைக்கப்படுவார்கள். (மாற்கு 16: 17 அப் 2: 4) அல்லது கிறஸ்தவர்களென்ற வெகு பிரஸ்தாபமான பேரால் அழைக்கப்படுவார்கள். ஆதி. 11: 4. அல்லது ஒருவரும் அறியக்கூடாத புதுநாமத்தால் அழைக்கப்படுவார்கள் (வெளி. 2: 17. 3: 12) அல்லது 4-ல் சொல்லிய புதுநாமங்களால் சபை அழைக்கப்படும்.

(a) திருச்சபையார் தேவனுடைய கரத்தில் அலங்காரமான கிரீடமும் முடியுமாயிருப்பார்கள். இராஜாக்களுக்குத் கனமாக அவைகள் தலையில் வைக்கப்படுவதுபோல் அல்ல; தேவனுக்கு நூதனமான கனமும் மகிமையும் வேண்டியதில்லையே. திருச்சபையாரைத் தமது கரத்தில் எப்போதும் திருச்சபைக்கே மகிமையாகவும், மற்றவர்களுக்கு மகிமையாகக் காணப்படும் நோக்கமாயும், தமது கரத்தில் கிரீடம்போலும் முடிபோலும் வைத்திருக்கிறார். (எசாயி. 13: 11 எசா. 28: 5) ஒருவரும் அந்தக் கனத்தைப் பறித்துக்கொள்ளக் கூடாதபடிக்கு அவைகளைத் தேவன் தமது கரத்தில் பத்திரமாய் வைத்திருப்பதையுங் குறிக்கும் இது பேதுரு அப்போஸ்தலன் சொல்லியபடி பரிசுத்த இராஜரீக ஆசாரியக்கூட்டத்துக்குரிய கனமாம். 1 பேது. 2: 9.

(b) அதிக மகிமையான நிலைமையுமுண்டு. யூதர் சிறைப்பட்டுப் போன காலத்தில் தேசம் பாழாயும்; அவர்கள் நிலைமை தள்ளப்பட்ட மனைவிபோலும், புருஷனை இழந்த ஸ்திரீபோலவுமிருந்தது; அவர்கள் விடுதலையாகும்போது, (a) எப்சிபா என்று அழைக்கப்படும் அதின் அர்த்தம் "கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்" எப்சிபா என்பவர் எசேக்கியாவின மனைவிக்கும், மனாசேயின் தாய்க்கும் பேராம். 2 இரா. 21: 1. புருஷனுக்குப் பிரியமான பெண்ணுக்கு இது சரியான பேர். ஈதி. 5: 19 தேவனே தமது சபையைப் புதுப்பித்து, சோப்படுத்தி தமக்குச் சொந்தமாக்குகிறார். (b) பியூலா என்றும் அழைக்கப்படும். பியூலா என்றால் "வாழ்க்கைப்பட்ட" என்றருத்தமாம் அவர்கள் தேசம் விடுதலையாகி வந்தபின், வாழ்க்கைப்பட்ட ஸ்திரீ அதிகப் பிள்ளைகளைப் பெறுவது போல் அநேக ஜனங்களால் பெருகிப்போகும். (எரேமி 3: 14 ஓசே. 2: 18—20) இது சுவிசேஷகாலத்தில் திருச்சபையின் பெருக்கத்தைக் குறிக்கிற தீர்க்கதரிசனம். மணவாளன் மணவாட்டியின்மேல் பிரியமாயிருந்து ஜனம் பெருகுகிறதுபோல, தேவனும் தமது சபையின்மேல் பிரியமாயிருந்து பெருகச்செய்வார். (2 கொரி 11: 2 வெளி. 21: 2, 9)

6-வச. தேவன் தமது ஜனங்களுக்கு இரக்கஞ்செய்யும்படி சித்தம் வைக்கும்போது கிருபையின் சத்தனமாக எப்போதும் போதித்துக்கொண்டிருக்கவும், ஜெபித்துக்கொண்டிருக்கவுமாக தேவஊழியக்காரரைத் தருகிறார் சாமக்காரர் (1) தேவதூதரைக் குறிக்கும். (உபா 4: 13, 23) (2) நியாயாதிபதிகளைக் குறிக்கும். எசா. 56: 10. (3) போதகன்மாரைக் குறிக்கும். சபையைக் காக்கவும், ஆசரிக்கவும், தேவன் தமது ஜனங்களுக்குப் போதகன்மாரைக் கொடுக்கிறார் திருச்சபையானது சத்துருக்களால் சூழப்பட்டதும் முற்றிக்கைபோட்டதுமான பட்டணம்போலவும், சாமக்காரர் விழிப்பும், உண்மையும், வருத்தம் சகிக்கிற பொறுமையுமாயிருப்பதுபோல, இரவும் பகலுமாய் சபையைக் காக்கிறவர்களும், எச்



சரிக்கிறவர்களுமாய்ப் போதகன்மார் இருக்கிறார்கள். இந்தச் சாமக்காரர் ஆத்துமாக்களைக் காக்கிற ஆவிக்குரிய ஊழியக்காரரைக் குறிக்கும். எபி. 13 17. தூரத்தில் சத்துருக்களின் யோசனைகளை அறிந்துகொள்ளும் படிக்கு மதில்களின்மேல் இருக்கும்படி கற்பிக்கப்படுகிறார்கள். (பிர. 1: 1.) ஜெபம், போதகம், எச்சரிப்பு இவைகளால் சபையைக் காப்பார்கள். எசா. 52: 8-ல் சாமக்காரர் சத்தம் கேட்கப்படும். 62: 6-ல் ஒருக்காலும் மவுனமாயிராதபடி சாமக்காரருக்குக் கற்பிக்கப்படுகிறது. 56: 10-ல் இப்படிச்செய்யாதவர்கள் நிந்திக்கப்படுகிறார்கள். லேவியர் தேவாலயம் காக்கிற சாமக்காரர். 134-ம் சங்கீதம் தேவாலய சாமக்காரர் மாறி மாறிப் பாடுகிற பாடலாம். இஸ்ரவேலருக்கு ஜெயம் கிடைக்குமட்டும் மோசே தன் கைகளை உயர்த்தியிருந்ததுபோல (யாத். 17: 10, 11) போதகன்மாரும் மவுனமாயிருக்கிறதில்லை.

7-வச. சபையாரும் தங்கள் இரக்ஷிப்புக்காக ஜெபிக்கவேணும். தங்கள் சாமக்காரர் தங்களுக்கு ஜெபிப்பதுபோல, அவர்களும் ஜெபிக்க வேண்டுமென்பது தேவசட்டம். (லூக் 11: 8—10.) திராட்சத்தோட்டத்தில் வேலைசெய்யும்படி தேவன் மேசியாவையும், வேலைக்காரரையும் அனுப்பி சபையை நித்திய ஸ்திரமாகி நிலையுள்ள அஸ்திபாரத்தின்மேல் கட்டப்படும்படி செய்கிறார். அதினால் தேவனுக்கு மகிமையும், எல்லா ஜாதியாருக்கும் கீர்த்தியுமுண்டாகும். சங் 67: 3, 4 எசா. 60: 9. 61: 9, 11.

8-வச. முன் பாபிலோனியர் யூதருடைய தானியங்களையும், திராட்சப்பழங்களையும் கொள்ளையிட்டுப்போனார்கள். இனி அப்படியிராது. யூதருடைய பாவங்களுக்காக வந்த தண்டனை. (லேவி. 25: 16 உபா 28: 33) தேவன் தமது வாக்குத்தத்தங்களை ஆணையினால் உறுதிப்படுத்துகிறார். (எபி 6: 17, 18.) இதுவே சபைக்கு ஆறுதல். தமக்கு மேற்பட்டவர்களில்லாததால் தமது பேரால் ஆணையிடுகிறார். எசே. 33: 11. தமது பரிசுத்தத்தின் பேரில் ஆணையிடுகிறார் (சங். 89: 35) இங்கே தமது வல்லமையினால் ஆணை. வலதுகரம் ஆணைக்கு உயர்த்தப்படுவதுபோல (உபா 32: 40) தேவன் தாம் வாக்குத்தத்தம்பண்ணினதைச் செய்ய வல்லவர். ரோ. 4: 21 வனைப்பைக் காட்டும்

9. உபா. 14: 23 இவையெல்லாம் திருச்சபையின் ஆவிக்குரிய பாதுகாப்பைக் குறிக்கிறது.

10-வச. யூதர் பாபிலோனிலிருந்து விடுதலையாகி வருவதைக் குறிக்கிறது. கிறிஸ்தநாதருடைய மீட்பினாலும் சுவிசேஷ பிரசங்கத்தினாலும் உண்டாகிய ஆவிக்குரிய விடுதலைக்கு அது முன்னடையாளம். விடுதலைக்குரிய விளம்பரம் கோரேஸ் செய்தான் அவன் சொல்லுகிற பாவனையாயிருக்கிறது. எசா 48: 20. விடுதலைக்கென்று பாபிலோனின் வாசல்கள் திறக்கப்படும் வருகிறவர்களுக்குத் தடைகளும் வழிகள் ஆயத்தப்படும் ஜனங்களுக்குத் தைரியமும் திசையும் பாதையும் தெரியும்படி கொடி ஏற்றப்படும். இது புறஜாதியார் திருச்சபையில் சேரும்படி அழைக்கப்படுவதைக் குறிக்கும். எபே. 6. 15.

11-வச. அந்த இரக்ஷிப்பைப்பற்றி முன்னமே விளம்பரம்செய்யப்படும் நாலாதிசைகளிலும் சிதறப்பட்டிருந்த சிறைகளுக்கு விடுதலை கூறப்பட்டது. 2 நாளா 36: 22. இரக்ஷிப்பு வருகிறது—என்றால் இரக்ஷிப்புக்குரிய காலம் வருகிறது. எசா. 56: 1 60: 1. (2) இரக்ஷகர் வருகிறார். லூக் 2: 30. அவருடைய வேலை அல்லது வேலையின் பலன். (எசா. 40: 10.) தமக்குமுன் வைக்கப்பட்ட வேலையை எப்படியும் செய்து

முடிப்பார். யோ. 4: 34. தேவன் தமது மீட்பின் பலனைத் தம்மை வணங்குவோருக்குக் கொடுப்பார். வெளி. 22: 12. அவருடைய வேலையைச் செய்து முடிப்பார்.

12-வச. இஸ்ருவேலர் விடுதலையாகி வந்தபின், புறஜாதியார் அவர்கள் பரிசுத்த ஜனமென்றும் ஏசா. 4: 3. தேடிக்கொள்ளப்பட்ட ஜனமென்றும் எசே. 34: 16. மீட்கப்பட்ட ஜனமென்றும் பெயர்பெறும். இவர்கள் முன் கைவிடப்பட்டவர்களாயிருந்தார்கள். இப்போதோ விசேஷித்த ஜனமாகத் தேடப்பட்டார்கள். அவர்கள நிந்தையும் நீங்கிற்று. புறஜாதியாரும் அவர்களைச் சேர்ந்துகொள்ளத் தேடினார்கள். எரேமி. 30: 17.

---

## The Exaltation of Christ.

## கிறிஸ்துவின் ஆரோகண விர்த்தாந்தம்.

பூரணசற்குரு வானபரப்பொருள் பொன்னகருக்கிறையோன்
காரணநாமமணிந்தவர் நித்தியகாவலன் முத்தொழிலோன்
தாரணியின்மனுவோர் மகிழும்படி தம்முயிர்விட்டபிரான்
ஆரணமெய்யன் அநாதிபரன்சுதனஞ்சரணம் பணிவாம். 1

வேறு.

உலகுறுசகலமு முடையவரெவரெவர்
அலகறுசுக நலமருள் பவரெவரெவர்
மலநிறை பவமறவருபவ ரெவரெவர்
இலகியமரி சுதனிணையடி தொழுதனம். 3

வேறு.

அந்தமாதியிலாத முதல்மரி
மைந்தனைப் புவிவந்து மரித்தபின்
விந்தையாயு யிர்மேவி யோர்மண்டலம்
தந்தகாட்சிச் சரிதை பகருவாம். 3

வேறு.

நீடுநற்கருணைகொண்ட நிமலன் மன்னுயிர்க்காய்வந்து
பாடுபட்டுயிரைவிட்டுப் பாதலந்தனிலிறங்கித்
தேடுதற்கரியமுந்து தேகந்தோடுயிர்த்தெழுந்து
நாடுமிப்புவியிற் காட்சி நல்கினர் சீடர்க்கன்றே. 4

கர்த்தர் என்றனைக் கண்ணோக்கிக்கருது நீயெனதுமைந்தன்
இத்தினம் ஜெனிப்பித்தேன் யானென்று மென்னாத்துமாவைச்
நித்தமும் பாதாளத்தில் நிலையுறச்செய்யீர் உன்றன்
சுத்தனையழிக்கீயொன்றும் சொற்றனன்தவிது மன்னன். 5

வேறு.

பெருமையுறுதரிசிகள் மூதுரைபோல் யோசேப் பிரதானியானதுபோல்
(ஈசாக்கென்ற
தருமகுணன்பாவனையாய் மரித்துயிர்த்த தகமைபோல் விளைவில்முதற்ற
(கட்டொன்றை



அருமைபெறும் பஸ்காவிற்கடுத்தநாளில்அசைவாட்டும் செயல்போல்மெய்
(ப்பொருளாமேசு
இருதூதர் கடவுள் மனுமக்கள்சாக்ஷியியம்பிடநாள் மூன்றிலுயிர்த்தெழுந்தா
(ரன்றே. 6

மீனெடுத்துவிழுங்க வதன்வயிற்றுட்சென்று விழித்திருந்து ஜெபம்புரிந்த
(யோனாத்தீர்க்கன்
தானெவருமதிசயிக்க மூன்றும்நாளில் சலதிவிட்டுவெளியில் வந்ததகமை
(போல
வானவன்றன்தேகமெனுமாலயத்தை மாற்றலர்களிடிக்கிலதை மூன்றுநாட்
(குள்
ஞானமுடன்கட்டுவெனென்றுரைத்தல்போல நாள்மூன்றிஞசனுயிர்த்தெழு
(ந்தாரன்றே. 7

வேறு.

மின்னல்ருபு விளங்கியேவெள்ளுடை
தன்னையேற்றுத் தரையதிரும்படி
மன்னுதூதர்கள் வந்ததிற்சேவகர்
சின்னமாயுயிர் செத்தவர்க்கொப்பினர். 8

சொல்லுதற்கரிதாம் சுருதிப்படி
கல்லுமுத்திரை காவலொழிந்திட
வல்லபத்துடன் வான்புவிபோற்றுதற்
கேல்லையற்ற இறையெழுந்தாரரோ. 9

புவமடர்ந்த வெம்பற்றலர் மட்டிலாக்
கவலைமிஞ்சிக் கலங்கக் கருத்தழிந்
தவகணங்களடங்க மெய்ப்பத்தர்கள்
உவகைபொங்கவுயிர்த் தெழுந்தாரரோ. 10

அண்டரண்டம் அமைத்தளிக்கும் பிரான்
உண்டுபண்ணின உச்சிதநாளிதில்
தொண்டரொன்றுந் துதித்துட்களிக்கநூல்
பண்டுரைத்தபடியுயிர்த் தாரரோ. 11

வேறு.

சுகந்தவர்க்கங்கள் கொண்டுமும்மாதர் துலங்கியமுதற்றினங்காலை
உகந்துகல்லறைக்கு வருகையில் மகதலூர்மரியாள் முனரோடிப்
புகுந்ததில் கடவுளிலையென அறிந்துபோய்ப் பரன்சீடருக்குரைக்க (12
அகந்தனில் மகிழ்வாய்ப் பேதருயோவான் அணுகினர் கல்லறையிடமாய்.

பத்தன்யாக்கோபைப் பயந்திடுமரியாள் பண்புசால் சலமியென்றிவர்கள்
கத்தன்கல்லறைக்குட்புகும்பொழுதாங்கு கண்டஓர் தூதனுக்கஞ்ச
உத்தமஸ்திரீகாள் பயப்படீராக உம்பரனிங்கிலையுயிர்த்தார்
சத்தியவுரைபோற் கலிலெயாஅடைவர் சாற்றுமின்சீடருக்கென்றார். 13

கல்லறையணுகிக்குனிந்திட யோவான்கண்டனன் சீலையாங்கிருக்க
வல்லபப்பேதுர் துணிந்துளேசென்று வரிசையாந்துணிதனைக் காண
சொல்லியயோவான் தொடர்ந்துபின்புகுதத் துலங்கியகாக்ஷிகண்டிவர்கள்
நல்லமெய்விசுவாசத்தொடு நகர்க்குள்நடந்தனர் அகம்புகவிரைந்தே. 14

யகசலேமரிபாள் வெளியினின்றழுது மயங்கிக்கல்லறையினுட்பார்க்க
புகழிருதூதர் இலகுசமாதிப்புறமிருந்தனர் முகமர்நோக்கி
திகழுமஸ்திரீயே அழுவதேனென்று செப்பவென்னிறைவையிவ்விடம்விட்
டிசுதுறவகற்றினவர் தமையறியேனென்று பின்புறம்திரும்பினளே. 15

காதலப்ச்கண்ட கிறிஸ்துவைத்தோட்டக்காரனென்றெண்ணினளவரோ
மாதவஸ்திரீயே அழுவதேன்யாரைமருவிநீ தேடுறாயெனன
நாதனிறுடலையெடுத்து வைத்திருந்தால் நவிலறிவமெனதிடமையா (16
பாதகமில்லையானெடுப்பனென்றிளரிய பண்புதாயமொழிதனை யரியன்.

வேறு.

மருவுசொல்லாற்றிரும்பிமரியமே பெண்கமாது
உருவெயன் ரபூனியயனெற்றயுரைத்தனளது கண்டையன்
அருசெல்வமெனைத்தொடேலென் னைபருகுலைப்பயென்றார்
பெருகலம் தருதற்காய் நம்பிதாவிடம்போய்றேனென்றே. 17

சீடருக்குநனைக்க முன்போம் தெரிவையர்தமைப் பார்த்தென்னைத்
தேடவந்திடுநீ வழ்க திகைத்திடாதிரு மென்றுளம்
நாடரும்பரன் கனிந்து நவிலற நீகுரல்கேட்டங்கு
வாடநயலாப்பதத்தை வணங்கினர் தழுவிமாதர். 18

விந்தையாயுயிர்த்தெழுந்த விபரமாசாரியர்க்கு
வந்துசேவகருரைக்க யனமிக்கலங்கி யந்தச்
சுந்தரவுடலைச்சீடர் சோரமாய்க் களர்ந்தன்று
நிந்தைய ய்ப்பொய்மைகூற நிதிடச்சேவகருக்கீந்தார். 19

தக்கபேதருவுக்கீசன் தரிசனையருளியந்தி
துக்கமாயிரண்டுசீடர் ஸ்வாமியின்றுயரங்களை
மிக்கநற் பத்தியோடு வினவியெம்மாவூர்க்கேகப்
பக்கல்சேர்ந்து நவ சசம்ப ஷித்துட பரனுஞ்சென்றார். 20

திருமறைக்குறித்துத் தீர்க்கர் முன்னுரைத்த வாக்யப்
பொருளை விஸ்தரித் தெம்மாவூர்ப்புகுந்திருந்த சனஞ்செய்கால்
மருவுமப்பத்தை யாசீர்வதித்தனர் த ம த்தொண்டர்
அருமைரக்ஷகராய்க் கண்டார் அக்ஷணமறைந்தானையன். 21

நம்பிவுடனத்தாசர் நகரெருசலேம் சென்று
வைமர்ந்தய நக்குஞ்சி மனேயினுட்கம் பூட்டிக்
கும்பிடும்பதின்மர்களின்றேசனுயிர்த்தெழுந்தென்க
வெம்பரன் தோன்றியுங் கட்டென் சமாதானமென்றார். 22

பூட்டிய அறைக்குட்டோன்றும் புண்ணியனறனைக் கண்டஞ்சி
வட்டமுற்றிடுந்தொழுபேர் மயலறப்பரன்றன் கலைக்
காட்டவிலாவைக்குட்டிக் கருணைசேரி கரத்தை
நீட்டியிக்குறி கண்டையநீங்கி திக்ஷயிமினென்றார்.

வேறு.

பதினொருவர்கதங்கடைத்து ஜெபம்புரியுந்தருணமதிற் பரமன்தோன்றி
அதிர்வடையாதிருங்கள் உமக்கெனதுசமாதானமென அறைந்தபின்னர்
திதிமுகின்றன் விலாவெலும்புநகரத் தாந்தமும்பினை பார் செகசைநீட்டி
உதிரமிகும் எனதுவிலாவிற்போட்டு விசுவாசித்துணரென்றாரே. 24



ஆண்டவனைசெய்வமெனும் அதிபதியென்றவனுரைக்க அமலநாதன்
காணவிசைவிசுவாசம்கடைப்பிடித்தல் தருமமன்று காண்பதன்றி
பூண்டயனவிசுவாசமெனும் புகழோர்ப கதிபாக்கியவில்லைன்று
மீண்டுமறைகுருஞமொழிபவர்கள் மனந்தெளிவடைய விளக்கினாரே. 25

வேறு.

மச்சம்பிடிக்க வெழுசீடர்களஞ்சேர்ந்திபெரியாக் கடல்சேர்ந்
தச்சம்தவிர்த்தோர் பாருழுதயலைந்தும் பயனற்றிருஞ்சையம்
பட்சமுடனவ்வேலைவந்த பரமனவர்கள் தமைநோக்கி
இச்சிந்துறுபாதத்தில் வலையிடுமிவெனமொழிந்தார். 26

நெஞ்சொற்கிணங்கி வலைபோட்டுத் திரள்மீன் பிடித்தக் கரைசேரத்
தஞ்சமருநற்கிறிஸ்துவையச் சமயமவர்களுடனுபுசித்து
மிஞ்சு துணையாய்ப்பேதுருவை விளித்தாடுகவனடயதை வினவிக்
கெஞ்சுஞ்சபையூழிப நடத்துங்கிரமவிதியைக் குறித்தனரே. 27

புனிதக்குருசீடனை நோக்கிப் புவிமீதெங்குப்போய்த்தலங்கு
மனிதரியர்க்குஞ்சுவிசேடசனங் கூறுயனையுணரவே
இனிதாய்ஞானஸ்நானமதை யேற்கும் விசுவாசதெழும்பார்
கனியாயிரட்சிப்படைவார்மற்றோர்கள் சந்தண்டனை பெற்றிடுவரென்றார் 28

எம்பெயரதனால் பேய்கள் பயந்தோடத்துரத்தலவரான
இம்பர்பவையைப் பலமேவல் இரையுந்த சர்ப்பங்களையெடுத்தல்
அம்பொத்தகடுநஞ்சினைக் குடித்தும் அழியாதிருத்தல் வாதைகளை
நம்புவிசுவாசத்தொழுபேர் நடத்துமிறையறிவிறைமொழிந்தார். 29

ஐபாகவிதேவ வெற்பினிலைக்நூற்றக்கதிசம் சாதர்க்கு
மெய்யாயுயிர்த்தெதிபதுமை விளக்கத்தனைக்கண்பிதமொடு
துயராசனையாகசோநியக்தோனறிப்பெத்தனிசருக்கல்
உய்யச்சீடர்க்கருமைமொழியுரைத்துக் காட்சியருளினரே. 30

வேறு.

சலமதனுல் ஞானஸ்நானத்தை யோலான்தரணிமனுவோர்க்குருணளித்
(தாகநீங்கள்
சிலநாளுக்குட்பரிசுத்தாவியாலே தீக்ஷைபெறுவீர்களிதுதிண்ணமென்றும்
விலகாதுயானுனை பிதாவின்வாக்கு விளங்கிநிறைவுறுமட்டுமெருசலே
(மின்
தலமீது காத்திருங்களென்று மேசுரற்பரனோர் கட்டளையைத் தந்தார
(றே 31

பரம்பொருளையினியூதர்துயர்க்கவொன்றும் பகைவர்கலிலகர்கள் சிரமுடை
(ப்பாவொன்றும்
வாந்தரவெக்கமூமியணிருப்பாவொன்றும் மகிபதியாய்வ்வுலகையாள்வா
(வொன்றும்
உரந்தெரிந்திங்குயர் பதவியளிப்பாவொன்றும் உளங்கனைந்தடவுளப்பார்த்
(திராட்சித்தை
புரந்திடவிஸ்ரேலருக்கிப் போதாவென்று பொருளறியாதிந்த வகைகபகன்
(றார் சீடர் 32
எனதுபிதாதமதுடைய ஆதினத்திலிருக்கவைக்குங் காலமொடுவேளையா
(வும்

மனதுதுணிந்தறிந்துகொள்ள நீங்களெண்ணிமருவி நிற்பதுங்கள்வழிக்கடு
(த்தநல்ல
உனதவமலாவியும்பால் வருவரன்ளுளுற்றபெலனடைந்தெருசலேம யூதே
(பா
கனமறுசமாரிமுதற் புவனமெல்லாங் காட்டுவீர்சாக்ஷியென்றார் கருணைநா
(தன்.

வேறு.

இப்புவனங்கடையாம்வரை யும்மோடிருப்பனெனப் பரனார்
செப்பிரிகுத்த நயத்தை வழங்குநிருக்கையுயர்த்தியுமே
ஒப்பியதொண்டருளத்தில் மகிழ்ச்சியுதித்திட வாழ்த்திமகா
துப்புரவாமொலிப்பொறை நின்றுசுகப்பர மேகினரோ. 34

வேறு.

தேவரீருன்னதம்போய்ச்சிறைப்பட்டோரைச் சிறையில்ச்சேர்த்து மாந்தர்
யாவருக்காகவுஞ்சிறந்த நல்வரம்பெற்றீரென ராஜன்தாவீதும்
ஆவலுடன்தடையறுக்கும் அமலன்முந்திப்போவதனாலடியார் பிந்தி
மேவிடவுட்செல்வரென மீகாவுமாவியினால் விளம்பினரோ. 35

வேறு.

நீர்க்கர்சொற்படி தேவசமுகத்தில்
ஆர்க்குமுக்கியா சாரியனேகிய
மார்க்கத்தின்படி மண்மிசை சீடர்கள்
பார்க்கநாதன் பரமெழுந்தாரரோ. 36

அத்தனேரிடமாயத் தம்பண்ணவும்
சத்யஆவியைத் தாலமனுப்பவும்
இத்தலத்தவர்க்கென்று மன்றாடவும்
பத்தமாகப் பரமெழுந்தாரரோ. 37

விண்ணளாவு விசும்பிரதத்தின்மேல்
மண்ணிற் சீடர்வணங்கித் துதிக்கவே
ஒண்மைச்சம்மன சோர்புடைசூழ்ந்துநற்
பண்ணிசைக்கப்பர மெழுந்தாரரோ. 38

வாசல்காள் உங்கள்மாண் தலைநாக்குமின்
ராஜனுள்ளே நடப்பதற்கேயவர்
ஈசனல்லோ னெனப்பெருமார்ப்பொடு
பாசமாய்த் தூதர்பாடிக்கொண்டாடினர். 39

வேறு.

மெலிவுடன் சீடரந்தவேளை யண்ணாந்துபார்க்கப்
பொலிவுறுமிரண்டு தூதர்புனிதர்களருகில் நின்று
கலிலேயநரோ நீவிர்ககனம்பார்த்திடுவதேனோ
ஒலிவைநின்றெழுந்த வாறிவ்வுலகிறங்குவர்பின் என்றார். 40

பாலனாய்ப் பிறந்தபோதும் பசாசின்சோதனையை வென்ற
காலமும் ஆத்துமத்தில் கடுந்துயரடைந்த நாளும்
சீலமாயுயிர்த்தெழுந்த தினமும் விண்ணெழுந்தவன்றும்
தாலமேற்சுதனைத் தூதர்சாக்ஷியிட்டிறைஞ்சி நின்றார். 41

இகமதிற் பட்டபாட்டை வெட்டுணைகசப்பில்லாமல்
சுகமென அனுப்பித்த சுதனதுவரவு கண்டே



அகமிகமகிழ்ந்துதாதை அன்பினால் தழுவியொன்றும்
மகன்வதனத்தை முத்திவாழ்த்தியாசனத்தில் வைத்தார். 42

வேறு.

அண்ணலெனத் தவிதாசன் அபிஷேகநாட்டொடங்கி அரசாளாமல்
எண்ணமுடன் பலவருடமேகியபின் கோத்திரத்தாரெவர்க்குமேலே (ண்ட
திண்ணமுறவெருசலேயிற் சேர்ந்தாண்டமுறை பிறப்பில்செங்கோல்கொ
புண்ணியனிக்காலமட்டும் பொறுத்துமூன்றுலகாளப் பொருந்தினரோ. 43
கர்த்தனெனாண் டவனொடுநும் கடியசத்துராதிகளைக் கழற்கீழாக்கி
உத்தரிக்கும்வரையிலெனதுயர்ந்த வலபாரிசமுட்காருமென்ற
சத்யவுரை தவிதாசன் சாற்றியவாறாய்ச் சிறையில் தாழ்ந்தயோசேப் (44
பெத்திசையும்புகழ அமைச்செனவிருந்தவாறாய் வீற்றிருந்தாரெங்கோன்.

வேறு.

தெள்ளுமாமறை செப்பியமெய்ச்சுதன்
எள்ளலாய் மரித்தேயுயிர்பெற்றபின்
வள்ளலாக வயங்கப் பிதாவருள்
வெள்ளையாசனம் வீற்றிருக்கின்றனர். 45

மாட்டுக்கொட்டிலில் வந்தபிரான் தெய்வ
ஆட்டுக்குட்டியன்பாகப் பூமண்டலக்
காட்டுக்குட் பவக்கட்டறுத்துன்னத
வீட்டுக்குட்சென்று வீற்றிருக்கின்றனர். 46

சத்திரந்தனில் தங்கிய மாமரி
புத்திரர்பரிபூரணர் நற்சுக
பத்திரந்தரு பார்த்திபன் பாவிகள்
மித்திரன்பரம் வீற்றிருக்கின்றனர். 47

தேகத்தோடு திருக்கரமேறெடுப்
பாகத்துதாடி பணியப் பரன்
பாகத்தே பத்திராசனமேடையில்
மேகத்தூடுபோய் வீற்றிருக்கின்றனர். 48

சாந்தம்நீதி தயவொடு சற்குண
பாந்தம் சத்தியம் பாக்கியமிவ்விதப்
போந்தநன்மை புரக்கத் தவீதெனும்
வேந்தனாசனம் வீற்றிருக்கின்றனர். 49

பூலோகத்தினைப் போஷிக்கும் புண்ணியன்
ஆலோசிக்கும் அமைச்சரதிபதி
சீலோவென்ற திருநாமம்பெற்றவர்
மேலோகம்சென்று வீற்றிருக்கின்றனர். 50

வேறு.

சுற்றாக்ஷண்யசெய்கை இயற்றியாதிக்க முற்றும்
மாற்றலரடங்கப் பெற்றுமகுடாபிஷேகஞ் சூடிப்
போற்றும் நல்லரசாய்த் தூதர்புகழ்பரன் வலபாகத்தில்
வீற்றிருந்துலகியாவும் விரும்புநன்றருள்கின்றாரோ. 51

வானவர் பூதலத்தோர் மகியின்கீழானோர் யாரும்
ஆனகம்வந்த நாதனடிபணிந்தவர் பிதாவுக்
கானநன்மகிமைக்கென்றே சையனைக்கர்த்தனொன்க
ஞானமாயுயர் நாமத்தை நல்கினரவர்க்குத் தேவன். 52

பூமிநின்றெழுந்து வானம்புகுந்து வீற்றிருக்குமேசு
சாமியின்துணையை முற்றும்தழுவிய தொழும்பரோடு
மாமிசமுலகம் பேய்கள்வந்து போர்புரிகிலென்ன
நேமியிலருணன்வீச நிலைப்பறு பனிபோலாமே. 53

மன்னன்பார்வோனின் பக்கல்வாழ்ந்த யோசேப்பின்மூலம்
தன்னவர்மகிழ்ந்தவாறு தடக்கையேறெடுத்து மோசே
இன்னலில் கிரிமேனிற்க இஸ்ரேலர் செயித்தவாறு
உன்னதன்வீற்றிருக்க உத்தமர்களிப்பர் மெய்யே. 54

அன்னைதன் வயிற்றில் ஜென்மமானநாள் முதலெனக்குன்
பொன்னடிதுணையல்லாது புவியில் வேறுதவியுண்டோ
இன்னமுங் கருணைபாலித் தெளியனுக்கருள் புரக்கு
மன்னர்மன்னவனுமேக வஸ்துவுன் சரணந்தானே. 55

S. Perupettan.
*Pastor of Kodankulam.*

---

## ...புதம் அருள்வேதத்திற்கு அத்தாட்சி.

(தொடர்ச்சி.)

( ) முற்காலத்தில் நடந்த சில அற்புதங்களை மனுஷர் எக்காலமும்
நினைவுகூரும்படி சில ஏற்பாடுகளும் உண்டாகி தற்காலம்வரையும் அனு
சரிக்கப்பட்டு வருகின்றன. பஸ்காபண்டிகை, பெந்தேகோஸ்து பண்டி
கை முதலிய பல உற்சவங்களை யூதஜாதியார் கொண்டாடி வந்ததற்கும்
ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தநாளாகக் கிறிஸ்துமதஸ்தர் அனுசரித்து
வருவதற்கும் இதுவே முகாந்தரம்.

இந்தவகையாய்க் கிறிஸ்துவேத அற்புதங்கள் முற்கூறிய எழுவகை
இலக்ஷணங்களைப் பொருந்தி எந்தவகையாய்ப் பார்த்தாலுங் குற்றங் கண்
டுபிடிக்கக்கூடாதவைகளாயிருக்கின்றன.

கிறிஸ்துமதப் பிரசங்கிகள் முற்காலத்தில் அற்புதஞ்செய்திருக்க இக்
காலத்திலும் ஏன் அற்புதங்கள் செய்யாதிருக்கிறார்கள் எனச் சிலர் கேட்
பார்கள். அஞ்ஞான அந்தகாரமே நிறைந்திருந்த இப்பூலோகத்திற் சுடர்
போலும் ஒரு சமயத்தை நவமாய் ஸ்தாபனஞ்செய்யுங் காலையில் அச்ச
மயம் மனுஷரது கட்டுப்பாடல்ல, சாக்ஷாத் கடவுள் அருளுந் திவ்
விய சமயமேயென சமஸ்த ஜாதியாரும் அறிதற்பொருட்டு மனுஷாதீத
மான அற்புதங்கள் செய்யப்பட்டன. மதலைகளாயிருக்கும்போது அவசி
யமேயல்லாது பெலன்கொண்டபின்பும் பெரியோர் கைகொடுத்து நடத்
துவது அனுவசியமாயிருத்தல்போலும் பெரியோராகி ஆகாரம் அருந்தும்
படியான ஸ்திதி வந்தபிற்பாடும் ஸ்தன்யபானம் அனுவசியமாயிருத்தல்
போலும் அருள்வேதமாகிய கிறிஸ்து சமயமானது ஸ்தாபனமாகிப் பல



நூற்றாண்டுகளுக்கு மேலாகிச் சீர்திருத்தம் பெற்றிருக்கும் அநேகந் தேசத்
தவர்கள் திவ்விய சமயமாகவே தகுதியும் ஒப்புக்கொள்ளக்கூடியது
மான நியாயங்களைக்கொண்டு அனுசரித்து வருகிறதாயிருக்க இக்காலத்
தில் அற்புதங்கள் செய்யப்படவேண்டியது அவசியமில்லை. அப்படி
வேண்டுமென்பது நியாயமில்லாத காரியமாயிருக்கிறது.

ஒரு ஊரில் மழைபெய்ததென்றும் ஒரு ஊரில் ஓர் பட்சி பறந்ததென்
றும் சொன்னால் அவைகள் ஆச்சரியமல்ல. ஆனால் ஆகாயத்தினின்று அக்
கினி பெய்ததென்றுங் பட்சி ஓரிடத்தில் பேசினதென்றுஞ் சொனனால்
இவைகள் நிசமென்று நம்புவதற்குத் தகுந்த சாட்சிவேண்டுவது அவசிய
மே. அதுபோலவே கிறிஸ்து சமய நூலிற் சொல்லப்பட்ட அற்புதங்கள்
நடந்ததற்குத் தகுந்த அத்தாக்ஷி வேண்டியதுதான். அற்புதங்கள் நடக்கும்
போது கண்ணால் பார்த்த பகைவர்முதலானவர்களே சரித்திரங்கள் எழுதி
யிருக்கிறார்கள். இந்நாள்மட்டுமிருக்கிற அப்புஸ்தகங்களை வாசித்தால் அற்
புதங்கள் மாத்திரமல்ல அவைகளோடு சம்பந்தப்பட்ட சகல காரியங்களும்
எழுதப்பட்டிருக்கிறதென்று தெரியவரும். இவர்கள் எழுதினது எதார்த்த
மல்லவென்று சொல்லத் துணிகிறவர்கள் தாங்கள் பிறக்கிறதற்குமுன் உல
கத்தில் மனுஷரோ இல்லையென்று சாதிக்கிறவர்கள்போலிருக்கிறார்கள்.
ஆகையால் கிறிஸ்துசமய நூலிற் கண்ட அற்புதங்களை நடப்பித்தவர்கள்
தேவனுக்ரகம் பெற்றவர்களென்றும் அவர்களால் எழுதப்பட்ட அந்த
நூல் அருள்வேதம் என்றும் ரூபகாரமாகிவிட்டது.

---

1883ஆ ஜூலை 18உ திருநெல்வேலி சர்ச்சுமிஷன் உபதேசிமார்
கைம்பெண் விசாரணைச் சங்கத்தின் 35-வது வருஷாந்த சங்கம் கூடினது.
மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் அக்கிராசனபதியாயிருந்
தார்கள். S. தேவசகாயம் றைற்றர், ரிப்போர்ட்டும் கணக்கும் வாசித்தார்.
கனம் A. வேதமுத்து ஐயரும், S. ஸ்கின்னர் உபதேசியாரும் சங்கத்தின்
காரியாதிகளைக் குறித்தும் பேசினார்கள். காணிக்கை ரூ 160-14-0 சேக
ரிக்கப்பட்டது. சங்கம் கூடினபின், கோதாவிரி ஜில்லா கோயி ஜனங்
களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி உபதேசிமார் வரவேண்டு
மென்று கனம் எஸ். காயின் அம்மாளவர்கள் மகாகனம் சார்ஜென்று அத்
தியக்ஷரவர்களுக்கு எழுதின காகிதம் தமிழில் வாசிக்கப்பட்டது. அதைக்
குறித்து அத்தியக்ஷரவர்கள் வெகுவாய்ப் பேசி, திருநெல்வேலியிலிருந்து
கிறிஸ்துநாதரைப் பிரசங்கிக்கப்போகும்படி எவ்விதமும் பிரயாசப்பட
வேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார்கள்.

---

## ஆஸ்தி ஜாப்தா.

| | | | |
|---|---|---|---|
| சென்னபட்டணம் கமிற்றியார் மூலமாய் கவர்ன்மெண்டாரிடத்தில் வட்டிக்கு விட்டிருக்கிற தொகை | 67600 | 0 | 0 |
| மேலவீடு கிரயம். ... ... ... ... | 8500 | 0 | 0 |
| கீழவீடு கிரயம். ... ... ... ... | 4500 | 0 | 0 |
| ஆக ரூபாய் | 80600 | 0 | 0 |

## திருநெல்வேலி ஜில்லா சர்ச்சுமிஷன் உபதேசிமார்களின்

| வரவு. | கையொப்பக்காரர். | பிரவேசப் பணம். | மாதத் திட்டப்பணம். |
|---|---|---|---|
| பாளையங்கோட்டைச் சேகரம்.... ... | 79 | 120 0 0 | 483 8 10 |
| மெஞ்ஞானபுரம். „ | 120 | ... ... ... | 661 11 2 |
| சுவிசேஷபுரம். „ | 85 | 12 0 0 | 160 8 8 |
| டோனாவூர். „ | 23 | ... ... ... | 76 2 0 |
| பண்ணைவிளை. „ | 28 | ... ... ... | 80 8 0 |
| பன்றிகுளம். „ | 10 | 12 0 0 | 22 9 6 |
| நல்லூர். „ | 47 | 11 0 0 | 244 12 8 |
| சுரண்டை. „ | 81 | 4 0 0 | 89 4 0 |
| சிவகாசி. „ | 40 | 81 0 0 | 203 0 0 |
| சென்னைபட்டணம். „ | 5 | ... ... ... | 28 7 6 |
| இலங்கை. „ | 9 | 80 0 0 | 43 2 0 |
| | 427 | 220 0 0 | 2088 5 4 |
| | | பிரவேசப்பணம். | 220 0 0 |
| | | | 2308 5 4 |

| | | |
|---|---|---|
| சென்ற 1882ம்வருஷம் ஜுலைமீ 1௳ கையிருப்பு.... ... ... ... | | 698 1 4 |
| போன சங்கத்திற் சேர்ந்தது. ... ... | | 120 8 0 |
| மேலப்பங்களா வாடகை. ... ... | 1200 0 0 | |
| கீழப்பங்களா வாடகை. ... ... | 820 0 0 | 1520 0 0 |
| மேலப்பங்களா மா விற்பனை. ... ... | 49 10 9 | |
| கீழப்பங்களா. „ | 2 | 51 10 9 |

மொத்த ரூபாய். 4698 9 5



## 1883ம்-வருஷம் ஜுன்மீ 30உவரை வருஷாந்தரக் கைம்பெண் சங்கக்கணக்கு விபரம்.

| செலவு. | கைம்பெண்கள். | பென்ஷன். |
|---|---|---|
| பாளையங்கோட்டைச் சேகரம். ... ... ... | 21 | 485 0 0 |
| மெஞ்ஞானபுரம். „ | 42 | 793 0 0 |
| சுவிசேஷபுரம். „ | 12 | 135 0 0 |
| டோனாவூர். „ | 6 | 76 2 0 |
| பண்ணைவிளை. „ | 5 | 56 0 0 |
| பன்றிகுளம். „ | 1 | 12 0 0 |
| நல்லூர். „ | 10 | 182 0 0 |
| சுரண்டை. „ | 7 | 83 0 0 |
| சிவகாசி. „ | 5 | 132 0 0 |
| பட்டணம் கொர்னேலியு அம்மாள், 9-மாசத்திற்கு. | 1 | 45 0 0 |
| ராகேல் அம்மாள் 18. „ | 1 | 72 0 0 |
| முத்தாயி. „ | 1 | 12 0 0 |
| | 112 | 1983 2 0 |

| | | |
|---|---|---|
| வட்டிக்கு விடும்படியாக சென்னபட்டணம் சர்ச்சுக்கமிற்றிக்கு அனுப்பியது. | | 2000 0 0 |
| மேலப்பங்களா ரிப்பேர்ச் சிலவு. „ | 40 1 8 | |
| கீழப்பங்களா. „ | 64 8 9 | 104 10 5 |
| மேலப்பங்களாவுக்குச் சர்க்கார் வரி. | 24 10 0 | |
| கீழ்ப்பங்களாவுக்கு மியூனிசிப்பல் வரி. | 40 8 0 | 65 2 0 |
| கணக்கப்பிள்ளை சம்பளம். „ | | 120 0 0 |
| தபால்கூலி சாதல்வார்ச் சிலவு. „ | | 2 2 6 |
| | | 4275 0 11 |
| 1883-ம்வருஷம் ஜுலைமீ கையிருப்பு. | | 423 8 6 |

மொத்த ரூபாய். 4698 9 5

# தீர்க்கதரிசனம், அருள்வேதத்திற்கு அத்தாட்சி.

*கிறிஸ்து சமய நூலாசிரியர்கள் தெய்வகிருபையின்றி அறியக்கூடாத வருங்காரியங்களை முன்னறிவித்தார்கள்.*

வேதாகமப் பிரிவுகளை எழுதினவர்கள் தீர்க்கதரிசனங்களை அதாவது வருங்காரியங்களை முன்னமே அறிவித்திருப்பதினால், அவர்கள் தேவானுக்கிரகம்பெற்றவர்களாயிருக்கிறார்கள். பின்னடக்குங் காரியங்களை உலகத்திற் பலரும் உரைக்கிறார்களாதலால் தீர்க்கதரிசனங்கள் திவ்ய அத்தாக்ஷியல்ல எனச் சிலர் ஆக்ஷேபிப்பார்கள். முன்னடந்ததும் தற்காலத்தில் நடக்கிறதுமான பற்பல ஏதுகளால் பின்சம்பவிக்கப்போகிறவைகளை அனுமானித்துச் சொல்வதும் கிரகங்களுடைய நிலையை அறிந்து கணிதங்களை ஏற்படுத்துவதும் இவைபோற் பலவும் தீர்க்கதரிசனங்களாகமாட்டாது. மெய்யான தீர்க்கதரிசனமின்னதென்று பின்வருங் குறிப்புகளைக் கவனித்தால் தெளிவாகும்.

(1) எந்தத் தீர்க்கதரிசனமும் மனுஷ அறிவுக்கு எட்டாததாயிருக்கவேண்டும்.

(2) இன்ன தீர்க்கதரிசனம் இன்னமும் நிறைவேறவில்லை இனிமேல் நிறைவேறப்போகிறதென்று முன்னாகவே பரீஷ்காரமாக எவருக்கும் தெரிந்திருக்கவேண்டும்.

(3) தீர்க்கதரிசனம் ஒன்றுக்கொன்று விகற்பமான உபயார்த்தத்திற்கும் சமுசயத்திற்கும் இடமற்றதாயிருக்கவேண்டும்.

(4) தீர்க்கதரிசனம் பூரணமாய் நிறைவேறவேண்டும். ஒரு பாகம் நிறைவேறி மற்றொரு பாகம் தவறினால் அது சரியான தீர்க்கதரிசனமல்ல.

(5) தீர்க்கதரிசனம் தெய்வதன்மைக்கு இணங்கினதாக இருக்கவேண்டும்.

(6) ஒன்றிரண்டல்ல பல தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தால் அவைகள் கடவுளாலேயே அருளப்பட்டதென்பதற்குத் தகுந்த அத்தாக்ஷியாகும்.

கிறிஸ்துமத நூலிற் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் இந்த இலக்ஷணங்களைப் பொருந்தியிருக்கின்றனவோ இல்லையோவென்பது இரண்டையும் ஒத்துப்பார்க்கும் எவருக்குந் தெரியவரும். “தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்தஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்” என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்துமத தீர்க்கதரிசனங்கள் யாவும் சர்வஞானமுள்ள கடவுளுக்கே தெரியத்தக்க பல காரியங்கள் முன்னாடியே உரைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒரேகாலத்தில் ஒரே மனுஷனால் உரைக்கப்பட்டு விடப்பட்டவைகளல்ல; ஆதிமனுஷனாகிய முதலாம் ஆதாம் பாவத்தில் விழுந்த நாள்முதல் இரண்டாம் ஆதாமாகிய ஏசுகிறிஸ்துநாதர் மனுஷர் பாவத்திற்காக மரித்தபின் சிலகாலம்வரை 4000-ம் வருடங்களுக்கதிகமாய்ப் பங்கு பங்குகளாக உரைக்கப்பட்டன. கடவுள் அப்போதைக்கப்போது அசரீர வாக்குகளினாலும், சொப்பனங்களினாலும், காட்சிகளினாலும், தேவதூதர்களுடைய பிரசன்னங்



களினாலும், பரிசுத்தஆவியானவருடைய ஏவுதல்களினாலும், உடனேயாவது சற்று பிந்தியாவது வெகுகாலங்களுக்குப் பின்னாகவாவது சம்பவிப்பவைகளை வகைவகையாய்த் தெரியப்படுத்தினார். தீர்க்கதரிசனங்களை உரைத்தவர்கள் ஒரே ஜாதியுமல்ல; ஒரே அந்தஸ்துடையவர்களுமல்ல. சிலர் இராஜாக்களாகவும் சிலர் பிரபுக்களாகவும் சிலர் ஆசாரியராகவும் சிலர் மந்தை மேய்க்கிறவர்களாகவும் சிலர் மீன்பிடிக்கிறவர்களாகவும் இன்னும் பலவிதத்தாராகவும் இருந்தார்கள். கிறிஸ்துநாதரும் தீர்க்கதரிசனங்கள் உரைத்திருக்கிறார். இத்தீர்க்கதரிசனங்கள் பலவும் காலபேதம், தானபேதம் முதலிய பல பேதம் பெற்றெழுதப்பட்டனவாயினும் அடிமரமும் கிளைகளும்போலும் அஸ்திபாரமும் மேற்கட்டிடமும்போலும் தேகமும் அவயவங்களும்போலும் சற்றாவது விகற்பமில்லாமல் ஒன்றுக்கொன்று இசைவும் பிரயோஜனமுமாகவும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதாகவும் ஒன்றையொன்று தாங்குகிறதாகவும் இருக்கின்றன. அன்றியும் “தீர்க்கதரிசிகள் யாவரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்” என்றும், “வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள், என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே” என்றும், எழுதியிருக்கிறபடி பொதுப்படத் தீர்க்கதரிசனங்கள் பலவற்றுள்ளும் பாவிகளின் ஈடேற்றத்திற்காக மேசியாவென்னும் பூலோக இரக்ஷகர் ஒருவர் உலகத்தில் அவதாரமாவதும் அவருடைய ஜீவியமும், போதனைகளும், பட்டனுபவிக்கும் பாடுகளும், அடையும் மரணமும் மூன்றாம்நாளில் உயிரோடெழுந்திருப்பதும அவருடைய இராஜ்யமும் அதின் மகிமையும் அவைகளோடு சம்பந்தப்பட்ட பல காரியங்களும் விரிவாயும் தெளிவாயும் தொடர்ச்சியாயும் பலரால் கூறி உரைக்கப்பட்டிருக்கின்றன. சற்று விபரமாய்ப் பார்ப்போம். மேசியாவானவர் உற்பத்தியாகும் குலம், கோத்திரம், குடும்பம், காலம், தானமுதலிய விபரங்களைக்குறித்து, அவர் யூதஜாதியாருக்குள் யூதாக்கோத்திரத்தில் தாவீதின் வங்கிஷத்திலும் யூதாவைவிட்டுச் செங்கோல் நீங்காமலும், அவன் பாதங்களைவிட்டு நியாயப்பிரமாணிக்கன் ஒழிந்துபோகாமலும் அதாவது சுயாதீன ஆளுகை யூதஜாதியாரைவிட்டுப் போகிற காலத்திலும், எருசலேம் பட்டணத்தில் இரண்டாந் தேவாலயம் இருந்த காலத்திலும், எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல் எழுபது வாரம் அதாவது 490-ளுங்கள் கடந்தபிற்பாடும், சகல ஜாதிகளும் அசைந்து சகல ஜாதிகளும் விரும்பி எதிர்பார்க்கிற காலத்திலும் ஈசாய் பட்டு அடிமரமான காலத்தில் அதாவது தாவீது வம்சத்தாருடைய செழிப்புக் குன்றி ஒடுக்கப்பட்டிருக்கிற காலத்திலும், எலியாவாகிய தூதன் முன்பாக வந்து வழியை ஆயத்தம் பண்ணுங் காலத்திலும், ஸ்திரீயின் வித்தாகவும், புதுமையின் சிருஷ்டியாகவும் ஓர் கன்னியின் வயிற்றில் இம்மானுவேலென்ற பேருடையவராய் எப்பிராத்தா என்ற பெத்லகேம் ஊரிற் பிறப்பாரென்றும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அவர் பிறந்தபின் இராஜாக்கள் காணிக்கைகளையும் வெகுமானங்களையும் பொன்னையும் கொண்டுவந்து அவரைப் பணிந்து கொள்வார்களென்றும் பெத்லகேம் ஊரில் அநேகம் குழந்தைகள் கொலைசெய்யப்படுமென்றும் அவர் எகிப்துதேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டுத் திரும்பவும் தன் தேசத்திற்குக்கொண்டுவரப்படுவாரென்றும் விசேஷித்த கிருபையும் ஞானமுமுடையவராகவும் பரிசுத்தஆவியால் அபிஷேகம்பண்ணப்பட்டவராகவும் இருப்பாரென்றும் உரைக்கப்பட்டது. அன்றியும் அவர் தீர்க்கதரிசியாயிருந்து தீர்க்கதரிசனங்கள் உரைப்பாரென்றும்,

தேவவசனத்தைச் சாந்தமாயும் உவமைகளாகவும் சகலருக்கும் போதிப்பாரென்றும், குருடரின் கண்களும் செவிடரின் செவிகளும் திறக்கவும் முடவர் நடக்கவும், குஷ்டரோகிகள் சுகமாகவும், மரித்தவர்கள் உயிரோடெழும்பவுந்தக்கதாக அற்புதங்களை நடப்பிப்பாரென்றும், தமது பிதாவாகிய தேவனுடைய ஆலயத்தைப்பற்றி வைராக்கியமாயிருப்பாரென்றும், எருசலேம் பட்டணத்திற்குள் தாழ்மையுள்ளவராய்க் கழுதைக்குட்டியாகிய மறியின்மேல் சவாரிபோவாரென்றும், தேவாலயத்தில் பிள்ளைகள் அவரைச் சூழ்ந்து ஆர்ப்பரிப்பார்களென்றும், தாழ்மை, சாந்தம், நல்விருப்பம், இரக்கம், மனஉருக்கம், கபடமின்மை, பக்திமுதலிய குணங்கள் பொருந்தினவராயிருப்பாரென்றும் கூறப்பட்டது. அவருடைய பாடுகளையும் மரணத்தையும் உயிரோடெழுந்திருப்பதையும் பற்றி, அவருடைய சொந்த ஜனமே அவரை அசட்டைசெய்து பகைத்துத் துன்பப்படுத்துவார்களென்றும் அவருடைய சீஷர்களில் ஒருவனே அவருக்கு விரோதமாய்ச் சற்பனைசெய்வானென்றும், அவருடைய சீஷர்களாற் கைவிடப்படுவார் என்றும், பொய்ச்சாட்சிகள் எழும்பி அவரைக் குற்றப்படுத்துவார்கள் என்றும், அவர் முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டு அந்தக் கிரயத்தினால் குயவனுடைய நிலம் விலைக்கு வாங்கப்படும் என்றும், மற்றவர்களுக்காக அகோரமாய்ப் பாடுபட்டாலும் பொறுமையாயும் அமைதலாயுமிருப்பாரென்றும், கன்னத்தில் அடிக்கப்பட்டு அழகும், சௌந்தரியமும் இல்லாமல் அவருடைய முகப்பார்வையும் ரூபமும் அந்தக்கேடாக்கப்படும் என்றும், பகைவர் அவர்மேல் துப்பி, அவரை வாரினால் அடித்துப் பரியாசம்பண்ணி, கைகளிலும் கால்களிலும் ஆணிபடித்துச் சிலுவையிலறைவார்களென்றும் கசப்புக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக்கொடுத்து, அவருடைய வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுச் சீட்டுப்போடுவார்கள் என்றும், இரண்டு கள்ளர் மத்தியில் மரித்து அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்படுவாரென்றும், அந்தச் சமயத்தில் தம்மைக் கொலைசெய்தவர்களுக்காக வேண்டிக்கொள்வாரென்றும் சொல்லப்பட்டது. அவருடைய மரண சமயத்திலும் பூமி அதிர்ந்து, சூரியன் இருளடைந்து எங்கும் அந்தகாரம் உண்டாகுமென்றும் உரைக்கப்பட்டது. அன்றியும் அவருடைய எலும்புகள் முறிக்கப்படமாட்டாதென்றும், அவருடைய விலாவில் உருவக்குத்தப்படுமென்றும் ஐசுவரியவான்களோடு அடக்கம்பண்ணப்பட்டுச் சரீரம் அழிந்துபோகாமல் மூன்றாம்நாளில் உயிரோடெழும்புவாரென்றும் உரைக்கப்பட்டது. அவர் பரமண்டலத்திற்கு எழுந்தருளிப் பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் நித்திய ராஜாவாக வீற்றிருந்து அரசாளுவாரென்றும், அவருடைய இராஜ்யத்திற்கு முடிவில்லையென்றும் கூறப்பட்டது.

(இன்னும் வரும்.)



# கனம் S. காயின் அம்மாளவர்கள் கனம் சார்ஜென்று அத்தியட்சரவர்களுக்கு எழுதிய கடிதத்துக்குத் தமிழ்.

டமுக்குடியம்
மேல்கோதாவரி.
1883௵ ஜூலை௴ 8௳

பிரியமான சிநேகிதர்களே!

இவ்விடத்தில் கோயி ஜனங்களுக்குள்ளே தேவஊழியஞ்செய்வதற்கு எஸ். சுவிசேஷமுத்து உபதேசியாரோடு ஒருவராவது இவ்விடம் வரமாட்டாததுபோலிருக்கிறது என்று உங்கள் அருமையான அத்தியக்ஷரவர்கள் எங்களுக்கு எழுதியிருந்ததை நாங்கள் வாசித்துப் பார்த்தபோது எங்களுக்கு உண்டான மனவியாகுலத்தைச் சொல்லி முடியாது. இதைக் குறித்து நினைக்க நினைக்க அந்தநாள் இரவெல்லாம் நித்திரை வராமல், இந்த இடத்தில் கிறிஸ்தவர்கள் வெகு சொற்பமாயும், தேவவசனத்தைப் போதிக்கத் தகுந்த ஆட்களுமில்லாதிருப்பதினாலே இப்பேர்ப்பட்ட அந்தகாரம் நிறைந்த இந்த இடத்தில் தேவபணிவிடைக்காரர்கள் வேண்டுமென்பதாய் நாங்கள் எவ்வளவாக வாஞ்சிக்கிறோமென்பதை நீங்கள் அறியும்பொருட்டு உங்களுக்கு ஓர் காயிதத்தை எழுதி அதை உங்களுக்கு வாசித்துக் காட்டும்படி உங்கள் அருமையான அத்தியக்ஷரவர்களைக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தேன். அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருப்பதினாலே ஏங்களுக்குச் சகாயம்செய்யும்படியல்ல, நீங்கள் "ஆண்டவர்" என்றும் "எஜமான்" என்றும் சொல்லுகிற அவருக்கே ஊழியஞ்செய்ய ஊக்கமுள்ள சில வாலிபரை நீங்கள் அனுப்பிவிக்கக் கூடியதில்லையா? நமது ஆண்டவராகிய கிறிஸ்துநாதர் சந்தோஷமும் பாக்கியமும் நிறைந்த தமது பிதாவின் வாசஸ்தலத்தை விட்டுவிட்டு 33-வருஷகாலமாய் மனுஷ தொந்தமாவது சொந்த வீடாவது இல்லாதவராய் ஒண்டியாகவும், ஏழையாகவுமிருந்து உங்களுக்காக அவர் தமது ஜீவனையும் விட்டிருக்கிறார். அவரைப் பின்பற்றவேண்டுமென்றும் சொல்லுகிறீர்கள். அப்படியே செய்துவருகிறோமென்று சொன்னால் அவர் செய்ததுபோலவே நீங்களும் அநியாயமான கஷ்டங்களை அனுபவிக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறதில்லை. ஒருவன் தகுந்த எச்சரிக்கையோடும் ஏற்ற வஸ்திரத்தோடும் சாப்பாட்டோடும் இவ்விடத்திற்கு வந்து குடி ஏறினால், சமுசாரத்தோடேயும் கூடியமட்டும் வாழ்வுள்ளவனாய்க் காலத்தைப் போக்கக் கூடியது. இஞ்சினீயர் டிப்பார்ட்டுமெண்டிலும், பாரஸ்ட்டு டிப்பார்ட்டுமெண்டிலும் அலுவலாயிருக்கிறவர்கள் சென்னபட்டணத்திலிருந்தும் மற்றும் தூரமான இடங்களிலிருந்தும் இவ்விடம் அவ்வகையான வேலைபார்க்கும்படி வந்து, உங்களுக்குக் கிடைக்கும் வீடுகளைப் பார்க்கிலும் அதிகக் கேவலமான வீடுகளுக்குக் கொடைக் கூலி கொடுத்து வாசம்பண்ணுகிறார்கள். அப்படியானால் தம்மைப் பின்

பற்றும்படி உங்களை அழைக்கிற அவர் நிமித்தம் நீங்கள் வரச் சம்மதிக்க மாட்டீர்களா? வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிற அவருக்கு ஊழியம்செய்வது கனம் என்று நீங்கள் எண்ணவேண்டாமா? அந்தக் கனத்தை நீங்கள் விரும்பவேண்டாமா? "என் மகனே என் திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்" என்று சொல்லுகிற தெய்வீக கட்டளையை நீங்கள் புறக்கணிக்கலாமா?

நாமெல்லாரும் அவருடைய சிம்மாசனத்தைச் சுற்றி நிற்கும் அந்த மகாநாளிலே கெட்டுப்போனவர்கள் இரக்ஷிக்கப்படவேண்டுமென்று விரும்புகிற தேவதூதர்கள் முன்பாக அவர் உன்னைப் பார்த்து கோயி ஜனங்களுக்காக நீ செய்த வேலை என்ன? அவர்களுக்கு என் வசனத்தைப் போதிக்கும்படி அழைத்தேனே. உன் போதகத்தால் குணப்பட்ட ஆத்துமாக்கள் எங்கே என்று கேட்கிறதாயிருந்தால், சகோதரர்களே நீங்கள் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள். ஆண்டவரே எங்களுக்குக் காச்சல், உபத்திரவம் வருமென்று பயந்தோம் எங்கள் வீடுவாசலெல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தூரதேசத்துக்குப் போகிறது எங்களுக்கு வருத்தமாயிருந்தது. நீர் இந்தப் பூலோகத்தில் எங்களுக்காகச் சிலுவை மரணம் அடையும்படியாக வந்தாலும், நாங்களோ அந்தத் தேசத்துக்குப்போய், நாங்கள் இரக்ஷண்ய வழியைக் கண்டிருக்கிற விதத்தை மற்றவர்களுக்கு அறிவிக்கக்கூடவில்லை என்று சொல்லத் துணிவீர்களா?

இவ்விடம் வரப் பயப்படவேண்டியதற்குத் தகுந்த முகாந்தரம் இல்லவே இல்லை. எனக்குச் சமீபத்தில் என் சுய தேச அம்மாமார்கள் ஒருவரும் இவ்விடத்தில் இல்லையென்றாலும், போன வருஷ முழுவதிலும் தேவன் என்னைக் காப்பாற்றி வந்திருக்கிறார். அப்படியே அவர் உங்களையும், நீங்கள் விவாகஞ்செய்தவர்களாயிருந்தால் உங்கள் மனைவிகளையும் அவர் காப்பாற்றக்கூடியவர். அவர் நிமித்தமாக நீங்கள் மரிக்கவேண்டுமென்பது அவர் சித்தமாயிருந்தால் அது உங்களுக்குக் கனமல்லவா? அது உங்களுக்கு மகிமையல்லவா? நம்மை நேசித்தவரும், நேசிக்கிறவரும் நம்மை எக்காலத்தும் நேசிப்பவருமாகிய அவருக்கென்று ஏதாவது நாம் செய்யவேண்டுமே என்ற மனோவாஞ்சை மனஆவல் அடிக்கடி உங்களுக்குள் உண்டானதில்லையா? ஆ! அவருடைய அன்பை நீங்கள்ருசித்திருப்பீர்களானால் நீங்கள் வாஞ்சித்திருப்பீர்கள் என்பது நிச்சயம். அவர் இப்போது அழைக்கையில் பின்வாங்காதேயுங்கள். நாங்கள் திருநெல்வேலிக்கு வரவேண்டுமென்றும், முகமுகமாய் உங்களோடு பேசி, இவ்விடம் வந்து தேவஊழியத்தைப் பார்க்கும்படி உங்களை வற்புறுத்தவேண்டுமென்றும் மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் எங்களைச் சுற்றியிருக்கிற கோயி ஸ்திரீகள் எங்களண்டைக்கு வருகிறவர்களாயிருக்கிறார்களே; நானும் அவர்கள் பாஷையைப் படித்துக்கொண்டிருக்கிறேனே. கனம் காயின் ஐயரவர்களும் பல வகையான வேலையில் முயற்சியுடையவராயிருக்கிறார்கள். ஆகையால் இப்படியிருக்கையில் நாங்கள் என்னமாய் இவ்விடம் விட்டு வரக்கூடும்? இப்படியாக வரக்கூடாதபடியால் இப்படிக் காயிதமெழுதுகிறேன். உங்களுக்கு நாமம் தரிப்பித்த அவருடைய அன்புள்ள நாமத்தினாலேயும் நாங்கள் பின்பற்றுகிறோமென்று நீங்கள் சொல்லுகிற அவருடைய நாமத்தினாலேயும், தமது ஊழியக்காரரிடத்திலிருந்து கணக்கு வாங்க எத்தனமாயிருக்கிற எஜமானுடைய திருநாமத்தை முன்னிட்டும் நான் உங்களை அழைக்கிறேன். இதுகாரியத்தைப்பற்றி நீங்கள் நன்றாய் ஆலோசிக்க



வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். தேவன் இந்த மேலான உத்தியோகத்திற்கு எல்லாரையும் அழைக்கிறதில்லை. ஆனால் அவர் எவனை அழைக்கிறாரோ அவன் அதை மறுத்துப் பின்வாங்காதிருப்பானாக.

இப்படிக்கு

கிறிஸ்துவின் பெரிய சேனையில் உடன் கிறிஸ்தவளான
எஸ். காயின் அம்மாள்.

---

## சமாசாரத்திரட்டு.

தப்தி நதி பிரவாகித்து ஜலம் 40–அடிக்கு அதிகமாக எழும்பினதினால் சூரத் பட்டணத்தின் தெருக்களில் 13-அடிவரையும் தண்ணீர் பெருகி 2–லட்சம் ரூபாய்க்கதிகமான நஷ்டம் உண்டாயிற்று.

மதகஸ்காரில் பிரான்சியர் இங்கிலாந்துக்குக் காண்பித்த அவமரியாதையே முக்கியமான சமாசாரம். மேற்படி தீவின் துறைமுகமாகிய தாமத்தேவ் பட்டணத்தில் இருந்த இங்கிலிஷ் வியாபார ஸ்தானாபதியின் செக்கிரட்டெரியைப் பிரான்சியர் மறியல்செய்ததுமன்றி, அப்பொழுது வியாதியாயிருந்த ஸ்தானாபதியையும் 24–மணிநேரத்துக்குள் பட்டணத்தை விட்டுப் புறப்படவேண்டும் என்று உத்தரவுபண்ணினார்கள். இதினிடையில் அவர் இறந்துபோனார். அவரை அடக்கம்பண்ணுகிறதற்கு கரையிலிறங்கின இங்கிலிஷ் போர்க்கப்பல் தலைவனையும் ஆட்களையும் கப்பலுக்குத் திரும்பிப்போகப் பிரான்சியர் சம்மதிக்கவில்லை. அங்குள்ள ஒரு இங்கிலிஷ் மிஷனரி போதகரையும் அவர்கள் சிறைச்சாலையில் அடைத்தார்கள். இந்த அக்கிரமங்களுக்கு உத்தரஞ்சொல்லி மாப்புக்கேட்கவேண்டுமென்று இங்கிலிஷ்காரர் கேட்டதற்குப் பிரான்சிய மந்திரி காரியம் யதார்த்தந்தான் என்று காணப்பட்டால் நியாயமானபடி செய்வோம் என்று மறுமொழி கொடுத்தார். ஒருவேளை யுத்தம் வந்தாலும் வரலாம்.

பிரான்சு சீனாவோடும் போர்கலக்கும்போல் தோன்றுகிறது. அப்படியாகிற பக்ஷம் சீனபட்டாளத்தில் உதவிசெய்யும்படி அநேக அமெரிக்க தளபதிகள் வாக்களித்திருக்கிறார்கள்.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் செய்யும்படி ஆலோசிக்கப்பட்ட நிலவறை இருப்புப்பாதை படாதென்று தீர்மானிக்கப்பட்டது.

சூவேஸ் வழியாய் வெட்டத்தீர்மானிக்கப்பட்ட இரண்டாம் கால்வாயைப் பிரான்சியரே செய்யச் சம்மதிக்கவேண்டும் என்று இங்கிலிஷ் துரைத்தனத்தார் சொல்லுகிறார்கள். இங்கிலிஷ் வர்த்தகர் அநேகர் இந்த யோசனைக்கு முற்றும் விரோதமாய் நிற்கிறார்கள். இதைப்பற்றி மிகுந்த மனக்குறை உண்டாயிருக்கிறது.

நியூகினி தீவை இங்கிலிஷ் அரசாட்சியோடு சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற யோசனைக்குத் துரைத்தனத்தார் சம்மதிக்கவில்லை.

(தே—ரி.)

---

ஆகஸ்ற்று மீ நாள்-31. ஆடி மீ 18உ முதல், ஆவணி மீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௮ | கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது. |
| வி | 2 | ௧௯ | கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் உற்சாகங்கொண்டது. |
| வெ | 3 | ௨௦ | கர்த்தர் உம்மைக்குறித்துத் தீமையாகச்சொன்னார் என்றான். 18: |
| ச | 4 | ௨௧ | கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது. |
| ஞா | 5 | ௨௨ | எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது 20:12. |
| தி | 6 | ௨௩ | (யோராம்) விரும்புவாரில்லாமல் இறந்துபோனான். 21:20. |
| செ | 7 | ௨௪ | (யோவாஸ்) கர்த்தருடைய ஆலயத்திலே ஒளித்துவைக்கப்பட்டிரு |
| பு | 8 | ௨௫ | சாட்சியின் ஆகமத்தை அவன் கையிலே கொடுத்தான். 23:11. |
| வி | 9 | ௨௬ | கர்த்தர் அதைப்பார்ப்பார், அதைக் கேட்பார். 24:22. |
| வெ | 10 | ௨௭ | தேவன் உம்மை அழிக்க யோசனையாயிருக்கிறார். 25:16. (கரச் |
| ச | 11 | ௨௮ | அவன் கர்த்தரைத் தேடின நாட்களில்...அவன் காரியங்களை வாய் |
| ஞா | 12 | ௨௯ | (யோதாம்) கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச்செய்தா |
| தி | 13 | ௩௦ | யூதாவின் ராஜாவாகிய ஆகாசினிமித்தம் கர்த்தர் யூதாவைத்தாழ்த் |
| செ | 14 | ௩௧ | கர்த்தருடைய ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தார்கள் 29:15. |
| பு | 15 | ௧ | தேவனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்திற்று. 30:12. |
| வி | 16 | ௨ | எசேக்கியா...கர்த்தருக்குமுன்பாக உண்மையுமானதைச்செய்தா |
| வெ | 17 | ௩ | நீங்கள் எதின்மேல் நம்பிக்கையாயிருக்கிறீர்கள். 32:10. (ன.31: |
| ச | 18 | ௪ | கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான். 33:13. |
| ஞா | 19 | ௫ | எனக்காகவும்...கர்த்தரிடத்தில் விசாரியுங்கள். 34:21. (33:1. |
| தி | 20 | ௬ | யோசியா எருசலேமிலே கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரித்தான். |
| செ | 21 | ௭ | கர்த்தருடைய உக்கிரம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது. |
| பு | 22 | ௮ | எருசலேமில் வாசம்பண்ணுகிற தேவனே தேவன். எஸ்ரா. 1:3. |
| வி | 23 | ௯ | தேவனுடைய ஆலயத்தை அதின் ஸ்தானத்திலே எடுப்பிக்கும்படி |
| வெ | 24 | ௧௦ | லேவியரும் ஒருமனப்பட்டு நின்றார்கள். 3:9. (கரு. 2. 68. |
| ச | 25 | ௧௧ | உங்களோடேகூட நாங்களும் கட்டுவோம். 4:2 (ந்தார்கள். 5:2 |
| ஞா | 26 | ௧௨ | அவர்களுக்குத் திடஞ்சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இரு |
| தி | 27 | ௧௩ | அசீரியருடைய ராஜாவின் இருதயத்தை அவர்கள் பட்சத்தில் சா |
| செ | 28 | ௧௪ | உங்கள் தேவனுடைய சித்தத்தின்படியே செய்யுங்கள். 7:18. |
| பு | 29 | ௧௫ | தேவனுடைய கரம் தம்மைத்தேடுகிறவர்களுக்கு நன்மையாக இரு |
| வி | 30 | ௧௬ | நாங்கள் தப்பி மீந்திருக்கிறோம். 9:15. (க்கிறது. 8:22. |
| வெ | 31 | ௧௭ | இன்னும் இஸ்ரவேலுக்காக நம்பிக்கை உண்டு. 10:2. |

## விசேஷ நாட்கள்.

3. அமாவாசை.
5. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 11-ம் ஞாயிறு.
12. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 12-ம் ஞாயிறு.
18. பௌர்ணமி.
19. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 13-ம் ஞாயிறு.
24. பரி. அப். பர்த்தொலோமேயுவின் திருநாள்.
26. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 14-ம் ஞாயிறு.

# நற்போதகம்.

௯. செப்தெம்பர் மீ. ௲௮௱௮௰௮.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### கர்த்தருடைய ஜெபம்.

### ௩-ம் பிரிவு.

### முதலாம் விண்ணப்பம்.

வினா. கர்த்தருடைய ஜெபத்தில் எத்தனை விண்ணப்பங்கள் அடங்கியிருக்கிறது?

விடை. ஆறு விண்ணப்பங்கள். அவைகளில் முதல் மூன்று விண்ணப்பங்கள் தேவனுடைய மகிமைக்கடுத்தவைகளும், கடைசி மூன்று விண்ணப்பங்கள் நமக்கும் எல்லா மனுஷ ஜாதியாருக்கும் வேண்டிய நன்மை உபகாரங்களுக்கடுத்தவைகளுமாயிருக்கின்றன. 'எல்லா நன்மைகளையும் கொடுக்கிற நம்முடைய பரமபிதாவும் ஆண்டவருமாகிய தேவனை நாம் தகுந்தபடி வணங்கி, அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்கிறதற்கு அவர் எனக்கும் மற்ற யாவருக்கும் தமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று விரும்புகிறேன்.'

வினா. முதலாம் விண்ணப்பம் என்ன?

விடை. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

வினா. தேவனுடைய நாமம் என்பதின் கருத்தென்ன?

விடை. தேவனும், அவருடைய சகல சம்பூரணங்களுமே.

(முதலாம் கற்பனையின் வியாக்கியானத்தைப் பாருக்க.)

*கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார். அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடியசாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். யாத். 34: 5—7.*

சங். 8: 1, 9. 9: 10. 89: 16. 99: 3. 111: 9. 148: 13. நீதி. 18: 10. எரே. 10: 16. யோவா. 17: 6.

வினா. தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துகிறது எப்படி?

விடை. தேவனுடைய நாமத்துக்கேற்றபடி, நீதியும் பரிசுத்தமுமுள்ளவர்களாய் நடந்து, அவரைத் தகுந்தபடி தொழுது ஸ்தோத்திரிப்பதே.

*கர்த்தருக்கு மகிமையையும், வல்லமையையும் செலுத்துங்கள். சங். 96: 7, 8.*

*கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள். 1 பேது. 3: 15.*

சங். 148: 13. ஏசா. 8: 13. 29: 23.

வினா. இந்த விண்ணப்பத்தின் பொருளென்ன?

விடை. தேவனுடைய நாமத்தையும், அவரைத் தொழுதுகொள்ளும் வணக்கத்தையும் சமஸ்த ஜனங்களும் அறிந்து, கனப்படுத்தவேண்டுமென்பதே.

*தேவன் தம்மைச் சூழ்ந்திருக்கிற அனைவராலும் அஞ்சப்படத் தக்கவர். சங். 89: 7.*

நாம் எல்லாவற்றிற்குமுன் தேவனுடைய மகிமையை விசேஷித்துக் கொள்ளவேண்டும். நம்முடைய குறைவான பணிவிடையினால் தேவனுடைய மகிமையோடு மகிமையைக் கூட்டிப்போடுவோமென்றல்ல. தேவநாம மகிமைக்கு அவருடைய கரத்தின் கிரியைகளாயிருந்து, நமது மனோவாக்குக் காயங்களினால் அவரைக் கனம்பண்ணவேண்டும்.

*தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1 கொ. 6: 20.*

இந்த விண்ணப்பத்தில், நாம் இந்த உலகத்தில் தேவனை மகிமைப்படுத்தத்தக்க அவசியமான கிருபையைக் கொடுத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்ஷகர் "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்." (யோவா. 12: 27, 28) என்று பண்ணின விண்ணப்பத்தினால் நாம் எவ்வளவு அனலுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பதற்கு முகாந்தரங் காணப்படுகிறது. எத்தனையோ பேர் தேவநாமத்தைத் தூஷணிப்பதை நாம் கவனிக்கையில், தேவனுடைய பயங்கரங்களைத் தங்கள்மேல் குவித்துக்கொள்ளத் துணிந்து நடக்கிறார்கள் என்றும், அவர்களுக்கு அருளப்பட்ட கிருபைகளை அவமதிக்கிறார்கள் என்றும் சொல்லவேண்டியது. யூதர்கள் தேவனுடைய நாமத்தைப் பக்திக்குரிய வகையிலும் ஆணையிடும் சமயத்திலும் தவிர, மற்றவேளைகளில் சொல்ல உத்தரவில்லாதிருந்தார்கள்.

நீ இப்படி விண்ணப்பஞ்செய்கையில், நீ வேண்டிக்கொள்வதை உண்மையோடு விரும்புகிறாயென்று உன் செய்கைகளினால் காண்பிக்க எச்சரிக்கையாயிரு. கிறிஸ்து இயேசுவின் மூலமாய் அவருடைய இரக்கத்தில் நம்பிக்கை வைப்பதினாலும், அவரைத் தொழுது மகி



மைப்படுத்தி நடந்துகொள்வதினாலும், நீ தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும்.

நாங்கள் எப்பொழுதும் உம்முடைய பரிசுத்த நாமத்தைப்பற்றிய பயபக்தியும் அன்புமுள்ளவர்களாயிருக்கும்படி செய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

## ௩-ம் பிரிவு.

## இரண்டாம் விண்ணப்பம்.

---

வினா. கர்த்தருடைய ஜெபத்தின் இரண்டாம் விண்ணப்பம் என்ன?

விடை. உம்முடைய இராஜ்யம் வருவதாக.

வினா. தேவனுடைய இராஜ்யம் என்பதின் அர்த்தமென்ன?

விடை. 1. அவருடைய கிருபையின் இராஜ்யம். அதாவது அவர் தம்முடைய பிள்ளைகளின் இருதயத்தில் ஆளுகைசெய்வதே. இது உலகம், மாம்சம், பிசாசு என்பவைகளோடு போராடிக்கொண்டிருக்கிற தேவனுடைய ஜனங்களாகிய போராடுகிற திருச்சபை என்றழைக்கப்படுகிறது.

2. இனிமேல் வரும் அவருடைய மகிமையின் இராஜ்யம். இதை அவருடைய பிள்ளைகளெல்லாரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லாச் சத்துருக்களும் கீழ்ப்படுத்தப்பட்டபின் இந்த இராஜ்யம் ஆரம்பிக்கும். அப்பொழுது மகா மகத்துவ பரிசுத்தவான்கள் ஓயாத சமாதானத்தை அடைந்து துதிப்பதே என்றென்றுமுள்ள அவர்களுடைய அலுவலாயிருக்கும். ஆதலால் அது வெற்றிசிறந்த சபை என்று அழைக்கப்படுகிறது.

சாத்தானாலே அடிமைகளாக்கப்பட்டிருக்கிற கீழ்ப்படியாமையுள்ள பிள்ளைகளின் இருதயங்களில் ஆளுகைசெய்கிற சாத்தானுடைய இராஜ்யத்தை அழிக்கும்படியாகவே கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

வினா. ஆதலால், உமமுடைய இராஜ்யம் வருவதாக என்று நீ சொல்லும்பொழுது, எதற்காக ஜெபம்பண்ணும்படி போதிக்கப்பட்டிருக்கிறாய்?

விடை. 1. தேவன் தமது சுவிசேஷ அறிவைப் பரம்பச் செல்வதினாலே பூமியில் தமது கிருபையின் இராஜ்யத்தை விஸ்தாரமாக்குவார், உலகத்திலுள்ள எல்லா இராஜ்யங்களையும் நமது ஆண்டவருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் இராஜ்யமாயிருக்கும்படி கொண்டுவருவார் என்றும், மிகவும் முக்கியமாய் மனிதருடைய இருதயங்களைத் தம்மண்டைக்குத் திருப்பவும், அவர்களைப் பேர்கொண்ட கிறிஸ்தவர்களாக மாத்திரமல்ல, மெய்க்கிறிஸ்தவர்களாக்கவும் கிருபைசெய்வாரென்று நம்பி வேண்டிக்கொள்ளப் போதிக்கப்பட்டிருக்கிறேன்.

*தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரக்ஷண்யமும் விளங்கும்படி பண்ணும். சங். 67: 1.*

2 தெச. 3: 1.

இதைப்பற்றிய வாக்குத்தத்தங்களாவன;

பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகக் கொடுப்பேன். சங். 2: 8.

ஒரு சமுத்திரந் தொடங்கி மறு சமுத்திரம்வரைக்கும் அவர் அரசாளுவார். சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள். சங். 72: 8—17.

ஏசா. 2: 2, 3. மீகா. 4: 1—5. ஏசா. 11: 9. 35: 1–10. தானி. 6: 26. சகரி. 9: 10. 14: 9. மத். 24: 14. வெளி. 11: 15.

நாம் அடிக்கடி வேதாகம சங்கமுதலிய எத்தனங்களின் மூலமாய் இரக்ஷண்ய வழியைப்பற்றிய அறிவு உலகத்தில் பரம்பும்படி ஜெபம் பண்ணுகிறதுடன், நம்முடைய எவ்வகைத் திராணியினாலும் உலகத்தில் மெய்மார்க்கம் விர்த்தியடையும்படி எவ்வளவாய் விருப்பமுடையவர்களாயிருக்கவேண்டும்.

2. ஆண்டவர் நம்முடைய இருதயங்களில் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து பூரணப்படுத்தவும், அதினால் அவர் நம்முடைய ஆசை விருப்பங்களுக்கு மேலாக ஆளுகைசெய்து, நம்முடைய எல்லாக் கேடுகளும் முழுவதுமாய் அடங்கிப்போகும்படி ஜெபம்பண்ணப் போதிக்கப்பட்டிருக்கிறோம்.

பாவம் மரணத்துக்கேதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது. ரோ. 5: 21.

எபே. 3: 17. கொலோ 1: 13

கிறிஸ்துவின் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. (யோவா. 18: 36) என்பதையும், நம்முடைய சொந்த அபிப்பிராயத்தினாலுண்டாகிற வகைப்பாடுகள் அடங்கியதல்ல என்பதையும் நினைத்துக் கொள்ளவேண்டும். ஆனால்,

தேவனுடைய இராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்தஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. ரோ. 14: 17.

3. கிறிஸ்துவின் மகிமையின் இராஜ்யம் வெளிப்படுவதற்காக ஆசைப்படுபவர்களின் எதிர்பார்த்தல் நிறைவேறும்படி செய்விக்க ஜெபம் பண்ணுகிறோம்.

மகிமையின் இராஜ்யத்தைப்பற்றிச் சொல்லிய வேதவாக்கியங்களாவன;

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவஎக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். மீ. 1 தெச. 4: 16—18. 2 தெச. 1: 9. வெளி. 21: 3, 4. 22: 20.

யூதர், மகம்மது மார்க்கத்தார், அஞ்ஞானிகள், வேதப்புரட்டர் யாவருக்கும் இரங்கி, சகலவித அறியாமையையும், இருதயக்கடினத்தையும், உமது வசனத்தை அசட்டைபண்ணும் அகங்காரத்தையும் அவர்களைவிட்டு நீக்கி, மீதியாயிருக்கிற மெய்இஸ்ரவேலரோடே கூட அவர்கள் இரக்ஷிக்கப்படவும், இயேசுகிறிஸ்துவாகிய ஒரே மேய்ப்பரிடத்தில் ஒரே மந்தையாகவும், அவர்களையும் தேவரீருடைய சபையாகிய மந்தையில் திருப்பிச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கெஞ்சிக்கேட்கிறோம்.

---



## ௩-ம் பிரிவு.

## மூன்றாம் விண்ணப்பம்.

---

வினா. கர்த்தருடைய ஜெபத்தின் மூன்றாம் விண்ணப்பம் என்ன?

விடை. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக.

இந்த விண்ணப்பம் முந்தின இரண்டு விண்ணப்பங்களையும் அடக்கியதாகக் காணப்படுகிறது. ஏனெனறால் தேவனுடைய நாமம் பரிசுத்தப்படுவதற்குத் தக்கதாகவும், அவருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறதற்குத் தக்கதாகவும் அவருடைய சித்தம் நிறைவேற்றப்படும்.

வினா. தேவனுடைய சித்தம் என்ன?

விடை. தேவனுடைய சித்தம் அந்தரங்கமானதாய் அல்லது வெளிப்படுத்தப்பட்டதாயிருக்கும். தேவன் அந்தரங்கமாயிருப்பது உத்தமமென்று நினைத்த அவருடைய சித்தத்தை நாம் ஆராயவேண்டிய அவசரமில்லை.

மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படி எல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். உபா. 29: 29.

தேவனைச் சூழநிற்கிற தேவதூதரும், அவருடைய மறைவான சித்தத்தை ஆராயக்கூடாது.

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தமென்னவென்றால், பாவிகள் கிறிஸ்து ஏசுவைப்பற்றும் விசுவாசத்தின் மூலமாய் இரக்ஷிக்கப்படவேண்டும். பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்படவேண்டும். அவருடைய நாமம் அவருடைய எல்லாச் சிருஷ்டிகளாலும், எல்லாக் கிரியைகளாலும் மகிமைப்படுத்தப்படவேண்டும் என்பதே.

இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல. மத். 18: 14.

குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது. யோவா. 6: 40.

1 தெச. 4: 3. 5: 18. 1 பேது. 2: 13—15. 2 பேது. 3: 9.

வினா. தேவனுடைய சித்தம் எப்படி நமக்கு வெளிப்படுகிறது?

விடை. 1. தேவனுடைய பராமரிப்பின் செயல்களால் ஒருவாறு அறிகிறோம்.

2. பரிசுத்த வேதவாக்கியங்களினால் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

3. மனச்சாக்ஷியும் நமக்கு அறிவிக்கிறது.

பரி. பவுல் சொல்லுகிறதாவது;

நியாயப்பிரமாணமில்லாத புறஜாதியார் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது நியாயப்பிரமாணமில்லாத

அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாக்ஷியுங்கூடச் சாக்ஷியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லை என்றும் அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். ரோ. 2: 14, 15.

யோவா. 7: 17. நீதி. 20: 27. மீகா. 6: 9. அப். 14: 17. ரோ. 1: 20. 7: 12, 14.

---

## ஏசாயாவின் தீர்க்கதரிசனம்.

### ஏசாயா. 63-அதிகாரம்.

இஸ்ரவேலருடைய சத்துருக்களை ஜெயித்து அவர்களுக்குத் தேவன் பாராட்டிய தயவு காட்டப்பட்டிருக்கிறது.

1-வச. ஏதோமியர், கல்தேயர் எருசலேமுக்கு வந்து அதை ஜெயித்த போது, சந்தோஷங் கொண்டாடினதாகவும் (சங். 137: 7.) கல்தேயருக்குப் பயந்து ஏதோமியரிடத்தில் அடைக்கலம் புகுந்தவர்களை அவர்கள் வெட்டிப்போட்டதாகவும் (ஒப. 12: 13) ஏதோமியரும் பாபிலோனியரைப்போல் சத்துருக்களானதால் அவர்களும் அழிக்கப்பட்டதாகவும் (எரேமி. 49: 13) வாசிக்கிறோம். ஏதோமியர் மேலுள்ள இந்த ஜெயம் இஸ்ரவேலர் தங்கள் சத்துருக்கள் மேலடைந்த எல்லா ஜெயங்களுக்கும் பொதுவாகச் சொல்லப்படும். இங்கே ஏதோமியர் பேர் சொல்லப்படுவதற்கு முகாந்தரம். யாக்கோபுக்கும் ஏசாவுக்கும் ஆதிப்பகையுண்டு. (ஆதி. 27: 41.) தாவீது ஏதோமியர்மேல் அடைந்த ஜெயத்தைக் குறிக்கும். (சங். 60. 2 சாமு. 7: 13, 14) சபையின் சத்துருக்களுக்கு மொத்தமாய் (ஏசா. 25: 10.) மோவாபின் பேர் சொல்லப்படுவதுபோல் ஏதோமின் பேரும் சொல்லப்படுகிறது. "ஏதோம்" என்பது சிவப்பு. (ஆதி. 25: 30.) "போஸ்ரா" என்பது திராட்சப்பழ அறுப்பு. (ஏதோமின் தலைப்பட்டிணம், போஸ்ரா) ஏதோம் ஆலையை மிதிக்கிறதற்கு இசைவாகவும், போஸ்ரா வஸ்திரங்களின்மேல் இரத்தம் தெளிக்கப்படுவதற்குமிசைவாகவும் இந்த இரண்டுபேரும் சேர்ந்துவருகிறது. (சங். 120: 5.) (2) திருச்சபையின் சத்துருக்கள்மேல் கிறிஸ்துநாதர் அடைகிற ஜெயத்துக்கு முன்னடையாளமாக இப்படிச் சொல்லியிருக்கிறது. (வெளி 19: 19—21.) பாபிலோன் எந்த அருவருப்பான பட்டினத்துக்கும், மோவாப் எந்த வகையான அருவருப்பானவர்களுக்கும் ஏதோம் தேவனுடைய எல்லாச் வகைச் சத்துருக்களுக்கும் பேராக வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனாலும் ஏதோமின் பேர் ஆதிப் பகையினாலும், அது ஒப்பரவாக்கப்படக்கூடாத வகையானதாலும் (ஆமோஸ். 1: 11.) எருசலேம் பிடிபடும்போது ஏதோமியர் அந்தப் பகையைக் காட்டினதாலும் (சங். 137: 7.) இங்கே மொத்தமாய் வருகிறது. (2) யூதரை ஆறுதல்படுத்தும்படி தேவனே ஒபதியாவின் தீர்க்கதரிசனப்படி நிறைவேற்றினதாலும், இதினால் கல்தேயராகிய சத்துருக்களிலுமிருந்து காக்கப்படுவதைக் காட்டவும்



நோக்கமாக இப்படிச் சொல்லியிருக்கிறது. இங்கே தீர்க்கதரிசி (1) கிறிஸ்துநாதர் (2) மிகாவேல் அல்லது (3) ஏதோமியரைச் சிறைப்படுத்தி, புரோசெலுத்துக்களாக்கின யூதா மக்கபேயரில் இர்க்கானுவைப் பார்த்து சொல்லுகிறாரென்பார்கள்.

சபையானது அல்லது சபையின் பேராலே தீர்க்கதரிசியானவர் இரண்டு கேள்வி கேட்கிறார்.

(1) ஏதோமிலிருந்து வருகிற ஜெயவீரன் சேனைகளுக்குமுன் படைத்தலைவர் வீரியமாய் வருவதுபோலும், ஜெயத்துக்குப்பின் ஜெயவீரர் மகத்துவ உடையோடு வருவதுபோலும், சத்துருக்களுக்குப் பயமில்லாமல் சிங்கம்போல (நீதி. 30: 30.) மகத்துவமான வல்லமையுள்ளவராகவும் வருவதைப் பார்த்து, ஆச்சரியமாய் "இவர் ஆர் என்ற கேள்வியைச் சபையானது கேட்கிறது. இதற்கு மறுமொழியாகக் கிறிஸ்துநாதர் இரக்ஷிக்க வல்லவராகிய நான் நானே என்கிறார். அவர் உண்மையாய்த் தமது வாக்குப்படி நீதியை நிறைவேற்றுவார். வெளி. 19: 11. இரக்ஷிக்கமாட்டாத விக்கிரகங்களுக்கு எதிரிடையாய்ச் சொல்லப்படுகிறார். (ஏசா. 45: 19, 20. 19: 20)

2-ம் கேள்வி. 2-வச. உமது உடுப்பு சிவப்பாயிருக்கத்தக்கதாக என்ன வருத்தமான வேலைசெய்தீர். இவ்வளவு மகத்துவமும் வல்லமையுமுடையவராகிய நீர் ஆலையை மிதிக்கிறவன்போல சேவலமாய் இருக்கிறதேன்? இதற்கு மறுமொழியாகக் கிறிஸ்துநாதர் திராட்சப்பழங்கள் ஆலையில் நசுக்கப்படுவதுபோல என் சத்துருக்களையெல்லாம் முற்றும் நசுக்கிப்போட்டேன் என்பார். (சங். 44: 5. ஏசா. 25: 10. வெளி. 14: 19, 20.) சிலர் அவர் தாமாய் உலகத்தாருக்குப் பாவநிவிர்த்தி செய்ததைக் குறிக்குமென்பார்கள். ஆனால் அது ஆச்சரிய வேலை. இங்கே ஜெயங்கொண்ட இராஜனாய்த் தமது சபையின் சத்துருக்களின் இரத்தத்தைச் சிந்தினதைக் குறிக்கிறது. ஆகையால் அவருடைய இரத்தமல்ல அவர்கள் இரத்தமென்றிருக்கிறது. அவர் தாமாக அசூரின் சேனையை அழித்தார். ஏசா. 10: 6, 7. ஆவிக்குரிய சத்துருக்களையும் அழிப்பார். 2 கொரி 4: 7. அப். 3: 12, 13. ஜெயங்கொண்டவர்கள் ஜெயிக்கப்பட்டவர்களை மிதிப்பது வழக்கம். ஏசா. 51: 23.

4-வச. திருச்சபையின் சத்துருக்களாகிய ஏதோமியரை அழிக்கும்படி தீர்மானிக்கப்பட்ட நாள் வந்தது. அவர்களைப் பழிவாங்கும்படி தீர்மானித்த காலம் வந்தது. யூதர் எகிப்திலிருந்து மீட்கப்பட்டபடியால், பாபிலோனிலுமிருந்து மீட்கப்படுவார்கள். (சங். 102: 13. ஏசா. 34: 8.) இது யூபிலி வருஷத்தைக் குறிக்கும்.

5-வச. துணை தேடுகிறவன் வல்லமை, ஞானம், ஆஸ்திமுதலியவைகளில் குறைவுள்ளவனும். கிறிஸ்துநாதருக்கோ ஒரு துணையும் அவசியமில்லை. மனித பாஷை நடையாய் வசனிக்கப்பட்டிருக்கிறது.

6-வச. பொல்லாதவர்கள் தேவகோபத்தினால் வெறியாக்கப்பட்டார்கள். சங். 75: 8. ஏசா. 51: 21. வெறிகொண்டவன் அங்குமிங்கும் தள்ளாடுவதுபோல பெலனற்றவர்களாய்த் தரையில் விழுவார்கள். நிற்பாக்கியராயிருப்பார்கள். (சங். 36: 12) கிறிஸ்துநாதர் தமது சத்துருக்களை முற்றும் ஜெயித்து தமது சபைக்கு ஜெயம் தந்தருளுவார். சத்துருக்களுக்கு எதிர்த்து நிற்க அவர்களுக்குப் புத்தியுமிராது, பெலனுமிராது. (வெளி. 17:6.)

7-வச. இது முதல் 54-அதி. கடைசிவரை தீர்க்கதரிசியானவர் தமது பேராலும் சபையின் பேராலும் ஜெபிக்கிற ஜெபம் அடங்கியிருக்கிறது. இதில் தேவன் சகலநாளும் யூதருக்குச் செய்த நன்மைகளை அறிக்

றையிடுகிறார். (எசா. 62: 6) தேவன் தமது குமாரனைப் பாவிகளை இரக்ஷிக்க அனுப்பினதில் பெரிதான அன்பு காட்டினார். (யோவா. 3: 15, 16. தீத்து 3: 4.)

8-வச. யூதரை எகிப்திலிருந்து அழைத்தபோது, தமது கிருபை உடன்படிக்கையினாலே தேவன் அவர்களைத் தமது ஜனமாக்கினார். யூதர் அபாத்திரராயினும், அவர்கள் சத்துருக்களை அழித்து அவர்களைக் காப்பாற்றி வந்தார். அவர்கள் தேவனுடைய உடன்படிக்கையைக் காத்துக்கொண்டார்கள். யூதர்கள் பாகால் முதலிய விக்கிரகங்களை வணங்கினாலும் இனி அப்படிச்செய்யத்துணியமாட்டார்கள். நாம் அவர்களைப் புதிப்பித்தபின்பு மறுபடியும் கெட்டுப்போகார்கள். இப்படிப்பட்ட உடன்படிக்கையினால் தேவன் அவர்களுக்கு இரக்ஷகரானார். (யாத். 19: 5, 6. சங். 81: 8—10.) கோரேஸ், செருபாபேல், நெகேமியாவல்ல, கிறிஸ்துநாதர் தாமே அவர்களுக்கு இரக்ஷகர்.

9. யூதர் எகிப்தில் நெருக்கப்பட்டபோது கிறிஸ்துநாதர் அவர் தலையாயிருந்து பரிதாபமானார். (யாத் 3: 3, 7. அப். 9: 4. புலம். 3: 33.) அவர்கள் அடைந்த துன்பம் துன்பமல்ல, நன்மையே. அவருடைய சமுகத்தின் தூதன் கிறிஸ்துநாதரே. மோசேயோடே பேசின தூதன் அவரே. (யாத் 33: 2. 23: 20.) எகோவா என்னப்படுகிறார். (யாத். 13: 21.) முட்செடியில் தரிசனையானவரும் அவரே. (அப். 7: 35. மி.) மற்ற தூதர்கள் எப்போதும் தேவசமுகத்திலிருக்கமாட்டார்கள். கிறிஸ்துநாதரோ எப்போதுமிருக்கிறவர். அவர் யூதரை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி, சிவந்த சமுத்திரம் வனாந்தர வழியாய் நடத்திவந்தவர். அந்தக் கன்மலை கிறிஸ்துவே. 1 கொரி. 10: 4. அவர்கள் அவபக்தியும், அஞ்ஞானமும், கடினஇருதயமுள்ளவர்களாயினும் தமது அன்பினால் தகப்பனைப்போலவும், கழுகு குஞ்சிகளைச் சுமப்பதுபோலும் சுமந்துவந்தார். (எசா. 46: 4. உபா. 32: 10—12. 1: 31.) பூர்வநாட்களாகிய ஆபிரகாம், மோசே காலமுதல் எசாயாவின் காலம்வரைக்கும் சுமந்துவந்தார்.

10. யூதரோ பலதரம் கலகஞ்செய்தார்கள். மோசேயின் காலத்தில் 10-விசை தேவனைப் பரீக்ஷைபார்த்தார்கள். (எண். 14: 22, 23.) (1) அப்பத்துக்காகவும் தண்ணீருக்காகவும் வனாந்தரத்திலும், (2) கானானியரை முற்றும் அழியாமல் தங்களுக்குக் கப்பங்கட்டும்படி செய்த கானான்தேசத்திலும், (3) பாபிலோன் சிறையிருப்புக்குமுன் அப். 7: 51, 52. சொல்லியபடி தீர்க்கதரிசிகளுக்கு எதிர்த்த வகையிலும் கலகஞ்செய்தார்கள். நியாயாதிபதிகள் இராஜாக்கள் காலத்தில் நடப்பித்த பொல்லாப்புகளையும் சேர்த்துக்கொள்ளலாம். அவர்கள் தங்கள் முரட்டாட்டத்தினால் பரிசுத்தஆவியை விசனப்படுத்தினார்கள். (சங். 78: 40. அப். 7: 51 எபே. 4: 30) ஆகையால் வனாந்தரத்தில் தேவன் அவர்களைத் தள்ளி (சங். 78: 31, 33, 59, 60) கொள்ளிவாய்ச் சற்பங்களால் தண்டித்து, நியாயாதிபதிகள் காலத்தில் சத்துருக்களைக்கொண்டு யுத்தம்பண்ணினார். யாத். 23: 21.

11-வச. பாபிலோனில் சிறைகளாயிருக்கிற யூதர், பூர்வநாட்களில் தங்களுக்கு நன்மைசெய்தவர் இப்போது எங்கே! எங்களை இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க வல்லவராமே. நியாயாதி. 6: 13. 2 இரா. 2: 14 இப்போது தேவன் யூதருக்குச் சத்துருவாய் மாறிப்போவானேன் என்று யூதர்கள் தங்கள் பாவங்களை உணர்ந்து மனந்திரும்பி, ஆதியில் தேவன் காட்டின இரக்கம்போல இரக்கம் காண்பிக்கக் கேட்கிற ஜெபம். சங். 77: 5, 10. (2) லேவி. 26: 42. தேவன் ஆபிரகாமோடே



செய்த தமது உடன்படிக்கையை நினைத்தார், முன் இரக்கமாய் இஸ்ரவேலரை விடுதலையாக்கினவர் இப்போதும் இரக்கமாய் விடுவிக்க விரும்புகிறார்கள். நெகே. 9: 5. உபவாசம்பண்ணி ஜெபித்தார்கள். "மந்தையின் மேய்ப்பன்" மோசே தேவனுடைய மந்தையாகிய இஸ்ரவேலரை வழி நடத்தினதால் அந்தப்பேர். சங். 77: 20.

12-வச. தேவன் தமது வலதுகையினால், தமது வல்லமையினால் மோசேயை நடத்தினார். (சங். 16: 8. 20: 6.) தேவன் மோசேயின் வலது கை, அல்லது கோலினால் அநேக அற்புதங்களைச் செய்ததையுங் குறிக்கும். பிதா பிள்ளையின் கையைப் பிடித்து நடத்துவதுபோல தேவனுடைய மகத்துவமான கரம், மோசேயின் வலதுகரத்தைப் பிடித்து நடத்தி தமக்குக் கீர்த்தியுண்டாக்கினார். தேவன் தமது ஆவியைக்கொண்டு போதித்தார். நெகே. 9: 20. ஞானம், தைரியம் என்ற ஆவி மோசேக்கு அளிக்கப்பட்டது. (எண். 11: 17.)

13-வச. எசா. 40: 3—5.

14-வச. சுமைசுமத்தப்பட்ட மிருகம், மேட்டிலிருந்து பள்ளத்துக்கு மெதுவாய் இறங்குவதுபோல, இஸ்ரவேலர் தங்கள் பெண்சாதிகள், பிள்ளைகள் சுமைகளுடன் சமுத்திரத்தின் ஆழங்களில் இறங்கினார்கள். தேவன் அவர்களை மெதுவாய் நடத்தினார். எரேமி. 31: 2. பிரயாணங்களில் ஆவியானவர் சொன்னபடி தாமதித்தார்கள். ஆவியே கானானிலும் இளைப்பாறப்பண்ணிற்று.

15-வச. இது முதலான ஜெபத்துக்கு முந்தினது முகவுரை. தேவனுடைய நன்மைத் தன்மையைக்கொண்டும், அவருடைய வலுமையான செயல்களைக்கொண்டும் தீர்க்கதரிசி சபையின் பேராலே ஜெபத்தில் வழக்காடுகிறார். தேவனே சிறையிருப்பில் எங்கள் சிறுமையைப் பரத்திலிருந்து பாரும். (உபா. 26: 15. சங். 80: 14) உமது வல்லமை எங்கே! (சங். 145: 11, 12. 150: 2.) எரே. 14: 9. உமது இரக்கத்தை அடக்காதேயும். சங். 77: 7—9. எசா. 64: 12.

16-வச. மாம்சத்தின்படி ஆபிரகாம் இஸ்ரவேல் எங்கள் பிதாவாயினும் அவர்கள் எங்களை இரக்ஷிக்கக்கூடாதவர்கள். அவர்கள் செத்துப்போனார்களே. தேவரீரோ எங்கள் பிதா. மல்கி. 2: 10. உபா. 32: 6. ஆகையால் தகப்பனுடைய உள்ளக்கொதிப்புக்கும், உருக்கத்துக்கும் காத்திருக்கிறோம். நீரோ எங்கள் மீட்பர் என்கிறார்கள்.

17-வச. சிறையிருப்பில் துன்பப்பட்ட பக்தியுள்ள யூதர்கள் தேவன் எங்களுக்குப் பிதாவாயிருக்க, எங்களிலுள்ள தமது ஆவியை நீக்கி எங்களைத் தனிமையாய் விட்டதினால் எங்களைப் பாவஞ்செய்யப்பண்ணுவானேனென்று முறையிடுகிறார்கள். (சங். 71: 12.) உம்மைவிட்டு வேறே தேவர்களைச் சேவிக்கவிடுவானேன்? (சங். 69: 23) என்கிறார்கள். தேவன் அவர்கள் பாவத்துக்குக் காரணரல்ல. துன்பத்தின் துரிதத்தால் பதறிப் பேசுகிறார்கள். ஆபிரகாம், ஈசாக், இயாக்கோப்முதலிய பக்தியுள்ள முற்பிதாக்களினிமித்தமும், அவர்களோடே செய்த உமது உடன்படிக்கையினிமித்தமும், மீதியான எங்கள் நிமித்தமுமே திரும்பியருளும். (சங். 90: 13) இஸ்ரவேலர் தேவனுடைய சுதந்தரம். எண். 30: 36. இஸ்ரவேலர் தேவனுடைய பரிசுத்த ஜனம். (உபா. 7: 6.)

18-வச. இஸ்ரவேலர் தேவனுடைய பரிசுத்த ஜனம். (உபா. 7: 6.) மற்ற ஜாதியாரிலிருந்து தேவனுக்கு ஊழியஞ்செய்யப் பிரித்தெடுக்கப்பட்டவர்களாமே. இவர்கள் கானான்தேசத்தைக் கொஞ்சக்காலம் அதாவது ஆபிரகாமுதல் தாவீதுவரை 14-தலைமுறைகளும், தாவீதுமுதல் சிறையி

ருப்புவரையும் 14-தலைமுறைகளும் தான் சென்றிருக்கிறது. (மத். 1: 17.) கானானைச் சுதந்தரித்த காலம் 1400-வருஷம் தானுச்சுது. ஆனால் ஆதி கானான்தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேனென்ற (ஆதி. 17: 8.) காலத்துக்கு இது கொஞ்சக்காலம்தான். அல்லது தேவாலயம் 400-வருஷம் மாத்திரம் மகிமையாயிருந்தது. பாபிலோனியர் எருசலேமையும், தேவாலயத்தையும் அழித்துப்போட்டார்கள்.

19. நாங்கள் உம்முடைய ஜனமும், உடன்படிக்கைக்குள்ளானவர்களுமானதால் தேவரீர் எங்களைக் கண்ணோக்கிப் பார்க்கும்படி உமக்கு நியாயமுண்டு. நாங்கள் உம்முடையவர்கள் நாங்கள் அந்நிய இராஜாக்களைச் சேவியோம். (சங். 119: 44.) நீரோ எங்கள் சொந்தமானவர், நாங்கள் உமக்குச் சொந்தமானவர்கள். எங்கள் தேசத்தைக் கட்டிக்கொண்டவர்கள் உமக்குச் சொந்தமல்லவே. உமது நாமமும் அவர்களுக்குத் தரிப்பிக்கப்படவில்லை. எசா. 65: 1. தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்குமிருக்கிற சம்பந்தம் புருஷனுக்கும், பெண்சாதிக்கும், ஜெமானுக்கும், வேலைக்காரனுக்கும், தகப்பனுக்கும் பிள்ளைகளுக்குமுரிய நெருங்கிய சம்பந்தம்போலுள்ளது.

---

## ஏசாயா. 64-அதிகாரம்.

---

முந்தின அதிகாரத்தொடர்ச்சி. திருச்சபைக்கும் தேவனுக்குமுரிய உடன்படிக்கையின் சம்பந்தத்தினால், திருச்சபை தனக்கு நன்மைசெய்யும்படி தேவனை நியாயம்பாராட்டி வழக்காடி ஜெபிக்கிற ஜெபம்.

1, 2-வச. எசா. 63: 15-ல் ஆபத்தும் இடுக்கணுமுள்ள தங்கள் நிலைமையைப் பரலோகத்திலிருந்து பார்க்கும்படி தேவனைப் பிரார்த்தித்தார்கள். இதில் தங்களை விடுதலையாக்க தேவனே வானத்தைக் கிழித்திறங்கி வரும்படி வேண்டுகிறார்கள். யாத். 3: 8. தேவாலயத்தைப் பாழாக்கி, தேவநாமத்தைத் தூஷித்து, தங்களைக் கொடுமையாய் நடப்பிக்கிற சத்துருக்களை வெகு கோபமாய் அழிக்கும்படி மேசியாவின் வருகையை யூதர் அதிகமாய் விரும்பினார்கள். தேவன் தாவீதை விடுதலையாக்கினபோது தமது வல்லமை, நீதி, நன்மை விளங்க அற்புதமான வகையாய் "வானத்தைத் தாழ்த்தி இறங்கினதுபோல (சங். 18: 6—9.) ஆவலாய் வரும்படி இந்தச் சமயத்திலும் கேட்கிறார்கள். தேவன் ஆபத்துக்காலத்தில் துரிதமாய்த் தமது வல்லமையினால் உதவிசெய்கிற வகையை மனித பாஷையின்படி அப்படிச் சொல்லியிருக்கிறது. (சங். 144: 5.) (2) தேவனுக்கு முன்பாக எல்லாத் தடைகளும் நீங்கவேணுமென்பதற்கு, "பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்" என்று சொல்லுகிறார்கள். சங். 68: 1, 2. 97: 5. மீகா. 1: 3, 4. பயங்கரமான அக்கினிச்சுவாலை சீனாய்மலையிலிருக்கையில் தேவன் இறங்கிவந்தார். அக்கினி கக்குகிற மலைகள் ஆறுகளையும் சமுத்திரங்களையும் பொங்கப்பண்ணுவதுபோல தேவகோபமும் சத்துருக்கள்போல் பொங்கும். (3) தேவநாமத்துக்குக் கனமும் மகிமையுமுண்டாக நடப்பிக்க விரும்புகிறார்கள். தேவவல்லமையின் மகத்துவத்தைக் கண்டு சத்துருக்கள் நடுநடுங்கவும், பாபிலோனியரும் அவர்களைச் சூழ்ந்த ஜாதியாரும் பயப்படும்படி செய்யவும் விரும்புகிறார்கள்.

3-வச. தேவரீர் இதற்குமுன் நீர் அற்புதமான வகையாய் உமது ஜனங்களுக்குக் காணப்பட்டதுபோல இந்தச் சமயத்திலும் தம்மைக் காண



பிக்கக் கேட்கிறார்கள். சங். 10: 17. எகிப்தில் தேவன் 10-வாதைகளை விட்டு வாதித்துத் தமது ஜனங்களை விடுதலையாக்கினார். தேவன் தமது பலத்த கையினால் இஸ்ரவேலரை விடுதலையாக்கினார். யாத். 9: 23, 24. தேவன் சீனாய்மலையில் வெகு பயங்கரமாய் இறங்கினார். சங். 114: 4. சத்துருக்கள் பயப்படும்படி என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது. ஆப. 3: 6. எப்படிப்பட்ட வலுமையான சத்துராதிகளையும் தாழ்த்தினார். (நியாயாதி. 5: 4, 5. சங். 68: 7, 8 ) சிலர் இது சனகெரிப்பின் சேனையை அழித்த தேவ வல்லமையைக் குறிக்குமென்பார்கள்.

4-வச. வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட இரக்ஷிப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு தேவனை நம்பி அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களுக்கு எப்படியும் தமக்குச் சித்தமான காலத்தில் தேவன் வெகு அதிகமாயும், நிறைவாயும், சம்பூரணமுமான நன்மைசெய்வார். சங். 31: 19. இது ஒருவகையில் தேவன் தமது ஜனங்களுக்குச் செய்பவைகளை மனித கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை என்பது முந்தின (1—3.) சங்கதிகளைக் குறிக்கலாம். (உபா. 4: 31—35.) தேவன் தமது ஜனங்களுக்குச் செய்த எல்லா அதிசய கிரியைகளையுங் குறிக்கும். தேவன் தமது ஜனங்களுக்கு வாக்குத்தத்தஞ்செய்தவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கு மறைத்து வைத்திருக்கிறார். 1 கொரி. 2: 9. தேவன் அதைத் தமது ஆவியினால் நமக்கு வெளிப்படுத்தினார். ரோ. 16: 25, 26. எபேசி. 3: 9. ஆவிக்குரிய நன்மைகளும் குணப்படாத மனிதருக்குத் தெரியாது.

5-வச. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதில் சந்தோஷமாயிருக்கிறவர்களையும், மகிழ்ச்சியாய்க் கர்த்தரைச் சேவிக்கிறவர்களையும், பரிசுத்தமாய் நடக்கிறவர்களையும் தேவன் சந்திக்கிறார். கெட்டகுமாரனைத் தகப்பன் சந்தித்ததுபோல (லூக். 15: 20. எசா. 65: 24. சங். 21: 2, 3.) இது தேவனுடைய சிநேகம், ஐக்கியம், உறவு இவைகளைக் குறிக்கும். தேவன் தயவாய் அவர்களோடே சம்பாஷிக்கவும், தம்மை வெளிப்படுத்தவும், விண்ணப்பங்களைக் கேட்கவுமாகச் சந்திக்கிறார். (யாத். 20: 24. 29: 43.) தம்மை நோக்கி ஜெபிக்கிற ஜனங்களுக்கு நன்மைசெய்யச் சந்திக்கிறார். (எசா. 65: 24 )

5-வச. நாங்கள் எங்கள் பாவங்களினால் இரக்ஷிப்படைய அபாத்திரராயினும், தேவனே உம்முடைய மாறாத தயவு, நிலையான வாக்குத்தத்தங்களினால் நன்மைசெய்தருளும் என்று ஜெபிக்கிறார்கள். (சங். 89: 30. மி.) இந்த முகாந்தரத்தினால் அநேகம் விசை அழிவுக்குத் தப்பினார்கள். (சங். 78: 38 ) தேவனுடைய நித்தியமான கிருபை உடன்படிக்கையினால் இன்னும் இரக்ஷிக்கப்படுவோமென்கிற நம்பிக்கையுமிருந்தது.

6—12. எரேமியாவின் புலம்பல்போல், இது எசாயாவின் புலம்பல் இரண்டும் ஒரே சங்கதியைப்பற்றியது. இஸ்ரவேலருடைய பாவத்தினால் கல்தேயரால் எருசலேமும் தேவாலயமும் அழிந்த சங்கதியே. ஒன்றுதான் வித்தியாசம். எசாயா தீர்க்கதரிசன ஆவியினால் வெகு தூரத்தில் அந்த அழிவைக் கண்டு புலம்புகிறார். எரேமியாவோ அதின் நிறைவேறுதலைக் கண்டு, அழிவுக்குப்பின் புலம்புகிறார்.

6-வச. யூதர் தங்கள் துன்பத்தில் தங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறார்கள். தாங்கள் தேவனுடைய இரக்கத்துக்குச் சுத்த அபாத்திரரென்பதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். சடங்குப்பிரமாணத்தின்படி குஷ்டரோகிகள் போலத் தீட்டுள்ளவர்கள். லேவி 13: 55 (எசா. 1: 4-6.) ஆசரிப்புக்கூடாரத்துக்குள் வரக்கூடாது. நாங்கள் எல்லாரும் தேவநீதிக்கும் பரிசுத்தத்துக்

கும் சுத்த அருவருப்பானவர்களாம். எங்களுடைய நீதியென்பது எங்களுக்குள் நீதிமான்களென்னப்பட்டவர்களும், குப்பைக்குழியில் எறிந்து போடப்படத்தக்கவர்கள்தான். (2) எங்களுக்குள்ளிருக்கிற செய்கைகளும், பலிகளும், ஆராதனைகளும், மி. அழுக்கான கந்தைகள்போல எங்களைக் கறைப்படுத்துகிறவைகளாமே. நம்மிலுள்ள நல்ல செய்கைகளும் தேவனுக்கு முன்பாகக் கந்தைகளாமே. பிலி. 3: 9. சங். 90: 5, 6.

7-வச. எங்கள் பாவத்தை நீக்க, எங்களைச் சீர்ப்படுத்த எங்களுக்காக உம்மை நோக்கிக் கூப்பிட, ஜெபிக்க ஒருவனுமில்லை. ஜனங்களுக்குள் அழிவு சேதம் நேரிடும்போது, யாக்கோபு, மோசே, தாவீது வேண்டிக்கொள்ள சங்காரம் நிறுத்தப்பட்டது. இப்போதோ வேண்டிக்கொள்ளுகிறவர்கள் ஒருவரும் இல்லாதபடி எல்லாருமே பாவஞ்செய்தார்கள். இதினால் தேவன் அவர்களுக்கு உதவிசெய்யாதபடிக்குத் தமது முகத்தை மறைத்தார். அவர்கள் அசுத்தமானவர்களாய்ப்போனதால் தேவன தமது முகத்தை மாறவைத்துக்கொண்டார். சங். 90: 7, 8.

8. தாழ்மையாக இரக்கத்துக்காகக் கெஞ்சுகிறார்கள். சிருட்டிப்பினாலும், புத்திரசுவிகாரத்தினாலும், பிள்ளைகளான எங்களைப் பிதாவடைவாய் இரக்கஞ்செய்யும். நாங்கள் கெட்ட குமாரனைப்போல பிதாவண்டை திரும்புகிறோம். எரே. 18: 6. நாங்கள் அசுத்தராயினும், நாங்கள் உம்மால் உருவாக்கப்பட்டதால் தள்ளாதேயும். சங். 138: 8 என்கிறார்கள்.

9. தங்கள் பாவங்களை மன்னிக்கவும், தேவன் தமது கோபத்தை மாற்றவும் போராடுகிறார்கள். சங். 79: 8. ஏசா. 63: 19. சங். 28: 9.

10-வச அவர்களுடைய நிர்ப்பந்தமான நிலைமை எருசலேம் முதலிய யூதாவின் பட்டணங்கள். (1) தேவனுடைய சுதந்தரமானதாலும் ஏசா. 63: 17. (2) பரிசுத்தமுள்ள யூதர் குடியேறினதாலும் உபா. 7: 6. தானி. 12: 7. (3) அங்கே தேவனை ஆராதிக்கும்படி ஜெனகோகுகளிருந்தபடியாலும் சங். 74: 8. அவைகள் தேவனுடைய பட்டணஙகளென்று அழைக்கப்படுகின்றன. அந்தப் பட்டணங்கள் கல்தேயரால் அழிக்கப்பட்டு, அதின் குடிகள் சிறைகளாய்ப்போனதால் வனாந்தரமாயின.

11. தேவனுடைய வீடும் ஏசா. 60: 7. பாழாயின. தேவாலயத்தில் நாங்களும் எங்கள் பிதாக்களும் உம்மைத் துதித்து, உமது மகிமையுள்ள சமூகம் எப்போதும் காணப்பட்டது. எங்களுடைய இன்பமான ஸ்தானங்கள் என்பது இராஜ அரண்மனைகளும், பிரபுக்கள் வீடுகளுமே (2 இரா. 25: 9. புலம். 17: 10) ஜெனகோகுகளையும் குறிக்கும். தேவாலயப் பணிமுட்டுகளும், பலிபீடம், ஓய்வுநாள்களும், அமாவாசைகளும், பண்டிகைகளும் பாழாயின. லேவியர் ஆசாரியரான போதகர்களும் பாழானார்கள்.

12-வச. ஜெபத்தின் முடிவு. மேற்காட்டிய நியாயங்களினால் பாபிலோனியரைத் தண்டிப்பதிலும், எங்களை மீட்பதிலும் மௌனமாயிராதேயும். (சங். 74: 22.) "ஆண்டவரே எழுந்தருளும், உமக்காக நீர் வழக்காடும்." (சங். 83: 1.) (109: 1) என்பதே.

---



## 1883—84-ஞு-ல் ரிசல்ட் கிரான்று பள்ளிக்கூடங்கள் சோதனையாகும் தேதியைக் காட்டிய அட்டவணை.

---

### திருநெல்வேலித் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

1 பாளையங்கோட்டை போர்டிங். டிசம்பர் 12, 13 1883

### நாங்குனேரித் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 இடையன்குளம். | ஜுன். 18 83 | 115 செட்டியார்புதூர். | ஆக. 6-8 83 |
| 2 ஆதிச்சப்பேரி. | ,, | 117 சுவிசேஷபுரம். | ஆக. 9-13 83 |
| 8 துவரைகுளம். | ஜுன் 20 83 | 118 ஷை ஷை | ,, |
| 9 பெருமாள்குளம். | ஜுன் 21-23 | 119 இட்டமொழி. | ,, |
| 13 களக்காடு மிஷன். | ஜுன் 21-23 | 120 பெரும்பனை. | ,, |
| 27 டோனாவூர். A. V S. | ஜுன் 25-30 | 121 சுப்பிரமணியபுரம். | ,, |
| 28 டோனாவூர். A. V. S. | ,, | 122 புதூர். | ,, |
| 29 நல்லமரம். | ,, | 123 நன்னிகுளம். | ,, |
| 31 ஆனைகுளம். | ,, | 124 மீனாக்ஷிநாதபுரம். | ,, |
| 32 இடைகாடுபுதூர். | ஜுலா. 2-4 83 | 125 எராந்தை. | ,, |
| 33 சின்னம்மாள்புரம். | ,, | 126 கினாக்காரன்தட்டு. | ,, |
| 34 கண்டிகைப்பேரி. | ,, | 130 ஆலங்குளம். | ஆகஸ். 14, 15 83 |
| 35 மைலாப்புதூர். | ,, | 131 குளத்துக்குடி. | ஆகஸ். 16, 17 |
| 36 கண்ணநல்லூர். | ஜுலா. 2-4 83 | 132 கழுதூர். | ,, |
| 43 திருமலாபுரம். | ஜுலாய் 5-9 | 133 பாப்பான்குளம். | ,, |
| 45 கள்ளிகுளம். | ,, | 134 பரப்பாடி. | ,, |
| 46 காவல்கிணறு. | ,, | 135 எமன்குளம். | ,, |
| 47 சகாயபுரம். | ,, | 136 சயன்ஹில். | ஆகஸ். 16, 17 83 |
| 48 விசுவாசபுரம். | ,, | 141 கலிங்கடி. | ஆகஸ்து. 20-25 |
| 49 மடப்புரம். | ,, | 142 தட்டான்குளம். | ஆக. 20-25 83 |
| 52 பணகுடி. | ஜுலாய் 10, 11 83 | 143 ஒன்னன்குளம். | ,, |
| 56 பேர்ப்பூலான்குளம். | 12-14 83 | 144 முனைஞ்சிப்பட்டி. | ,, |
| 57 புதூர். | ,, | 145 கோடன்குளம். | ,, |
| 58 நாசரேத். | ,, | 146 காடன்குளம். | ஆக. 27, 28 83 |
| 113 சமாரியா. | ஆகஸ்து 6-8 83 | 147 துத்திகுளம். | ,, |
| 114 சோதிநகரம். | ,, | 148 கீருன்குளம். | ,, |

| | |
|---|---|
| 149 மேலக்குளம். ஆக. 27, 28 83 | 157 மருதகுளம். ஆகஸ். 30, 31 83 |
| 150 ரெட்டாகுளம். ,, | 158 மூன்றுடைப்பு. செப். 1-3 83 |
| 152 அம்பலம். ஆகஸ்து 29 83 | 159 வேதபுரம். ,, |
| 154 ஆழ்வாநேரி. ,, | 160 புதுக்குளம். ,, |
| 155 கோவைகுளம். ஆக. 30, 31 83 | 161 பாணன்குளம். ,, |
| 156 பூலிபாட்டம். ,, | |

## அம்பாசமுத்திரம் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்

| | |
|---|---|
| 10 காரிசுறிச்சி. ஆகஸ். 20-22 83 | 89 திருமலையப்பபுரம். டிச. 15-20 |
| 20 வீரவநல்லூர். 24-31 | 96 கடையம். ,, |
| 32 செவ்வல். நவம்பர் 9-13 83 | 98 சேர்வைகாரன்பட்டி. ,, |
| 36 கோபாலசமுத்திரம். நவ. 14, 15 | 99 கோவிலூத்து. டிசம். 21, 22 |
| 37 சமாதானபுரம். நவம்பர் 16 | 100 ஐந்தாங்கட்டளை. ,, |
| 38 கரிசல். ,, | 101 மேட்டூர். ,, |
| 39 ஒடக்கரை. ,, | 102 புலவனூர். ,, |
| 42 ரெட்டியாபுரம். நவம்பர் 17 | 103 மைலப்பபுரம். ,, |
| 51 முதலியப்பபுரம். நவம். 19-23 | 104 மறாம்புதூர். ஜனுவரி 5 84 |
| 57 அம்பாசமுத்திரம். நவம். 26-30 | 105 சிவலசமுத்திரம். ஜனு 5 83 |
| 61 பிரமதேசம். டிசம்பர் 1-4 83 | 106 ஒடைமறித்தான். ,, |
| 65 இடைகால். ,, | 109 பாப்பாக்குடி. ,, |
| 68 கொண்டப்பையன்பட்டி. 5, 6 | 110 முக்கூடல். ,, |
| 71 கலியாணிபுரம். டிசம்பர் 7-12 | 117 சாட்டுப்பத்து. ஜனு. 7-13 83 |
| 72 கருத்தப்பிள்ளையூர். ,, | |

## தென்கரைத் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

| | |
|---|---|
| 3 ரெட்டியார்பட்டி. ஜனு. 17 84 | 54 வாழவல்லான்தெரு. பெ. 6-13 |
| 5 மேலக்கலங்கல். ஜனு. 18-21 | 59 அடைக்கலபட்டணம். 14, 15 |
| 6 கருவந்தாவு. ,, | 60 கல்லூரணி. ,, |
| 7 ஊத்துமலை. ,, | 61 ஆவுடைநாடானூர். ,, |
| 8 கண்ணுடிகுளம். ,, | 62 பெத்தநாடான்பட்டி. ,, |
| 9 ருக்குமணிபுரம். ,, | 63 கிருஷ்ணப்பேரி. ,, |
| 10 குருக்கள்பட்டி. ஜனு. 22 84 | 68 நாகக்குளம். பெபுரு. 16-19 84 |
| 13 சொக்கம்பட்டி. ஜனுவரி 24 | 71 சுரண்டை. பெபுரு. 20-26 |
| 36 இலஞ்சி. பெபுருவரி 1-5 | 72 மேலச்சுரண்டை. ,, |



| | |
|---|---|
| 73 புதுச்சுரண்டை. பெபுரு. 20-26 | 82 சிவலார்குளம். மார்ச்சு. 1-6 84 |
| 74 அதிசயபுரம். ,, | 84 நல்லூர். ,, |
| 76 பாவநாசபுரம். ,, | 85 நல்லூர் (டே) ,, |
| 78 பறங்குறைபுரம். பெபு. 27-29 | 86 ஆலங்குளம். ,, |
| 79 ராஜகோபாலப்பேரி. ,, | 87 குருவன்கோட்டை. ,, |
| 80 வீராணம். ,, | |

## சங்கரநயினார்கோவில் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

| | |
|---|---|
| 537 புளியங்குடி. பெபுரு. 19 84 | 546 அருணசலபுரம். பெபுரு. 21 |
| 545 மடத்துப்பட்டி. பெபுரு 21 | 565 திருமலபுரம் மிஷன். பெபு. 28 |

---

# வேதசித்தாந்தப் பிரமாணங்கள்.

## III-ம் பிரமாணம்.

(தொடர்ச்சி.)

நமது இரக்ஷகர் பாதாளங்களிலே இறங்கினார் என்ற வார்த்தை ஆதி முதல் விசுவாசப்பிரமாணத்தில் இருக்கவுமில்லை. அவை சேர்க்கப்பட்ட போது யாவராலும் அங்கீகரிக்கப்படவுமில்லை. கி. பி. 400-வருஷத்தில் அக்குயித்தேன் (Aquitein) என்னும் சபை முதல்முதல் அந்த வார்த்தைகளை அங்கீகரித்தது. ரவ்வின் (Ruffin) என்பவர் தமது விசுவாசப்பிரமாணத்தில் அந்த வார்த்தைகள் இருந்தன என்கிறார். ஐசேபியுஸ் முதலிய நூலாசிரியர் இதைக்குறித்துப் பேசுகிறார்கள் என்பது யாவரும் ஒத்துக் கொள்ளுகிற காரியம்.

இந்தப் பிரமாணத்தைக்குறித்து விபரமாய்ப் பேசுமுன் அதின் பொதுவான நோக்கத்தைக் கவனிப்பது நல்லது. ஆரியரும் அப்பொலோனாரியரும் நமது கர்த்தருக்கு மனுஷீக தன்மைக்குரிய ஆத்துமம் இல்லை என்றார்கள். இந்தப் பிரமாணம் அதற்கு எதிரிடையாக நமது கர்த்தர் பகுத்தறிவுள்ள ஆத்துமாவும் மாம்சதேகமும் பொருந்திய பூரண மனிததன்மையுடையவராயிருக்கிறார் என்றும் மனிதர் யாவருக்கும் நேரிடுகிறபடி அவருடைய மனிததன்மையின் ஓர் பாகமாகிய ஆத்துமா அவருடைய மரணத்தில் பிரிக்கப்பட்டது என்றும் சொல்லுகிறது.

I. பாதாளம் என்கிற வார்த்தையின் அர்த்தம்.

II. நமது கர்த்தர் பாதாளத்தில் இறங்கினார் என்பதினால்.

III. நமது கர்த்தர் பாதாளத்தில் இறங்கின நோக்கம் ஆகிய மூன்று காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

I. பாதாளம் என்கிற வார்த்தையின் அர்த்தம்.

I. 1. பதார்த்தம். பதத்தின் உற்பத்தி. 2. சரித்திர வகையாய்ப் பாதாளம் என்னும் வார்த்தையின் அர்த்தம். 3. வேதாகமத்தில் அந்த வார்த்தைக்கு அர்த்தம்.

I. 1. பாதாளம் என்னும் வார்த்தையும் அந்த வார்த்தையின் உற்பத்தியும். வேதாகமத்தில் வருகிற ஆதேஸ் என்னும் வார்த்தையை விசுவாசப்பிரமாணத்திலும் வேதமார்க்கப்பிரமாணத்திலும் பாதாளம் (Hell, inferi) என்று மொழி பெயர்த்திருக்கிறது.

கவனிப்பு. கெயன்ன என்னும் கிரேக்கு வார்த்தையை இங்கிலீஷ் வேதாகமத்தில் நரகம் அல்லது பாதாளம் (Hell) என்று மொழி பெயர்த்திருக்கிறது. ஆனால் விசுவாசப்பிரமாணத்திலாகிலும் திருச்சபையிலாகிலும் அது நமது இரக்ஷகர் மரணமடைந்தபோது போன இடத்துக்குப் பேராக வழங்கப்படுகிறதில்லை. அது நியாயந்தீர்க்கப்பட்ட துன்மார்க்கர் வேதனையை அனுபவிக்கும் இடம்.

ஆதேஸ் என்னும் கிரேக்குப் பதமும் இன்வேரி (inferi) என்னும் இங்கிலீஷ் பதமும் பாதாளம் என்னும் சமஸ்கிருத பதமும் உற்பத்தியின்படி பார்க்கும்போது அர்த்தத்தில் ஒன்றுதான். ஆதேஸ் (a+eidos)=காணப்படாதது. இன்வேரி (inferi)=கீழே யுள்ளது. செல் (hell)=மூடப்பட்ட இடம். (helan) பாதாளம்=கீழேயுள்ளது. பத=இறங்கு.

I. 2. சரித்திர வகையாய்ப் பாதாளம் என்னும் வார்த்தையின் அர்த்தம். A. கிரேக்கர் அதை வழங்கின அர்த்தம். B. யூதர் வழங்கின அர்த்தம். C. கிறிஸ்தவர்கள் வழங்கின அர்த்தம்.

2. A. கிரேக்கர் வழங்கின அர்த்தம் என்னவென்றால் அடக்கம்செய்தபின் மரித்தவர்களுடைய ஆவிகள் போன இடத்தைக் குறிக்கவே அவர்கள் வழங்கினார்கள். B. உயிர்த்தெழும்பும் காலம்வரைக்கும் மரித்தவர்களுடைய ஆத்துமா இருக்கவேண்டிய ஒரு நிலைமை உண்டென்றும் அந்த நிலைமையில் சரீரம் பிரிந்திருந்தாலும் ஆத்துமா இன்பத்தை அல்லது துன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் என்றும் யூதர்கள் நம்பினார்கள். இந்த நிலைமையை அவர்கள் ஆதேஸ் அல்லது எபிரேய பாஷையின்படி ஷேயோல் என்று அழைத்தார்கள். C. கிறிஸ்தவர்கள் வழங்குகிற விதம். ஆதிக்கிறிஸ்தவர்கள் நியாயத்தீர்ப்புக்கும் மரணத்துக்கும் இடையில் ஒரு நிலைமை உண்டென்று விசுவாசித்தார்கள். இந்த நிலைமையை ஆதேஸ் என்று அழைத்தார்கள்.

I. 3. வேதாகமத்தில் பாதாளம் என்னும் சொல் வழங்குகிற அர்த்தம். A. ஆத்துமாவானது சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடனேயே தன்தன் நித்திய பலனை அனுபவிக்கப்போகிறது என்று வேதாகமத்தில் சொல்லப்படுகிறதில்லை. யோவா. 3: 13 லூக். 23: 43. வெளி. 6: 9. மரித்துப்போனவர்களைக் குறித்துப் பேசும்போது நமது இரக்ஷகராவது அவருடைய சீஷர்களாவது மரித்துப்போனவர்கள் மோக்ஷத்திலிருக்கிறார்கள் என்று விசுவாசிகளுக்கு ஆறுதலாகச் சொல்லுகிறதுமில்லை. அல்லது துன்மார்க்கர் மரித்தவுடனே நித்திய நியாயத்தீர்ப்புப் பெற்று நரகத்துக்குப் போகிறார்கள் என்று சொல்லி பயமுறுத்திப் பேசவுமில்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதலையும் மகாநாளின் நியாயத்தீர்ப்பையுமே நோக்கிப் பார்க்க வைகிறார்கள். மத். 13: 40. 16: 27. 25: 31. 32. B. ஆத்துமா சரீரத்தோடு மரித்துப் போகிறதுமில்லை. அல்லது கடைசிநியாயத்தீர்ப்புமட்டும் தன் நினைவு அற்று நித்திரையாயிருக்கிறதுமில்லை. 1 சாமு. 28: 2. லூக். 16. மத். 10: 28. C. ஆத்துமாவானது ஷேயோல் அல்லது ஆதேஸ் என்றழைக்கப்படு



கிற ஒரு இடைநிலைமையிலிருக்கிறது. திருட்டாந்தம். கள்ளன்; லாசரு; அது துன்மார்க்கர் ஒருவாறு துன்பத்தை அனுபவித்துக்கொண்டும் இன்னும் ஆக்கினைத்தீர்ப்பு வருமென்று எதிர்பார்த்திருக்குதலாகிய துன்பத்தை அனுபவித்துக்கொண்டும் இருப்பார்கள்.

---

## தீர்க்கதரிசனம், அருள்வேதத்திற்கு அத்தாட்சி.

(தொடர்ச்சி.)

மேசியாவாகிய கிறிஸ்துநாதரைக்குறித்து உரைக்கப்பட்ட மேற்காட்டிய சகல தீர்க்கதரிசனங்களும் நிறைவேறிவிட்டது. அவைகள் ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டில் விரியும். பழையஏற்பாட்டையும் புதியஏற்பாட்டையும் கவனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தீர்க்கதரிசனங்களின் மகத்துவமும் பூரணமாகவும் வெகு நுட்பமாகவும் அவைகள் நிறைவேறியிருப்பதும் பரீஷ்காரமாய்த் தெரியவரும். வேதாகம நூலில் மாத்திரமல்ல, அவைகள் நிறைவேறின காலத்திலிருந்த யோசேப்பென்று பேர் வழங்கிய யூதசரித்திராசிரியன் அவைகளை எல்லாம் சரித்திரப்போக்காக எழுதியிருக்கிறான். முன் அவதாரமான கிறிஸ்துநாதரே பழையஏற்பாட்டில் தெளிவாய்க் கூறப்பட்ட மேசியாவென்பதை ஒப்புக்கொள்ளாமல் வேறொரு மேசியாவின் வருகைக்காக யூதர்கள் தற்காலம்வரை எதிர்பார்த்திருந்தாலும் அவர்களுக்குள் வழங்கிவருகிற தால்மூத் மிஷனா என்ற இரண்டு புஸ்தகங்களிலும் மேற்காட்டிய தீர்க்கதரிசனங்கள் சம்பந்தமாய்க் கிறிஸ்துநாதருடைய ஜீவிய விர்த்தாந்தம் அடங்கியிருக்கிறது.

கிறிஸ்துமத நூலில் மேசியாவைப்பற்றி மாத்திரமல்ல வேறு பல தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன. யூதஜாதியாரைக்குறித்துத் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. ஆபிரகாமின் சந்ததியார் விர்த்தியாகி பலத்த ஜாதியாராவதும் அவர்கள் அடிக்கடி நடப்பித்துக்கொண்டுவரும் தீமைகளினிமித்தம், உடனேயாவது பிற்காலங்களிலாவது அவர்களுக்கு உண்டாகும் பலவித துன்பங்களும் கூறப்பட்டன. இவைகளிற் பல நிறைவேறியும் சில நிறைவேறாமலும் இருக்கின்றன.

யூதர்களைச் சூழ்ந்திருந்த இராஜ்யங்களைக்குறித்தும் சில சில இராஜ்யங்கள் பட்டணங்களின் உயர்வையும் தாழ்வையும் பற்றித் தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டன. அவைகள் பொதுப்பட நிறைவேறியாய் விட்டது. ஹெரொடொற்றஸ், செனபன், டியாடாரஸ் முதலிய கிரேக்க சரித்திராசிரியர் பலர் அவைகளையெல்லாம் எழுதியிருக்கிறார்கள். கிறிஸ்துமத அத்தாக்ஷிகளாக வேண்டுமென்று எழுதாமல் தங்கள் காலத்திலும் தங்கள் தேசத்திலும் நடந்தவைகளைச் சரித்திரப்போக்காய் எழுதியிருக்கிறார்கள்.

எருசலேம்பட்டணத்தினழிவும் கிறிஸ்துமத விர்த்தியும் அதற்குச் சம்பவிக்கும் பலகாரியங்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் உலக முடிவும் இவைகளோடு சம்பந்தப்பட்ட பல காரியங்களும் தீர்க்கதரிசனங்களாக உரைக்கப்பட்டன. இவைகள் நிறைவேறியும், நிறைவேறிக்கொண்டும் நிறைவேறாமலும் இருக்கின்றன. மேற்கூறிய பலவித தீர்க்க

தரிசனங்கள் நிறைவேறினதை பற்பலரால் அந்தந்தக் காலங்களில் எழுதப்பட்ட புஸ்தகங்களை வாசிப்பதினால் அறிந்துகொள்ளலாமாயினும் தற்காலத்தில் கண்ணாலே காணக்கூடியதும் கவனிக்கக் கூடியதுமான பல காரியங்கள் உண்டு. அவைகளிற் சிலவற்றை மாத்திரம் பார்ப்போம்.

1. இஸ்மவேலர் இவர்கள் ஆபிரகாமின் குமாரனாகிய இஸ்மவேலின் சந்ததியார் அவன் பிறப்பதற்கு முன்னாகவே அவன் துஷ்ட மனுஷனாயிருப்பானென்றும் அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும் எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாக இருக்கும் என்றும் அவன 12-பிரபுக்களைப் பெற்று அவர்களால் பெரிய சந்ததி ஒன்று உண்டாகுமென்றும் தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டன. அவைகள் நிறைவேறி வருகின்றன. இஸ்மவேல் என்பவன் துஷ்டனாக இருந்ததுமல்லாமல் அவனுடைய வம்சத்தாரும் அப்படியே இருந்து வருகிறார்கள். அராபியரே இஸ்மவேலின் சந்ததியாரென்பது அவர்களுடைய வாய்மொழியினாலும் மற்றும் சரித்திரங்களினாலும் தெளிவாயிருக்கிறது. இந்த அராபியர் மிகவும் பிரபல துஷ்டர்களாகவும் கூட்டங் கூட்டமாய் அலைந்து திரிந்து கொள்ளையிடுகிறவர்களாயும் எவருக்கும் விரோதிகளாயும் இருக்கிறார்கள். இவர்களைக் கீழ்ப்படுத்தும்படி பற்பல இராஜாக்கள் முயன்றும் ஒருவராலுங் கூடாமற்போய்விட்டதால் சுயாதீனராகவே இன்னாள்வரைக்கும் இருக்கிறார்கள்.

2. யூதர்கள் இவர்கள் யூதாவின் வம்சத்தார், இஸ்ரவேலரென்றும் பேர். இவர்களைப்பற்றிப் பல தீர்க்கதரிசனங்கள் பழைய புதிய ஏற்பாடுகளில் உரைக்கப்பட்டிருக்கின்றன; விசேஷமாய்,

(1) அவர்கள் கானான்தேசத்தைச் சுதந்தரிப்பார்களென்றும் தாங்கள் செய்யும் அக்கிரமங்களினிமித்தம் அதினின்று துரத்தப்படுவார்களென்றும் உரைக்கப்பட்டது. அப்படியே இஸ்ரவேல் ஜனங்கள் கானான்தேசத்தைச் சுதந்தரித்துப் பின்பு அதினின்று துரத்தப்பட்டார்களென்று வேதாகம நூலில் விளங்குவது மாத்திரமல்ல, தற்காலத்தில் அவர்கள் உலகத்தின் பல தேசங்களிலும் சிதறியிருப்பதினாலும் தெரியவரும்.

(2) யூதர்களுக்குப் பலவித உபத்திரவங்கள், துன்பங்கள் நேரிடுமென்றும் அவர்களுடைய தேசம் பாழாக்கிவிடப்படுமென்றும் விரிவாய் உரைக்கப்பட்டன. யூதர்கள் தங்கள் தேவனை நமஸ்கரியாமல் விக்கிரகங்களை வணங்க ஆரம்பித்து அக்கிரமங்களை நடப்பித்ததினாலும், சில சில நாட்களிலும் வருடங்களிலும் தாங்கள் ஓய்ந்திருப்பதோடுங் கூட தங்கள் தேசத்தையும் வேளாண்மையின்றி ஓயவிடவேண்டுமென்று கர்த்தா விதித்த கற்பனைகளை மீறி நடந்ததினாலும் அவர்கள் பஞ்சம், கொள்ளை, நோய்முதலிய உபத்திரவங்களால் பலமுறை தண்டிக்கப்பட்டு எகிப்தியர், அசூரியர், பாபிலோனியர் முதலிய பலரால் சிறைகளாகக் கொண்டு போகப்பட்டு, விற்கப்பட்டு வெகுவாய் ஒடுக்கப்பட்டார்கள். கடைசியாய்த் தங்கள் இரக்ஷகராக அவதரித்த ஏசுக்கிறிஸ்துநாதரை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் அசட்டைசெய்து சிலுவையில் அறைந்துகொன்றதினால் ரோமர் அவர்களில் அநேகரைக் கொன்று மீந்த ஜனங்களைப் பூமியின் பல இடங்களிலும் சிதறடித்தார்கள். அவர்கள் சகலருக்கும் அதிசயமும், பரியாசமும், நிந்தையுமாய்த் திரிந்து அலைகிறதுமன்றி அவர்களுடைய நாடுநகரங்கள் யாவும் பாழ்ஞ்சேரியாய்த் தற்காலமட்டும் கிடக்கின்றன.

(இன்னும் வரும்.)

---



## சமாசாரத்திரட்டு.

கவர்ணர் ஜெனரல் அடுத்த அக்ற்றோபர்ீ சென்னபட்டணத்துக்கு வருவாராம்.

சென்னபட்டணத்தில் ஒரு பிஷீடருடைய மனைவி லண்டன் பட்டணத்திற்குப்போய் வைத்திய வித்தையில் கடைத்தேறி மிகவும் உயர்ந்த பட்டம் பெற்றதாகவும் இராணியவர்கள் அவளைத் தமது சமூகத்திற் வரவழைத்து அவளுக்குக் கிடைத்த அரிய காரியசித்தியினிமித்தம் சந்தோஷம் பாராட்டி அவள் இந்தியாவில் சேர்ந்தபின் சுதேச ஸ்திரீகளின் சௌபாக்கியத்தின்பேரில் தாம் அதிக சிரத்தையுற்றிருக்கிறதை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் அறியலானோம்.

சூவேல் பூசந்தியின் வழியாய் பின்னொரு கால்வாய் செய்யும் வேலையை முந்தின கால்வாய் செய்த பிரான்சிய இயந்திரிகனுக்கு ஒப்புவியாமல் இங்கிலாந்திலுள்ள வர்த்தகன்மாரே செய்யப்போகிறார்களாம்.

ராஜமந்திரியில் பிராமணருக்குள் இப்பொழுது ஒரு விதவை விவாகம் நிறைவேறியது. இதுவே இவ்விடத்தில் நடந்த 9-ம் விதவை விவாகம்.

இந்தியாவில் வருஷாந்தரம் ௰௲ முதல் ௨௰௲-பேர் மட்டும் சர்ப்பக்கடியால் மாளுகிறார்கள்.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடைப்பட்ட சமுத்திர வாய்க்காலை நீந்திக்கடந்த பேர்போன நீச்சுக்காரனாகிய உவெப் என்னும் கப்தான் ௨-லட்சம் ரூபாய் பந்தயத்தை நாடி நையாகரா அருவிக்குத் தாழ்ந்த நீரோட்டத்தை நீந்திக்கடக்க எத்தனித்ததில் அமிழ்ந்திறந்தான்.

இத்தாலிக்குச் சமீபமான ஒரு தீவில் ௫௲-பேர் பூமியதிர்ச்சியினால் இறந்தார்கள்.

ஸ்பானியாதேசத்துக் குடிகளில் அநேகர் ராஜாங்கத்தை வெறுத்து பிரஜாதிபத்தியமே வேண்டுமென்று வாதாடுகிறார்கள். அதனால் அங்கே அநேக கலகங்கள் நடக்கின்றன.

சூலு அரசனாகிய சீத்திவாயோ என்பவன் யுத்தத்தில் காயப்பட்டதேயன்றி கொல்லப்படவில்லை என்றும், காயம் இப்பொழுது வாசியாகி வருகிறது என்றும் செய்தி வந்தது.

பர்மாதேசத்து அமராபுரத்தில் ௨௲௧௱௭௰ வயதுள்ள ஒரு பெருமாமிருக்கிறதாம். அது கி. மு. ௨௮௭-ம் வருஷத்தில் நடப்பட்டதாய் இருக்கவேண்டும்.

இப்போதிருக்கும் ஐரோப்பிய அரசர்கள் ஏறக்குறைய ௨௰-பேர் இவருள் அதிவயோதிபர் ஜர்மனிய சக்கரவர்த்தி. வயசு ௮௬. அதி இளைஞர் ஸ்பானிய ராஜர். வயசு ௨௫. வயசு நிரையில் நாலாம் ஆள் நம்சக்கரவர்த்தினி அவர்களுக்கு இப்போது வயசு ௬௪. இவர் மகுடாதிபதியாகி ௪௬ வருஷங்கள்.

---

செப்தெம்பர்மீ நாள்-30. ஆவணிமீ 18உ முதல், புரட்டாசிமீ 16உ வரை

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | கஅ | எனக்கு இரக்கம் கிடைக்கப்பண்ணியருளும். நெக. 1: 11. |
| ஞா | 2 | ககூ | என் தேவனுடைய தயவுள்ள கரம் என்மேல் இருந்தது. 2: 8. |
| தி | 3 | உ0 | ஆசாரியர்களும்......கட்டினார்கள். 3: 1. |
| செ | 4 | உக | நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார். 4: 20. |
| பு | 5 | உஉ | எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும். 5: 19. |
| வி | 6 | உங | இந்தக் கிரியை எங்கள் தேவனால் கைகூடி வந்தது. 6: 16. |
| வெ | 7 | உச | பட்டணம் விஸ்தாரமும் பெரிதுமாயிருந்தது. 7: 4. |
| ச | 8 | உரு | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடையபெலன். 8: 10 |
| ஞா | 9 | உசா | நீர் நீதியுள்ளவர் நீர் உண்மையாய் நடப்பித்தீர். 9: 33. (10: 29. |
| தி | 10 | உஎ | தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்படி நடந்துகொள்ளுவோம் |
| செ | 11 | உஅ | பெத்தகியா ஜனத்தின் காரியங்களுக்கெல்லாம் ராஜாவின் சமுகத்தில் |
| பு | 12 | உகூ | எருசலேமின் களிப்பு தூரத்திலே கேட்கப்பட்டது. 12: 43. |
| வி | 13 | ஙூ0 | உம்முடைய மிகுந்த கிருபையின்படி எனக்கு இரங்குவீராக 13: |
| வெ | 14 | ஙூக | ஆகாஸ்வேரு... (மகிமை) ... விளங்கச்செய்து கொண்டிருந்தான். |
| ச | 15 | க | ராஜஸ்திரிக்குத்தக்க வெகுமானங்களைக்கொடுத்தான். எஸ். 2: 18. |
| ஞா | 16 | உ | ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள். 3: 8. |
| தி | 17 | ங | யூதருக்குள்ளே...அழுகையும், புலம்பலும் உண்டாயிற்று. 4: 3. |
| செ | 18 | ச | ராஜா...பொற்செங்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டினான். 5: 2. |
| பு | 19 | ரு | ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்னசெய்யப்பட |
| வி | 20 | சா | இதோ, ராஜாவின் நன்மைக்காகப் பேசின மொர்தெகாய். 7: 9. |
| வெ | 21 | எ | யூதருக்கு...களிப்பும், கனமும் உண்டாயிற்று. 8: 16. (கள். 9: 14. |
| ச | 22 | அ | ஆமானின் பத்துக்குமாரருடைய உடலையும் தூக்கிப்போட்டார் |
| ஞா | 23 | கூ | ஆகாஸ்வேரு...தீவுகளின்மேலும், பகுதி ஏற்படுத்தினான். 10: 1. |
| தி | 24 | க0 | யோபு...தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை. யோபு 1: 22. |
| செ | 25 | கக | தேவன் கையிலே நன்மையைப்பெற்ற நாம் தீமையையும் பெறவே |
| பு | 26 | கஉ | என் கதறுதல்வெள்ளம்போல்புரண்டுபோகிறது. 3: 24. (ண்டாமோ |
| வி | 27 | கங | தீவினையை விதைத்தவர்கள், அதையே அறுக்கிறார்கள் 4: 8 |
| வெ | 28 | கச | இதோ, தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். 5: 17. (11. |
| ச | 29 | கரு | என் சிவனை நீடித்திருக்கப்பண்ண என்முடிவு எப்படிப்பட்டது? 6: |
| ஞா | 30 | கசா | என் நாட்கள் மாயைதானே. 7: 16. |

## விசேஷ நாட்கள்.

1. அமாவாசை.
2. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 15-ம் ஞாயிறு.
9. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 16-ம் ஞாயிறு.
16. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 17-ம் ஞாயிறு.
17. பௌர்ணமி.
21. பரி. அப். மத்தேயுவின் திருநாள்.
23. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 18-ம் ஞாயிறு.
29. பரி மிகாவேல் மற்றும் சகல தேவதூதர்களின் திருநாள்.
30. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 19-ம் ஞாயிறு.


# நற்போதகம்.

ய. அக்டோபர்மீ. தூஅஅங௵.


## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### கூ-ம் அதிகாரம்.

### கர்த்தருடைய ஜெபம்.

### ரு-ம் பிரிவு.

### மூன்றாம் விண்ணப்பம்.

(தொடர்ச்சி.)

வினா. இந்த விண்ணப்பத்தைச் சொல்லுகிறவர்கள் அதின் கருத்துப்படி நடக்கக் கவலைப்படவேண்டாமா?

விடை. அதின்படி நடக்கக் கவலைப்படவேண்டும்.

1. தேவனுடைய பரிசுத்த வசனம் சொல்லுகிறபடி நம்பி, விரும்புகிறபடி கீழ்ப்படியவேண்டும்.

என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். சங். 40: 8.

சங். 119: 32, 34. மத். 7: 21. மாற். 3: 35. யோவா. 4: 34. எபே. 6: 6.

தேவனுடைய சித்தம் நம்முடையது அல்லது மற்றவர்களுடையது என்றும் தெரிந்துகொள்ளப்படவேண்டும். மேலும் பொல்லாதவர்கள் பிசாசின் சித்தத்தின்படி செய்கிறார்கள் என்பதை நினைத்துக் கொள்ளவேண்டும்.

பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டிருக்கிற அவர்கள் மீ. 2 தீமோ. 2: 26.

2. தங்களுக்குக் கிடைத்திருக்கிற எல்லா இரக்கங்களுக்காகவும் நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டும்.

எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். எபே. 5: 20.

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம்செய்யுங்கள். 1 தெச. 5: 18.

பரி-பவுல் குணப்படாத யூதஜாதியாரைக்குறித்துச் சொல்லும்போது (ரோ. 1: 21.) அவர்கள் தேவனை ஸ்தோத்திரியாமலும், (2 தீமோ. 3: 2.) நன்றியறியாதவர்களாயும் பரிசுத்தமில்லாதவர்களாயும் இருக்கிறார்கள் என்று சொல்வதை நாம் நினைத்துக்கொள்ளவேண்டும்.

3. பெரிய துன்பங்களிலும் பொறுமையோடு தேவசித்தத்துக்கு அடங்கியிருக்கவேண்டும்.

நாதாபும், அபியூவும் அந்நிய அக்கினியை தேவனுடைய சந்நிதியில் கொண்டுவந்ததினிமித்தம் அவர்கள் சாக அடிக்கப்பட்டபோது, அவர்களுடைய தகப்பனாகிய ஆரோன் பொறுமையாயிருந்தான். லேவி. 10: 1—3.

நீரே இதைச் செய்தீரென்று நான் என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன். (சங். 39: 9) என்று தாவீது சொன்னான்.

நமது இரக்ஷகர் பிதாவின் சித்தத்துக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். மத். 26: 39—42. லூக. 22: 42.

கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவது என்று காத்திருந்தோம் என்று லூக்கா சொல்லுகிறார். அப். 21: 14.

வினா தேவனுடைய சித்தத்தை நாம் எவ்விதமாய் நிறைவேற்றவேண்டியவர்களாயிருக்கிறோம்?

விடை. பரமண்டலத்தில் பரிசுத்த தேவதூதரால் நிறைவேற்றப்படுகிற பிரகாரமாகவே.

தூதர்கள் யாவரும், சிங்காசனத்தைச் சூழ நின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டார்கள். வெளி 7: 11.

நெகே. 9: 6. எபி 1: 14.

மெய்க்கிறிஸ்தவர்கள் தங்களுடைய நிறைவான கீழ்ப்படிதலில் தேவதூதர்களுக்குச் சமமாயிராவிட்டாலும் கிருபையினாலே அவர்களைப் பின்பற்றி, ஒருவாறு அவர்களுக்கு ஒப்பாய் நடக்கலாம். நாம் பின்பற்றும்படி நமக்கு முன்மாதிரி வைக்கப்பட்டிருக்கிறது. 1 பேது. 1: 15. 2: 21, 22.

வினா. தேவதூதர்கள் எவ்வகையாய்த் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார்கள்?

விடை. 1. பூரணமாய் நிறைவேற்றுகிறார்கள்.

அவர்கள் அவருடைய வார்த்தையின் சத்தத்தைக் கேட்டு, அவருடைய கற்பனைகளின்படி செய்கிறார்கள். சங். 103: 9.

2. பக்திவைராக்கியத்துடன் செய்கிறார்கள்.

தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார். சங். 104: 4.

3. தீவிரமாய்ச் செய்கிறார்கள்.

ஒவ்வொருவனுக்கு அவ்வாறு செட்டைகளிருந்தன, இரண்டு செட்டைகளால் பறந்தது. ஏசா. 6: 2. எசே. 1: 4—14.

4. வணக்கமாய்ச் செய்கிறார்கள்.



இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்துக்கு முன்பாக வைத்தார்கள். வெளி. 4: 10.

5. இடைவிடாமல் பணிவிடைசெய்கிறார்கள்.

இவர்கள் இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள். வெளி. 7: 15.

தேவகட்டளையை நிறைவேற்ற பரமண்டலத்திலிருந்து இரண்டு தூதர்கள் இறங்கிவந்து, அவர்களில் ஒருவன் இராஜ்யபார வேலைக்கும், மற்றவன் பூமியில் தாழ்வான ஓர் வேலைசெய்யவும் நியமிக்கப்பட்டால், அவர்கள் தங்கள் வேலையை மாறறிக்கொள்ள விரும்பவேமாட்டார்கள். உற்சாகத்தோடே தங்கள் வேலையை நிறைவேற்றுவார்கள்.

இங்கே நாம் கடமையாகச் செய்கிறவைகளைப் பரமண்டலத்தில் மனவாஞ்சையோடு செய்வோம். இப்பொழுது நம்முடைய சுபாவம் தேவனைவிட்டு விலகியிருக்கத்தக்க சார்புடையது. அங்கே அவருடைய மனசுக்கு இசைந்திருப்போம். அவருடைய சித்தத்தை வெறுப்புடன் நிறைவேற்றாமல், பூரண விருப்பத்துடன் அவருக்கு ஊழியம்செய்வோம். தப்பிதமான நினைவு நம்முடைய மனதில் பிரவேசியாது. தகாத ஆசை இருதயத்தில் எழும்பாது. தேவசுபாவத்தின் தூய்மை பரிசுத்தம் என்பவைகளுக்கு விரோதமாய் ஒன்றும் செய்ய ஏதுவிராது.

இவ்விதமாய் நீ தேவசித்தத்தை நிறைவேற்றினாயா? இக்கேள்விக்கு உன் மனச்சாட்சிப்படி உத்தரவு சொல்லுவாயானால் பரமண்டலத்தில் தேவதூதர் செய்கிறதுபோல நான் செய்யாமல், என் சொந்த இருதயமும் விருப்பமும் இச்சித்தபடி செய்து, மிகவும் குறைவாகவே நடந்துகொண்டேனென்று சொல்லுவாய். எவ்வளவு உண்மையோடு இந்த விண்ணப்பத்தைச் சொல்லவேண்டும். எவ்வளவு ஜாக்ரதையாய் இதின்படி தேவனுக்குப் பிரியமாய் நடக்கப் பார்க்கவேண்டும். நமது பொல்லாத விருப்பத்தின்படி நடவாமலிருக்க எவ்வளவு விழிப்பாயிருக்கவேண்டும்.

இக்காரியத்தில் தாவீது இராஜாவின் நடக்கை எவ்வளவு கனமாய்ச் சொல்லப்படுகிறது.

தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான். அப். 13: 22.

அவருடைய மாதிரியைப் பின்பற்றப் பிரயாசப்படு. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று தினந்தோறும் ஜெபம்பண்ணுவது மாத்திரம் போதுமென்றிராதே. சுறுசுறுப்பே மெய்க்கிறிஸ்தவனுக்குகிறது.

பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம். 2 கொரி. 7: 1.

எபி. 13: 21. 1 யோவா. 5: 14. வெளி. 22: 14.

உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும் (சங். 143: 10) என்று ஜெபமபண்ணுவதை விட்டுவிடாதே. தேவசித்தத்தில் பிரியப்பட்டு அதின்படி செய்யத்தக்கதாக, அவருடைய

சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட (கொலோ. 1: 9.)
விரும்புவாயாக.

சிலர், தாங்கள் தேவனுடைய சித்தத்தின்படி நடக்க மனதில்லாதவர்க
ளாயிருந்து, மற்றவர்களாலே தேவனுடைய சித்தம் நிறைவேற்
றப்பட விவேகமுள்ளவர்களாயிருப்பார்கள். நீ அப்படியிராதபடி
எச்சரிக்கையாயிரு.

தேவரீருக்குச் சித்தமானவைகளை உற்சாகத்தோடே நிறைவேற்றக் கிரு
பைசெய்தருளும் என்று விண்ணப்பம்செய்வாயாக.

---

## சு-ம் பிரிவு.

## நாலாம் விண்ணப்பம்.

---

வினா. கர்த்தருடைய ஜெபத்தின் நாலாம் விண்ணப்பம் என்ன?

விடை. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும்.

வினா. முந்தின மூன்று விண்ணப்பங்களும் தேவனுடைய மகத்துவத்
துக்கு அடுத்தவைகள் என்று சொன்னாயே. ஆதலால் பிந்தின
மூன்று விண்ணப்பங்களும் எவைகளைக் குறிக்கும்?

விடை. நம்முடைய சொந்த அவசியத்துக்கு வேண்டியவைகளைக் குறிக்
கும்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதி
யையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்
குக் கூடக்கொடுக்கப்படும். மத. 6: 33.

வினா. இந்த விண்ணப்பத்தில் சொல்லிய அப்பம் ஆவது என்ன?

விடை. அப்பம் என்பது மிகவும் சாதாரணமானதும், நம்முடைய சரீரப்
பிழைப்புக்கு அவசியமானதுமாய்ப் பரிசுத்தவேதாகமத்தில் பல
இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறபடி நமக்கு அவசியமான
எல்லாவகைப் போஜனத்தையுங் குறிக்கிறது. இந்த இடத்தில்
நம்முடைய ஜீவனையும் சுகத்தையும் காத்துக்கொள்வதற்கு அவசி
யமான அன்னவஸ்திரம், வீடுமுதலான எல்லா உபகாரங்களையும்
குறிக்கிறதாகக் காணப்படுகிறது.

உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். ஆதி. 3: 19.
28: 20. சங். 104: 15. 105: 16. 132: 15. ஏசா. 33: 16. எசேக்.
5: 16.

வினா. இந்த விண்ணப்பத்தில் இன்னும் அடங்கியிருக்கிறதென்ன?

விடை. நம்முடைய ஜீவனைக் காப்பாற்றவும், சரீரத்துக்குச் சுகமும் பெல
னும் உண்டாகவும், நம்முடைய நியாயமான அலுவல்களும்,
முயற்சிகளும் சித்திபெறவும், நாம் அனுபவிக்கிற கிருபைகளின்
மேல் தேவாசீர்வாதம் கிடைக்கவும் விண்ணப்பம்பண்ணுகிறோம்.

கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். நீதி. 10: 22.
ஓசே. 2: 8.

வினா. அன்றன்றுள்ள அப்பத்துக்காக விண்ணப்பம்பண்ண ஏன் போ
திக்கப்படுகிறோம்?

விடை. தேவனுடைய பராமரிப்பை நம்பும்படியாகவும், புதிதாய் நமக்கு
வேண்டியவைகளுக்காக நாடோறும் அவரை நோக்கிப் பார்க்க
வுமே. நாம் ஆகாரத்துக்காகக் கேட்கும்பொழுது, நம்முடைய



ஜீவனைத் தாங்குவதற்கு அவசியமானவைகளில் திருப்திகரமாய்
இருக்கவும், மட்டுக்கு மிஞ்சினவைகளில் விருப்பமில்லாதிருக்க
வும வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

அன்றன்றுள்ள அப்பத்துக்காக நாம் கேட்கும்பொழுது வெகுநாளுக்கு
வேண்டிய பொருளெல்லாம் மொத்தமாய்க் கைக்கு வரவேண்
டுமென்று பேராசையுள்ளவர்களாய் விரும்பாமல், நாடோறும்
வேண்டிய அன்னவஸ்திரத்தால் ஆதரிக்கப்படவேண்டிய விருப்
பத்தை விரும்பும்படி போதிக்கிறது. இவ்வித விண்ணப்பம் ஐசு
வரியவான்களுக்கும் ஏழைகளுக்கும் ஏற்றதுதான். ஏனென்றால்
ஒருவன் இச்சீவனுக்குரிய நன்மையான பொருள்களை ஏராள
மாய் உடையவனாயிருந்தாலும் தேவஆசீர்வாதம்கூட இராவிட்
டால் அவைகளால் அவனுக்கு ஒரு நன்மையுமில்லை. ஒரு ஏழை
மனிதன் கொஞ்ச ஆகாரமுடையவனாயிருந்தாலும் அவன் முறு
முறுக்காமல் தனக்குக் கிடைத்திருக்கிற ஒவ்வொரு வாய் உண
வுக்காகவும் தனக்கு அருளப்பட்டிருக்கிற தேவகிருபைக்குக்
கடன்பட்டவன் என்று நினைவுகூரவேண்டும்.

உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போ
துமென்றிருக்கக் கடவோம். 1 தீமோ. 6: 8.

யாத். 16: 21. லேவி. 26: 26. சங். 34: 10. 37: 3. நீதி. 30: 8.
மத். 6: 31, 33. 1 பேது. 5: 7

மற்றவர்களுடைய பொருள்களை வஞ்சனையினாலாவது பலாத்காரமா
யாவது எடுத்துக்கொள்வது, நாடோறுமுள்ள நம்முடைய அப்பம்
என்றாவது நம்முடைய பரமபிதாவினாலே நமக்கு அனுப்பப்
பட்டது என்றாவது சொல்லப்படாது. வஞ்சனையினாலே சம்பா
தித்தவைகளெல்லாம் அநியாயத்தின் கூலியாயும், சாத்தானாலே
அவனுடைய ஊழியக்காரருக்குக் கொடுக்கப்பட்ட பிழைப்பா
யும் இருக்கிறது.

வினா. தேவன்மேல் நம்பிக்கையாயிருப்பதினாலே நம்முடைய சொந்த
முயற்சி அவசியமில்லை என்ற கருத்தாகுமா?

விடை. ஆகாது. நாம் எல்லாக் கவலைகளையும் தேவனிடத்தில் வைக்
கும்பொழுது, நம்முடைய ஜீவனத்துக்கு வேண்டியவைகளைச்
சம்பாதிக்கும்படி சோம்பலைத் தவிர்த்து, யதார்த்தமான வகை
யாய்ப் பிரயாசப்பட்டு தேவாசீர்வாதத்திற்காக எதிர்பார்க்கவே
ண்டும்.

சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.
நீதி. 10: 4. 28: 19. அப். 20: 34. ரோ. 12: 11. 2 தெச. 3: 10, 12.
1 தீமோ. 5: 8.

வினா. இந்த விண்ணப்பத்தில் ஆவிக்குரிய கருத்து உண்டா?

விடை. உண்டு. நாம் நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் அவசிய
மான எல்லாவற்றையும் தருவார் என்று தேவனை நோக்கி ஜெபம்
பண்ணுகிறோம். ஜீவஅப்பமாயிருக்கிற (யோவா. 6: 35.) கிறிஸ்
துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நம்முடைய ஆத்துமாக்கள் நா
டோறும் போஷிப்பிக்கப்படும்படி ஜெபம்பண்ணவேண்டும். நம்
முடைய சரீரத்தை ஆதரிக்கிறதிலும் அதிகமாய் தேவகிருபைக்
காக ஊக்கமாய் உழைக்கவேண்டும்.

மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும்

தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மத். 16: 26.

யோபு 23: 12. மத். 4: 4. லூக். 14: 15. யோவா. 6: 27, 32, 34. 1 பேது. 2: 3.

உன்னுடைய அனுதின இரக்கங்களில் தேவனுடைய சமுகத்தை இழந்துவிடாதபடி எச்சரிக்கையாயிரு. உன்னுடைய சுகத்திலும், பெலத்திலும், ஜாக்ரதையான பழக்கத்திலுமாவது எப்படியும் முன்னுக்கு வரக்கூடியதென்ற தோற்றத்திலாவது, அதிகமாய் நம்பிக்கை வையாதே. தேவன் நமக்கு நன்மையென்று நினைக்கும்போது உனக்கு வியாதியை வரப்பண்ணவும், உன்னுடைய ஆஸ்தியை அழிக்கவும், அல்லது உன்னுடைய உத்தியோகத்தை இல்லாமல் போகப்பண்ணவும் கூடும் என்பதை நினைத்துக்கொள். எல்லா ஜாக்ரதையோடும் வேலைசெய்து, அப்பால் உன்னுடைய கைகளின் கிரியைகளில் தேவாசீர்வாதம் கிடைக்கப் பார்.

ஆவிக்குரிய செல்வமும் தேவன் நியமித்திருக்கிற கிருபையின் எத்தனங்களின்மூலமாய் இடைவிடாமல் சுறுசுறுப்பாய்த் தேடுகிறவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடியது. மார்க்காசாரத்தில் அசதியாயிருக்கிறவர்கள் அவைகளை அனுபவிக்கக் கூடாது. ஓயாமல் விழித்திருந்து இடைவிடாமல் ஜெபம்பண்ணு.

பக்திக்குரிய அல்லது தருமத்துக்குரிய எந்தக் கிரியை உன் கைக்கு நேரிடுகிறதோ அதை உன் பெலத்தோடு செய். 2 கொரி. 9: 10, 11.

வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் தவறாத விசாரணையினாலே நடத்துகிற தேவனே, தீமையானவைகள் எல்லாவற்றையும் எங்களைவிட்டு விலக்கி, நன்மையானவைகள் எல்லாவற்றையும் எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய்க் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

## ஏசாயாவின் தீர்க்கதரிசனம்.

### ஏசாயா. 65-அதிகாரம்.

முந்தின அதிகாரத்தில் யூதர் சொல்லுகிற முறைப்பாடுகளுக்குத் தேவன் கொடுக்கிற (Defence) நியாயம். புறஜாதியார் தேவனைத் தேடாதிருக்க, அவர்களை அழைத்தல், யூதர், தேவன் பலகாலம் அழைத்த அழைப்பை அசட்டைசெய்ததற்கும், முரட்டாட்டத்துக்கும், விக்கிரகாராதனைக்கும், மாயத்தனத்துக்குமாக, தள்ளப்படல்; அவர்களை முற்றிலும் அழியாமல் கொஞ்சம் மீதியைக் காத்துவைத்தல்; மருளவிழுந்தவர்களுக்குப் பயங்கர தண்டனை, கீழ்ப்படிதலுள்ளவர்களுக்குப் பலன் கூறல் இவைமுதலிய சங்கதிகள் இதில் அடங்கியிருக்கிறது.

1-வச. புறஜாதியார் திருச்சபையில் சேர்க்கப்படல், இதின் நிறைவேறுதல் (ரோ. 10: 20, 21) பார். தேவனில்லாமலிருந்த (எபே. 2: 12.)



புறஜாதியார் தேவனைத் தேட சலாக்கியம்பெற்றார்கள். "தேடுகிறது" என்றால் ஜெபிக்கிறது. முன் விக்கிரகங்களை நோக்கி ஜெபித்தார்கள். இப்போது தேவனை ஜெபிக்கக் கிருபைபெற்றார்கள். (ஏசா. 55: 6) கிறிஸ்துநாதர் அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். (எபே. 2: 17.) அப்போஸ்தலர் எல்லாரும் ஒப்புரவாகுங்களென்று வேண்டிக்கொண்டார்கள். (2 கொரி. 5: 20.) ஆவியானவரும் உலகத்துக்கு நல்லறிவைக் கொடுப்பார். (யோவா. 16: 8.) சுவிசேஷப் பிரசங்கத்தினாலே எல்லா ஜாதியாரையும் தம்மண்டை அழைத்தார்.

2—7. முரட்டுத்தனம். அவிசுவாசத்துக்காக யூதர் தள்ளப்படல். தேவன் தாமும் தமது தீர்க்கதரிசிகளாலும், குமாரனாலும், அப்போஸ்தலராலும் தமது கைகளை நாள்முழுவதும் நீட்டினார். ரோ. 10: 21. நீதி. 1: 24. காக்கும்படி பட்சமுள்ளதாய்க் கைநீட்டுவதுபோலும், உபகாரங்கொடுக்க உபகாரி கைநீட்டுவதுபோலும், தேவன் மனந்திரும்பும்படி அன்பாய்ப் புத்திசொன்னார். தன் மனப்படி ஒருவன் நடக்கிறதே பாவமென்று எரேமியா 8-இடங்களில் சொல்லுகிறார். (எரேமி 3: 17. 7: 24. 9: 14. 11: 8. 13: 10. 16: 12. 18: 12. 23: 17.) உபா. 29: 19. அப்படியே யூதர் நடந்தார்கள்.

3. தேவனுக்குத் தங்கள் விக்கிரகாராதனையினால் கோபமூட்டினார்கள். தேவனுடைய ஆலயத்தைத் தள்ளிப்போட்டு, "தோட்டங்களில் தோப்புகளில் பலியிட்டார்கள்." தேவனுடைய பலிபீடத்தைத் தள்ளிப்போட்டு, செங்கல்லினால் கட்டப்பட்ட பலிபீடங்களில் தூபங்காட்டினார்கள். சில விக்கிரகங்களுக்கு மேற்கோப்பு ஓட்டினால் கட்டப்பட்டிருக்கும். 2 இரா. 23: 12. எரேமி. 19: 13.

4. அவர்கள் இறந்துபோனவர்களிடத்திலாவது, பேய்களிடத்திலாவது சன்னதங் கேட்கும்படி கல்லறைகளில் உழுக்கார்ந்திருந்தார்கள். உபா. 18: 11. ஏசா 8: 19. எந்தோர்க் குறிகாரி சரித்திரமே உதாரணம். பாழான விடங்களில் அசாவது கெபிகளிலும், குகைகளிலும், விக்கிரகக் கோவில்களிருக்கும். அதை வணங்க இராத்தங்குவார்கள். நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாய்ப் பன்றி இறைச்சியைத் தின்றார்கள். லேவி. 11: 7. உபா. 14: 8. பன்றி இறைச்சி தின்னக்கூடாதென்று எலியேசரும் அவன் 7-சகோதரரும் மனதாரச் செத்தார்களே. இரக்ஷகர் காலத்திலும் அதை நம்பும்படி அநேகர் திரளான பன்றிகளை வைத்திருந்தார்களே. விலக்கப்பட்ட பானமெல்லாம் அருவருப்புத் தானே. லேவி. 11: 42, 43.

5-வச. இரக்ஷகர் காலத்தில் யூதர் பெருமையும் மாயத்தன்மையுமாயிருந்தார்கள். அவர்கள் இவ்வளவு பெரிய குற்றவாளிகளாயினும் தங்களைப் பரிசுத்தரென்று பாராட்டினார்கள். மற்றவர்கள் தங்களைத் தொடவொட்டார்கள். புகை நாசிக்கு எவ்வளவு வருத்தமோ (நீதி. 10: 26.) யூதருடைய பாவங்களும் தேவனுக்கு அதிக வருத்தமே.

6-வச. பாவிகளுடைய பாவங்கள் அவர்கள் தண்டிக்கப்படும்படி தேவனுடைய ஞாபகப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (உபா. 32: 34. மல்கி. 3: 6. சங். 50: 21.) தேவன் தமது நீதிக்குச் சரிக்கட்டுவார். (உபா. 7: 10. எரே. 32: 18. எசே. 11: 21.)

7-வச. யூதருடைய பாவத்தின் நிமித்தமல்ல, அவர்கள் பிதாக்களுடைய பாவங்கள் நிமித்தமும் தேவன் தண்டிப்பார். (எசே. 18: 6. 20: 27, 28) இந்தப் பாவங்களே அவர்களைச் சிறையிருப்புக்குக் கொண்டுவந்தது.

8—10. இயாக்கோபில் மீதியானவர்கள் சுவிசேஷ சபைக்குக் கொண்டுவரப்படுவோர்கள். இது ரோ. 11: 1—5ல் பவுல் விஸ்தரித்துப் பேசுகிறார். தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமே எருசலேமின் அழிவுகாலம் தாமதித்ததென்று இரக்ஷகர் சொல்லுகிறார். (மத். 24: 22.)

8-வச. ஆபிரகாம் சொன்னதுபோலும் (ஆதி. 18: 23, 25.) மோசே சொன்னதுபோலும் (யாத். 32: 11–13.) தேவன் இங்கேயும் கிருபையான மறு உத்தரவு தீர்க்கதரிசிக்குச் சொல்லுகிறார். திராட்சச்செடி பட்டுப்போனால் ஒன்றுக்கும் உதவாதே. பிடுங்கப்பட்டுப்போகும். ஆனால் ஒரு கிளையில் கொஞ்சம் பச்சையிருக்குமானால் தோட்டக்காரன் அழியாதே. அதில் இரசமுண்டு என்று சொல்வதுபோல அழிவுக்குரிய யூதரிலும் கொஞ்சம் மீதியுண்டு. ஆபிரகாம், ஈசாக், இயாக்கோபு என்ற தேவஊழியக்காரர் நிமித்தமும், தாவீதின் நிமித்தமும் சிலர் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். (எரேமி. 30: 11. ஆமோஸ். 9: 1.)

9-வச. (ரோ. 11: 5.) சிறையிருப்பிலிருந்து கொஞ்சம்பேர் தான் மலைகளுள்ள கானான்தேசத்துக்கு வந்தார்கள். மீதியானவர்களால் தேசம் நிரம்பும் 5-பட்டணம் அழிக்கப்பட்டபோது லோத்தின் குடும்பத்தைத் தெரிந்தார். ஜலப்பிரளயம் வந்தபோது, நோவாவின் குடும்பத்தைக் காத்தார். அப்படியே சிறையிருப்பிலிருந்து வந்த கொஞ்சம் பேர்களுக்குத்தான் ஆபிரகாம், ஈசாக்கு, இயாக்கோபோடே செய்த உடன்படிக்கை நிலைத்தது. அவர்களில் சிலர்தான் கிறிஸ்துநாதரை விசுவாசித்து இரக்ஷிக்கப்பட்டார்கள் யூதேயாதேசம் மலைகளுள்ளது. எசே. 36: 1—8 சங். 125: 2 எசே 38: 8 தேவன் இந்த மலைகளைத் தம்முடையதென்கிறார். முன் தெரிந்துகொண்டதாலும், அதில் நம்மை உண்மையாய்த் தொழுதுகொண்டவர்களிருந்தபடியாலும் அப்படி அழைக்கிறார்.

10-வச சாரோன் ஆடுமாடுகள் மேய்ச்சலுக்குச் செழிப்பானவிடம். தாவீதின் ஆடுகள் அங்கே இருந்தன 1 நாளா 27: 29. அது பின் வனாந்தரமாயின. (எசா 33: 9) இங்கே தேவன் மறுபடியும் ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சலிடமாயிருக்குமென்கிறார். அப்படியே தேவனும் யூதேயாவை மனித வித்தினாலும், மிருக வித்தினாலும் நிரப்புகிறதாகச் சொல்லுகிறார். (எரே. 31: 27) ஆகோரின் பள்ளத்தாக்கு ஆகானைக் கல்லெறிந்த முகாந்தரத்தால் அப்படி அழைக்கப்பட்டது (யோசு. 7: 26) இதுதான் இஸ்ருவேலர் யோர்தானைக் கடந்தபின் முதலாவது மிதித்தவிடம் ஆகையால் ஓசே. 2: 15-ல் தேவன் நம்பிக்கையின் வாசலாக இருக்குமெனகிறார். இங்கே மாட்டுத்தொழுவமாயிருக்குமென்கிறார். விக்கிரகபத்திக்காரரான யூதர் இந்த வாக்குத்தத்தம் தங்களுக்குச் செல்லாதென்று அறியும்படியாக தேவனை உண்மையாய் ஆராதிப்பவர்களுக்குத்தான் அந்த வாக்குத்தத்தம் செல்லுமென்கிறார். சாரோன் மேற்கே யோப்பாவுக்குச் சமீபமாயும் ஆகோர் கிழக்கே யோர்தானுக்குச் சமீபமாயுமிருப்பதால், அவர்கள் முழுத் தேசத்தையும் சுதந்தரித்துக்கொள்வார்களென்று காட்ட அப்படிச் சொல்லியிருப்பதாகச் சொல்வாருமுண்டு. சுவிசேஷ ஆசாரங்களும் வயல்வெளிபோலும், பள்ளத்தாக்குப்போலும் நல்ல மேய்ச்சலைக் கண்டுபிடிக்கத்தக்கவைகள். (யோ. 10: 9. சங். 23: 2)

11—16. தள்ளப்பட்ட யூதருக்கு வரும் நியாயத்தீர்ப்பு. பாபிலோன் விடுதலைக்குப்பின் யூதருடைய விக்கிரகாராதனைக்காகவும், சுவிசேஷ பிரசங்க காலத்தில் அவர்களுடைய அவிசுவாசத்துக்காகவும் அவர்களுக்கும் வரும் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம்.



11. முந்தின வாக்குத்தத்தங்கள் கர்த்தரை விட்டவர்களுக்குச் சே
ராது. அவர்கள் "பரிசுத்த பர்வதத்தை மறந்தார்கள்" என்பது தேவாலய
ஆராதனையை மறந்தார்கள் என்றும். தேவன் சீயோனைத் "தமது பரி
சுத்த பர்வதமென்கிறார். (யோவே. 3: 17.) எருசலேமும் தேவனுடைய
பரிசுத்த பட்டணமென்னப்படுகிறது. சீயோன்மலை தேவனுடைய பரி
சுத்த பர்வதமென்னப்படுகிறது. (சங். 48: 1.) தேவாலயமும் பரிசுத்த
அலங்காரமென்னப்படுகிறது. (சங். 96: 9) யூதர் தேவாராதனையை மறந்து
கல்லறைகளிலும் தோப்புகளிலுமுள்ள விக்கிரகங்களை வணங்கினதால்
தேவனுடைய பரிசுத்த பர்வதத்தை மறந்தார்களென்று இங்கே சொல்லியி
ருக்கிறது. ஏசாயா, ஆகாஸ் இராஜாவின் காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்
தவர். ஏசா. 1: 1. அவனைப்பற்றி 2 நாளா. 28: 23—25. 2: 4. 2 இரா. 16:
3—12. சொல்லியிருக்கிறதின்படி அநேகர் அவன் விக்கிரகாராதனையில்
சேர்ந்திருப்பார்கள். அவர்கள் தான், காத் (இராணுவக்கூட்டம்.) மேனி
(பெருந்தொகை) என்ற விக்கிரகங்களுக்கும் பலியிட்டார்கள். தேவன்
தமது ஜனங்களுக்குக் கற்பித்தபடி (உபா. 16: 14, 15.) விக்கிரகங்களுக்
குக் கனமாக அவர்கள் விருந்தும்செய்து வந்தார்கள். (நியா. 9: 27. எசே.
18: 6, 11. ஆமோஸ். 2: 8. 1 கொரி. 8: 10.) அவைகளின் (மேனி) தொகை
களுக்குப் பானபலியும் செய்வார்கள். தேவன் கற்பித்தபடி (யாத். 29:
40, 41. லேவி. 23: 18, 37.) விக்கிரகங்களுக்கும் செய்தார்கள். (எரேமி.
7: 18. 19: 13. 22: 29) மேனி என்பதைச் சிலர் மெர்க்கூரி என்றும்,
சிலர் வியாபாரிகள் அதிஷ்ட தேவதையாக வணங்கினார்களென்றும், சிலர்
வானசேனைகள் என்றும் நினைக்கிறார்கள்.

12-வச. அவர்கள் ஏராளமான அதிகத் தொகையுள்ள விக்கிரகங்
களை வணங்கினபடியால், பட்டயத்தால் உங்களில் அநேகர் சாவீர்கள்
என்கிறார். ஒருவரும் தப்புவதில்லை. அவர்கள் விக்கிரகங்களுக்குமுன்
குனிந்ததுபோல பட்டயத்துக்கும் குனிவார்கள். (ஏசா. 44: 17.) நான்
தீர்க்கதரிசிகளைக்கொண்டு மனந்திரும்புதலுக்குக் கூப்பிட்டாலும். (சகரி.
7: 7—12.) அவர்கள் செவிகொடுக்கவில்லை. (2 நாளா. 36: 15, 17. நீதி.
1: 24. மத். 21: 31—43.)

13-வச. விக்கிரகக் கோவில்களில் விருந்துண்டவர்கள் விசுவாசத்
தினாலும் மனந்திரும்புதலினாலும் தேவனுக்கு ஊழியக்காரரானவர்கள்
ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைச் சாப்பிடும்போது பசியாயிருப்பார்கள். விக்
கிரகபத்திக்காரர் தேவஊழியக்காரரை அழவும், வெட்கப்படவும், நிந்திக்
கவும், செய்ததற்குப் பதிலாக, இப்போது அவர்கள் புசித்துக் குடிக்கும்
போது, அவர்களுக்கு வெட்கமும், சஞ்சலமும், துக்கமுமுண்டாகும்.
இவர்கள் ஜீவ அப்பத்தைச் சாப்பிட்டு, ஜீவதண்ணீரைக் குடித்து மோட்ச
இன்பமும் அடைவார்கள்.

14-வச. மோட்சம் எப்போதும் சந்தோஷமுள்ள இடம். நரகமோ
அழுகையும் பற்கடிப்புமுள்ள இடம். லூக். 13: 28. மாற். 9: 44.

15-வச. விக்கிரகாராதனைக்காரர், அவபத்திக்காரருடைய நாமம் சா
பமாக மாறும். (எரேமி. 29: 22. நீதி. 10: 7.) லேயாள் இராகேல் நாமங்
களும் (ரூத். 4: 11.) மற்றும் தேவஊழியக்காரர் நாமங்களும் ஆசீர்வாத
மாக வழங்கும். அவர்கள் இனி யூதரென்று அழைக்கப்படாமல் கிறிஸ்த
வர்களென்ற புது நாமத்தால் அழைக்கப்படுவோர்கள். (அப். 11: 26.) தேவ
புத்திரர் (யோவா. 1: 12.) ஓசே. 2: 16, 17.

16-வச. பூமியில் தன்னையாவது மற்றவர்களையாவது ஆசீர்வதிக்கிற

பத்தியுள்ளவர்கள் சத்திய தேவனுக்குள் ஆசீர்வதிக்கிறார்கள். ஆமென் என்ற கிறிஸ்துநாதரையே கனஞ்செய்கிறான். வெளி. 3: 14. உபா. 6: 13. தேவன் வாக்குத்தத்தஞ்செய்தவைகள் நிறைவேறுதலால் முந்தின இடுக்கண்கள் முடிவாகும், சந்தோஷமிருக்கும். (சங். 63: 11.)

**17—25.** கிறிஸ்து சபைக்குண்டாகிய ஆசீர்வாதங்கள். யூதர் தங்கள் சொந்தத் தேசத்தில் சமாதானமாய் வந்து குடியேறினபோது ஒருவாறு இவை நிறைவேறின. அது அவர்களுக்குப் புது உலகம்போலிருந்தது. விசேஷமாய்ச் சுவிசேஷ காலத்திலும் பின்பு வெற்றிசிறப்பான சபையிலும் இந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும்.

**17-வச.** துன்பமும் இடுக்கணுமுள்ள தமது ஜனத்துக்கு தேவன் துன்பமில்லாத சுயாதீனமான பாக்கிய நிலைமையைக் கொடுப்பதாகச் சொல்லுகிறார். "நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்" என்பது புதுச் சபையை உண்டாக்கவும், புது ஆராதனையை ஏற்படுத்தவும் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பினதும், (யோவா. 4: 21, 24.) தமது ஆவியைத் தாராளமாய் ஊற்றினதுமே (அப். 2: 17) பொருளாம். பரிசுத்தவான்களுடைய பாக்கியம் எவ்வளவு மேன்மையானது. நீங்கள் கிறிஸ்துவையுடையவர்களானால் உலகம் உங்களுடையது என்கிறார். (1 கொரி. 3: 22.) தேவன் நம்மோடு ஒப்புரவாகிறதே புது வானம். சிருட்டிப்புகளும் நம்மோடு ஒப்புரவாகிறதே புது பூமி. மறுமையில் பரிசுத்தவான்கள் அடைகிற நித்திய பாக்கியமும் புது வானம் புது பூமியென்னப்படும். வெளி. 21: 5. 2 பே. 3: 13. வெளி. 21: 1. சிலர் கிறிஸ்துநாதர் மகிமையாய் 1000-வருஷம் பூமியில் அரசாளும்போது நிறைவேறுமென்பார்கள்.

**18, 19-வச.** எருசலேமென்ற திருச்சபையானது கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அதிகமாகக் களிகூரும். (லூக். 2: 10.) சபையின் வாழ்வையும் மேன்மையையும் பார்க்கையில், தேவனுக்கும் அவருடைய ஊழியக்காரருக்கும் மகிழ்ச்சியாமே. (ஏசா. 62: 5. எரேமி. 32: 41. செப். 3: 17.) இனி அழுகையிராது. (ஏசா. 35: 10. 51: 11. எரேமி. 31: 12. வெளி. 21: 4 ) முன்போல அல்ல இனி நிலையுள்ள பாக்கிய நிலைமையை அடைவார்களென்று அர்த்தம்.

**20-வச.** அவர்களுக்குப் புது ஜீவனுண்டு. வியாதி, துன்பம், மரணமில்லை. வெளி. 21: 4. முற்பிதாக்கள் வயதுபோல 300,500-வயதுள்ளவர்களாயிருப்பார்கள். ஒருவன் 100-வயதாய் மரித்தால் அது அவனுடைய பாவத்தினாலாம். அப்போதுங் கூட 100-வயதுள்ளவனைக் குழந்தை இறந்துபோயிற்றென்பார்கள். இது மேசியாவின் காலத்தில் நிறைவேறும். விசுவாசிகளும் மரியார்கள். ரோ. 5: 14, 21.

**21, 22-வச.** முன்னே சத்துருக்கள் இவர்கள் கட்டின வீடுகளில் குடியேறினார்கள். இவர்கள் நாட்டின திராட்சத்தோட்டங்களை அனுபவித்தார்கள். இனி அப்படியிராது. (உபா 28: 30.) சபிக்கப்பட்டவனுக்கு எதிரிடையான ஆசீர்வாதமுண்டு. அவர்களுடைய கைகளின் வேலை ஆசீர்வதிக்கப்படும். (நீதி. 12: 27.) தங்கள் பலனை நெடுநாளாய் அனுபவிப்பார்கள். "விருக்ஷத்தின் நாட்கள்போல்" ஒலிவமரம் (ஏசா. 6: 13.) 1000-வருஷமிருக்குமாம். வேறே திருப்புதலில் (LXX.) ஜீவவிருக்ஷமென்றிருக்கிறது. கிறிஸ்துநாதரே அவர்களுக்கு ஜீவவிருக்ஷம். அவருக்குள் விசுவாசிகள் நித்தியகாலமாய் ஆறுதலையடைவார்கள்.

**23-வச.** அவைகள் அவர்களுக்கு மாத்திரம் ஆசீர்வாதமென்றில்லை.



அவர்கள் பிள்ளைகளுக்கும், ஆசீர்வாதமாயிருக்கும். துன்மார்க்கருக்கு அப்படிப்பட்ட ஆசீர்வாதமில்லை. பிர. 2: 18, 19. (உபா. 28: 41.) பொல்லா தவர்கள் தங்கள் நல்ல பெற்றோர் நிமித்தம் அனுபவிப்பார்கள். நல்லவர்கள் சிலவேளை தங்கள் பொல்லாத பெற்றோர் நிமித்தம் ஆசீர்வாதங்கள் அனுபவியார்கள். சில சமையங்களில் வேளாவேளை பொல்லாதவர்களும் இந்த நன்மைகளை அனுபவித்தாலும் எக்காலமுமல்ல. சிலவேளை வெறுப்பாயும் இந்த நன்மைகளைப் பொல்லாதவர்களுக்குக் கொடுப்பார். தேவா சீர்வாதங்கள் நல்லவர்களுக்குள் தலைமுறைகளாய் நிலைக்கும்.

**24-வச.** அவர்கள் கூப்பிடும்போதே மறு உத்தரவு அருளுவதாக வாக்குத்தத்தமுண்டு. (ஏசா. 58: 9.) உத்தமர் இருதயத்தில் உதடுகளில் ஜெபமிருக்கும்போதே தீவிரமாய் மறுமொழி பகருவதாக வாக்குரைக்கிறார். (சங் 32: 5. தானி. 10: 12.) ஆம், அவர்கள் பேசுகையிலுங் கூட உத்தரவுசெய்கிறார். (தானி. 9: 20, 23. அப். 10: 44.)

**25-வச.** (ஏசா. 11: 6—9.) அவர்களுக்கும் மற்றச் சிருட்டிப்புகளுக்கும் பகையில்லாமல், நோவாவின் பேழையிலிருந்ததுபோல உறவாயிருக்கும் தேவனுடைய ஜனங்கள் ஆடுகளுக்கும், ஆட்டுக்குட்டிக்கும், பொல்லாதவர்கள் ஓநாய்க்கும், சிங்கத்துக்கும் ஒப்பிடப்படுகிறார்கள். இவர்களுடைய மூர்க்கம் கொடுமையான குணங்கள் நீங்கி தேவனுடைய ஜனங்களோடே உறவாயிருக்கும்படி செய்வார். பொல்லாதவர்கள் சற்பத்துக்கும் ஒப்பிடப்படுவார்கள். (மீகா. 7: 17. சங். 72: 9.) சத்துருக்களை அழியாமல் அவர்கள் இருதயத்தை மாற்றுகிறார். (உ—ம்.) பவுல் அப்போஸ்தலன். யூதர் புறஜாதியாருடைய பகை நீங்கி இருவரும் பட்சமாகும்போது ஒரே மந்தையாவார்கள். (யோவா. 10: 16.) சற்பமானது மனிதர்மேல் பறக்காமல் சபைக்குச் சமாதானமுண்டாயிருக்கும்படி மண்ணைத் தின்கும். (ஆதி. 3: 14.) பொல்லாதவர்கள் தேவனுடைய ஜனங்களை அப்பம்போல புசியாமல் தங்கள் மட்டுமிருப்பார்கள். சிலர் இது எப்போது நடக்கும். வேதம் இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்பார்கள். அந்தக் காலத்தை அறிவது நம்முடையதல்ல. அப்போது சாத்தான் கட்டப்படுவான். சற்பம்போல விஷமும் தந்திரமுமுள்ள சபையின் சத்துருக்கள் மேற்கொள்ளப்படுவார்கள். மண்ணை நக்குவார்கள். ஆதி. 3: 14. கிறிஸ்துநாதர் தமது சத்துருக்களைத் தமது பாதத்துக்குக் கீழாக்கிப்போடும்வரை அவர் சீயோனில் அரசாளவேண்டும்.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

இல்லைஇல்லையோர் இளக்கமும் பாவத்தால் இறுகி
வல்லுருக்கினும் வைரத்தும்வலுத்த என்னெஞ்சக்
கல்லரக்கிய திருப்பதம் கான்வழிப்பட்ட
புல்லிதாம்பரற் கொல்குமென்றெங்ஙனம் புகல்கேன். 961

வேறு.

மண்டலம் புரிபவஞ்சுமந்த மாட்சியால்
அண்டர் நாயக னுளத்தாத்துமத்துயர்

கொண்டு பாடுகள் படக்குறித்துச் செல்லுமத்
தண்டகாரணியத்தின் தன்மை உன்னுவாம். 962

இருளெலாங் கதிரவற்கிடைழிந்துபோய்
ஒருவழித் தொக்குறைந்தென்ன ஓங்கிய
தருநிழல்கதுவிய தண்ணந்தாதுகு
விரிமலர்ப் பரிமளம் வீசுங்காவனம். 963

தண்ணறுந்தடங்களால் தடத்துலாங்கொழு
வண்ணவான் மீன்களால் மலர்ந்தகொம்பரால்
விண்ணுறநிவந்தெழுவியன் பொதும்பரால்
கண்ணிணை களிப்புறுங் கடிகொள்காவனம். 964

விரும்பு நற்குழலியாழ் இசையும் வீழ்வுறச்
சுரும்பினமுரலும் இன்னிசையுந் துன்னரும்
மரம்பயில் புட்குலம் வழங்கும் ஓசையும்
நிரம்பலாற் செவிக்கின்பம் நிறைக்கும் பூம்பொழில். 965

துளிர்தடந்தோய்ந்தலர் குலவுவாசனை
அளவிநன்னிழற் படிந்தசையுந் தென்றலால்
இளமரக்காவில் நின்றெறியுஞ் சாரலால்
புளகுறமெய்விடாய் தணிக்கும் பூம்பொழில். 966

தெளிபுனல் தரங்கமும் செறிந்தமேகமும்
வளர்தருக்குலங்களும் வசந்தவாடையும்
உளைபரியாதியா உவந்திச்சோலைவாய்க்
குளிர்அரசிருத்தலாற் கோடைநாடலா. 967

தினகரன் கதிரொளி சேர்கிலாமையாற்
கனவிருள்நிறைந்த இக்காமர் சோலைதான்
புனிதநல்லாவியின் கதிர்புகுந்திடா
மனமெனலாய பொய்மதமும் போன்றது. 968

உள்ளன வறியவர்க்குவந்து நல்குமவ்
வள்ளலுக்கிருநிதி வளஞ்சுரத்தல்போல்
தெள்ளுதீங்கனி முதலாய செம்பொருள்
கொள்ளினும் வண்பயன் குன்றிடாதது. 969

வண்டுகள் மலர்குடைந்தினிய மாநற
வுண்டிசைமுரன்று தாலாட்டஒண்பொழில்
தண்டலைசினைக்கரம் அசைத்துத் தாங்குறக்
கொண்டலங் குழவிவந்துறங்குங் கொள்கைத்த. 970

ஓடையுங் கோடையுங் ஓடுங்கான்மலர்
வாடையும் வாடையும் மலியும்புட்பரி
பாடையும் பாடையும் மயங்கும்பைம்புயல்
ஆடையும் மேடையும் அணியுந்தாருவே. 971

பனிமகன் மழைமுழவொலிக்கப் பாட்டளி
இனியதேன் அமுதமுண்டிசைக்கக் கற்பக
நனைவிரிநறுந் தொடைசூட்டி நல்லெழில்
வனமடந்தையை மணம்புரிவன் வைகலும். 972



அனவரதமுந் திருமொழியை அன்பினுல்
நினைவினிலுன்னி அந்நிலையில் நிற்பவர்
கனிசெழித்திடுதல்போல் நறுந்தெண்ணீர்க்கனைப்
பனிமலர்த்தருக்குலம் பயன்கொண்டோங்குமே. 973

படருமுந்திரி கொழுகொம்புபற்றியே
கெடலரும் நறுங்கனி கிடைத்ததோற்ற மெய்த்
திடவிசுவாசமோடையன் சேவடி
அடைபவர் நடையினை அடுத்துக்காட்டுமால். 974

சந்ததமுடங்குதாள் தனைக்கண் ஊன்றிநின்
றந்தரநோக்கியே அலர்க்கண்ணீர் சொரி
கந்தமல்லிகை உளக்கசிவோடண்ணல்தாள்
வந்தனைபுரிபவர் செயலைமானுமால் 975

வேறு.

இனையனவளங்கொண்டோங்கி இறும்புசூழ் கிடந்தஅந்தப்
புனைமரக்காவின் பாங்கர்பொலன்செழு கேதுசேமென்னும்
நனிசிறந்தொப்பிகந்த நறுமலர்ச்சோலை கண்ணுற்
றனகனும் அன்பின்மிக்க அடியரும்ஆண்டு புக்கார் 976

சோலைவாய் விளைந்தபாவச் சுமைசுமந்ததனுல் இந்தச்
சோலைவாய் அணைந்துதேவசுதன் தமதாத்துமத்தில்
மூலகாரணமாய் நிற்குமுழுமுதல் முனிவுதாங்கிச்
சாலநோவடைந்து தீர்த்தல் தகுதியென்றடைந்தார் போலும். 977

நாரிருள்மலிந்த அந்தக்கடிபொழிற் சுருங்கைதோறும்
தாரகாபதியின் கற்றைதவழ்ந்தொளி தயங்கஆங்கே
ஆரருட்டருமமூர்த்தி அடுத்தமை அண்ணலாவி
சீருறத்திகழுமன்பர் சிந்தையுட்சேறல்போலும். 978

செழுமலர்ச் சோலையோங்கு சினைதொறும் நிறையப்பூத்த
கொழுமுகை அவிழ்ந்துசெந்தேன் குளிர்நறுந் துளிவார்காட்சி
அழகிய மணவாளன்றன் அகத்துவந்தடையும் ஆன்மக்
கழிதுயர்க்கிரங்கிச் சிந்துங்கண்ணினீர்த் தாரைபோலும். 979

பொழிலுறுபறவையாவும் புண்ணியமூர்த்திவந்து
கழிதுயரடைவொன்று கருதினகொல்லோகங்குல்
வழிவருமியற்கைதானே வாய்விடாதொழிந்தவண்பூந்
தழையெலாங் குழைந்துசாம்பித்தருக்களுஞ் சடைத்தமாதோ. 980

முத்தமிழாதி பாடைமுழுதுணர் கவிஞரேனும்
வித்தகன் அடைந்த ஆன்மவேதனை இனையவென்று
வித்தரித்துரைக்க வல்லார் அல்லரிம்மெய்மை தேர்ந்தும்
பித்தரிற்பிதற்றுகின்றேன் பேதைபேராசைகொண்டே. 981

எங்கணாயகன் பூந்தோட்டத்திறுத்தபின் கருணைபூத்த
பங்கஜ விலோசனத்தால் பாங்குறும் சீடரொண்மர்
தங்களைநோக்கியான் போய்த்தனிஜெபம் புரிந்துமீள்வல்
இங்கிருமென்னச் செவ்வாயிதழ் திறந்தியம்பிப் பின்னர். 982

கிரிமிசைமுன்னர்த் தம்மைக்கேழ்கிளர் மகிமையோடு
தரிசனஞ்செய்த மூன்றுதாஸரையுடன் கொண்டேகி
ஒருசிறையுற்றுத் துன்பமுறுவதற்குரியதான
நரகபாவத்திற் பாடுநேயந்தனுபவிக்க லுற்றார். 983

வாக்கினுக்கதீதமான மகிமையை இழந்துங்கன்னி
பாக்கிய வயிற்றிற் கர்ப்பப்பையுளே பழங்கணுற்றும்
ஆக்கமற்றேழையாகி அலைந்தும் சற்றவியாதோங்கி
மீக்கிளர் தேவநீதி வெந்தழல் குளிப்பதானார். 984

மட்டறுகருணைத்தாதை மகத்துவபுனித நீதிப்
பட்டயமெழும் பியாவிபதைக்க ஊடுருவிப்போக
முட்டியசீதவகோப முழங்கனல் முங்கிப்பொங்கிச்
சுட்டிடத் தூயவுள்ளந் துடிதுடித்தது துண்ணென்றே. 985

தடித்திடுசெரியமேக சாலங்கள்ககன கோளத்
திடித்தெழுந் துகாந்தகாலத் திரவியைப் புதைத்தாலென்ன
மடித்திடும் அகோரபாவவாதனை ஒருங்குகூடிப்
பிடித்திடநீதாகித்தன் பேரொளி இழந்ததம்மா. 986

பாபத்தி கூலி நித்யபயங்கரமெனத்தேராது
மாபத்துவிதியை மாந்தர்வனைந்திட எழுந்ததேவ
கோபத்தின் மிகுதியாலேகூடிய குரூரமான
சாபத்தின் திரள்கள் எம்மான்தலைமிசை விழுந்த அன்றே. 987

மண்ணுலகனைத்துந்தீக்க வானிடைக்குமுறி நின்ற
அண்ணலார் உக்கிரசண்டமாகிய அசனிக்கூட்டம்
தண்ணளிசுரக்கும் ஸ்ரீவத்ஸரகமாம் ரக்ஷண்ய
புண்ணியப்பொருப்பினமீது பொருக்கென உரறிவீழ்ந்த. 988

வெந்துயரொன்னுந்தாபம் மிருகனல் மூளமூளச்
சுந்தரகுமரன்ஆவி துடித்துளம் உடைந்துசோர்ந்து
நைந்தனல்மெழுகுபோல உருகியே குடரிளைப்பண்
சிந்தியதென்னே யேதுபாவியேங் தீமையன்றோ. 989

அன்றொரு சிமயத்துச்சி அலர்கதிர் ஞாயிறென்னத்
துன்றொளிவிரித்த ஜோதிச்சுடர்த்திரு முகங்குறுவி
நன்றிலாமாந்த ரீட்டும் லஜ்ஜையால் நாணமுற்றுப்
பொன்றிய வதனம்போலப் பொலிவிழந்திருந்ததின்றே. 990

அருண்மகோததியிற் பூத்தஅரவிந்தம் அமுததாரை
சொரிதரநித்யஜீவ சுருதித்தேன் துளித்ததெய்வ
மருமலிகுமுதப்போது வாயறப் புலர்ந்ததாலும்
உரைதரஅரிதாய் மீயுற்றொடுங்கிய துரைக்கற்பாற்றோ. 991

அன்புருவான நம்பிக்கருந்தும் ஆகாரம்ஆன்ம
துன்பமே பருகும்பானம் சொரிகண்ணீர் ஆதலாலே
என்பெலாம் கட்டுவிட்ட தெழிற்றிருமேனி வாடித்
தன்பலம் ஓடுபோலக் காய்ந்தறச் சலித்ததம்மா. 992

கேந்தகம்நாறிச் சாவாக்கிருமிகள் கெழுமிநித்ய
வெந்துயர்க்குறையுளாகி மிகக்கொதித்தெழும்புங் கும்பிச்
செந்தழற்கொழுந்துவீசி ஜெகதலம் புரக்கவந்த
சுந்தரன்தூய்யமேனி துவண்டதோ அறிகிலேமால். 993

தாங்கரும்பாவபாரஞ் சமழ்த்திடும் ஒருபால்நீதி
ஓங்கியகட்கம் நெஞ்சை உருவிநின்றுடற்றும் ஓர்பால்
வீங்கியதேவகோப வெங்கனல்வெதுப்பும் ஓர்பால்
நீங்கரும்மரணங்கிட்டி நெடுந்திகில் விளைக்கும்ஓர்பால். 694

பயங்கரமரண பாசம்பிணித்தலால் படருள்மூழ்கி
இயங்குறுபுலன்களெல்லாம் ஒடுங்கின இந்தியங்கள்
மயங்கினமனுதியந்தக் கரணங்கள் மருண்டுமொழாங்
துயங்கினஅவயவங்கள் மற்றினி உரைப்பதென்னே. 995

முழங்கெரி நடுவணுய்த்த முருகுலாம் அலங்கல்போலும்
சழங்குவெண்டிரை வாயுற்றுத் தளர்ந்துழல்திரணம்போலும்
பழங்கணுக்குடைந்து தேம்பிப்பரிவுறீஇப் பாருக்கின்பம்
வழங்குவான்துணிந்துவந்த மாநுவேல்வருந்தினாரால். 996

கணந்தொறும் இனையதுன்பங் கதித்திடக் கருணையென்னும்
குணங்குடியிருந்த சிந்தைக்குரிசில் உட்கோட்டமின்றி
இணங்கினர் அலமந்தேங்கி இடர்க்கடற் கெல்லைகாணு
துணங்கிவெய்துயிர்த்தார் மாந்தர்உயிர்க்குயிராகி நின்றார். 997

ஒருசிறு பவத்தால்நித்ய ஊழித்தீக்கடற்குள் மூழ்கிப்
பரிபவம்அடையுஞ்ஜீவன் பாருலகாதி அந்தம்
புரிபவவாதையெல்லாம் புனிதன்இப்பொழுதினுக்குள்
ஒருதனிஅடையவென்றால் அதன்றிறம் உரைப்பார்யாரே. 998

பாருண்ட பாவக்கொண்டல் படர்ந்துவேதனையாம் ஆழி
நீருண்டுபொழிந்த நீத்தம்நீடிய மரணஆற்றில்
சீருண்டபெருமான் எண்ணில் ஜீவரைஇடுக்கிநீந்தி
ஈருண்டுதவித்துங் கைவிட்டிலர் தனிஇடர்ப் பட்டாரால். 999

நலனுறுநித்ய செல்வம்நல்குர வதனினின்றும்
அலகிலாநித்யானந்தம் அரியவேதனையில் நின்றும்
இலகுறும் நித்யஜீவன் இழிமரணத்தில் நின்றும்
குலவிவந்துதித்த அன்றேற் கும்பிநங்குடியாமன்றோ. 1000

(இன்னும் வரும்.)

---

## வேதசித்தாந்தப் பிரமாணங்கள்.

### III-ம் பிரமாணம்.

(தொடர்ச்சி.)

II. இறங்கினார் என்னும் வார்த்தையின் அர்த்தம் என்ன?
1. சரித்திர சம்பந்தமாயும். 2. வேதசம்பந்தமாயும் அர்த்தம் என்னவென்று பார்ப்போம்.

1. சரித்திர சம்பந்தமாய்ப் பார்த்தால்; A. அக்குவில்ஷன் என்னும் விசுவாசப்பிரமாணத்தில் அவர் பொந்தியுபிலாத்துவின் கீழ் பாடுபட்டு பாதாளத்தில் இறங்கினார் என்று இருக்கிறது. நமது கர்த்தர் அடக்கம்பண்ணப்பட்டதை விட்டிருக்கிறது. அதனாசி, நீசேயா விசுவாசப்பிரமாணங்களில் அவர் பாதாளங்களில இறங்கினார் என்பது விடப்பட்டிருக்கிறது. B. இறங்கினார் என்பது அவருடைய ஆத்துமா தானாய்ச் சென்றது என்று அர்த்தமாம். அவருடைய சரீரம் சென்றது என்று அர்த்தமல்ல, அது மூன்று நாளும் கல்லறையில் தானிருந்தது. திருச்சபை விசுவாசப்பிரமாணத்தில் நமது கர்த்தருடைய ஆத்துமாதான் பாதாளத்தில் சென்றது என்று விசேஷித்துச் சொல்லாவிட்டாலும் இதைக்குறித்துச் சந்தேகம் ஒன்றுமில்லை. C. நமது கர்த்தர் பாதாளங்களில் இறங்கினது அவருடைய அடக்கத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் நடந்திருக்கவேண்டும். நமது கர்த்தர் உயிர்த்தெழுந்தபோது அவருடைய ஆத்துமா பாதாளத்தில் விடப்படவில்லை என்றால் அவர் உயிர்த்தெழுமுன்னே அது பாதாளத்திலிருந்திருக்கவேண்டும். அவர் மரிக்குமுன்னே அது பாதாளத்திலிருக்கவில்லை.

II. 2. வேதசம்பந்தமாய்ப் பார்ப்போம்.

அப்போஸ். 2: 27—31 வாசித்துப் பார்க்கும்போது பரி. பேதுரு இந்த வாக்கியங்களைச் சங்கீதம் 16–லிருந்து எடுத்துக் காட்டி இந்த வாக்கியங்கள் மேசியாவைக்குறிக்கின்றன என்று வியாக்கியானம்பண்ணுகிறார் எபேசி. 4: 9. 1 பேது. 3: 19–வாசித்துப் பார்.

III. நமது கர்த்தர் பாதாளத்தில் இறங்கின நோக்கம் இன்னதென்று 1. சரித்திர சம்பந்தமாயும், 2. வேதசம்பந்தமாயும் பார்ப்போம்.

1. சரித்திர சம்பந்தமாய்ப் பார்க்கும்போது ஆதிக்கிறிஸ்தவர்கள் நமது கர்த்தர் பாதாளத்தில் இறங்கினார் என்பதை விசுவாசித்தார்களென்றாலும் அவர் இறங்கின நோக்கம் இன்னதென்பதைக் குறித்துப் பற்பல அபிப்பிராயம் உடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் நமது கர்த்தர் மரித்துப்போனவர்களுடைய ஆத்துமாவுக்குப் பிரசங்கித்தார் என்று 1 பேது. 3: 19–கொண்டு பெரும்பான்மை நம்பினார்கள். ஆனால் நானாவித அபிப்பிராயங்களும் இருந்தன. அவைகளுள் A. மரணத்துக்குப்பின் மனிதருடைய ஆத்துமாவுக்கு யாதொரு மாறுதல் நடக்கிறதில்லை. நமது இரக்ஷகர் அந்த ஆத்துமாக்கள் நடுவில் போனதினாலும் அவர்களுக்குப் பிரசங்கித்ததினாலும் யாதொரு மாறுதல் அந்த ஆத்துமாக்களுக்கு உண்டாகவில்லை என்று சிலர் சொன்னார்கள். B. ஆதேசிலிருந்த சிலரை அவர் மீட்டு அதைவிடப் பாக்கியமான ஸ்தலத்துக்கு அவர்களைப் போகப்பண்ணினார் என்று சிலர் நினைத்தார்கள். C. நமது கர்த்தர் ஆதேசிலிருந்த தேவபத்தர்களை மோக்ஷலோகத்துக்குக் கொண்டுபோனதுமல்லாமல் முற்காலத்தில் கீழ்ப்படியாதவர்களாயிருந்த சிலரும் விசுவாசித்து இரக்ஷிக்கப்பட்டார்கள் என்று வேறு பலர் எண்ணினார்கள். D. பாதாளங்கள் இறங்கினார் என்னும் வார்த்தை உபமான அர்த்தமுடையது என்றும் நரகவேதனைகளையெல்லாம் நமது கர்த்தர் உலகத்திலேயே சகித்தார் என்பதுதான் அதின் அர்த்தம் என்றும் கல்வின் என்பவர் சொன்னார். E. நமது கர்த்தர் சாத்தானை எதிர்த்து ஜெயிக்க எரிநரகத்துக்கே போனார் என்று வேறு சிலர் சொன்னார்கள்.

III. 2. வேதாகம வகையாய்ப் பார்க்கும்போது மனிதர் யாவருக்கும் உரிய மரணத்துக்குரிய நிலைமையை நிறைவேற்றப்போனார். 1 பேது. 3: 18, 19.



பிரசங்கித்தார் என்பது கூறினார் என்று அர்த்தமே. இந்த வாக்கியத்தின் பொருளைக் கண்டுபிடிக்கிறதில் வருத்தம் என்னவென்றால் இதில் பழைய உலகத்தாரைக்குறித்துப் பேசி பிந்தின மற்றவர்களைக்குறித்து ஒன்றும் சொல்லாமல் விட்டிருப்பதேயாம்.

---

## 1883—84-ளு-ல் ரிசல்ட் கிரான்று பள்ளிக்கூடங்கள் சோதனையாகும் தேதியைக் காட்டிய அட்டவணை.

---

### திருநெல்வேலி மியுனிசிபாலிட்டி.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

2 திருநெல்வேலி. ... ... ... டிசம்பர் 7, 8 1883

கனம் ஆர்க்கோட் ஐயரவர்கள்.

| | |
|---|---|
| 3 திருநெல். புட்டா. டி. 10 1883 | 5 ஷை குளப்பறைத்தெரு. டிச. 10 |
| 4 ஷை தெப்பக்குளத்தெரு. ” | 6 ஷை அரசடிப்பாலம். ” |

### தூத்துக்குடி மியுனிசிபாலிட்டி.

கனம் ஷெருக் ஐயரவர்கள்.

1 தூத்துக்குடி. S. P. G. ... ... ... டிசம்பர் 18 1883

மகாகனம் கார்வேல் அத்தியக்ஷரவர்கள்.

| | |
|---|---|
| 4 தூத்துக்கு. தெற்கூர். டி. 20, 21 | 8 ஷை கீழூர். டிசம்பர் 20, 21 |
| 5 ஷை சண்முகபுரம். ” | 9 ஷை மேலூர். ” |
| 7 ஷை வடக்கூர். ” | |

### ஓட்டப்பிடாரந் தாலூகா.

கனம் வேதநாயகம் ஐயரவர்கள்.

| | |
|---|---|
| 18 கட்டாலங்குளம். ஆக. 10 1883 | 29 வானரம்பட்டி. ஆகஸ்து 13 |
| 20 துரைசுவாமிபுரம். ” | 31 குமரெட்டியாபுரம். ” |
| 25 ராமநாதபுரம். ஆகஸ்து 11 1883 | 36 கடலை மிஷன். ஆகஸ்து 14 |

கனம் ஆடம்சன் ஐயரவர்கள்.

| | |
|---|---|
| 59 கீழ ஈரால். ஆகஸ்து 18 1883 | 76 காட்டுநாயக்கன்பட்டி. ஆக. 21 |

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

77 வாலன்பட்டி. ... ... ... ஆகஸ்து 21 1883

### கனம் ஆடம்சன் ஐயரவாகள்.

78 சோலபுரம். ஆகஸ்து 21 1883
80 அகிலாஉண்டபுரம். ,,
81 மேலசெய்த்தலே. ஆகஸ்து 22
82 வி. தளவாய்புரம். ,,
83 சந்திரகிரி. ,,
85 வெள்ளாராம் மிஷியோன். ,,
86 கவானகிரி மிஷியோன். 23
87 சுந்தலக்கட்டை. ,,
88 குசக்குடி. ,,
89 பெரிய நத்தம். ,,
90 ஆவரங்காடு. ,,
91 ஆசனூர். ,
92 சண்முகபுரம். ,,
93 பொம்மியாபுரம் ,,
94 க. சுப்பிரமணியபுரம். ,,
95 ஷை ஷை ,,
96 இலட்சிமிபுரம். ஆகஸ்து 24
99 துரைசாமிபுரம். ,,
101 கொல்லன்பரும்பு மிஷி ,,
106 குமாரபுரம். 25
107 வேடநத்தம். 27
108 தருவைகுளம். 28
109 ஓடைப்பட்டி. 29
110 அரசடி பனையூர். ,,
111 மடத்தூர். ,,
112 மப்பிலியூரணி. ,,
113 பனையூர். ,,

### கனம் ஷெருக் ஐயரவர்கள்.

115 புதுக்கோட்டை. ஆக. 30 1883
116 மறவன்மடம். ,,
117 கோரம்பளளம். ,,
118 நாச்சியார்புரம். ,,
119 பேரூரணி. ,,
120 சேர்வைகாரன்மடம். ஆக. 30
121 முள்ளகாடு. ,,
122 கொலையன்கரிசல். 31
123 இராமசாமிபுரம். ,,

### மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்

134 கைலாசபுரம். செப்ற். 3 1883
135 பாறைக்குட்டம். ,,
136 வாகைக்குளம். ,,
137 தளவாய்புரம். செப்ற். 3
138 அளகாபுரி. ,,
139 திம்மராஜபுரம். ,,

### கனம் ஆடம்சன் ஐயரவர்கள்.

148 புதியம்புத்தூர் போர். செப். 5
149 மேற்படி ,, 1883
154 வள்ளிநாயகபுரம். செப்ற். 6
156 ஒட்டப்பிடாரம். எ. வி. 7, 8

### மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

160 பசுவந்தலே. ... ... ... செப்ற்றெம்பர் 10 1883

### கனம் ஆடம்சன் ஐயரவர்கள்.

163 மீனாக்ஷிபுரம். ... ... ... செப்ற்றெ. 10 1883

### மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

172 பரமன் பச்சேரி. ... ... ... செப்ற்றெம்பர் 11 1883



### கனம் ஆடம்சன் ஐயரவர்கள்.

175 குளத்தூர். செப்ற். 12 1883
176 பாண்டியபுரம். ,,
177 சிப்பிகுளம். ,,
178 முத்துராமலிங்கபுரம். ,,
179 மாத்தாண்டன்பட்டி. ,,
180 பூசனூர். ,,
181 கெச்சிலாபுரம். ,,
184 சக்கம்மாள்புரம். செப்ற். 13
188 முத்துசாமிபுரம். ,,
189 மேல்மாந்தை திண்ணே. 14
190 எதிரன்பட்டி. ,,
191 குஞ்சியாபுரம். ,,
196 வேம்பார். 15
198 காடல்குடி. 17
199 பூதலபுரம். ,,
200 வெங்கடேஸ்வரபுரம். ,,
201 மாவில்லோடை. ,,
202 மாதளபுரம். செப்ற். 18
203 நத்தத்துப்பட்டி. ,,
204 வெள்ளையம்மாள்புரம். ,,
205 சிவனூர். ,,
206 நடுக்காடு. ,,
207 இடைச்சியூரணி. செப்ற். 18
208 துரைசாமிபுரம். ,,
209 நாகலாபுரம் ஆர்பன். 19
210 மேற்படி கிளை. ,,
212 கரிசல்குளம். ,,
213 புதூர். * 20
215 பட்டித்தேவன்பட்டி. ,,
216 வெப்பலோடை. ,,
217 செங்கோட்டை. 21
221 சின்னவனுயகபுரம். 21
227 விளாத்திகுளம். எ. வி. 22
228 கெ. மேற்படி. ,,
229 மந்திகுளம். ,,
230 இலந்தைகுளம். ,,
231 குருவாரபட்டி. ,,
233 மேலநத்தம். ,,
234 ஆத்தங்கரை. 24
235 வேடபுதூர். ,,
237 வேலிடுபட்டி. ,,
238 சித்தநாயக்கன்பட்டி. ,,
239 முதலேபட்டி ,,

### மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

247 துறையூர். செப்தெம். 26 1883
248 ஈராட்சி. ,,
252 பாண்டவர்மங்கலம். ,,
253 ஆனைக்குளம். ,,
254 தொட்டம்பட்டி. ,,
255 தம்பியாபிள்ளையூரணி. ,,
256 கேசவன்குண்டு. ,,
257 கிழவிகரிசகுளம். ,,
261 பொம்மயாபுரம். 27
280 கைத்தார். அக்டோ. 1
283 வடஇலந்தைக்குளம். ,,
288 பண்ணிகுளம் போர். அக். 2
289 மேற்படி டேஸ். ,,
290 தெற்கு மயிலோடை. அக். 2
291 அகிலாண்டபுரம். ,,
293 கரிசகுளம். ,,
294 ராஜாபுதுக்குடி. ,,
295 சிவனூர். ,,
296 அயிரவன்பட்டி. அக்டோ. 3
297 செவலாபட்டி. ,,
304 கலத்திக்கிணறு. அக்டோ. 4
305 தீத்தாம்பட்டி ,,
306 கோவிந்தபுரம். ,,
307 மருதன்வாழ்வு. ,,
308 நாறைக்கிணறு. ,,
309 கைலாசபுரம். ,,

மகாகனம் கார்வேல் அத்தியக்ஷரவர்கள்.

322 டேவிஸ்புரம். ... ... ... ... டிசம்பர் 20 1883

## திருநெல்வேலித் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

324* சிவந்திபட்டி. அக். 8 1883
325 பர்ப்பநாதபுரம். ,,
327 டக்கரம்மாள்புரம். அக்டோ. 9
328 கொங்கந்தான்பாறை. 10
330 திடியூர். அக்டோபர் 12
331 பூக்குளி. ,,
332 அடிமிதித்தான்குளம். 13
333 கண்டித்தான்குளம். அக். 13
334 அரியகுளம். 15
340 சுத்தமல்லி. 16
342 கருங்காடு. 17
344 திருவேங்கிடநாதன்கோ. 18
347 குன்னத்தூர். 19
351 கல்லூர். 20

கனம் ஆர்க்கோட் ஐயரவர்கள்.

359 பேட்டை. ... ... ... ... அக்டோபர் 23 1883

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

360 பேட்டை. அக்டோ. 23 1883
363 பழையபேட்டை. 24
365 வெள்ளாளன்குளம். 25
366 வெட்டுவான்குளம். ,,
367 வெண்கலப்பொட்டல். 26
369 மாவடி. ,,
370 புதூர். ,,
372 குப்பனுபுரம். ,,
373 உக்கிரமன்கோட்டை. 27
374 அழகியபாண்டிபுரம். ,,
375 ரஸ்தா. ,,
377 சீதாகுறிச்சி. ,,
378 ஷை மிஷியோன். 29
379 பார்வதியாபுரம். அக்டோ. 29
380 நாஞ்சாங்குளம். 30
381 தென்கலம். ,,
388 மடத்துப்பட்டி. நவம். 2 1883
397 கான்சாபுரம். நவம்பர் 5
403 மேலப்பாட்டம். 7
404 மணற்காடு. ,,
405 மேலக்குளம். ,,
410 அருகன்குளம். நவம்பர் 9
422 தச்சநல்லூர். நவம்பர் 19
425 பிராயன்குளம். ,,
429 சிக்கநரசய்யன் கிராமம். 21

## தென்கரைத் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

454 மணற்கரை. ஜனுவரி. 18 1884
457 நாணற்காடு. ,,
463 வசையப்பபுரம். ஜனுவரி 19
464 செய்துங்கநல்லூ.மார்· 27 1884
474 தாதன்குளம். மார்ச்சு 25
476 கொங்கராயகுறிச்சி. ,,
483 புதுக்குடி. டிசம்பர் 28 1883
484 ஸ்ரீவைகுண்டம். ,,



161994

## ஒட்டப்பிடாரந் தாலூகா.

கனம் மர்காஷிஸ் ஐயரவர்கள்.

583 நாசரேத் போர். ஜனு. 5 1884
584 மேற்படி இரவு. ,,
585 மேற்படி அநாதி. ,,
586 அகப்பைகுளம். ,,
587 வெள்ளமடம். ,,
588 பிள்ளைமனை. ,,
589 வாழையடி. ,,
590 வகுத்தான்குப்பம். ஜனுவரி 7
591 முதலைமொழி. ,,
592 தையலாபுரம். ,,
593 தோப்பூர். ,,
594 பிடானேரி. ஜனுவரி 7
595 மூக்குப்பீறிகுடியிருப்பு. ,,
596 வெள்ளரிக்காரூரணி. ,,
597 ஒய்யாங்குடி. ,,
598 மாவீடுபண்ணை. ஜனுவரி 8
599 குளைக்கான்குடி. ,,
600 உடையார்குளம். ,,
601 கானம். ,,
602 செருசலேம். ,,
603 பஞ்சுவிளை. ,,
604 மூலக்கரை. ,,

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

605 மெஞ்ஞானபுரம் போர். பெபு. 19-21 22, 23 1884
606 மேற்படி டே. மார்ச்சு 7
607 சாந்தபுரம். ,,
608 ஆரோக்கியபுரம். ,,
609 லட்சிமிபுரம். ,,
610 பாவநாசபுரம். ,,
611 கல்லுவிளை. மார்ச்சு 7
612 பூச்சிக்காடு தெற்கு. ,,
613 மேலவீரவநல்லூர். ,,
614 அடைக்கலபுரம். மார்ச்சு 8
615 மாணிக்கபுரம். ,,
616 பிச்சிவிளை. ,,

## தென்கரைத் தாலூகா.

மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

617 எழுவர்முக்கி. மார்ச்சு 8 1884
618 பூலிகுடியிருப்பு. ,,
623 வெள்ளாளன்விளை. மார்ச்சு 10
624 செட்டிவிளை. ,,
625 சகாயபுரம். ,,
626 தைக்காவூர். மார்ச்சு 10
627 சீகாட்சி. ,,
628 தேரிகுடியிருப்பு. ,,
629 பூச்சிக்காடு வடக்கு. ,,
630 பரமன்குறிச்சி. ,,

கனம் நார்மன் ஐயரவர்கள்.

631 கிறிஸ்தியநகரம் பெ. 24 1884
632 மேற்படி டே. மார்ச்சு 11
633 பெருமாள்புரம். ,,
634 பண்டாரம் செட்டிவிளை. ,,
635 சந்தடியூர். ,,
636 கொட்டன்காடு. ,,
637 வேதக்கோட்டைவிளை.மார் 11
638 காலன்குடி. ,,
642 குலசேகர எ. வி. எஸ். 12
647 வடக்கூர். ,,
648 மங்கலாபுரம். ,,

### மகாகனம் கார்வேல் அத்தியக்ஷரவர்கள்.

651 இடையன்குடி. பெபுரு. 25, 26, 27, 28, 29 1884
652 தருவை வடக்கு. மார்ச்சு 1
653 மேற்படி கிழக்கு. ,,
654 மேற்படி மேற்கு. மார்ச்சு 1
655 இலைக்கறிவிளை. ,,
656 சுப்பிரமணியபுரம். ,,
657 தஞ்சபுரம். ,,

### மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

658 குமரன்விளை. மார்ச்சு 3 1884
659 அதிசயபுரம். ,,
660 சவுக்கியபுரம். ,,
661 நல்லூர். ,,
662 செபஞானபுரம். ,,
663 பனைவிளை. ,,
664 சமாதானபுரம். மார்ச்சு 3
665 அனுக்கிரகபுரம். 4
666 சுகநகரம். ,,
667 தர்மநகரம். ,,
668 படுக்கப்பத்து. ,,

### கனம் நார்மன் ஐயரவர்கள்.

674 முதலூர். மார்ச்சு 5 1884
675 போலியர்புரம் ,,
676 கண்காணியபுரம். ,,
677 புதூர். ,,
678 அடையல். ,,
679 டக்கர்புரம். ,,
680 சட்டாமடம். மார்ச்சு 5
681 காலங்குடி. ,,
682 சவுந்தரபுரம். ,,
683 நரையன்குடி. ,,
684 உடைப்பக்குடி. ,,
685 வயிரவம். ,,

### மகாகனம் சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள்.

686 கடாக்ஷபுரம். மார்ச்சு 6 1884
687 அன்பினகரம். ,,
688 நேசபுரம். ,,
689 மெய்யூர். ,,
690 செம்புலிங்கபுரம். ,,
691 நாயனூர். ,,
692 பிச்சைவிளை. ,,
693 சாத்தன்குளம். ஜனு. 9 1884
696 சத்தியநகரம். ,,
697 சிறப்பூர். ,,
698 கிருபாபுரம். ,,
699 விஜயராமபுரம். ,,
700 சொக்கலிங்கபுரம். ,,
701 முத்துக்கிஷ்ணபுரம். ,,
702 அமத்தவண்ணக்குடி. ,,
703 மேற்படி வடக்கு. ஜனுவரி 9
704 புதுக்குளம். 10
705 செக்கடிவிளை. ,,
706 தோப்பைக்குளம். ,,
707 குலசேகரக்குடி. ,,
708 கொம்பன்குளம். ,,
709 தஞ்சநகரம். ,,
710 மனரம்மியபுரம். ,,
715 ஆசிர்வாதபுரம். ஜனுவரி 12
716 கலுங்குவிளை. ,,
717 நெடுங்குளம். ,,
718 பனைக்குளம். ,,
719 ஆதாளிகுளம். ,,
720 கருங்கடல். ,,
721 அருளூர். ,,



722 மீரான்குளம். ஜனு. 12 1884
723 பழனியப்பபுரம். ,,
724 சந்தோஷபுரம். ,,
725 திருவரங்கப்பட்டி. ,,
726 மணல்விளை ,,
727 மல்லல்புதுக்குளம். ,,
728 கிளாக்குளம். ,,
729 கட்டாரிமங்கலம். ,,
730 அரசர்குளம். ,,
731 ஆனந்தபுரம் ஜனுவரி 11
732 பளங்குளம். ,,
733 திருவரங்கநேரி. ,,
734 வேதபுரம். ,,
735 கருவேலம்பாடு. ,,
736 குப்பாபுரம். ,,
737 குரிப்பன்குளம் சாண். ,,
738 மேற்படி மறக்குடி. ,,
739 வைத்திலிங்கபுரம். ஜனுவரி 11
740 சின்னமாடன்குடியிருப். ,,
741 நாலுமாவடி. மார்ச்சு 21 1884
742 கீழ மேற்படி. ,,
743 பாட்டக்கரை. ,,
744 பிரகாசபுரம். ,,
745 நெய்விளை. ,,
746 இரக்ஷண்யபுரம். ,,
765 சவுத்புரோ வடக்கு. மார்ச்சு 16
766 மேற்படி மத்தி. ,,
767 மேற்படி தெற்கு. ,,
768 பூவரசு. ,,
769 கீழப்புதுக்குடி. ,,
770 சோனகன்விளை. ,,
776 ஆத்தூர் மாந்தலை. மார்ச்சு 19
777 மேற்படி தெற்கு. ,,

### கனம் வேதநாயகம் ஐயரவர்கள்.

790 ஆலம்பட்டி மார்ச்சு 19 1884
791 இலுப்பையூரணி. ,,

## சமாசாரத்திரட்டு.

இம்மாசம் நிகழ்ந்த முக்கியமான சம்பவம் யாவாதீவில் உண்டான கொடிய பூமியதிர்ச்சியே. மேற்படி விபத்தினால் உத்தேசம் முப்பதினாயிரம் பேர் உயிர் நாசமடைந்தார்கள். அநேக வருஷங்களினிடையில் இவ்வளவு பயங்கரமான சங்கதி பூலோகத்தில் எங்கும் நடந்திருப்பதில்லை. யாவா தீவில் முற்காலத்தில் உண்டாயிருந்த அக்கினி மலை அடி மங்கிப்போனதாகவும் அதற்குப் பதில் இப்பொழுது 16–மலைகள் தோன்றியிருக்கிறதாகவும் அறியப்பட்டிருக்கிறது. இந்த பூமியதிர்ச்சியினால் சமுத்திரம் பல பாகங்களில் அதிகோஷ்டமாய் எழும்பிற்று. முக்கியமாய் இலங்கையிலும் கன்னியாகுமரியிலும் அலைகளின் மும்முரம் அதிகப் பயங்கரமாய்த் தோன்றியது. எரிமலையினின்றெழும்பிய கந்தக வாயு ஆகாயமெங்கும் பரம்பினதால் பல நாட்களாக வெயிலும் மஞ்சள் பச்சைமுதலிய நிறபேதங்களாய் எறித்தது. திருப்பத்தூரிலும் வேறு சில இடங்களிலும் அற்ப சொற்பமான அதிர்ச்சிகள் கவனிக்கப்பட்டன.

சித்திவாயோ அரசன் திரும்பவும் போருக்கு நிற்கிறான். பத்து நாளுக்ககம் யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்றும் இல்லையானால் அவனைக் கைதியாக்கும்படி சேனை அனுப்பப்படும் என்றும் இங்கிலிஷ் தளபதி அவனுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிறார்.

(தே—ரி.)

அக்டோபர்மீ நாள்-31. புரட்டாசிமீ 17௨ முதல், ஐப்பசிமீ 17௨ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | கஎ | மாயக்காரரின் நம்பிக்கை அழிந்துபோம். யோபு 8:13. |
| செ | 2 | கஅ | தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பது எப்படி? 9:2. |
| பு | 3 | ககூ | நீர் என் சிறுமையைப் பார்த்தருளும் 10:15. |
| வி | 4 | உ0 | மனுஷருடைய மாயத்தை அவர் அறிவார். 11:11. |
| வெ | 5 | உக | அவரிடத்தில் பெலனும் ஞானமுமுண்டு. 12:16. |
| ச | 6 | உஉ | அவரே என் ரட்சிப்பு. 13:16. |
| ஞா | 7 | உங | மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? 14:14. |
| தி | 8 | உச | வழிதப்பினவன் மாயையை நம்பானாக. 15:31. |
| செ | 9 | உரு | எனக்குச் சாட்சி பகருகிறவர் உன்னதங்களில் இருக்கிறார். 16:19. |
| பு | 10 | உசா | பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது. 17:1. |
| வி | 11 | உஎ | கன்மலை தன்னிடத்தைவிட்டுப் பெயருமோ? 18:4. |
| வெ | 12 | உஅ | என் மீட்பர் உயிரோடிருக்கிறார். 19:25. |
| ச | 13 | உகூ | துன்மார்க்கனின் கெம்பீரம் குறுகினது. 20:4. (16. |
| ஞா | 14 | ௩0 | துன்மார்க்கரின் ஆலோசனை எனக்குத் தூரமாயிருப்பதாக. 21: |
| தி | 15 | க | நீர் சர்வவல்லவரிடத்தில் மனந்திரும்பினால் திரும்பக் கட்டப்படுவீ |
| செ | 16 | உ | அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன். |
| பு | 17 | ங | அக்கிரமமானது பட்டமரத்தைப்போல முறிந்துவிழும். 24:20. |
| வி | 18 | ச | அவருடைய வெளிச்சம் யார்மேல் உதிக்காமலிருக்கிறது? 25:3. |
| வெ | 19 | ரு | தமது ஆவியினால் வானத்தை அலங்கரித்தார். 26:13. |
| ச | 20 | சா | என் நீதியைக் கெட்டியாய்ப் பிடித்திருக்கிறேன். 27:6. |
| ஞா | 21 | எ | ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? 28:12. (ன் 29:15. |
| தி | 22 | அ | நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தே |
| செ | 23 | கூ | உபத்திரவ நாட்கள் என்மேல் வந்தது. 30:27. (து. 31:23. |
| பு | 24 | க0 | தேவனால் ஆக்கினையிடுவார் என்றும்.. எனக்குப் பயங்கரமாயிருந்த |
| வி | 25 | கக | என் உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது. 32:18. |
| வெ | 26 | கஉ | மீட்கும்பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார். 33:24. |
| ச | 27 | கங | மகா நீதிபரனைக் குற்றப்படுத்துவீரோ? 34:17. |
| ஞா | 28 | கச | தேவன் வீண்வார்த்தைக்குச் செவிகொடார். 35:13. |
| தி | 29 | கரு | இதோ தேவன் மகத்துவமுள்ளவர். 36:26. |
| செ | 30 | கசா | அவர் மகா நீதிபரர்; அவர் ஒடுக்கமாட்டார். 37:23. |
| பு | 31 | கஎ | மரண இருளின் வாசலை நீ பார்த்ததுண்டோ? 38:17. |

## விசேஷ நாட்கள்.

1\. அமாவாசை.
7\. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 20-ம் ஞாயிறு.
14\. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 21-ம் ஞாயிறு.
16\. பௌர்ணமி.
18\. பரி லூக்கா சுவிசேஷகன் திருநாள்.
21\. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 22-ம் ஞாயிறு.
28\. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 23-ம் ஞாயிறு.
பரி சீமோன், யூதா அப். திருநாள்.
31\. அமாவாசை.

# நற்போதகம்.

கக. நவம்பர்மீ. ௲அ௱அ௲ (ஆண்டு).

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### ௯-ம் அதிகாரம்.

### கர்த்தருடைய ஜெபம்.

எ-ம் பிரிவு.

ஐந்தாம் விண்ணப்பம்.

வினா. கர்த்தருடைய ஜெபத்தின் ஐந்தாம் விண்ணப்பம் என்ன?

விடை. எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்.

குற்றங்கள் என்பது பாவங்களாம். நாம் இங்கே நம்முடைய ஆத்துமாக்களுக்கு வேண்டிய இரக்கங்களுக்காக தேவனிடத்தில் மன்றாடி, அவருக்கு விரோதமாக நடப்பித்திருக்கிற ஏராளமான பாவங்களினிமித்தம் வரவேண்டிய தண்டனையினின்று இரக்ஷிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

என் அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து பிடித்தது, நான் நிமிர்ந்து பார்க்கக்கூடாதிருக்கிறது. சங். 40:12. தானி. 9:7.

(பாவமன்னிப்பைப்பற்றி விசுவாசப்பிரமாணம் 9-ம் பிரிவு வியாக்கியானத்தில் பார்க்க.)

வினா. ஏன் நாம் நாடோறும் பாவமன்னிப்புக்காக ஜெபிக்கிறோம்?

விடை. நாம் நாடோறும் பாவஞ்செய்கிறபடியினாலே, நாடோறும் பாவமன்னிப்பு அவசியமாயிருக்கிறது.

கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும். என் பாவங்களையெல்லாம் மன்னித்தருளும். சங். 25: 11, 18.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களை எல்லாம் நீக்கியருளும். சங். 51: 9.

வினா. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோ. 6: 23.) இரண்டாம் மரணமுமே; அதற்கு நாம் ஏதுவானவர்களுமாயிருக்கிறோமே; நம்முடைய பாவங்களுக்காக நாமே பரிகாரம் செய்துகொள்ளககூடாதவர்களாயிருக்கிறபடியினாலே, நாம் யார் மூலமாய் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி ஜெபம்பண்ணவேண்டும்?

விடை. தம்முடைய கிருபையினாலே நம்மை இரக்ஷித்திருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாகவே.

அவராலேயன்றி வேறொருவராலும் இரக்ஷிப்பு இல்லை; நாம் இரக்ஷிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. அப். 4: 12.

அப். 5: 31. 1 பேது. 2: 24. சங். 32: 1. ரோ. 4: 6, 7.

வினா. தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்பாரென்று எதிர்பார்க்க நியாயமுண்டா?

விடை. ஆம், நியாயம் உண்டு. நாம் விசுவாசத்தோடும், பாவமன்னிப்பு அவசியமென்ற உணர்வோடும் வரும்போது, தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்பார்.

துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயைபெருத்திருக்கிறார். ஏசா. 55: 7. ஓசி. 14: 2, 4.

தேவன் நம்மிடத்தில் கிருபையாயிருந்து, நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படி ஊக்கமாய்க் கெஞ்சுவோமாக.

வினா. "எங்களுக்கு விரோதமாய்க் குற்றம்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல" என்ற விண்ணப்பத்தின் பாகத்தால் நாம் கற்றுக்கொள்ளுகிறதென்ன?

விடை. நம்முடைய உடன் சிருஷ்டிகளிடத்தில் நாம் பொறுமையையும், மன்னிக்கும் குணத்தையும் காண்பிக்கவேண்டுமென்று போதிக்கப்படுகிறது.

இது மிகவும் வருத்தமான கடமையாயும், சுயவெறுப்பைத் தேடுகிறதாயுமிருக்கிறது. நம்முடைய இரக்ஷகரின் மாதிரி எப்பொழுதும் நம்முடைய கண்களுக்கு முன்பாக இருக்கவேண்டும். லூக். 23: 34.

மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா. உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார். மத். 6: 14, 15.

மத். 18: 21, 22, 32, 35. லூக். 6: 35—37. 17: 3, 4. எபே. 4: 31, 32. கொலோ. 3: 12, 13. யாக். 2: 13.



வினா. மற்றவர்கள் உனக்குச் செய்திருக்கிற கெடுதிகளை நீ மன்னித்தால், அவ்விதமாகவே தேவனும் உனனுடைய பாவங்களை மன்னிப்பாரென்று எதிர்பார்க்கலாமா?

விடை. எதிர்பார்க்கக் கூடாது. நம்முடைய பாவங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின்மூலமாய் மாத்திரம் மன்னிக்கப்படக்கூடும்; ஆனால் நாம் மற்றவர்களுடைய குற்றங்களை மன்னிக்கக்கூடுமெனறால், எவ்வளவு அதிகமாய் தேவன் நம்முடைய பாவங்களை மன்னிப்பார்.

வினா. இரக்கமற்ற ஊழியக்காரன் உவமையையும் அதின் பொருளையும் சொல்லு?

விடை. ஒரு இராஜனுக்கிருந்த ஊழியக்காரரில் ஒருவன் ௰௲-தாலந்துவரைக்கும் கடன்பட்டிருந்தான். ஆனால் அந்தக் கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லை. அதினாலே இராஜன் அவனையும் அவன் பெண்சாதி பிள்ளைகளையும், அவனுக்கிருந்த ஆஸ்தி, நிலம், வீடு, துணி, மணி, சகலத்தையும் விற்றுப்போடக் கட்டளையிட்டான். இவன் அதை அறிந்து, இராஜனுடைய பாதங்களில் வந்து விழுந்து, "ஆண்டவனே என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுதது தீர்க்கிறேன்" என்று கெஞ்சிக் கேட்டான். இராஜன் அதைக் கண்டு, மனதுருகி, அவனுக்கு அந்தக் கடன் முழுவதையும் தயவாக மன்னித்தான். இவனோ வெளியே வந்தவுடனே, தனக்கு ௱-வெள்ளிப்பணம் மாத்திரம் கடன்பட்டிருந்த இன்னொரு ஊழியக்காரனைக் கண்டு அவனைப் பிடித்துத் தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனைக் கொடு, கொடு என்று கோபித்துக் கேட்டான். அதற்கு அவன், இவன் காலிலே விழுந்து, என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். இவனோ, அதைக் கேளாமல், அவனைக் காவலில் போடுவித்தான். மற்ற ஊழியக்காரர் அதைக் கண்டு, துக்கமடைந்து, இராஜனுக்குத் தெரியப்படுத்தினார்கள். அப்போது இராஜன் அந்தப் பெரிய கடன்காரனை வருவித்து, அவனைக் கண்டிப்பாய்ப் பார்த்து, "பொல்லாத ஊழியக்காரனே, நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனையும் சிட்சைசெய்கிற சேவகர் வசம் ஒப்புக்கொடுத்து, அந்தக் கடனை எல்லாம் தீர்க்கிறவரைக்கும் அவனைக் காவலில் அடைக்கக் கட்டளையிட்டான். மத். 18: 23—35.

இதினால், தேவநீதிக்கு நாம் பட்ட கடன் ௰௲-தாலந்துக்குச் சரியான மூன்று கோடி ரூபாய்போல, பெரிய கடன்—மற்ற மனுஷர் நமக்குப் பட்ட கடன் ௱-வெள்ளிப்பணத்துக்குச் சரியான முப்பது ரூபாய்போல, அற்பக்கடன் என்றும்; மன்னிப்புச்செய்யாதவர்கள் மன்னிப்புப்பெற்றவர்களல்லவென்றும் அறிந்துகொள்ளலாம்.

கிறிஸ்துமார்க்கம் அன்பின் ஆவியை உண்டாக்குகிறது. மெய்யான குணப்படுதலும், விசுவாசமும் எப்பொழுதும் மற்றவர்களுக்கு மன்னிக்கும் குணத்தை உண்டாக்குகிறது. பகையும், பழிவாங்கும் குணமும், குணப்படாமையும் அவிசுவாசமுமுள்ள குணத்தை வெளிப்படுத்துகிறது. நாம் பகையையும், வர்மத்தையும் மனதில் பேணிவையாமல், தேவன், கிறிஸ்துவினிமித்தம் நமக்கு

மன்னித்ததுபோல, நாமும் மனப்பூர்வமாய் மன்னிக்கவேண்டும். நாம் இரவில் நித்திரைசெய்யப்போகுமுன் இந்த ஜெபத்தைச் சொல்லி, அப்புறம் மனதில் பகையும், வர்மமும் உள்ளவர்களாய் நித்திரை செய்யும்போது, தேவனுடைய கோபததையே தேடிக் கொள்ளுகிறவர்களாயிருப்போம். ஒரு விசுவாசி அப்படிப்பட்ட ஆவியால் சர்ப்பனைசெய்யப்பட்டால், அவனுக்குள் நற்குண முண்டாகிறவரையும் தேவனோடு ஐக்கியமாயிருப்பதை அபே க்ஷிக்கக் கூடாதவனாயிருக்கிறான்.

ஆண்டவராகிய பரமபிதாவே, உமது ஜனமாகிய நாங்கள் பெலவீனத்தினால் செய்துவந்த பாவங்களாகிய கட்டுகளை அவிழ்த்து, உமது பூரண தயவினால் எங்களை விடுதலையாக்கி, எங்கள் பாவங்களை விமோசனம்செய்தருளவேண்டுமென்று, எங்கள் கிருபையுள்ள கர்த்தரும் இரக்ஷகருமாகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

---

## ஏசாயாவின் தீர்க்கதரிசனம்.

### ஏசாயா. 66–அதிகாரம்.

1, 2–வச. தீர்க்கதரிசியின் காலத்திலே யூதர் தங்கள் தேவாலயத்தைப் பற்றி மேன்மைபாராட்டினார்கள். அப்படியே கிறிஸ்துநாதர் காலத்திலும் செய்தார்கள். அவர்களைத் தாழ்த்தவும், அவர்கள் நம்பிக்கை வீணென்று காண்பிக்கவும், தீர்க்கதரிசிகளும், கிறிஸ்துநாதரும் அதின் அழிவைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். அது கல்தேயரால் அழிந்தபின்பு மறுபடியுங் கட்டப்பட்டது. சடங்குப்பிரமாணமும் ஆசரிக்கப்பட்டது. ரோமரால் முற்றிலும் தேவாலயம் அழிக்கப்பட்டபின்பு, சடங்குப்பிரமாணம் ஒழிந்துபோயின. வானம் தேவனுடைய ஆசனமும் பூமி அவருடைய பாதப்படியாகவுமாக தேவனே முழுதும் சூழ்ந்திருக்க தேவனுக்கு ஆலயங் கட்ட இடமேது? 1 இரா. 8: 7. அப். 7: 48, 49. நித்தியமான தேவன் எப்படி மனிதர் கைகளால் செய்யப்பட்ட வீடுகளில் வாசமாயிருப்பார்? எல்லாம் அவருடையது. சங். 50: 12. ஆதி. 1: 1. யோவா. 1: 3. சிலர் தேவாலயத்தையும் அதின் பலிகளையும் தேவன் உண்டாக்கினதற்கு உவமானமாக, தேவன் தமது வல்லமையினால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினாரென்று சொல்லியிருக்கிறதென்பார்கள். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின வல்லமையுள்ள தேவனுக்கு; தேவாலயம் எம்மாத்திரம்? ஆனால் ஆவியில் எளிமையுள்ளவர்களாகிய தேவசித்தத்துக்கு அடங்கினவர்கள்மேல் அவர் பிரியமாயும், பக்ஷமாயுமிருக்கிறார். (மத். 5: 3. லூக். 6: 20.)

3–வச. ஆகாதவர்கள் செய்கிற பலிகள் கர்த்தருக்கு அருவருப்பு. நீதி. 15: 8. சிறையிருப்புக்குப்பின் இருந்த யூதர் விக்கிரகத்தை வணங்காவிடினும், தேவனுக்குப் பிரியமான ஆராதனைசெய்யவில்லை. (மல்கி. 18: 13.) பொல்லாத யூதர் செய்த பலிகள் தேவனுக்கு கொலை, விக்கிரகாராதனை, அசுத்தம் முதலிய பாவங்கள்போலிருந்தது. அவர்கள் தங்கள்



சடங்காசாரத்தில் பாவஞ்செய்ததுமாத்திரமல்ல அதில் பிரியமாயிருந்தார்கள். நீதி. 15: 16. கொலை, களவு, விபசாரம், பொய், பொய்யாணைசெய்கிறவர்கள் தேவனை ஆராதிக்க வரும்போது இந்த வாக்கியம் அப்படிப்பட்டவர்களுக்குப் பயங்கரத்தைத் தரும். (லேவி. 10: 3. சங். 50: 16–18. ஏசா. 1: 11—14. எரே. 7: 9, 10. மத். 7: 21–23 யோவா. 4: 24. 1 தீமோ. 4: 8.)

4–வச. அவர்கள் தேவனுக்குப் பிரியமான வழிகளையல்ல தங்கள் சொந்த மனதின்படி நடந்தார்கள். ஆகையால் அவர்கள் "திகில்களை" தண்டனைகளை வரப்பண்ணுவேன். (சங். 18: 25, 26. லேவி. 26: 27, 28. எரேமி. 34: 17. நீதி. 1: 24, 28.) அவர்கள்மேல் இனி பக்ஷமாயிருக்கிறதில்லை. அவர்கள் பொல்லாங்கைச் செய்யத் தெரிந்துகொண்டபடி அதின் பலனை அறுப்பார்கள். சிலர் "திகில்கள்" என்பது அவர்கள் பயப்படும் எந்தக் காரியமுமே என்பார்கள். எரேமி. 42: 16. எசே. 11: 8. வேறு சிலர், தேவன் பயங்கரமான தீமைகளை வருவிக்கையில் இயல்பாய் மனிதருக்கு உண்டாகும் திகில்களைக் குறிக்குமென்பார்கள். எரேமி. 20: 4. நியாயத்தீர்ப்புநாளிலும் திகில்கள் உண்டாகும். உபா. 28: 56.

1—4. தேவன் பாவிகளைச் சடங்காசாரத்தினாலல்ல, தமது ஆவியினால் இரக்ஷிக்கிறார். புறஜாதியார் திருச்சபையில் சேர்க்கப்படுவதையுங் காட்டுகிறது.

5–வச. யூதரில் விக்கிரகாராதனைக்காரருக்கும், சடங்காசாரக்காரருக்கும் நியாயத்தீர்ப்பு உரைத்தபின், தீர்க்கதரிசி கர்த்தருடைய வசனத்துக்குப் பயப்படுகிறவர்களுக்கு ஆறுதலாக இதுமுதல் 14–வசவரை தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

பிறப்பின்படிக்கும், புறம்பான மார்க்கத்தின்படிக்கும் தள்ளப்பட்ட யூதர் சகோதரராமே. கலா. 2: 4. ரோ. 9: 3. அவர்கள் கிறிஸ்தவர்களைத் தங்கள் கூட்டத்துக்கும் ஜெப ஆலயங்களுக்கும் புறம்பாக்கினார்கள். (யோ. 9: 22, 25; 16: 2.) கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் சிலர் பட்டணத்திலிருந்தும் துரத்தப்பட்டார்கள். கிறிஸ்துநாதர் சிலுவையில் தொங்கும்போது, யூதர்கள் அவரைப் பரிகாசம்பண்ணினதுபோலவும் (மத். 27: 43. லூக். 23: 45.) தாவீதைப் பரிகாசம்பண்ணினதுபோலவும் (சங். 42: 3.) பக்தியுள்ள யூதரைப் பார்த்து "கர்த்தர் மகிமைப்படுவாராக" என்று பரிகாசமாய்ச் சொல்லியிருப்பார்கள். அல்லது உங்களைத் துன்பப்படுத்துகிற வேலை தேவனுக்குப் பிரியமான வேலையாக நினைத்து, (யோவா. 16: 2) கர்த்தர் மகிமைப்படுவாராக என்று சொல்லியிருப்பார்கள். அவர்களைத் தண்டிக்கிற நாள் வரும்போது உங்களுக்குச் சந்தோஷமும் அவர்களுக்கு வெட்கமும் உண்டாகும் என்கிறார். 1 தெச. 4: 16—18.

6–வச. தேவாலயத்தையும், பட்டணத்தையும் மகிமையாக எண்ணிக்கொண்டிருந்த மாய்மால யூதருக்குப் பயமுண்டாக அங்கேயிருந்து தான் பயங்கர சத்தமுண்டாகும். எருசலேமின் அழிவுக்கு முந்தி அனனியாவின் மகன் இயேசு கூடாரப்பண்டிகையின் காலத்தில், அப்படிப்பட்ட பயங்கர சத்தமிட்டான். (யோசேப்புஸ்) சேவகர் கொல்லுகிற இரைச்சலும், ஆசாரியரும் ஏழைச் சனங்களும் ஓடுகையில் போடுகிற இரைச்சலும் எருசலேமின் அழிவு காலத்தில் கேட்கப்படும், கர்த்தருடைய சத்தமென்பது இடிமுழக்கமல்ல (சங். 29: 3—5.) சத்துருக்களுக்குச் சரிகட்டும்படி செய்கிற சேவகர் சத்தம், தம்புரு, எக்காளம், அழுகையைக் குறிக்கும்.

7–வச. துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல். தேவன் தமது சபைக்கு

வருத்தமில்லாமல் ஒரு ஸ்திரீ பிள்ளைபெறுகிறதுபோல சடுதியாய்ப் பெரிதான இரக்ஷிப்பைச் கட்டளையிடுவதாகச் சொல்லுகிறார்.

இந்தத் தீர்க்கதரிசனம் பாபிலோனின் விடுதலையைக் குறிக்கத்தக்கதோ என்பதும், மேசியாவின் வருகையில் உலகத்தைப் பிடிக்கும் திடுக்காட்டம், சுவிசேஷ பிரபலியம் இவைகளைக் குறிக்கத்தக்கதோவென்பதும் சந்தேகம். யூதர் பாபிலோனிலிருந்து விடுதலையாகி வந்தது யாதொரு தடையும் வருத்தமுமில்லாமல் கோரேசின் விளம்பரத்தால் நடந்தது. எகிப்தியருக்கு வாதையும், இஸ்ரவேலருக்குத் தடையில்லாத விடுதலையுமிருந்ததுபோல. ஆனால் இந்த விடுதலை நாள், மணிவகை இவைகளைக் கவனிக்கையில் அவ்வளவு சடுதியாயில்லை. தானி. 9: 2. 70-வருஷம் கடந்துபோகவேணும். எரேமி. 25: 12. 29: 10. ஆகையால் இது கிறிஸ்துவின் வருகையையும் சுவிசேஷ பிரபலியத்தையுமே குறிக்கும். (பாப்புமார்க்க வியாக்கியானிகள் இது கன்னிமரியாள் கிறிஸ்துநாதரைப் பிறப்பிக்கிறதைக் குறிக்குமென்பார்கள்.)

8-வச. "ஒரு தேசத்துக்கு ஒரேநாளில் பிள்ளைப்பேறு வருமோ" என்பது திருச்சபையில் யூதர் புறஜாதியார் ஒரே ஜாதியாகச் சேருவதைக் குறிக்கும். (எபேசி. 2: 14) உலகத்திலுள்ள எல்லாப் பெண்களும் ஒரேநாளில் பிள்ளைப்பெறுவதுபோலொத்த செய்கை எவ்வளவு ஆச்சரியமோ! ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்கிறதும் ஆச்சரியமே. யூதர் சிறையிருப்பிலிருந்து விடுதலையாகும் துவக்கத்தில், சீயோன் யூதச்சபை வருத்தப்பட்டு அநேக ஜனங்களைப் பிறப்பித்தது. யாத். 1: 5. அல்லது சுவிசேஷ சத்தம் யூதச்சபைக்கு எட்டினவுடனே அது யோவானஸ்நானகன் காலத்திலும், இயேசுநாதர் காலத்திலும், அபோஸ்தலர் காலத்திலும் வேதனைப்பட்டது. மத். 11: 12. இந்த வேதனையினால் ஒரேநாளில் 3000-பிள்ளைகளைப் பெற்றது. (அப். 2.) புறஜாதியாரும் திரள்திரளாய்ச் சபையில் சேர்ந்ததாலும் யூதரோடே ஐக்கியமானதாலும் அவர்களும் சீயோனின் புத்திரரே.

9. முந்தின செய்கை மனிதருக்கு ஆச்சரியந்தான. மனிதர் செய்கிற வேலைகள் படிப்படியாய் நாளடைவாய் நிறைவடையும். இது கர்த்தருடைய வேலை. நான் ஒரு ஸ்திரீக்குப் பிரசவம் கட்டளையிட வல்லவராமே. அப்படியானால் சீயோனுக்குப் பிரசவமுண்டாக்கக் கூடாதோ? சீயோன் நாடோறும் அதிகமதிகமான பிள்ளைகளைப் பெறும். இதை நம்பும்படிக்கு தீர்க்கதரிசனங்களும், வாக்குத்தத்தங்களுமுண்டு.

10, 11. அவர்களுடைய தற்கால துயரங்கள் சீக்கிரம் சந்தோஷமாய் மாறும். சிநேகிதர்கள்தான் ஒன்றுகூடி தங்கள் துன்பங்களில் துக்கித்து, தங்கள் மகிழ்ச்சியில் சந்தோஷங் கொண்டாடுவார்கள். கன்னிமரியாளும் எலிசபெத்தும் மகிழ்ச்சியானார்கள். (லூக். 1: 40.) யோபின் சிநேகிதரும் அவனோடே சந்தோஷப்பட்டார்கள். (யோபு 42: 11) அப்படியே தீர்க்கதரிசியும் எருசலேமுக்காகத் துக்கப்பட்டு அழுத அதின் சிநேகிதரை சந்தோஷப்பட அழைக்கிறார். சிறையிருப்பில் அவர்களுடைய துயரநிலைமை மாறி, விடுதலையின் காலம் வருவதால் சந்தோஷிக்க அழைக்கிறார். அவர்கள் விரும்பிய காரியம் மேசியாவின் காலத்தில் கிடைப்பதாலும் அவர்கள் ஆத்துமாக்களுக்குச் சந்தோஷமுண்டு. பாபிலோன் விடுதலைவரவும் காலம் செல்லும். மேசியாவின் நாட்களுக்கும் காலம் அதிகமிருக்குமே. பின் எப்படிச் சந்தோஷமுண்டாகுமென்றால் விடுதலை எப்படியும் வருமென்கிற விசுவாசத்தினாலே சந்தோஷம், நம்பிக்கை, விசுவாசிகளுக்குத் தூரத்துக் காரியங்களையும் சமீபத்தில் வைத்துக் களிகூருதலைக் கொடு



11-வச. எருசலேம் முன் இருந்ததுபோல் இப்போது நம்மெல்லாருக்கும் தாயானவள். கலாத். 4: 27. சீயோனிலிருந்தும், எருசலேமிலிருந்தும் கர்த்தருடைய வேதம் வரும். எசா. 2: 3. கிறிஸ்துநாதர் ஆபிரகாமின் வித்து. இஸ்ரவேலில் காணாமல்போனவர்களைத் தான் தேடி வந்தார். ரோ. 15: 8-ல் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு கிறிஸ்துநாதர் ஊழியக்காரரானார். யூதர் ஒலிவமரம், புறஜாதியார் காட்டொலிவு. ரோ. 11: 17. நாம் அவர்கள் மார்பில் பால் குடித்தவர்கள். கிறிஸ்துநாதர் யூதருக்கு முதலாவது பிரசங்கிக்கப்பட்டார். அப்போஸ்தலர் 70-சீஷர் யூதராமே. அவளுடைய ஆறுதலின் பாலாகிய சுவிசேஷ உபதேசத்தைச் சாப்பிட்டோம். அவளுடைய மகிமையாகிய கிறிஸ்துநாதருடைய பிரகாசத்தினால் புறஜாதியாருக்கு வெளிச்சமுண்டாயிற்று. லூக். 2: 32. நாமும் எருசலேமோடே சந்தோஷிக்க நியாயமுண்டு. தேவவசனம், கிருபை உடன்படிக்கை, தேவாசாரங்கள் இவைகள் சபையின் முலைகளாம்: நாம் ஜெபத்தினாலும் விசுவாசத்தினாலும் அதின் பால்களைச் சாப்பிட்டு ஆறுதல் அடையவேணும்.

12-வச. இந்த வாக்குத்தத்தம் மேசியாவின் காலத்துக்குரியதென்பது தெளிவு. தடைப்படாத நீடித்த நிலையுள்ள வாழ்வை அடைவார்கள். சமீபமாயிருந்தவர்களுக்கும், தூரமாயிருந்தவர்களுக்கும் கிறிஸ்துநாதராலுண்டாகும் சமாதானம் பிரசங்கிக்கப்பட்டது. (எபேசி. 2: 17.) புறஜாதியாரின் மகிமை அவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது ஆற்றைப்போல புரண்டோடும். நதியின் பக்கங்களிலுள்ள நிலங்கள், தேசங்கள் செழிப்பாக்கப்படுவதுபோல புறஜாதியாரின் மகிமையும், செல்வமும், கனமும் தேவாராதனைக்கென்று செலவழிக்கப்படும். தெரிந்துகொள்ளப்பட்ட யூதர் சுவிசேஷ உபதேசங்களின் பாலைச் சாப்பிடுவார்கள். புறஜாதியார் எருசலேமின் பிள்ளைகள். அப்போஸ்தலர் பக்கத்தில் (யூதச்சபையின் அவயவங்கள்) இரக்ஷிப்பின் சந்தோஷ செய்தியைக் கேட்பதே அவர்களைச் சுமப்பதற்கும் தாராட்டுவதற்கும் சரி.

13-வச. தேவன் தாமே கிருபையாய்த் தாய்போல விழுந்த யூதரைத் தேற்றுவார். எருசலேம் அழும்போது நீங்களும் அழுதீர்கள். அது தன் துன்பத்திலிருந்து விடுதலையாகும்போது நீங்களும் தேற்றப்படுவீர்கள்.

14-வச. தேவனுக்குப் பயந்தவர்கள் சபையின் சமாதானமும், கிறிஸ்துவின் இராஜ்ய பிரபலியமும் எப்போதும் அவர்கள் சந்தோஷமாயிருக்கும்படி செய்யத்தக்க ஏதுக்கள். சங். 105: 3. ஏனெனில் அவர்களுடைய முக்கிய விருப்பங்கள் வாய்த்தன. அவர்களுடைய எண்ணங்கள் சித்திபெற்றன. அவர்கள் எலும்புகள் முன் உலர்ந்திருந்தது. (எசே. 37: 1, 2.) இப்போது உயிருள்ளவர்களாய் ஒரே சரீரத்தின் அவயவமாயிருக்கிறார்கள். இதில் கர்த்தருடைய கரம், அவருடைய வல்லமை, ஆதரவு வெளிப்படும். சத்துருக்களிடத்தில் அவருடைய கோபம் வெளியாகும். சங். 1: 4.

15—18. திருச்சபையின் சத்துருக்களுக்கு வரும் தண்டனை. மேக அக்கினி ஸ்தம்பங்கள் எகிப்தியருக்கு இருளையும், இஸ்ரவேலருக்கு வெளிச்சத்தையுங் கொடுத்ததுபோல பாபிலோனிலுள்ள சிறைகளுக்குள் சிலருக்கு அப்படியும் சிலருக்கு இப்படியுமாய் தேவசெயல் தோன்றிற்று.

15. குணப்படாதவர்களை அக்கினிபோலவும், புயற்காற்றைப்போலவும் தேவன் பயங்கரமாய் அழிப்பார். (எசா. 27: 4. 2 தெச. 1: 8.)

16. கோகு என்ற சத்துருக்களோடே பெருவாரிக்காய்ச்சலாலும்

இரத்தத்தோடேயும் வழக்காடுவார். (எசே. 38: 22) தேவன் பாவிகளோடே தமது வசனத்தைக்கொண்டு வழக்காடுகிறார். அதில் அவர்கள் சீர்ப்படாதபோது, பட்டயம், பெருவாரிக்காய்ச்சல், அக்கினி இவைகளைக் கொண்டு வழக்காடுவார். அவருடைய பயங்கரத்தின் பெரிதான நாளில் குணப்படாதவர்களைப் பயங்கரமாய்த் தண்டிப்பார்.

17-வச. யூதர்கள் மேற்காட்டிய தண்டனைகள் அஞ்ஞானிகளுக்கென்றெண்ணாமல், தங்களிலுள்ள விக்கிரகாராதனைக்காரருக்கும், விலக்கப்பட்டவைகளைப் புசிக்கிறவர்களுக்குமுரியதென்று எண்ணும்படியாகச் சொல்லியிருக்கிறது. "தோட்டங்களில் தோப்புகளில் தங்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்ளுகிறவர்கள். விக்கிரகாராதனையை இரகசியமாய்ச் செய்தவர்களாம்". எசா. 1: 29. 65: 3, 4. 1 இரா. 14: 23. 19: 13. இந்த விக்கிரகங்களுக்குச் சமீபமாய்த் தெப்பக்குளமிருக்கும். அவர்கள் பூசை செய்வதற்குமுன் சுத்திகரிப்பார்கள். எண். 19: 7. 2 இரா. 23: 6, 7. பன்றி இறைச்சி அருவருப்பு. லேவி. 11: 7. உபா. 14: 8. லேவி. 11: 9, 10.

18-வச. புறஜாதியார் தேவனுக்குப் பரிசுத்த சபை. 18—23.

18-வச. இதின் முதற்பங்கு குணப்படாதவர்களுக்கு வரும் தண்டனை நிச்சயம், தேவன் அறிவார். அது வரவே வரும் என்பதாக அவர்களைத் தள்ளி புறஜாதியாரைச் சேர்ப்பார். சருவ உலகத்தாரும் ரக்ஷிக்கப்பட்டு, சகல ஜாதியாரும் திருச்சபையில் சேர்வார்கள். முன் சபையானது ஒரே ஜாதியார் நடுவிலிருந்தது. அவர்கள் என் மகிமையைக் காண்பார்கள். யூதசபையில் மறைக்கப்பட்டிருந்த (ரோ. 3: 2.) என் வசனம் என் கிருபையின் எத்தனங்களாகிய மகிமை புறஜாதியாருக்குத் தெரியும். (சங். 97: 6. எசா. 40: 5)

19-வச. இது புறஜாதியாரின் குணப்படுநிலைப்பற்றிய தீர்க்கதரிசனம். லூக். 2: 34. எல்லா ஜாதியாரையும் கூட்டிச்சேர்ப்பதற்கு அடையாளம். சங். 74: 4. அந்த அடையாளம் கிறிஸ்துவே. லூக். 2: 34. எசா. 11: 10. அல்லது அற்புதங்களோடே கூடிய பிரசங்கமும் அடையாளமாம். இது யூதருக்கும் புறஜாதியாருக்கும் அடையாளமாக வைக்கப்பட்டது. அழிவுக்குத் தப்பின மீதியானவர்கள் மற்றவர்களையும் சபையில் சேரும்படி அழைக்க சலாக்கியம்பெற்றவர்கள் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்காக் கண்டங்களிலுள்ள ஜாதியாருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அப். 43: 6.

தர்சீஸ் என்பது கடல்கள். பூல் என்பது அசூரியா. லூத் என்பது லீதியா. எரேமி. 46: 9. தூபால் என்பது இத்தாலி, ஸ்பானியா; யாவான் என்பது கிரேக்கை.

20-வச. ஆபிரகாம் யூதரின் தகப்பன் மாத்திரமல்ல, விசுவாசிகளின் தகப்பன், சகல ஜாதிகளுக்கும் தகப்பன். புறஜாதியார் கிறிஸ்துநாதரை விசுவாசித்தபடியால் அவர்கள் சகோதரராமே. தேவனுக்கு ஆடுமாடுகளின் பலி வேண்டியதில்லை. புறஜாதியாராகிய மனிதருடைய பலியே பிரியம். ரோ. 12: 1. 15: 16. புறஜாதியார் எருசலேமுக்கு வெகு தூரமாயும், தேவனுக்குத் தூரமாயிருக்கிறபடியாலும் அவர்கள் சீக்கிரம் வரும்படி வாகனங்களிருந்தன. அவர்கள் வெகு சந்தோஷத்தோடும் தீவிரமாயும் வந்து சபையில் சேர்வார்கள்.

21-வச. யூதர், புறஜாதியார் சபையில் சேர்ந்தால், அவர்களுக்கு ஆராதனைசெய்ய லேவியர் வேணுமேயென்பார்கள். இங்கே தேவன் அவர்களுக்குள்ளே பிரசங்கிக்கத்தக்கவர்களை எழுப்புவதாகச் சொல்லுகி



றார். உபா. 33: 10. 2 நாளா. 17: 7, 9. மல்கி. 2: 6. பலிகள் நின்றுபோனதால் லேவியரும் வேண்டியதில்லை (அப். 6, தீத். 1: 5.)

22-வச. சுவிசேஷ சபை என்றும் நிலைக்கும். உலகமுடியுமட்டும் இரக்ஷிக்கப்படும் பேர்கள் சபையில் சேர்ந்துகொண்டே வருவார்கள். புது வானம் புது பூமியென்பது சபையின் புது நிலைமையாம். (2 கொரி. 5: 17.) தேவன் புது மார்க்கத்தையுமுண்டுபண்ண வல்லவர். எபி. 12: 27, 28.

23-வச. யூதச்சபையில்போல சுவிசேஷ சபையிலும் எப்போதும் தேவாராதனையிருக்கும். கிறிஸ்தவர்கள் யூதருடைய சாபதுகளையும் மாதப்பிறப்புகளையும் அநுசரிக்க அவசியமில்லை. கலாத். 4: 10, 11. கொலோ. 2: 16. சகரி. 14: 16.

24-வச. அவபக்தியில் நிலைத்திருந்தவர்களுடைய ஆக்கினையைப் பார்த்தால் தேவபக்தர் தேவதயவை நன்றாய் அறிவார்கள். புறஜாதியாரும், பக்தியுள்ள யூதரும் எருசலேமைவிட்டுக் கடைசிநாளில் விக்கிரகாராதனைக்காரருக்கு வரும் தண்டனையைப் பார்ப்பார்கள். (சங். 38: 10.) சவங்களிலுள்ள பூச்சிகள் சாகாது. குடியிருப்பில் விழும் அக்கினி முற்றும் சாம்பலாக்குமட்டும் அவியாது. அவர்களுக்கு வரும் நித்திய தண்டனையும் அப்படியே. மாற். 9: 44, 46, 49. மனச்சாட்சியின் புழுக்களும் சாகாது. தேவகோப அக்கினியும் அவியாது.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

சொல்லரு மரணோபாதிச் சுடுகனற் சுவாலைமீக்கொள்
எல்லையில் துன்பமென்னும் எறிதிரைக் கடலுள்மூழ்கி
அல்லலுற்றழுங்கி யந்தோ அருட்குமரேசன் தாதை
தொல்லைஅன்பிதயத் துள்ளித்தனித்தொரு சூழல்புக்கு. 1001

தாலிணைமுடக்கி அந்தக்கரணத்தை ஒடுக்கிஅன்பின்
சீலமேதிகழுங் கஞ்சத்திருமுகம் நிலத்திற்சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக்கும்பிட்டு விழிநீர்சோரச்
சாலவும் பணிந்துதீன தயாளரின் அருளைநாடி. 1002

அப்பனேயெல்லா மும்மாலாகும் இவ்வவஸ்தை யார்ந்த
கைப்புறு பாத்திரத்தைக் கழித்திடக் கருத்துண்டாயின்
அப்படியாக அன்றேல்ஐய என்சித்தமன்று
மெய்ப்படும் உமதுசித்தம் விழைந்ததே யாகவென்றார். 1003

இம்முறையாக மேனியிரத்த வேரொழுகுமாறு
செம்முறை திறம்பாத்தூய சிந்தையுள்ளுடைந்து தேம்பி
மும்முறை பிதாவைக்கிட்டி ஜெபித்தனர் முனிவொன்றின்றி
எம்முறை பாட்டுக்குள்ளம் இரங்கிஆதரிக்கும் ஈசன். 1004

அத்தனைக் கருதிக்கூவும் அளவையில் அடுத்தோர் தூதன்
சித்தசஞ்சலத்தை யாற்றித்தேற்றினன் சென்றாகை

இத்தராதலத்து மாந்தரெவரையும் புரக்கவந்த
வித்தகப் புனிதமூர்த்தி யெழுந்தனர் விமலற்போற்றி. 1005

உலகினுக்கிரக்ஷை நல்கும்ஒருதனி நடுவராவிக்
கலகறுதுன்பமாய கடுவிடம் அருந்திஇன்னும்
விலகிலதாகி மேன்மேல் வேதனைப்பகழி சிந்தி
இலகருள் உருவமாய்க்க எதிர்ந்தது கடவுள்நீதி. 1006

வேறு.

பேசரிய பெருந்துன்பப் பிரளயவெங்கனல் கொளுத்தப்பேதுற்றந்தோ
ஆசகன்ற புனிதமனத்தலக்கணுறுந் திருக்குமரன் அன்பைஆய்ந்தும்
நேசவொரு மகவென்றுங் கருதாதுதகித்தபரன் நீதிகண்டும்
பாசவினைக்காளாகி நாசமுறத் துணிவதறப் பாவம்பாவம். 1007

வேறு.

ஆத்தும அவஸ்தை சிறிதாறி அருளுதன்
மாத்தகைய நம்பனை வழுத்தி வழிதேகி
ஆத்தனையுணர்த்தி இவணின்றகறுமென்னுத்
தீத்தொழிலர் வந்துபுரி தீவினைதெரித்தார். 1008

அந்த அமையத்தசடராயவர் விடுப்பப்
பந்தமொடு பல்வகைய எதிகள்பரித்து
வெந்தறுகணாளர் பலர்வல்லிதின் விரைந்து
வந்தனர் யுதாசொடுமெருங்குற நெருங்கி. 1009

நஞ்சமனையான் கடுகிநம்பனொரு பேரும்
மஞ்சனையடுத்திரபி வாழ்கவென முத்தி
வஞ்சனை யுணர்த்தலும் மகாகருணைவள்ளல்
விஞ்சியதுரோகி முகநோக்கியிது விள்ளும். 1010

அடுக்கவருமித்திர அகத்துளதென் ஈண்டு
கடுக்கிவரு வஞ்சநெறியாளர் கையிற்காட்டிக்
கொடுக்கவினை முத்தமிடுகிற்றிகொல் குறித்தென்
றடுக்குந வெலாமறியும் ஆண்டகை மொழிந்தே. 1011

வேடுவரொடு உரறும் வெய்யவரை நோக்கித்
தேடுவதியாரை யெனலோடும் நெறிதீயர்
நாடுவமியேசு நசரேயனை யெனுநான்
தேடலிர் வேருருமிலர் என்றிறைதெரித்தார். 1012

நானவரொடு இறைநவிற்றி முடியாமுன்
ஆனவரொருங்குயிர் அவிந்தனர் கொலாமென்
றானிவருடற்பொறை நிலத்துற உருண்டார்
எனவர் அயிர்த்திது வெனென்று திகிலுற்றார். 1013

பூரியர் விழுந்தழி புணர்ப்பும் நடுநின்ற
காரியமுடிக்க வருகன்னலின் அணித்தும்
சீரியமறைப்பொருள் தெரித்திடு கருத்தும்
ஆரியன் நினைத்தனர் அருட்டிருவுளத்தே. 1014

அய்யரிஃ துள்ளலும் அநுக்கிரக சத்தி
ஒய்யெனவுலாய்த் துயிலொழித்தென வுணர்த்த



வெய்யவரொழுந்தழல் விழிக்கடைசெவக்க
மெய்யுயிரை வாதைபுரிவாமென வெருண்டார். 1015

ஜீவாதிபன் கருணை மல்கிய திறத்திற்
சாவாதெழுந்தமை யுணர்த்திலர் சழக்கர்
கூவாஅகந்தைமொழி சிற்சில குரைத்துத்
தேவாதிபன்றனை நெருக்கினர் செருக்கி. 1016

உருத்தெதிர் பிணிக்கவரு மொன்னலரை உங்கள்
கருத்தெனையடர்ப்பதெனில் இங்கிவர் கலங்க
வருத்தலிர் விடுத்திடுமினென்று மறைவாய்மை
பொருத்தமுறுமாறு நமதாண்டகை புகன்றார். 1017

வேதமுதல் இன்னணம் விளம்பும் அமையத்தே
பாதகர் பிடித்துடல் பிணிக்கும் வகைபாராப்
பேதுருசினந்தெரி பிறங்குகதிர் வாளால்
காதறவெறிந்தனனோர் காதகனை வெம்பி. 1018

ஆங்கதையறிந்து தமதன்பன் முகநோக்கி
ஈங்கிது கொலோஅற இயற்கை யெவரேனும்
ஓங்குசுரிகைத் தொழில் உவப்பின் அதனாலே
நீங்குவர் தம்மின்னுயிரும் அன்றிநெறியின்றால். 1019

ஆண்டகையை வேண்டிடுவனாயின் அருளார்கொல்
ஈண்டொரு கணத்திலோ ரிலக்கமுறுதூதர்
வேண்டுகிலன் யானது விழைந்தியலுவேனேல்
காண்டகைய வேதமொழி மெய்ம்மை கவினுங்கொல். 1020

மாத்தகைய தந்தைதருவன்துயர் மலிந்த
பாத்திரமிதிற் பருகுபான்மை தகவேயென்
றேத்தரிய புண்ணியம் இழைக்கும் அருளுதன்
ஆத்தமுறுதொண்டரை அமைத்திலவ விளம்பும். 1021

மாண்டநகரூர் மனைமடங்கள் பொதுமன்றம்
நீண்டமறுகாலய மிடங்கடொறும் நின்றே
காண்டகைய போதனைகருத்துற இசைத்தேன்
ஆண்டெனை விடுத்தனிர் இதென்கொலுமதச்சம். 1022

நள்ளிரவிலே குழுமிநாந்தகம் விதிர்த்துக்
கொள்ளிதிகழத்துருவி வந்தனிர் குறிப்பென்
கள்ளுநர்கரந்துறைதல் கண்டுபிடிக்கின்ற
உள்ளமுடையீர் கொலெனை உள்ளவருமாலோ. 1023

ஞாலமிசையே கருவியாக உமைநாடிச்
சாலமிகு தீயலகை தன்னெண முடிக்கும்
காலமிது வாதலின் அடர்ந்தனிர் கடுத்து
மேலினி விரும்பிய விதம்புரிமினென்னு. 1024

வேதமுதல்நாதன் நனிவேதனை யுழக்கும்
காதறை திறத்தருள் கனிந்து மடலொட்டி
ஆதரவளித்தனர் கிறிஸ்தவ அடர்க்கும்
பாதகரொருது புரிபூததயை பாராய். 1025

மூத்தருமை பன்றியறியுங் கொல்முறைதோராப்
பித்தாதுபோலறிய கிற்கிலர் பிரான்அங்
குய்த்தஉதவித்திறனை ஒல்லைகொடுபோனார்
வித்தகவிவேசன வியோமனை விசித்தே. 1026

வல்லியம் வெரீஇயிரி மடங்கலரி யேற்றைக்
கொல்லிய வளைந்துபல குக்கல்கள் குரைத்துச்
செல்லிய வெனப்புடை செருக்கி நரதேவைப்
புல்லியரிகழ்ந்து பலபேசி நெறிபோனார். 1026

மெய்ப்படுதேவச் சுருதிவித்தக கிறிஸ்து
பொய்ப்படு மனக்கொடிய புல்லியர் பிணிப்பிற்
கைப்படுதலும் பரவுதொண்டர்கள் கலங்கி
மைப்படுபொழிற் கிடைநுழைந்தனர் மறைந்தார். 1028

தேள்ளமுதவாய் மொழிச்செவிப் புலனுகர்ந்தும்
கள்ளமில் பலற்புதம் விழித்துணைகள் கண்டும்
உள்ளுற நன்மாதிரி யுரைத்தும் அடியார்பாற்
பிள்ளைமை பிறங்கல்பிறவிக் குணபிராந்தி. 1029

திருவுளம் வெதும்பினோர் கணத்தினிடை தியும்
சருவவுலகங்களுமெனுந் தகைமை சான்ற
ஒருவருளாயாடிலர் மற்றொன்றும் விளைவுன்னித்
திருவடிவருந்த விடரோடு நெறிசென்றார். 1030

பிணித்தவிதமா நமபெருந்தகையை வெய்யோர்
அணித்துற வளைந்தொலிவ ஆரணியம்நீத்து
மணித்தவள மாடநிரைமல் கெருசலேக்குள்
குணித்தமனைநாடி மறுகூடு கொடுபோனார். 1031

வாசாலகன் தினமுமாலய மரீஇச்செய்
பூசாசைங்கிரிய போதன் அதுபோழ்துக்
காசாடபூதிமறை அந்தணரில் மூந்தும்
மாசாதகன் காயிபாசெனு மோர்வன்மி. 1032

பூர்க்கனை முகப்பர் பலமூர்க்கரொனல்போலும்
தீர்க்கருணை நாடியறியார் பலர் திரண்டு
சீர்க்குணமிலானுறையுள் சேர்ந்து நிரையாழி
தூர்க்கமுயல்வாரின் உறுதியோசனை துணிந்தார். 1033

இங்கிவர் பொலாங்குபுரி யெண்ணமிடுமெல்லை
நங்களருணுதனை நராந்தகர் கொணர்ந்தே
சங்கமறவோரெதிர் நிறுத்தஒருகானுந்
துங்கவுலகாதிபரும் நின்றனர் சுசீல. 1034

எல்லையில் பல்கோடி யுலகங்களை இமைப்பில்
கல்லியெறிவார் மறிகழங்கென நிலாவ
நில்லென நிறுத்துவர் இயக்கிடுவர்நீரூ
ஒல்லையெரியுண்டொழியும் ஓரிவர் உருப்பின். 1035

கோடிரவிபோலொளி குலாவுசமுகத்தில்
நீடுபுவி மாந்தரனைவோரையும் நிறுத்திப்



பீடுபெறுநீதிமுறை பேசுகுமரேசன்
பாடுற இனீசர் முனம்நிற்கு நிலைபார்மின். 1036

மன்பதைகளுக் குருகிவான்பதம் வரைந்து
துன்புமிடி நிந்தைசுடுசொற் சுடவிழுத்தி
வன்புலையர் முனபதம் வருந்தும் வகைவிட்ட
தன்பிதிலறக் கொடிதியாது பிறிதம்மா. 1037

அன்பிலர் தமக்குரியர் அன்புடையராக்கை
என்புமுரியார் பிறருக்கென்னுமுறை யெம்மான்
தன்புடையலா தெவரிற் சானறுபடும் ஆயில்
முன்புமிலைப் பினபுமிலை மூதுலகின்மாதோ. 1038

பாசமென வுன்னவிர் பிணிக்குமை பகைத்த
நீசமனுமக்களை நினைத்துருகும் அன்பின்
நேசமெனும் வல்லியதை நீக்கவசமின்றி
ஈசன்மகனின்றன ரோரேழையென ஓர்மின். 1039

வேறு.

விண்ணிழிமதியமென்ன வேதவேதாந்தமூலப்
புண்ணியமூர்த்தி வந்தப்புல்லிய குழுவிருப்பண்
நண்ணியபரிசை ஓர்ந்து நலமிலாக் காய்பாசென்னும்
கண்ணிலான் கருதிநோக்கிக் கனன்றிதுகழறுகின்றான். 1040

(இன்னும் வரும்.)

---

## வேதசித்தாந்தப் பிரமாணங்கள்.

### IV-ம். பிரமாணம்.

#### முகவுரை.

நமது கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்பது பூர்வீக விசுவாசப்பிரமாணங்களிலெல்லாம் கண்டிருக்கிறதுமன்றி, அவரது பரமேகுதலும் வீற்றிருக்குதலும் நியாயந்தீர்க்க வருகலும் அதனோடு சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சதுசேயர் உயிர்த்தெழுதலே இல்லையென்று மறுத்தபடியால் நமது கர்த்தர் உயிர்த்தெழுந்ததையும் மறுத்தார்கள். எசேனர் சரீரம் எழும்ப மாட்டாது என்று சாதித்தார்கள். உயிர்த்தெழுதலில்லையென்று சிலர் சொன்னார்கள் என்று 1 கொரி. 15: 12-லும் உயிர்த்தெழுதல் நடந்தாயிற்று என்று வேறு சிலர் சொன்னார்கள் என்று 2 தீமோ. 2: 18-லும் வாசிக்கிறோம். தோசித்தியர் நமது கர்த்தருக்கு மெய்மனுஷீக மாம்சமிருக்கவில்லையென்று சாதித்தவர்களாகையால் அவர் உயிர்த்தெழுதலையும் பரமேகுதலையும் விசுவாசிக்கவில்லை. செரிந்தியர் நமது கர்த்தர் உயிர்த்தெழவேயில்லையென்றார்கள். நமது கர்த்தர் நற்கருணையில் பிரசன்னமாயிருக்கிறாரா என்ற விவாதம் எழும்ப மனிக்கேயர் அவருக்கு மெய்மனுஷீக மாம்சம் இல்லையென்று மறுத்து அவர் உயிர்த்தெழவுமில்லை என்றார்கள். இந்தத் தப்

பறைகளையெல்லாம் கண்டிக்கும்படியாக இந்தப் பிரமாணம் எழுதப்பட்டது. மேலும் மார்சியோனியரும் மனிக்கேயரும் இனிவரும் நியாயத்தீர்ப்பும் இல்லை என்றார்கள். ஸ்வீதன்போர்கு என்பவன் நமது கர்த்தருடைய பரமேறுதலையும் இரண்டாம் வருகையையும் குறித்துச் சொல்லிய வார்த்தைகளை எழுத்தின்படி அர்த்தம்பண்ணக்கூடாது. உயிர்த்தெழுதலின் உபதேசமாத்திரமே விசுவாசத்துக்கு ஆணிக்கல் என்று சாதித்தான்.

நமது இரக்ஷகர் தாழ்மைப்பட்ட படிகள். 3—அவர் உயர்த்தப்பட்ட படிகளும் அப்படியே 3—தாழ்மை மேன்மை.

1. மரித்தார். 1. உயிர்த்தார். 2. அடக்கம்பண்ணப்பட்டார். 2. பரமண்டலத்துக்கு ஏறினார். 3 பாதாளங்களில் இறங்கினார். 3. வீற்றிருக்கிறார். இந்தப் பிரமாணத்தில்;

I. நமது கர்த்தர் தமது மனுஷத் தன்மைக்குரிய சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் என்பதையும்.

II. அவர் பரலோகத்துக்கு எழுந்தருளினார் என்பதையும்.

III அவர் தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதையும்.

IV. நியாயந்தீர்க்க வருவார் என்பதையும் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

I. நமது கர்த்தர் மனுஷத் தன்மைக்குரிய சரீரத்தோடு உயிர்த்தெழுந்தார் என்பது.

1. தீர்க்கதரிசனங்களில் முன்னுரைக்கப்பட்டிருந்தது. சங். 16: 9, 10 ஐ நடபடி 2: 31—ஓடு ஒத்துப்பார். ஏசாயா 53: 10. 9: 7. 2. யோசேப்பும், ஈசாக்கும் அதற்கு முன்னடையாளங்களாயிருந்தார்கள். 3. அநேக சாக்ஷிகளால் இது சாக்ஷியிடப்பட்டிருக்கிறது. A. மனுஷ சாக்ஷி. (a) ஸ்திரீகள். மத். 28: 8, 9. (b) நமது கர்த்தருடைய சீஷர்கள். 1 கொரி. 15: 6. (c) சேவகர்கள். மத். 28: 3, 4, 11. B. தூதர் சாக்ஷி. (a) ஒரு தூதன். மத் 28: 2. (b) இரண்டு தூதர். யோவா. 20: 12. C. பரிசுத்த ஆவியானவர். யோவா. 15: 26, 27. D. நாலு சுவிசேஷங்களில் இது நிறைவாய்ச் சொல்லியிருக்கிறது. E. நடபடி 2: 29. 13: 30, 37. ரோ. 5: 1. 1 கொ. 15. கொலோ. 3: 1. F. நமது கர்த்தர் 40—நாளாகத் தரிசனம்கொடுத்தார்.

1. மகதலேனா மரியாளுக்கு. மாற்கு 16: 9 2 மற்ற ஸ்திரீகளுக்கு. மத். 28: 9 3. எம்மாவூருக்குப்போன 2—சீஷருக்கு. லூக். 24: 13. 4. சீமோனுக்கு. 5. அப்போஸ்தலருக்கு. யோவா. 20: 19, 20. 6. தோமாவுக்கு. யோவா. 20: 26—29. 7. கலிலேயாக்கடலில் ஏழு சீஷருக்கு. யோவா. 21: 1–15. 8. கலிலேயாவிலுள்ள ஓர் மலையில். மத். 28: 16, 17. 9. 500—பேருக்கு அதிகமான சகோதரருக்கு. 1 கொரி. 15: 6. 10. யாக்கோபுக்கு. 1 கொரி. 15: 7. 11. தாம் எடுத்துக்கொள்ளப்படுகையில் ஒலிவமலை மேல் சீஷருக்குத் தரிசனையானார்.

வேதஉபதேசம் எல்லாம் இரக்ஷகருடைய உயிர்த்தெழுதலின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அப்போஸ்தலனும் ஒவ்வொரு நிருபத்திலும் இதைக்குறித்துப் பேசுகிறார். அப்போஸ்தலர் காலத்திலும் அதற்குப் பிந்தின காலத்திலுமிருந்த ஒவ்வொரு நூலாசிரியரும், விரோதிகளுங்கூட கர்த்தராகிய இயேசுநாதர் உயிர்த்தெழுந்த சங்கதி கிறிஸ்தவர்களால் யாவராலும் சந்தேகமும் விதர்ப்பமும் இன்றி விசுவாசித்து ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி என்று சாட்சி பகருகிறார்கள். கிறிஸ்துநாதர் மெய்யாய் எழுந்தார் என்று மெய்யாய் என்னும் வார்த்தை கூட்டப்பட்ட காரணம் யாதெனின் அவரது உயிர்த்தெழுதல் ஒரு மாயாதோற்றமானதல்ல. அவர் பாடுபட்டது எப்படி மெய்யோ, அடக்கம்பண்ணப்பட்டதும் பாதாளங்



களில் இறங்கினதும் எப்படி மெய்யோ, அப்படியே அவர் உயிர்த்தெழுந்ததும் மெய்யே என்பதாம்.

“மறுபடியும் எடுத்துக்கொண்டு” என்ற மொழிகள் அவருடைய இராஜரீக சித்தத்தின்படியே எடுத்தார் என்று அர்த்தம் கொள்ளுகிறது. மேலும் நமது கர்த்தர் எதில் தமது சீஷர்களுக்குக் காணப்பட்டாரோ அந்தச் சரீரம் அவர் சிலுவையில் அறையப்பட்டதுக்கு முன்னுள்ள சரீரமே என்று எதினால் அறியலாம் என்றால் நமது கர்த்தரை அவருடைய சீஷர்கள் சத்தத்தினால் அறிந்துகொண்டார்கள். யோவா. 20: 16. அவருடைய காயங்களைத் தடவி அறிந்தார்கள். யோவா. 20: 20. 21: 12. தேவதூதர்கள் ஸ்திரீகளிடத்தில் அப்படியே சொன்னார்கள். லூக். 24: 5, 6. போர்ச்சேவகரும் அப்படியே சாட்சியிட்டார்கள்.

நமது கர்த்தருடைய உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் இட்டிருக்கிற சாட்சியில் கவனிக்கவேண்டியது என்னவென்றால் அவர்கள் மனதார ஒரு பொய்யைப் பிரசுரம்பண்ணினார்களோ அல்லது தாங்களே ஏமாற்றப்பட்டு இரக்ஷகர் உயிர்த்தெழுந்தார் என்று போதித்தார்களோ அல்லது வாஸ்தவமாய் நடந்த காரியத்தைத்தான் அறிவித்தார்களோ என்பதுதான். ஆனால் இந்தக் காரியம் கிறிஸ்துமார்க்க உதாரணத்தில் பேசப்படவேண்டியது. ஏனெனில் நாம் அவிசுவாசிகள் அஞ்ஞானிகள் யூதர்கள் மற்றும் பிரிவினைக்காரர்களோடு இப்போது தர்க்கம்பண்ணாமல் கிறிஸ்தவர்களோடு பேசுகிறோம். ஆகிலும் இது விஷயத்தைக்குறித்து இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லுவோம்.

---

## “ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.”

யாக். 5: 16.

---

நற்போதகமென்னுஞ் சற்போதகியே, ஆத்தும ஈடேற்றத்துக்கடுத்த நூதன விஷயங்களைக் கேட்கவும், உனதிஷ்டருக்குப் பிரஸ்தாபிக்கவும், நீ மிகவும் ஆசிப்பதால், பசாசின் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்று, இரக்ஷகரைப் பின்பற்ற முயலும் உத்தமருக்குப் பல சோதனைகள் நேரிடுமென்று உணர்த்தும் வாஸ்தவமான இச்சங்கதியை நீ ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்.

சென்ற செப்டெம்பர் மாசம் 26௳ வடதிருநெல்வேலியின் முக்கிய ஸ்தானமாகிய வாகைக்குளம் தேவாலயத்தில் அநுஷ்டிக்கப்பட்ட வடதிருநெல்லை வருஷாந்தரச் சங்கத்தில் கூடின திருத்தொண்டர்களுக்கு எழுப்புதலாக மூவர் பேசினார்கள். அவர்களில் ஒருவராகிய கனம் செல்வநாயகம் ஐயரவர்கள் அறிவித்துக் கேட்டுக்கொண்ட ஒரு முக்கிய சங்கதியாவது:

நான் வசிக்கும் பட்டணமாகிய சங்கரநயினார் கோவிலுக்கு மேற்கிலுள்ள நகரமென்னப்பட்ட கிராமத்தில் ஏறக்குறைய 25—பிராயமுள்ள ஒரு வாலிபன், இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதியாகிய பிசாசானவனுக்கு வைராக்கிய ஊழியக்காரனாயிருந்து மந்திர தந்திரமுதலாய் மாயவித்தைகளையும் முக்கியமாய்ப் பில்லிசூனியமென்னுங் கொடிய பாதகத்தையுங்

திரளாய் நடப்பித்து, அந்திசந்தி பூசைசெய்து மந்திரங்கள் ஜெபித்து,
நித்திய கருமானுஷ்டானஞ் செய்துகொண்டுவருகையில் ஒருநாள் தன்
பெற்றோர் பேரிலுள்ள மனஸ்தாபத்தினால் குற்றாலத்துக்கடுத்த சாண்டர்
சன் (Sanderson) என்னுந் துரையின் சாப்பித்தோட்டத்திற் போய்க் கூலி
வேலைசெய்துகொண்டு வந்தான். இக்காலத்திலும் அவன் தன் பூசை மந்
திரங்களை இடையறாது தினசரி நடப்பித்து வரும்போது ஒருநாள் ஷெ
துரையும் துரைசானியும் அவனுடைய அவபக்தியைக் கண்ணுற்று பரி
தபித்து அவனைப் பார்த்து, ஓ வாலிபனே! இவ்வித அனர்த்த கருமங்க
ளால் உன் பாவம் தொலையமாட்டாது. இது நரகத்துக்குப்போகும் விசால
மான பாதையேயன்றி, மோக்ஷத்திற்குப்போகும் இடுக்க வழியல்ல. "பூமி
யிலே பாவங்களை மன்னிக்க மனுஷ குமாரனாகிய இரக்ஷகருக்கு மாத்திரம்
அதிகாரமுண்டு." "அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.
அவரை விசுவாசி, அப்போதுதான் இரக்ஷிக்கப்படுவாய் என்று இன்னும்
பல அருமையான புத்திமதிகள் சொன்னார்கள். இவ்விதமாய் அவனது
இருதய கமலமாகிய நிலத்தில் விதைக்கப்பட்ட திருவசனமாகிய வித்து
முளைத்துப் பலன்கொடுக்கச் சிலகாலஞ் சென்றது. அப்பால் அவன் தன்
வீட்டிற்கு வந்து, தன்னனுச்சாரமான கிரியைகளை நடப்பித்து வரும்
போது ஒருநாள் சவுலைப் பவுலாக்கின சருவவல்லமைபொருந்திய கட
வுள் அவன் இருதயமாகிய கதவண்டை நின்று தட்ட அவன் தான் நடப்
பிக்கும் பில்லிசூனியமுதலான பஞ்சமாபாதகங்களால் மற்றவர்கள் கெட்
டுப்போகிறார்களேயன்றி வாழ்வடையக் காணோம். அவர்கள் கடவுளை
தொந்துகொள்வதோடு என்னையும் பஞ்சமாபாதகனென்று திட்டுகிறார்கள்.
ஆகையால் இது கடவுளுக்கு விரோதம். அந்தத் துரையும் துரைசானியும்
சொன்னதே சத்தியம் போதித்ததே சற்போதகமெனத் தெளிந்து, சங்கர
நயினர்கோவில் ஐயரவர்களிடம் வந்தான். அவர்கள் அவனுக்கு வேண்டிய
ஞானாமிர்தம் ஊட்டி, மோக்ஷத்துக்குப்போகும் இடுக்க வாசலைக் காண்பித்துக்
காட்ட அவ்வழியை அவன் ஆவலோடு பற்றிக்கொண்டு உடனே எனக்கு
ஞானஸ்நானங் கொடுங்களென்று கேட்க சிறிதுநாட்களுக்குப்பின் அவ்
விடம் போயிருந்த வாகைக்குளம் கனம் வீ. வேதநாயகம் ஐயரவர்கள் அவ
னைப் பரீக்ஷித்ததில். அவர்கள் எதிர்பார்த்திருந்ததைவிட, அதிக உணர்ச்சி
யுந் தெளிவுமான உத்தரவுகொடுத்ததுமன்றி, ஞானோபதேசவினாவிடையை
யும், சிற்றறிஞர் குறிப்பிடத்தையும் ஐந்தே நாளுக்குள் மனப்பாடமாய்ப்
படித்து, உணர்ச்சியோடும் முழு மனதோடும் அறிக்கையிட்டதினால் உட
னே ஐயரவர்கள் அவனுக்கு "முத்துசாமி தேவவரம்" என்ற பேரால்
திரியேகருடைய நாமத்தினால் ஞானஸ்நானங் கொடுத்தார்கள். அப்புறம்
அவனுக்குப் பல சோதனைகள் நேரிட்டது. முதலாவது ஒரு மாசக்கால
மாய்க் கொடிய காய்ச்சல் வந்தது. அப்போது அவன் பெற்றோர் உற்றோர்
உறவினரெல்லாரும் நீ வெள்ளைக்காரன் வேதத்தில் விழுந்துவிட்டதினால்
தான் நம்முடைய குலதெய்வம் உன்னை இப்படி வாதிக்கிறது. ஆகை
யால் நீ அதைக் கும்பிடவாவென்று பலாத்காரமாய்ப் பிடித்து இழுத்துக்
கொண்டுபோக இவன் முன்னதாக ஓடி பேயாடிக்கு ஒரு தேங்காயைக்
கொடுத்து நான் என்னத்திற்காக வந்தேன் என்று கேட்க, இவன் ஓடி
வந்த தீவிரத்தையும் பதஷ்டத்தையும் பார்த்து இவனுடைய மாடு தப்பிப்
போனதாக நினைத்து, நீ ஒரு அசைவுப்பொருளின்மேல் வந்திருக்கிறாய்
அது மலையில் ஒரு தாவளத்தில் நிற்கிறதென்றான். உடனே இந்த வாலி
பன் சீ, போ! பைத்தியகாரா நான் மாடு காணவில்லையென்று உன்னைக்



கேட்க வந்தேன். என் தேங்காயைக் கொடு என்று கேட்டுத் தேங்காயை
வாங்கிக்கொண்டு கூட்டிவந்தவர்களைப் பார்த்து பார்த்தீர்களா ஓய், புண்
ணிய புருஷோத்தமர்களே இவனா என் வியாதியை நீக்குகிறவனென்று
தைரியமாய்க் கூறி வந்துவிட்டான். பின்பு இன்னொரு வியாதியால் ஒரு
மாசமும் அப்புறம் ஒரு பயங்கரமான புறப்பாட்டினாலும் சங்கடப்பட்
டான் அவன் மனைவியின் தாயும் சகோதரனும் இறந்துபோனார்கள். மாமன்
இவன் மனைவியை விடமாட்டேன் என்று நிறுத்திக்கொண்டான். அவ
னுக்கு ஒரே குழந்தையுண்டு. இம்மட்டுந்தானோ? சிறிதுநாட்களுக்குள்
கால் கை மடக்கக்கூடாத கொடிய திமிர்வாதமுண்டாயிற்று. இச்சம்பவங்
களையெல்லாம் பார்த்த அவன் பெற்றார் உற்றார் உறவினரெல்லாரும்
ஏகோபித்து, இதென்ன சங்கடம் முனீஸ்வரன் வீட்டிற் சனீஸ்வரன்
நுழைந்தாற்போல் நம்முடைய ஊருக்கு இவனால் மிகு கெடுதிகள் நேரிடு
கிறது. ஐயோ! போதங்கேட்டு வேதத்தில் விழுந்துவிட்டானே என்று
திட்டி, அவனைப் பலாத்காரமாய் விக்கிரகக்கோவிலுக்குத் தூக்கிக்கொண்
டுபோக யத்தனித்தபோது அவன் இருதலைக்கொள்ளி எறும்புபோலும்,
இடறில் அகப்பட்ட எலிபோலும் இந்தத் துஷ்டர் கையினின்று தப்ப
வழியில்லையே என்று திகைத்து, நல்லது நான் சுகமானவுடன் நடந்து
வருகிறேனென்று புகல்சொல்லி நிறுத்திவைத்தான். பேயாடி வந்து திரு
நீறுப்போட இவன் ஐயோ, ஆண்டவரே இந்தக் குற்றத்தை என்மேல்
சுமத்தாதிரும் என்று ஆண்டவரை நோக்கி மன்றாடினான். அப்புறம் அப்
படியே குறித்தநாளில் சுகமானவுடனே இவனைக் கூட்டிக்கொண்டு
போக யத்தனிக்கையில் வீட்டிற்குட்போகிறவன்போல சாடை காட்டி,
அச்சம்பட்டி ஐயரவர்களிடம் ஓடிப்போனான். இப்போது அவன் இர
ண்டு கண்களும் மங்கலாயும், செவி மந்தமாயுமிருப்பதால் ஆண்டவர்
இவ்வளவுதூரம் இன்னும் சோதிக்கிறாரோ என்று கிலேசப்படுகிறான். ஆண்
டவர் என்னை எல்லா இக்கட்டுகளுக்கும் விலக்கிக் காத்தால், நான் அவ
ருக்கே ஊழியஞ்செய்து புறமதஸ்தருக்குள் அவருடைய நாமத்தை மகி
மைப்படுத்துவேன் என்று சொல்லுகிறான். தான் எப்போதும் ஆண்டவரு
டைய வருகைக்கு எதிர்பார்த்திருப்பதாய் அஞ்சாத்தைரியத்தினாலும், உத்
தம விசுவாசத்தினாலும், அற்புத பொறுமையினாலும் உறுதிப்படுத்துகிறான்.
தான் கிறிஸ்தவர்கள் நடுவிலேயே மரிக்கும்படி ஆசிக்கிறான்.

ஆகையால் இதை வாசிக்கும் சகோதரரும் பிதாக்களுமானவர்களே,
அவனுடைய துன்பங்கள் நீங்கி ஆறுதலடையவும், அவனை நிந்தித்த துஷ்
டர் வாய் அடங்கவும், அவனது விசுவாசம், நம்பிக்கை, பொறுமை,
அன்புமுதலிய சுசீலங்கள் தழைத்தோங்கவும் சபாநாயகர் கிருபைசெய்து,
தமது வல்லமையோடு எழுந்தருளி அவனைக் கைதூக்கி இரக்ஷிக்கும்படி
அவரை நோக்கி ஊக்கத்தோடு ஜெபிக்கும்படி இதினால் கேட்டுக்கொள்
ளுகிறேன்.

"உங்களிலொருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்ப
ரை வரவழைப்பானாக அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் அவனுக்கு
எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது
விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரக்ஷிக்கும். கர்த்தர் அவனை
எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்
கப்படும்." யாக். 5: 14, 15.

S. A.

---

## தீர்க்கதரிசனம், அருள்வேதத்திற்கு அத்தாக்ஷி.

(தொடர்ச்சி.)

(3) அந்த ஜனங்கள் ஜாதிகளோடு கலவாமல் தனியே வாசஞ்செய்வார்களென்றுங் கூறப்பட்டது. இதுவும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நிறைவேறி வருகின்றது. இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட கொஞ்சக்காலத்திற்குள்ளாக அவர்கள் கைக்கொண்டு நடக்கும்படி விசேஷித்த பிரகாரம் கர்த்தர் அவர்களுக்கு மோசேயின் மூலமாய் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். அதனால் நியாயப்பிரமாணமில்லாத அன்னிய ஜாதிகளோடே அவர்கள் கலந்திருக்க ஏதுவில்லாமற்போய் விட்டது. அன்றியும் யூதர்கள் பல தேசங்களிலும் தற்காலத்தில் சிதறியிருந்தாலும் அந்தந்தத் தேசத்தார்களோடு கலவாமல் பிரத்தியேகமான ஜனமாகவே இருந்துவருவதினால் அந்தத் தீர்க்கதரிசனம் எப்போதும் நிறைவேறிக்கொண்டு வருகிறது. மேலும் பூமியிலுள்ள சர்வ ஜனங்களும் திரள்திரளாயும் கூட்டங் கூட்டமாயும் கிறிஸ்துவையும் அவர் அருளிய திவ்ய வேதத்தையும் ஒப்புக்கொண்டுவர யூதஜாதியார் மாத்திரம் அப்படி ஒப்புக்கொள்ளாமலிருப்பதினாலும் அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியே வருகிறது.

(4) யூதர்கள் தாங்கள் துரத்தப்பட்ட பல தேசங்களினின்றும் ஒன்றுசேர்க்கப்பட்டு கானான்தேசத்தைத் திரும்பவும் சுதந்தரித்துக்கொள்வார்களென்றும் உரைக்கப்பட்டது. யூதர்கள் அற்பசொற்பமாய்க் கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்துவருவதினாலும் நாளடவில் அநேகர் கானான்தேசத்திற்குப்போய்க் குடியேறுவதினாலும் அத்தேசம் அவர்களாற் குடியேற்றப்படுவதற்கு அநுசரணையான பல பிரயத்தனங்கள் நடந்துவருவதினாலும் சுயதேசம் போகவேண்டுமென்ற எண்ணமும் விருப்பமும் தற்காலத்தில் அவர்களுக்கு அதிகமாயிருப்பதினாலும் அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிக்கொண்டு வருகிறது.

3. எகிப்துதேசம். இத்தேசம் பூர்வீகத்திற் பிரபலம்பெற்ற பல தேசங்களில் ஒன்று. இதைப்பற்றியும் பல தீர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டன. அது இனி ஜாதிகளின்மேல் தன்னை உயர்த்தாமல் மற்ற இராஜ்யங்களிலும் அற்பமானதாகுமென்றும் இனி அவர்கள் ஜாதிகளை ஆளாதபடி பலங் குன்றிப்போவார்களென்றும் உரைக்கப்பட்டது. இந்தத் தீர்க்கதரிசனங்களின்படியே பாபிலோனர், பார்சியர், கிரேக்கர், ரோமர், சரசேனர், மமுலுக்கர் முதலிய பலரும் அதை முறையே தங்களுக்குட்படுத்தினார்கள். கடைசியாய்த் துருக்கர் அதைப் பிடித்துத் தங்கள் அரசாக்ஷிக்குட்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதமாய் அந்தத் தேசம் சுய அதிகாரம் இழந்து தற்காலத்தில் சகல இராஜ்யங்களிலும் அற்பமானதாகவே இருக்கிறது.

4. நினிவே. அசூரியா இராஜ்யத்தின் தலைமை நகரியாயிருந்த இது 60-மைல் சுற்றளவாயிருந்தது. இதின் மதில் 100-அடி உயரமும் 3-வண்டிகள் ஓடும்படியான அவ்வளவு அகலமுமாயிருந்தது. இந்த மதிலின்மேல் 200-அடி உயரமான 1500-கோபுரங்களுங் கட்டப்பட்டிருந்தன. இவ்விதக் காவலோடு சிறப்புஞ் செல்வமும் பொருந்தியிருந்த இப்பட்டணத்



தைப்பற்றி அது யுத்தத்தினால் அழிந்து மறுபடியும் ஒருக்காலும் உண்டாகமாட்டாதென்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அப்படியே அந்தப் பட்டணம் மேதிய இராஜாக்களால் அழிக்கப்பட்டு இருந்த இடந் தெரியாமற் போய்விட்டது. கொஞ்சக்காலத்திற்குமுன் லேயார்ட் என்னுந் துரை ஒருவர் அப்பட்டணமிருந்த இடத்தில் அநேகம் மேடுகளைத் தோண்டி பரீக்ஷித்ததில் கொத்திச் சித்தரிக்கப்பட்ட பல பூர்வ சிலைகள் அகப்பட்டன. அச்சிலைகளும் அவைகளிலிருக்கப்பட்ட எழுத்துக்களும் அப்பட்டணத்தின் பூர்வஸ்திதியை ரூபித்து நிற்கின்றன.

---

## சமாசாரத்திரட்டு.

இராணி நாயகியார் தமது புத்திரனும், உவேல்ஸ் இளவரசரின் புத்திரருமாகிய அல்பேட் விக்றர் இளவரசருக்கு கார்ட்டர் என்னும் பட்டம் சூட்டினாராம். இவரே ராணிநாயகியாருக்கும் அவரது குமாரருக்கும் பின் இங்கிலிஷ் அரசராக வர இருப்பவர்.

சீனா.—கந்தோன் பட்டணத்தில் பெரிய கலகங்கள் உண்டாயின. ஐரோப்பியர் குடியிருக்கும் ஸ்தானம் கொஞ்சங்குறைய முற்றும் அழிக்கப்பட்டது புறத்தேசத்தாருக்கு நேரோமிருந்த பகை தோன்றியிருக்கிறது. சீனருக்கும் பிரான்சியருக்கும் இடையில் சீக்கிரம் யுத்தம் நேரிடும் என்று அச்சம் உண்டாயிருக்கிறது. சீனாவிலுள்ள மிஷனரிமார்கள் திரண்டு அபின் வியாபாரத்தை நிறுத்திப்போடவேண்டும் என்று பிரிட்டிஷ் பார்லிமெந்துக்கு மனுப்பண்ணியிருக்கிறார்கள்.

பர்மா.—அரசன் தன் தேவி ஓர் பெண்குழந்தை பெற்றதினிமித்தம் அவளைத் தள்ளிப்போடவேண்டும் என்றிருக்கிறார்.

திருவிதாங்கோட்டு இருப்புப்பாதை செங்கோட்டை மார்க்கம் வரப்போகிறதாம். காகிதத் தபால் வகுப்பும் மின்தபால் வகுப்பும் சீக்கிரம் ஒன்றாக்கப்படும்.

வண்டில்களை மின்சாரத்தினால் இயக்கும் ஓர் நூதன உபாயம் பாரிஸ் பட்டணத்தில் ஒரு சாஸ்திரியினால் கண்டுபிடிக்கப்பட்டது. எழுபத்திரண்டு குதிரைகளால் இழுத்தோடும் ஓட்டம் ஒரு மணிநேரத்தில் ஓடினதென்று யாவரும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இலங்கையிலுள்ள அநுராஜபுரமென்னப்பட்ட ஊரில் சுமார் ௨௲௨௱-வயதுள்ள ஓர் செடி இருக்கின்றதாம். அதன் கீழ் புத்தராகிய சாகியமுனி தங்கியிருந்தாராம். அதை இன்னும் புத்தசமயத்தவர் வணங்கிவருகின்றார்களாம்.

இந்தியாவின் வடபாகத்தில் ஓர் மலையடிவாரத்தில் டாக்டர் ஜாக்சன் துரை புலிவேட்டையாடும் சமயத்தில் குழவிகள் ஆயிரக்கணக்காய் ஒரு புதரிலிருந்து எழும்பி அவரைத் தம்கொடுக்கால் கொட்ட பிரேதமானாராம். அவரோடு கூடப்போன வேறொரு துரை ௬௰-கொட்டுகள் வாங்கிக்கொண்டு உயிர்தப்பிப் பிழைத்தாராம்.

---

நவம்பர்ீ நாள்-30. ஐப்பசிமீ 18உ முதல், கார்த்திகைமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | கஅ | பிணம் எங்கேயோ அங்கே கழுகு சேரும். யோபு 39:30. |
| வெ | 2 | கசு | (யோபு) இதோ நான் நீசன். 40:4. (யார்? 41:11. |
| ச | 3 | உ0 | தனக்குப் பதில் கொடுக்கும்படி முந்தி எனக்குக் கொடுத்தவன் |
| ஞா | 4 | உக | கர்த்தர் யோபின்...பின்னிலைமையை ஆசீர்வதித்தார். 42:12. |
| தி | 5 | உஉ | கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார். சங். 1:6. |
| செ | 6 | உங | பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள். 2:11. |
| பு | 7 | உச | துன்மார்க்கருடைய பற்களைத் தகர்த்துப்போட்டீர். 3:7. |
| வி | 8 | உரு | நெருக்கத்திலிருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர். 4:1. (1. |
| வெ | 9 | உசு | என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும். 5: |
| ச | 10 | உஎ | உம்முடைய கிருபையினிமித்தம் என்னை ரட்சியும். 6:4. |
| ஞா | 11 | உஅ | நீதிமானை ஸ்திரப்படுத்துவீராக. 7:9. (ருக்கிறது. 8:1. |
| தி | 12 | உகூ | உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயி |
| செ | 13 | க | துன்மார்க்கன் தன் கைகளின் செய்கையிலே சிக்கிக்கொண்டான். |
| பு | 14 | உ | ஏழையானவன் தன்னை உமக்கு ஒப்புவிக்கிறான். 10:14. (9:16. |
| வி | 15 | ங | கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார். 11:5. |
| வெ | 16 | ச | கர்த்தருடைய சொற்கள்.. சுத்த சொற்களாயிருக்கிறது. 12:6 |
| ச | 17 | ரு | உம்முடைய ரட்சிப்பினால் என் இருதயம் களிகூரும். 13:5. |
| ஞா | 18 | சு | தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே. 14:5. |
| தி | 19 | எ | கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? 15:1. |
| செ | 20 | அ | உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். 16:10. |
| பு | 21 | கூ | உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும். 17:7 |
| வி | 22 | க0 | மேட்டிமையானவர்களைத் தாழ்த்துவீர். 18:27. |
| வெ | 23 | கக | கர்த்தருடைய வேதம் குறைவற்றது. 19:7. (20:7. |
| ச | 24 | கஉ | கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம். |
| ஞா | 25 | கங | உமது கை உமது சத்துருக்களெல்லாரையும் எட்டிப்பிடிக்கும். |
| தி | 26 | கச | என்னை உம்முடைய பேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர். 22: |
| செ | 27 | கரு | என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. 23. 5. (9. |
| பு | 28 | கசு | உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. 24:1. |
| வி | 29 | கஎ | என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும். 25:20. |
| வெ | 30 | கஅ | என் கால் செம்மையான இடத்திலே நிற்கிறது 26 12. |

## விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
4. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 24-ம் ஞாயிறு.
11. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 25-ம் ஞாயிறு.
14. பௌர்ணமி.
18. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 26-ம் ஞாயிறு
25. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும் 27-ம் ஞாயிறு.
29 அமாவாசை
30 பரி அப். அந்திரேயாவின் திருநாள்.

# நற்போதகம்.

கஉ. டிசம்பர்ீ. ௲அ௱ ௵.

## Exposition of the Church Catechism.

## ஞானோபதேசவினாவிடை வியாக்கியானம்.

### கூ-ம் அதிகாரம்.

### கர்த்தருடைய ஜெபம்.

### அ-ம் பிரிவு.

### ஆறும் விண்ணப்பம்

வினா. கர்த்தருடைய ஜெபத்தின் ஆறும் விண்ணப்பம் என்ன?

விடை. எங்களைச் சோதனைகுள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரக்ஷித்துக்கொள்ளும்.

வேதத்தில் "சோதனை" என்பது பல இடங்களில் பரீக்ஷை என்று அர்த்தங்கொள்ளும்.

தேவன் ஆபிரகாமைச் சோதித்தார். ஆதி. 22: 1.

சில இடங்களில் "சோதனை" என்பது 'உபத்திரவம்' என்றும்; சில இடங்களில் 'பாவஞ்செய்யத் தூண்டிவிடுதல்' என்றும் அர்த்தம் கொள்ளும்.

உபா. 8: 2, 3. சங். 65: 10. யாக். 1: 3. 1 பேது. 1: 6. 1 தெச. 3: 5. யாக். 1: 13, 14.

வினா. தேவன் எப்பொழுது மனுஷருக்குச் சோதனை நேரிடச்செய்கிறார் என்று சொல்லலாம்?

விடை. 1. மனுஷருடைய இருதயத்தின் கெட்ட இச்சைகளுக்கு ஏதுவாயிருக்கிற பொருளாசைக்கு இடங்கொடுக்கும்பொழுதும்.

ஆகான் பாபிலோனிய கொள்ளைப்பொருட்களைக் கண்டபொழுது அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டான். யோசு. 7: 20, 21.

இஸ்ரவேல் ஜனங்களை இலக்கம் பார்க்கும்படி தாவீது ஏவப்பட்டான். 2 சாமு. 24: 1.

யூதாஸ் பணஆசையினாலே தன் ஆண்டவரைக் காட்டிக்கொடுக்கும்படி சோதிக்கப்பட்டான். மத். 26: 15.

அவனவன் தன் தன் சுயஇச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். யாக். 1: 14.

2. சாத்தானும், பொல்லாத மனுஷரும் நம்மைச் சோதிக்கும்படி இடங்கொடுக்கும்பொழுதும்.

ஒரு பொய்யின் ஆவி, ராமோத் கிலேயாத்தின்மேல் யுத்தத்துக்குப் போகும்படி, ஆகாப் இராஜாவைத் தூண்டிவிட்டது. 1 இரா. 22: 20, 22.

சாத்தான், இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டான். 1 நாளா. 21: 1.

சாத்தான் யோபைத் துன்பப்படுத்தும்படி இடங்கொடுக்கப்பட்டது. யோபு 1: 12. 2: 6.

அனனியா, சப்பீராள் பரிசுத்தாவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தானாலே சோதிக்கப்பட்டார்கள். அப். 5: 3.

3. பரிசுத்தஆவியினுடைய முயற்சியை நம்மிடத்திலிருந்து எடுத்து, சோதனைகளுக்குள் நம்மை விட்டுவிடும்பொழுதும்.

தேவன் எசேக்கியாவை, அவன் இருதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி, அவனைச் சோதிக்கிறதற்காக அவனைக் கைவிட்டார். 2 நாளா. 32: 31.

எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான், அவனைப் போகவிடு. ஓசி. 4: 17.

ஆனால் தேவன், மனுஷர் பாவம்செய்யும்படிக்குச் சோதிக்கமாட்டார்.

தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. யாக். 1: 13.

வினா. நாம் சோதிக்கப்படும்படி தேவன் ஏன் இடங்கொடுக்கிறார்?

விடை. நமக்குச் சோதனைகள் வரும்படி சம்மதிக்க அநேக காரியங்களுண்டு.

அது, நம்முடைய விசுவாசத்தைப் பரீக்ஷிக்கிறதற்கு அவசியமென்றும், புடமிடுகிறவனாலே நாம் தங்கமாக விளங்கும்படி நம்முடைய இருதயத்தைச் சுத்திகரிப்பதற்கும், நம்மைத் தாழ்த்திச் சீர்ப்படுத்தவும், விசுவாசிகளுக்கும் வஞ்சகருக்குமுள்ள வித்தியாசத்தைக் காண்பிக்கவுமே.

உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார். உபா. 13: 3.

அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன். யோபு 23: 10.

உபா. 8: 2, 16. யோபு 2: 3. லூக். 8: 13. யாக். 1: 12. 1 பேது. 1: 6, 7.



வினா. இந்த விண்ணப்பத்தின் முதற்பாகத்தில் நாம் எதற்காக ஜெபம் பண்ணப் போதிக்கப்படுகிறோம்?

விடை. நாம் நம்முடைய கெட்ட இச்சைகளினாலாவது, பிசாசினாலாவது, தீமையானவைகளைச் செய்யும்படியான சோதனைக்குள் நடத்தப்படாமல், சோதனையில் நம்மைத் தாங்கவும், சோதனையில் விழும்படி இடங்கொடாதிருக்கவும் வேண்டுமென்று விண்ணப்பம்செய்யப் போதிக்கப்படுகிறோம்.

துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக் காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும். சங். 19: 13.

மத். 26: 41. லூக். 22: 40, 46. 1 கொ. 10: 13. 2 பேது. 2: 9.

உன் நினைவுகள், விருப்பங்கள், குணங்களைப்பற்றி விழிப்பாயிரு. அவைகள் அடிக்கடி பலமான சோதனைகளினால் பரீக்ஷிக்கப்படும். நீ தானே சோதனைக்குட்படாதபடி பார். உன்னைப் பாவத்துக்கு நடத்தும் எல்லா கெட்ட தோழரையும், உன் ஆத்துமாவுக்கு மோசம் வருமென்று தோன்றுகிற எல்லா இடங்களையும் விட்டு விலகு.

நாம் நெடுங்காலமாய் எந்த விசேஷித்த பாவத்தினாலும் மேற்கொள்ளப்படாததினாலே, அந்தப் பாவங்களை இனிமேலும் செய்யமாட்டோமென்று எண்ணங்கொள்ளக்கூடாது. தாவீதும் மற்றும் சில பரிசுத்தவான்களும் நெடுங்காலம் மார்க்கத்திற்கடுத்த ஊழியங்களில் ஸ்திரமுள்ளவர்களாயிருந்தபின்னும், பயங்கரமான பாவங்களில் விழுந்தார்கள். ஆதலால் நாம் விழித்திருக்கும் கடமையை விட்டுவிடாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

வினா. நாம் எந்தத் தீமையினின்று இரக்ஷிக்கப்பட ஜெபிக்கிறோம்?

விடை. 1. ஆவிக்குரிய அதாவது ஆத்துமாவுக்கு நேரிட இருக்கும் எல்லா மோசங்களினின்றும், சரீரத்துக்குரிய அதாவது வியாதிகள், பலவகையான இடையூறுகள், சடிதி மரணத்தினின்றும் நம்மை இரக்ஷித்துக் காப்பாற்றவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரக்ஷித்து, தம்முடைய பரமஇராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். 2 தீமோ. 4: 18.

சங். 40: 12. 91: 1—13. 2 தெச. 3: 2.

2. தேவன் நம்மை எல்லாப் பாவத்துக்கும் பொல்லாப்புக்கும் விலக்கிக் காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார். 1 சாமு. 2: 9.

1 நாளா. 4: 10. யோவா. 17: 15.

3. நம்முடைய ஆவிக்குரிய சத்துராதியாகிய சாத்தானின்று காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். ஏனென்றால் பிசாசானவன் நம்மைக் குற்றஞ்சாட்டி வேதனைப்படுத்தும்படி, நாம் பாவம் செய்ய இணங்கத்தக்கதான எல்லா வகைகளையும் பிரயோகிக்கிறான்.

உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான். 1 பேது. 5: 8.

எபே. 6: 11. 1 யோவா. 5: 18.

நாம் பிசாசானவனுக்கு இணங்கினாலொழிய, அவன் நம்மைப் பாவஞ்செய்யும்படி பலாத்காரம்பண்ண அவ்வளவு வல்லமையுடையவனல்ல. அவன் கட்டாயம்பண்ணவல்ல, தந்திரத்தைப் பிரயோகிக்கக் கூடியவனாயிருக்கிறான். நாம் எதிர்த்து நின்றால் அவன் நம்மைவிட்டு ஓடிப்போய் விடுவான். நம்முடைய இரக்ஷகர் அவனால் சோதிக்கப்பட்டபோது, இந்தப் பொல்லாங்கன் தன்னுடைய பராக்கிரமத்தையெல்லாம் காண்பித்தான். அவரைக் கட்டாயப்படுத்தவில்லை, அவரைத் தொடவில்லை. தாழக் குதியும் என்று சொல்லி, பிசாசுக்குக் கீழ்ப்படிகிறவன் தானே தாழக்குதிப்பான் என்று உத்தேசித்தானேயல்லாமல் அவரைக் கட்டாயம்பண்ணவில்லை. மத். 4: 6.

4. நித்திய மரணத்தினின்று இரக்ஷிக்கவேண்டிக்கொள்ளுகிறோம், சரீர மரணத்தினின்றல்ல, ஏனென்றால் அது நித்தியமானதல்ல. ஆனால் பொல்லாத மனுஷரின் ஆத்துமாக்களும் சரீரங்களும் நரகத்தில் அனுபவிக்கும் பயங்கரமான நிலைமையே நித்திய மரணம். அங்கே புழுச் சாகாது, அக்கினி அவியாது, அது மரணம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அவர்கள் என்றென்றைக்கும் ஜீவனூற்றாகிய தேவனைவிட்டுப் பிரிக்கப்பட்டு, இனிமேல் சந்தோஷ பாக்கியத்தை அனுபவிக்கக் கூடாதவர்களாயும், நன்மையான யாதொன்றையும் செய்யக்கூடாதவர்களாயும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அழிந்துபோகமாட்டார்கள். ஜீவன் உடையவர்களாகவே இருப்பார்கள். ஆனால் அவர்களிலிருக்கும் ஜீவன் மரணமாயிருக்குமென்றால் அந்த மரணம் எவ்வளவு பயங்கரமுள்ளதாயிருக்கும்!

இவர்கள் (பொல்லாதவர்கள்) நித்தியஆக்கினையை அடையவும் போவார்கள். மத். 25: 46.

மாற்கு 9: 49. ரோ. 6: 23. யாக். 1: 15. வெளி. 2: 11. 20: 14. 21: 8.

வினா. இரக்ஷிப்புக்காக நாம் யாரை நோக்கிப் பார்க்கவேண்டும்?

விடை. தேவனையே நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய கிருபை போதுமானதாயிருக்கிறது. அவர் நம்முடைய உள்ளான மனுஷன் அந்தத் தீமையான நாளில் நிலைநிற்கத் திராணியுள்ளவனாகும்படி தம்முடைய ஆவியானவராலே பலப்படுத்தக்கூடும். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் தம்முடைய இரக்கத்தினாலும் தயவினாலும் அப்படியே செய்வாரென்று நம்புகிறேன்.

கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரக்ஷிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்புநாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார். 2 பேது. 2: 9. ஒசி. 13: 9. கலாத். 1: 4. எபி. 2: 18.

வினா. தேவனுடைய ஒத்தாசை நமக்குக் கிடைக்கிறதெப்படி?

விடை. ஜெபத்தினாலும், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவதினாலுமே தேவஒத்தாசை நமக்குக் கிடைக்கும். பவுல் அப்போஸ்தலன் சாத்தானுடைய சோதனையினாலே நெருக்கப்பட்டபோது இரக்ஷிப்புக்காக விண்ணப்பஞ்செய்தான், அவனுக்கு உத்தரவு அருளப்பட்டது.



என் கிருபை உனக்குப் போதும். 2 கொரி. 12: 9. 1 யோ. 2: 14.

மனிதர் தங்களுடைய ஆதரவற்றதும் தாழ்வானதுமான நிலைமையைக் கவனிக்கும்பொழுது எவ்வளவும் பெருமை பாராட்ட நியாயமில்லை. சோதனைகளுக்கு எதிர்த்து நிற்க நமக்குத் திராணியுண்டாயிருந்தால், வேதத்தில் சொல்லிய உத்தமர் பயங்கரமான பாவங்களில் விழுந்தார்கள் என்பதை நினைவுகூர்ந்து, நாம் பாதுகாக்கப்பட்டது தேவகிருபை என்றே சொல்லவேண்டும். இரக்ஷிக்க வல்லவராகிய அவருக்கே அறிக்கையிடு, அவரை நம்பு. அவர் இம்மைக்குரிய தீமைகள் உனக்குச் சம்பவியாதபடி தடுப்பார். அல்லது அவைகளால் உனக்கு நன்மை உண்டாகச் செய்வார். எல்லாவற்றுக்கு மேலாக உன்னுடைய ஆவிக்குரிய சத்துராதிகளின சதிமோசங்களுக்குத் தப்பும் அடைக்கலமாக அவரிடத்தில் ஓடு. பாவத்துக்கு ஏதுவாயிருக்கிற எதையும் நாம் விலக்கவேண்டும். எல்லா ஜாக்ரதையோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். ஏனெனில் அதிலிருந்து ஜீவன் பரவும். சாத்தான் உட்பிரவேசிக்க இடந்தேடுகையில் ஒவ்வொரு வழியும் அடைக்கப்பட்டிருக்கட்டும். ஏனென்றால் நாம் பாவஞ்செய்தோமென்றால் நமக்கு நேரிட்ட சோதனையின்மேல் போக்குச் சாக்குச் சொல்லாமல் நம்மை நாமே குற்றவாளிகளாக்குகிறோம். சாத்தான் அசுத்தமும் பாவமுமான எண்ணங்களை உண்டாக்குகிறவனென்றாலும், சோதனைக்கிடங் கொடுக்கிறது நம்முடைய சொந்தச் செய்கையாயும், பாவம் நம்முடைய சொந்த வாசலிலே படுத்திருக்கிறதாயுமிருக்கிறது.

பராபரனே, பலவித கொடிய மோசங்களால் சூழப்பட்டிருக்கிற நாங்கள் எங்கள் சுபாவ பலவீனத்தினாலே நிலைநிற்கத் திராணியற்றவர்களென்று அறிந்திருக்கிறீரே, எங்களை எல்லா மோசங்களிலும் தாங்கவும், எல்லாச் சோதனைகளிலும் கடத்தேற்றவுந்தக்க பெலனையும் ஆதரவையும் கட்டளையிட்டருளும்படி எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

## முடிவுரை.

வினா. கர்த்தருடைய ஜெபத்தில் முடிவுரை என்ன?

விடை. இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென்.

இந்த முடிவுரை. லூக். 11: 4-ல் சொல்லப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஜெபத்தில் இல்லை.

நம்முடைய சபையின் ஆராதனையில் ஸ்தோத்திர ஜெபங்களுடன் மட்டும் இந்த முடிவுரை வழங்கப்படுகிறது. மற்றச் சமயங்களில் இது விட்டுவிடப்பட்டிருக்கிறது.

வினா. இதில் தேவனைப் புகழ்ந்து சொல்லப்படுகிறவைகளெவை?

விடை. அவருடைய இராஜத்துவம், சர்வவல்லமை, மேன்மை, நித்தியத்துவம் என்பவைகளே. இதற்கொப்பான முடிவுரை வேதாகமத்தின் பல இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்க்கலாம்.

எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென். வெளி. 7: 12.

1 நாளா. 29: 11. சங். 72: 18, 19. 1 தீமோ. 1: 17. வெளி. 5: 13, 14.

அவர் நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் உத்தரவு அருளவும், நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கவும், நம்முடைய சகல பாவங்களையும் மன்னிக்கவும், எல்லாத் தீமையினின்று நம்மை இரக்ஷிக்கவும், சகல சத்துருக்களினின்று நம்மைக் காக்கவும் கூடும். இராஜ்யம் அவருடையது. எல்லாம் அவருடைய ஆதீனத்திலிருக்கிறது. வல்லமை அவருடையது. நாம் நினைப்பதிலும் கேட்கக் கூடியதிலும் அதிகமாகக் கொடுக்க அவர் சித்தமும் மனமுமுடையவராயிருக்கிறார். அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்பாரென்று நம்பி, மகிமை அவருடையதாயிருக்க விரும்புகிறோம். ஏனென்றால் அவர் நமக்காகச் செய்கிறவைகளின் மகிமையை நாம் அவருக்குக் கொடுப்போமென்றால் நம்முடைய விண்ணப்பங்களுக்கு உத்தரவு அருளப்படுமென்று நம்பலாம்.

வினா. ஆமென் என்பதின் அர்த்தமென்ன?

விடை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் தமது இரக்கத்தினாலும் தயவினாலும் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு உத்தரவு அருளுவார் என்ற நம்பிக்கையைக் குறிக்கிறது. ஆகையால் அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தங்கொள்ளுகிற ஆமென் என்று சொல்லுகிறேன்.

நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ, அவைகளை எல்லாம் பெறுவீர்கள். மத் 21: 22.

யோவா. 16: 23. ரோ. 11: 36. 2 கொரி. 1: 10. எபே. 3: 20.

நீ இந்த ஜெபத்தைச் சொல்லுகையில், அது உன் உதடுகளில் இருப்பதுபோல் உன் இருதயத்திலும் இருக்கக் கருத்துள்ளவனாயிரு. நீ கலக்காரனும் பகைவனுமாகயிருக்கையில், இரக்ஷகருடைய சீஷர்களாலே சொல்லப்பட்ட வார்த்தைகளை உச்சரிப்பதினாலே மாத்திரம் கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறவனாக நினையாதே. நீ எவ்வளவு உன்னதமான ஜெபத்தை சொன்னாலும் அது உன் இருதயத்துடன் சொல்லப்படவில்லையென்றால் யாதொரு பிரயோஜனமும் இல்லை என்பதை நினைத்துக்கொள்.

---

# இரக்ஷண்ய யாத்திரிகம்.

(தொடர்ச்சி.)

எண்டரு வேதநூலின் முறைமையை யிகந்தநேசர்
தொண்டனைக் காருமாறு துணிந்து சில்லுபதேசங்கள்
விண்டநீ யவற்றையீண்டு விள்ளுதி தெரியவென்று
கண்டகன் வினவக்கேட்டுக் கருணையெம்பெருமான் கூறும். 1041



புனித ஆலயத்தும் வீதிப்புறத்தினும் பொதுமன்றத்தும்
மனித ஜீவனுக்கீடேற்றம் வழங்குமெய்ச் சுருதிவாய்மை
நனிதிகழ் உபதேசத்தை நவின்றனென் எவர்க்கும் நாடி
இனிது கேட்டுய்யஎதும் இரகசியத் திசைத்ததின்றால். 1042

மேவர என்பால் நீவிர் வினவுவதென்னே யான்சொல்
ஜீவவாக்கதனைக் கேட்டோர் செப்புவர் கேண்மினென்னுத்
தாவில்சீரமலன் சாற்றும் அளவையில் தலைவன் கூற்றுக்
காவதிவ்விடை யோவென்ன அழன்றங்கோர் அசடன்சீறி. 1043

யாதென இயம்புகிற்கேன் ஏழைநாவெழும்பி யீசன்
மாதயாரூபமான மாநுவேல் வடிவஞ்சேப்ப
சோதகஅறைந்தான் அந்தோ நோன்பிலே மிழைத்தபொல்லாப்
பாதகத்துருவம் வாய்ந்தபனைநெடுந் தடக்கையோசசி. 1044

ஆங்கவன் துணிந்துகண்ணின் றநீதியாய்ப் போதமின்றி
ஓங்கியுள்ள கங்காரத்தால் அடித்தலும் உலப்பில் பெம்மான்
தீங்கணுகாத தூயதிருப்படிவத்து நோவு
தாங்கிநின்றருளி ஞேக்கிச் சமித்துமற்றிதனைச் சாற்றும். 1045

உள்ளதை யுள்ளவாறே யுரைத்தனன் அதில் நியாயக்
கள்ளவாசகமுண்டேல் நீகாட்டிடல் வேண்டும்அன்றி
எள்ளியிங்கெனை யடித்தல்நடுநிலைக் கிசையத்தக்க
ஒள்ளியசெயலோ வென்றார்உலகெலா முய்யநின்றார். 1046

நடுப்புரி நம்பனீது நவிற்றலும் நாசவஞ்சக்
கடுப்பயில் மனத்தரெல்லாம் கவன்றினிக் குற்றஞ்சாட்டி
வடுப்படுத் திவனைக்கோறும் வகையெதுவென்று தம்மைக்
கெடுப்பதே கருமமாகப் புறம்புப்போய்க் கேடுசூழ்ந்தார். 1047

நோலைக்களப் பரித்தவல்ல குற்றங்கள் இவன்பாலுண்டென்
றுலைக்கருஞ் சான்றுசொல்வா ரெவரென உசாவுங்காலை
புலைக்குணப்பதிதர் சில்லோர்பலபடப் புகன்றபொய்ச்சான்
றலைக்கலை யழியுமாபோல் ஒன்றையொன் றழித்ததன்றே. 1048

அந்தவோரையிலே பொல்லாங்கறிதுமென் றிருவர்பொங்கி
இந்தஆலயத்தை யானேஇடித்தொரு மூன்றுநாளில்
விந்தையாய்ச் சமைப்பனென்ன விளம்பிடக் கேட்டோமென்றார்
தந்திரத்தவர் கொலைக்குத்தர்க்கசான் றிதுவன்றென்றார். 1049

பற்பல உபதேசத்தைப் பலபடப் பழுதுகூறி
அற்புத கிரியையாவும் அபத்தமென் றழிம்புபேசும்
கற்பிதமாயகட்டுக் கரியெலாம் கரிந்தசம்மா
எற்படுபகலைச் சில்லோர் இரவென்று வியையுங்கொல்லோ. 1050

சான்றுவேறில்லை யென்னத்தம்முளே கவன்றுசகத்
தான்றவர் மறுத்துமுந்தை யரங்கணைந்தமர அம்மான்
தோன்றலைக் காய்பாசென்னுந் துர்ஜனத்தலைவன் கண்கள்
ஊன்றிநின் றுருத்துநோக்கி இவையிவை உரைப்பதானான். 1051

வேதியர் பலர்உனக்கு விரோதமாய்உரைத்த சான்றும்
கோதற இருவர்வந்து கூறியவாய்மைக் கூற்றும்

ஈதிதுவாக நீசொல் லெதிர்மொழி யேதுமின்றே
ஓதுதியுளவே லென்றான் உரைத்திலர் அமலனொன்றும். 1052

பின்னருஞ் சினந்துமேலாம் பெருந்தகையாய பெம்மான்
தன்னொரு நாமத்தாணை சாற்றுதிஉண்மை நீயப்
பன்னருஞ் ஜீவனுள்ள பராபரன் புதல்வனான
உன்னருங் கிறிஸ்துவோவென் றுசாவினன் கபடமாக. 1053

தூயநல்லுரையுந் தேவதோற்றமும் சுகிர்தமாண்பும்
நாயினுங் கடைப்பட்டேமை நயந்துபா ராட்டும்அன்பின்
நேயமும் எதிரில் நின்றுநிகழ்த்துசான் றமையாதென்ன
மீயுயர்ஆணைகூறி விசாரிக்கும் முறைமையென்னே. 1054

கண்ணுளார் கண்டுங்காணார் காதுளார் கேட்டுங்கேளார்
எண்ணிரு தயத்தினாலு முணர்ந்திடா ரிவர்மற்றென்ற
புண்ணிய வசனம்யாண்டும் பொய்க்குமோ அருளொன்றின்றேல்
மண்ணுளார் பொறியும்அந்தக் கரணமும் மன்னாமையன்றே. 1055

பொறிபுலன் ஒருங்கநோற்றுப் புறமைசெய் புலவரோனும்
வெறுமையிற் றிகழ்வராயில் வெறுத்தவை மறிக்குமல்லை
சிறுமைதீர்ந் துயர்வுகாணிற் சேவடித் தொழும்புசெய்யும்
எறிதிரைப் பரவைஞாலம் ஏழைமையுடைத்து மாதோ. 1056

இறைவன்மேலாணை மற்றீதியம்புகென் றிசைத்த மாற்றம்
மறைமுதல் கேட்டுத்தெய்வ மைந்தனுங் கிறிஸ்துநானே
தறையிலித் தகையனேனும் தாதையின் வலப்பாகத்தும்
முறைபுரி நடுநாட்கொண்டலும் முற்றத்தும் விளங்கக் காண்பீர். 1057

ஒளிப்பற நியாயமுங் கட்குணர்த்தினு முணரீர்யாவும்
வெளிப்படை யாயபோதும் விசுவசித்திடுவீரல்லீர்
அளிப்படா மனத்தீரென்னு அறத்துறை யமுதுமல்கித்
துளிப்படு குமுதச்செவ்வாய்த் துவரிதழ் விண்டுசொன்னார். 1058

வன்மனக் காய்பாசோடு குழுற்றமருங்கு நொக்க
கன்மனத்தவரும் ஐயன்சழறிய செஞ்சொற் றேரார்
துன்மதி யாகத்தேவ தூஷணஞ்சொன்னா னென்றுப்
புன்மொழி பலவாறாகப் புகன்றனர் வெகுளிபொங்கி. 1059

எம்பிரானுரைச்சஞ் சீவியிருந்த அப்பதிதர்க்கெல்லாம்
வெம்புதீ விடம்போலாகச் செவித்தொளை வெறும்பிற்றென்னில்
நம்பினோர்க்கெல்லாம் ஜீவவாசனை நல்கும்நம்பா
வம்பருக்கென்றும் நீங்காமரண வாசனையாமன்றே. 1060

தாயிபாசென்றும் பொல்லாக் கடினவன் நெஞ்சன்வஞ்ச
மாயமூடியமே லங்கிவல்லையிற் கிழித்தாத்துககம்
மேயவன்போல நின்றுவேறுசான் றினிவேண்டுங்கொல்
நீயிரேயிவன்வாய் சொற்றநிமல தூஷணங்கேட்டீரால். 1061

மற்றினியுரைப்ப தென்னைமதிவலீர் இதனை யொத்த
குற்றம்வேறுளது கொல்லோ குறித்திடிற் கூறிற்றெல்லாம்
ஏதெனக் கருதுகின்றீர் ஏற்றதண்டனைதான்யாது
செற்றெனப் பகர்மினென்றான் தீவினைதிருத்த நின்றான். 1062



நன்றிலா னுரைத்தமாற்றம் நடுவிலாச் சங்கமேய
புன்றொழில் யூதர்கேட்டுப் பொருக்கென இவனையின்னே
கொன்றுயிர் களைவதல்லாற் குறிப்பிடு தண்டம்வேறென்
றின்றென உரக்கக்கூவி இரைந்தனர் இகலிமாதோ. 1063

உலப்பிலாஆதி மூலத்தொருபரம் பொருளென்றுன்னப்
புலப்படு மனத்தரேனும் புரையிலா வொருவற்பற்றிக்
கொலைப்படுத் தகவென்றிட்ட கூக்குரல்குறித்து நோக்கில்
அலப்புநீர் உடுத்தவையத் தழிம்பினுக் கவதியுண்டோ. 1064

எண்ணிய எண்ணம் வாய்த்ததென்பதோர் எம்பல்விஞ்சிக்
கண்ணிலாத்தலைவன் ஏகக்காவல்செய் திருந்தகள்வர்
புண்ணியமூர்த்தி தன்னைப்புறக்கணித் தகந்தையோடும்
நண்ணியாகடியஞ் செய்யநாடினர் நிந்தைபேசி. 1065

பாதகர்குழுமிச் சொற்றபழிப்புரை யென்னுங் கொள்ளி
ஏதமில் கருணைப்பெம்மான் இருதயத்தூன்ற வூன்ற
வேதனையுழந்து சிந்தைவெந்துபுண் பட்டாரல்லால்
நோதகச் சினந்தோர் மாற்றம் நுவன்றிலர் கருமம்நோக்கி. 1066

மறுமையுமிம்மை தானும்நோக்கிலா மடமைபூண்ட
குறுமையோர் அமலன்தூய குணத்தை யெட்டுணையெண்ணாது
வெறுமையை நினைத்துத்துன்பம் விளைத்தனர் மேன்மேலாகப்
பொறுமைகண் டெள்ளவிந்தப் பூதலத்தியற்கையன்றே. 1067

கறுத்திடில் உலகமெல்லாங் கவிழ்ந்தழிந் தொழியுமேனும்
பொறுத்தனர் இருந்தார் தாஞ்சொல்புத்துரைக் கொருசான்றாக
ஒறுத்திடும் மதுகைமிக்க உரனுடை யாளனுள்ளம்
பொறுத்திடும் பொறையையன்றே பொறையென்பர் புலமைமிக்கோர். (1068

திருந்திய செவ்விவாய்ந்த திருமுகத் துமிழ்ந்தார் சில்லோர்
வருந்தற அடித்தார் சில்லோர் மலர்த்திரு வதனஞ்சேப்பக்
கருந்தடங் கண்ணைப்பொத்திக் குட்டினர் சிலர்கை யோங்கிப்
பெருந்தகாய் யாவரென்னப் பேசுகென் றிகழ்ந்தார் சில்லோர். 1069

விடியுமட் டிறைவன்தூயமேனி நொந்தலசி யுள்ளம்
துடிதுடித் திவ்வாறாகத் துயருழந் திடையுங்காலை
கடிமனைமுன்றில் நின்றுகன்மலை யெனப்பேர் பெற்ற
அடியவன் குளிருக்காற்று தனல்முகத் தமர்ந்தான் இப்பால். 1070

ஆங்கவன் தன்னைக்காணு அயலுளார் யாவன்நீயத்
தேங்கமழ் சோலைவாயிற் சேசுவோடிருந்தாய் அன்றேன்
பாங்குறுஞ் சீடருக்குள் ஒருவனீபோலும் பார்க்கில்
ஈங்குநின் னுரையேசாக்ஷி யியம்புகின்றதுமற் றென்றார். 1071

ஒருமுறைபோல முக்கால் உசாவலும் அச்சத்தாலே
திருமுறை யறிந்தசீடன் சிந்தனை கலங்கி யந்தோ
குருமுறை நிறுத்த தூயகுமரனை யறியேன் என்னு
வருமுறைதோரான் முக்கால்மறுத்தனன் மருண்மென்னே. 1072

வேறு.

மன்னுங் கருணைப்பெருநிதிய வைப்பை யறியேனென மறுத்துக்
கொன்னே மறங்கூர் பொய்யாணை கூறிக்கடிய கொடுமொழியால்
அன்னோதன்னைச் சபித்திடவும் அமைந்தான் என்னில் யாவரினித்
துன்னுமிடருக் கலசாமே உண்மைமொழியுந் துணிவுள்ளார். 1073

மூக்காற்கலங்கி மறுதலித்துமுடிய இரண்டாமுறை சேவல்
தக்கோய் இதுவோ விசுவாசச் சமைவும் அன்பும் தைரியமும்
எக்கால் நீங்குமிவ்வசையென் றிழித்துவிளிக்குமியல்பேபோற்
கொக்கோ வென்னக் கொக்கரித்துக் கூவிற்றமலன் கூறியபோல். 1074

ஜீவநெறியை அறமயக்கி ஜெகத்தையகத்துப் புடைவளைந்த
பாவ நிசியையிருஞ்சிறகாற் பறக்கஅடித்துப் பகைத்தோட்டிப்
பூவலயத்துக் கிரக்ஷணியம் பொலியவருபுண் ணியப்பகலை
வாவென்றுரக்க விளிப்பதுபோன் றெழுந்த மதவாரணத்துழனி. 1075

வேறு.

கோழிகூவிய கூக்குரல் செவிகுறுகுதலும்
தாழிமத்துறுதயிரென வுடைந்துளந் தளர்வுற்
றாழிநாயகன் உரைத்தமை உள்ளுளே யுள்ளிப்
பாழினீத்தனன் ஜீவநன்மையை யெனப்பரிந்தான். 1076

அயில்கொள்வேலென வுளத்திடைக் குளித்ததெம் மையன்
துயிலிலாதெமைப் புரந்திடும் விழிக்கடை தொண்டன்
பயிலுளக்கரி கடிந்துபுண் படுத்தது பதைத்து
வெயிலிடைப்படு கிருமியிற் றுடித்தனன் வெதும்பி. 1077

இனையதன்மையனாகியி ட்டியபிழையெண்ணித்
தனைவெறுத்துரை யிடற்கரு மெய்மனத்தாபம்
நினைவிலோங்கவும் நிருமலன் அருட்டிறம் நினைந்தும்
மனையினோர்சிறை வறிதுபோய் மனங்கசந்தழுதான். 1078

தேவஆவியின் அருட்செயல் சிறக்கின்ற செய்ய
ஜீவன்முத்தரோ திறம்பிய பிழையினைத்தேறித்
தாவமுற்றுளந் திரும்பிவைதிகந்தலைப்படுவர்
பாவகாரியர் லௌகிக அளற்றிலே பதிவார். 1079

அவலமேயதம் மன்பர்கா லடிநிலைபிசகித்
தவறிப் பாவவெஞ்சேற்றிடை வீழினுந் தாங்கிக்
கவலையோடெடுத் தாதரம்புரிவர் தாய்கடுப்பக்
புவனரக்ஷணை சமைத்தநம் புண்ணியமூர்த்தி. 1080

(இன்னும் வரும்.)

---

## எலிசாவின் சரித்திரம்.

ஆகாப் இராஜாவும், இஸ்ரவேலருஞ் செய்த விக்கிரகாராதனையினிமித்தமும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றதினிமித்தமும் அவர்



களைப் பழிவாங்கும்படி தேவன் எலியாத் தீர்க்கதரிசிக்குப்பின் எலிசாவைத் தீர்க்கதரிசியாகவும், சீரியாவுக்கு ஆசகேலையும், இஸ்ரவேலுக்கு ஏகூவையும் இராஜாக்களாகவுமிருக்க அபிஷேகம்பண்ணும்படி எலியாவுக்கு உத்தரவுசெய்தார். 1 இராஜா 19: 15, 16. அப்படியே கி. பி. மு. 906–ல் ஆபேல் மெகோலாவின் ஊரானாகிய சாப்பாத்தின் குமாரன் எலிசாவை தமக்குப்பின் தீர்க்கதரிசியாயிருக்கும்படி எலியா நியமித்தார். எலிசா அவருடைய படிக்கும் இடத்திலல்ல வயல் வெளியிலே புஸ்தகம் கையிலிருக்கிறவராயல்ல, ஏர் உழுதுகொண்டிருக்கும்போது கண்டுபிடிக்கப்பட்டார். இவர் நல்ல சமுசாரி. தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடத்தில் படித்தவரல்ல. எலியா தான் வழியே போகிற போக்கிலே தமது சால்வையை அவன்மேல் போடவே, அவன் இருதயம் மாறி, எலியாவைப் பின்சென்றான். சால்வையைப் போட்ட எதுவால் ஆவியின் வரங்களும் கிருபைகளும் எலிசாவுக்கு வந்தன. 2 இரா. 1: 8. சகரி. 13: 4. இப்படிச் செய்வது தீர்க்கதரிசிகளின் வழக்கம். எலிசா எலியாவுக்குப்பின் செல்லும்படி தேவவல்லமையினாலேயே இழுக்கப்பட்டான். வழக்கமாய் தன் பெற்றோரை வழிவிட்டனுப்பும்படி உத்தரவு கேட்டு அந்தப்படிக்கு அவன் பெற்றோரை முத்தஞ்செய்து (ஆதி. 29: 11. 31: 28. அப். 20: 37. லூக். 9: 61, 62.) வயலிலிருக்கிற எலியாவையும், தன் சிநேகிதரையும், வேலைக்காரரையும் போய்க் கூட்டி வந்து அவர்களுக்குத் தான் உலக சம்பந்தங்களை விட்டதற்கடையாளமாக ஏர் மாடுகளைப் பிடித்து அடித்து ஏர் மரமுட்டுகளைக்கொண்டு சமைத்து, சந்தோஷமாயும் மனஉச்சாயமாயும் ஊழியத்தில் பிரவேசிக்கிறவனென்று காட்ட பெரிய விருந்துசெய்தான். (2 சாமு. 21: 22.) எலிசாவுக்கு நேரிட்ட மாறுதல் தேவஆவியின் வல்லமையினாலாயிற்று. அவர் தேவஆவியினால் தீர்க்கதரிசியின் ஊழியத்துக்கு அபிஷேகம்பண்ணப்பட்டார்.

எலிசா எலியாத் தீர்க்கருக்கு வேலைக்காரன் (2 இரா. 3: 11.) இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்தின்படி ஓயாமல் கை கால்களைச் சுத்திசெய்வதற்கு வேலைக்காரன் அவசியம். இந்தப்படியாக அவர் எலியாவுக்கு (10) வருஷம் வேலைக்காரனாயிருந்து எலியா பரத்துக்குப்போனதின்பின் எலிசா தமது தீர்க்கதரிசியின் வேலையைச் செய்தார். எலியா கி. பி. மு. 896–ல் பரத்துக்கு எழுந்தபோது எலிசா உலக ஆஸ்தி, கனம், பெருமை இவைகளை விரும்பாமல் எலியாவின் இரட்டிப்பான வரத்தைக் கேட்கவே அந்தப்படியே தேவனும் எலியா செய்ததிலும் அதிகமான பலத்த செய்கைகளைச் செய்யும்படி இரட்டிப்பான வரம்பெற்றார். (உபா. 21: 17.) தேவன் தன்னைத் தீர்க்கதரிசியின் தொழிலுக்கு நியமித்தாரென்பதற்குரிய நிச்சயத்துக்கும் தான் கேட்ட விண்ணப்பம் தனக்குக் கிடைத்ததென்பதற்குரிய நம்பிக்கைக்கும் எலியாவின் சால்வையைப் பரத்திலிருந்து பெற்றுக்கொண்டார். இதினால் எலிசாவின் விசுவாசம் பலப்பட்டது. இதற்குப்பின் எலிசா 60–வருஷம் பலத்த அற்புதங்களைச் செய்தும், தமது தீர்க்கதரிசனத்தினாலும் (2 இரா 6: 31.) தமது வாயின் பட்டயத்தாலும், ஏசா. 49: 2. வெளி. 1: 16. 19: 15, 21. இடிக்கவும் அழிக்கவுந்தக்கதாக தேவனுடைய பயங்கரமான நியாயத்தீர்ப்புகளைக் கூறுவதினாலும், ஆகாப்பின் வீட்டாரைச் சங்கரித்தும் 90–வயதுள்ளவராய் கி. பி. மு. 838–ல் மரித்துப்போனார்.

---

# எலிசா செய்த அற்புத செய்கைகள்.

## 1. எலிசா யோர்தானின் தண்ணீரைப் பிரித்துக் கடந்தது.

எலிசா தான் எலியாவின் ஆவியைப் பெற்றிருக்கிறாரோ இல்லையோவென்று பரீக்ஷிக்கும்படி கீழே விழுந்த எலியாவின் சால்வையைப் பிடித்து, யோர்தானின் தண்ணீரை அடிக்கவே தண்ணீர் இரண்டாகப் பிரிந்தது. எலிசா இரண்டுதரம் அடித்ததாகத் தோன்றுகிறது. தேவன் எலிசாவைத் தாழ்த்தவும் அவருடைய விசுவாசத்தைப் பரீக்ஷிக்கவுமாக அவருடைய ஜெபத்துக்கு உடனே செவிகொடாமல் திரும்பவும் அடிக்கும்படி இடம்பண்ணினார். தேவன் இவருக்கும் பரி. பவுல் அப்போஸ்தலனைப்போல பெருமையடையாதபடிக்கு (2 கொரி. 12: 7.) செய்திருக்கலாம்.

இந்த அற்புத செய்கையைத் தூரத்திலிருந்து கண்டதினாலோ, திவ்ய வெளிப்படுத்தலினாலோ, எலிசா தேவவரம் பெற்றவரென்று அறிந்து எலியாவுக்குப்பின் அவரைத் தங்களுக்கு எஜமானாகவும், போதகராகவும் அங்கிகரித்துக்கொண்டு தரைமட்டுங் குனிந்து அவரை வணங்கினார்கள்.

## 2. எரிகோவின் உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்கினது.

யோசுவா அதைப் பிடித்துச் சபித்தபோதோ அல்லது ஈயேல் அதைக் கட்டினபோதோ அந்தப் பட்டணத்தின் தண்ணீர் கசப்பாயிருந்தது. தீர்க்கதரிசிகளின் புத்திரருடைய கல்விச்சாலையிருந்த இடத்தில் நல்ல தண்ணீர் இருக்கலாம். இந்தப் பட்டணத்தார் எலியாத் தீர்க்கதரிசியிடத்தில் இப்படிப்பட்ட விண்ணப்பஞ்செய்யவில்லையே என்றால், எலியா அப்படிப்பட்ட அற்புதஞ்செய்வாரோவென்ற சந்தேகத்தினாலோ அவருக்குப் பயப்பட்டதினாலோ அவரிடத்தில் கேளாமல் யோர்தானின் தண்ணீரை எலிசா அற்புதமாய்க் கடந்துவந்த செய்கையை அவர்கள் பார்த்திருந்தபடியால் அவரிடத்திற் கேட்டார்கள். எரிகோவின் தண்ணீர் சாபத்தினாலாவது உப்புக்கடலின் சாரத்தினாலாவது அப்படியாகாமல் ஜனங்களுடைய அக்கிரமங்களினிமித்தமே அப்படியாயிற்று. தேவனே அப்படிச்செய்தார். (சங். 107: 33, 34.) எலிசா புதுத்தோண்டி எடுத்து அதில் உப்புப்போட்டுக்கொண்டு வரச்சொல்லி அதை நீரூற்றில் போடவே நல்ல தண்ணீராயிற்று. இந்தச் செய்கை புதுத்தோண்டியினாலுமல்ல, உப்பினாலுமல்ல தேவவல்லமையினாலேயே நடந்தது.

## 3. எலிசா தம்மைப் பரியாசம்பண்ணின பிள்ளைகளைச் சபித்தல்.

எலிசா எரிகோவைவிட்டுப் பேத்தேலிலுள்ள கல்விச்சாலைக்குப் போய் எலியா பரத்துக்குப்போனதையும் அவருடைய உத்தியோகத்துக்குத் தாம் வந்ததையும், அங்குள்ள தீர்க்கதரிசிகளின் புத்திரருக்கு அறிவிக்



கவும் அவர்களை வழி நடத்தவும் போதிக்கவும் நோக்கமாகப் போனார்.
விக்கிரகாராதனைக்குத் தாய்ப் பட்டணமாகிய பேத்தேலில் எரோபெயாம்
செய்த கன்றுக்குட்டிகளுமுண்டு. அப்படிப்பட்ட விக்கிரகாராதனைக்கா
1 ரரின் பிள்ளைகளே எலிசாவைப் பரியாசம்பண்ணினார்கள். (2 இரா. 12:
28, 29. ஓசே. 4: 5. 5: 8.) பொதுவான ஜனங்கள் கன்றுக்குட்டி ஆராத
2 னைக்கு விலக்கமாயிருக்கும்படி தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடமிருக்க,
அப்பட்டணத்து ஜனங்கள் விக்கிரகபக்தியில் அமிழ்ந்து தீர்க்கதரிசிகளை
இகழ்ந்து உன் எஜமானும் சிநேகிதனுமாகிய எலியா பரத்துக்குப்போன
துபோல நீயும் போகவில்லையா? எலியா எங்களைக் கலங்கச்செய்தது
போல நீயும் எங்களைக் கலங்காதபடிக்குச் செய்விக்க "ஏறிப்போ" என்
று தேவநாமத்துக்கு நிந்தையாகவும் தீர்க்கதரிசிகளுக்குக் கனயீனமாகவும்
துணிவோடும் பகையோடும் அவபக்தியோடும் தங்களுடைய பெற்றோரு
டைய போதனைப்படி பரிகாசம்பண்ணினார்கள். விக்கிரகாராதனை செய்
கிறவர்களும் தேவனை நிந்திக்கிறவர்களும் மரணத்திற்குப் பாத்திரராமே.
தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களைச் சபித்தான். அதாவது
தாமாகவல்ல தனக்குக் குறைச்சல் வந்ததற்கல்ல, தேவஉத்தரவுப்படி
தேவநாமத்துக்கு மகிமையாகவே அவர்களைச் சபித்தான். அவ்விடத்தி
லுள்ள விக்கிரகாராதனைக்காரருக்கு எச்சரிப்பாகவும் தமது தீர்க்கதரிசியின்
அதிகாரத்தை உறுதிப்படுத்தவும் நோக்கமாய்க் குட்டிகளைப் பறிகொடுத்த
(2) பெண் கரடிகள் வந்து (நீதி. 17: 12. ஓசே. 12: 8.) வெகு மூர்க்கமாய்
வாலிபரான 42-பேரைப் பக்ஷித்துப்போட தேவன் சித்தமானார். பிள்ளை
களென்று மூலத்தில் வயதுள்ளவர்களென்று கருத்துக்கொள்ளும். (ஆதி.
32: 22. 34: 4. 37: 30. ரூத் 1: 5.) தீர்க்கதரிசி அவ்விடம்விட்டு பேத்
தேலிலுள்ள துஷ்டருக்கு விலகியிருக்கவும் தேவத்தியானஞ் செய்யவும்
தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குப் போதிக்கவும் தேவஆவியினாலே கர்மே
லுக்குப் போனார்.

## (4) எலிசா, யோராம், யோசபாத், ஏதோமின் இராஜாக்கள் ஜலமில்லாமல் வருத்தமடைந்தபோது, தண்ணீர் வரச்செய்தல்

கி. பி. 895. 2 இரா. 3-அதி.

இஸ்ரவேலின் இராஜாவைவிட்டு, மோவாப் கலகஞ்செய்தபோது, யோராம் இராஜா பாகாலின் விக்கிரகாராதனையினிமித்தம் தன் தகப்பனுக்கும் தன் தமையனுக்கும் நடந்த பயங்கரமான நியாயத்தீர்ப்புகளைக் கண்டதினாலும், யோசபாத்துடைய ஒத்தாசை வேண்டியதினாலும், பாகாலின் சிலைகளை அகற்றிப்போட்டு மெய்த்தேவனை வணங்கத் தீர்மானித்து, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் வாக்குகளைக் கேட்டு நடக்கச் சம்மதமுள்ளவனானான். இவனுடைய மனந்திரும்புதல் மாயமாலமுள்ளதும், நிலையற்றதுமாயிருந்தபடியால் ஆகாபின் குடும்பத்துக்குச் சொல்லப்பட்ட சாபம் [illegible]ப்போகவில்லை. ஆகாப் இராஜா மரித்தவுடனேயே மோவாப் இரா[illegible]கஞ்செய்தான். அப்போதிருந்த அகசியா இராஜா வியாதியும், [illegible]ம் சுருக்க காலமுமுள்ளவனானதால் யுத்தஞ்செய்ய புறப்பட[illegible]போது யோராம் யுத்தத்துக்குப் போகிறதால் முந்தின சங்

கதியை திரும்பவும் 2 இரா. 3-ம் அதி-ல் சொல்லியிருக்கிறது. இந்த யுத்தத்துக்கு யோசபாத் இராஜாவும் யூதாவுக்கு விரோதமாய் வந்த சத்துருக்களோடே மோவாபும் முக்கியராய் வந்தபடியால் அவர்களை அதிகமாய்த் தாழ்த்திப்போடவும், (2 நாளா. 20: 1.) மோவாபின் இராஜா இஸ்ரவேலின் இராஜாவுக்குக் கப்பங்கொடாமல் போகிறதை ஏதோமியரும் பார்த்து அவர்களும் தனக்கு விரோதமாய்க் கலகஞ்செய்யாதபடிக்கு எச்சரிக்கப்படவும் நோக்கமாய்ச் சேர்ந்துகொண்டார். இவர் தனக்கு அடிமையான ஏதோமின் இராஜாவைக் கூட்டிப்போக நோக்கமாய் நேர்வழியாய்ப் போகாமல் சுற்றுப்பாதையாய்ப் புறப்பட்டுப்போனார். ஏதோமின் வனாந்தரத்திலோ (3) இராஜாக்களின் சேனைக்கும் தண்ணீரேயில்லை. அந்த வனாந்தரம் அப்படிப்பட்ட இடம்தான். (எண். 20: 2.) வெகு கலக்கமான நிலைமையிலிருந்தார்கள். யோசபாத் இராஜா யுத்த ஆரம்பத்தில் 1 இரா. 22: 5-ல் கர்த்தருடைய தீர்க்கதரிசியைக் கேட்டதுபோல இந்த யுத்த ஆரம்பத்தில் கேளாமல், கஸ்தி நேரிட்ட இச்சமயத்தில் தன் குற்றத்தை உணர்ந்தவராய் தேவாலோசனையைக் கேட்கிறார். எலிசா தீர்க்கதரிசி தேவாவியினாலே இந்தச் சேனைக்கு நன்மைசெய்ய ஒருவரும் அழையாமலிருக்க கூட வந்திருக்கிறார். அவருடைய செய்தியைக் கேட்ட யோசபாத் இராஜா தன் மேன்மையைப் பாராமல் தீர்க்கதரிசியின் கூடாரத்துக்கு இறங்கிப்போனார். மற்ற (2) இராஜாக்களும் கூடவேபோனார்கள். தீர்க்கதரிசி இஸ்ரவேலின் இராஜாவை முகமுகமாய்க் கண்டித்தார். அவர் பாகாலின் சிலைகளை அகற்றினாரேயல்லாமல், அவைகளை உடைத்துப்போடவில்லை. தேசத்திலுள்ள சிலைகளையும் அகற்றவுமில்லை. பாகாலின் தீர்க்கதரிசிகளைக் கொல்லவுமில்லை அவர்களில் சிலர் இந்தச் சேனையோடேயும் வந்திருப்பார்கள். ஆகையால் அந்த இராஜாவைக் கண்டித்து பக்தியுள்ள யோசபாத் இராஜாவைக் கனப்படுத்தினார். இப்போது தீர்க்கதரிசி பரிசுத்த கோபத்தினால் அவருடைய மனம் வருத்தமடைந்திருந்தபடியால் தீர்க்கதரிசன ஆவியைப் பெறும்படி தமது மனதைச் சந்தோஷிப்பிக்கவும் பரவசப்படுத்தவும் நோக்கமாய்ச் சுரமண்டலக்காரனை வாசிக்கச்செய்தார். 1 சாமு. 16: 6 20: 5. தேவாவியின் வரம் தேவன் எவனுக்கு எப்போது கொடுக்கச் சித்தமோ அப்போதைக்கு எல்லாங் கிடைக்கும். எசே. 1: 3. 3: 14, 22. 8: 1. அவர்களுடைய விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் பரீக்ஷிக்கும்படி "இந்தப் பள்ளத்தாக்குகளில் வாய்க்கால்களை வெட்டச் சொன்னார்." எலியா தீர்க்கதரிசியின் ஜெபத்தினால் மழை பெய்தது. எலிசா தமது ஜெபத்தால் ஒருவனும் அறியக்கூடாத வகையாய்த் தண்ணீர் வரச்செய்தார். 1 இரா. 8: 44-ல் சொல்லியபடி எலிசா தேவாலயத்துக்கு நேராய்க் காலைப்பலிச் செலுத்தப்படும் நேரம் பார்த்து ஜெபிக்கவே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டு வந்தது. இதினால் அவர்களுக்கு ஜெயமுங் கிடைக்குமென்று காட்டினார். எருசலேமையும் தேவாலயத்தையும் விட்டுவிட்ட இஸ்ரவேலருக்கு வெட்கமும் புத்தியுமுண்டாகும்படிக்கு இந்த அற்புதம் நடந்தது. அந்திப்பலி செலுத்தப்படும் நேரத்தில் எலியா (1 இரா 18: 29. தானியேல் 9: 21.) செய்த ஜெபங்கள் கேட்கப்பட்டது. பேதுருவும் யோவானும் செய்த ஜெபமும் அங்கிகரிக்கப்பட்டது. அப். 3: 1. பூமியிலிருந்தோ மலையிலிருந்தோ அற்புதமோவாபியாப் பயப்படத்தக்கதாய் ஏராளமாய்த் தண்ணீர் வந்தன. ,க்

---

,விக்



# நற்கருணை மாலை.

-கேள்வி. கர்த்தருடைய இராப்போசனமாவதென்ன?

விடை. புதியஏற்பாட்டில் அடங்கிய ஓர் சாக்கிரமெந்து.

--வினா. இதற்கு இராப்போசனம் என்று பெயர் வந்ததென்ன?

விடை. இராத்திரியில் ஏற்படுத்தப்பட்டதினால்தான் இந்தப் பெயர் வந்தது.

:-வினா. இது யாராலே எப்போது ஏற்படுத்தப்பட்டது?

விடை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியில் ஏற்படுத்தப்பட்டது.

4-வினா. இதை அவர் ஏற்படுத்தின நோக்கம் என்ன?

விடை. தாம் திரும்பவருமளவும் நாம் அவருடைய மரணத்தை நினைவுகூர இதை ஏற்படுத்தினார். "என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள்" என்றார். லூக். 22: 19.

☞ இந்த ஏற்பாடானது கிறிஸ்துநாதருடைய பெயர் வெட்டப்பட்ட ஓர் ஞாபகஸ்தம்பம் என்று திட்டமாய்ச் சொல்லப்படலாம். சகல தேசத்தாரிலும், பாஷைக்காரரிலுமுள்ளவர்கள் இதன் மூலமாய் அவரை ஞாபகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

வினா. சாக்கிரமெந்து என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

?டை. நியமம் அல்லது ஏற்பாடு.

வினா. சாக்கிரமெந்து என்கிற வார்த்தையில் எத்தனை பொருட்கள் அடங்கியிருக்கின்றன?

?டை. காணப்படுகிற புறம்பான அடையாளமும், ஆவிக்குரிய உள்ளான கிருபையுமாகிய இரண்டு பொருட்கள் அடங்கியிருக்கின்றன.

வி கர்த்தருடைய இராப்போசனமாகிய இந்தச் சாக்கிரமெந்தில் அடங்கிய புறம்பான அடையாளங்கள் எவை?

?டை. நாம் வாங்கிக்கொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்ட அப்பமும் திராக்ஷரசமுமே.

8-வினா. இந்தச் சாக்கிரமெந்தில் அப்பத்தையும் ரசத்தையும் ஏற்படுத்த வேண்டியதென்ன?

விடை. அப்பம் மனுஷனுடைய இருதயத்தை ஆதரிக்கத்தக்கதும், திராக்ஷரசம் அவனுடைய இருதயத்தை மகிழ்ச்சியாக்கத்தக்கதுமாயிருப்பதினால்தான். சங். 104: 15.

-வினா. சாக்கிரமெந்தில் புறம்பான அடையாளத்தை உபயோகிப்பதற்கு முகாந்தரமென்ன?

விடை. இவ்வுலகத்தில் வாசம்பண்ணுகிற மாம்சத்துக்குரியவர்களாகிய நாம் ஆவிக்குரியவைகளை நேராய்ப் பார்க்க சக்தியற்றவர்களாயிருக்கிறோம். ஆகையால் காணப்படாதவைகளைக் காணப்படுகிறவைகளின்மூலமாய்ப் பார்த்து உணர்ந்துகொள்ளவே இதை உபயோகித்திருக்கிறது.

...அப்பம் எதைக் குறிக்கிறது?

...மக்காகச் சிலுவையிலறையப்பட்டு நொறுங்குண்ட கிறிஸ்...ன் சரீரத்தைக் குறிக்கிறது.

11-வினா. திராக்ஷரசம் எதைக் குறிக்கிறது ?
விடை. நமக்காகச் சிந்தப்பட்ட கிறிஸ்துநாதரின் விலைமதிக்கப்பட
திருரத்தத்தைக் குறிக்கிறது.

12-வினா. அப்பத்தைப் பிட்குதல் எதைக் காட்டுகிறது ?
விடை. கிறிஸ்துநாதரின் சரீரம் நமக்காகச் சிலுவையில் பலவகை
லும் குத்தருவி வேதனைப்பட்டதைக் காட்டுகிறது.

13-வினா. அப்பத்தையும் ரசத்தையும் பரிமாறுவது எதைச் குறிப்
கிறது ?
விடை. கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் நமக்கருளப்படும் கிருபைப்
சாதங்களையும், விசுவாசித்து, மனந்திரும்பி, அவருக்குக் கீழ்
பட்டிருக்கிறவர்களுக்கு அளிக்கப்படும் அவருடைய எ
லாப் புண்ணிய பலன்களையும் குறிப்பிக்கிறது.

14-வினா. அப்பத்தையும் ரசத்தையும் வாங்குவது எதைக் காட்டுகிறது
விடை. கிறிஸ்து சுவிசேஷத்தில் நமக்கு எப்படி அளிக்கப்பட்டி
கிறரோ அப்படியே நாம் அவரை முழு இருதயத்தோடும் அ
ங்கீகாரம்பண்ணிக்கொள்வதையும், அந்த அளித்தலின் நி
தனைக்கு ஒத்து இணங்கிக்கொள்ளுகிறதையுங் காட்டுகிறது

15-வினா. அப்பத்தைப் பொசிப்பதும், திராக்ஷரசத்தைப் பானம்பண்
வதும் எதைக் குறிக்கிறது ?
விடை. நாம் கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதையும், அதால் நம்
டைய ஆத்துமா திர்ப்தியடைவதையும் குறிக்கிறது.

16-வினா. இந்தச் சாக்கிரமெந்தில் வேறென்ன அதன விசேஷ
கிறது ?
விடை. தேவன் கிறிஸ்துவின்மூலமாய் நமக்குத் தேவனாயிருக்கக்
தமுடையவராயிருக்கிறாரென்று பலமாய் நிச்சயப்படுத்
தும், நாம் அவருடைய ஜனங்களானவர்கள் என்பதை
மாய் ஆட்கொள்ளுகிறதுமான கிருபை உடன்படிக்கை
முத்திரையாயிருக்கிறது.

17-வினா. புறம்பான அடையாளங்கள் மாத்திரம் ரக்ஷிப்புக்குப் பே
மென்றிருக்கலாமா ?
விடை. கூடாது. அவை குறித்துக் காட்டுகிற பொருளாகிய கி
துவை நோக்கிப் பார்ப்பதே அவசியம்.

18-வினா. கர்த்தருடைய இராப்போசனம் ஆசரிக்கப்படும் ஒழுங்
நற்கருணையிற் சேருகிறவர்கள் முழங்காற்படியிட்டு அ
வாங்கவேண்டுமென்று நியமித்திருக்கிறதே. அது நல்ல ஒழு
குதானா ?
விடை. அது நல்ல ஒழுங்குதான். பாத்திரமான வகையாய் அ
வாங்குகிறவர்கள் அதின்மூலமாய்க் கிறிஸ்துநாதரிடத்தில் (
ற்றுக்கொள்ளுகிற நன்மைகளை மகா முக்கியமென்று தாழ்
யொடும் நன்றியறிதலோடும் அறிக்கையிடும்படிக்கும், மற்ற
படி பரிசுத்த நற்கருணையில் நேரிடும் பரிசுத்தக் ரி லச்ச
கும் குழப்பத்துக்கும் இடமிராதபடிக்கும், இந்த
எற்படுத்தினது நல்லதுதான்.

19-வினா. அப்பமும் ரசமும் பிரதிஷ்டையானவுடன் தப்
கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாக மாறித்துக்
நினைக்கவும் சொல்லவும் கூடுமோ? அறிவிக்



விடை. கூடாது. நற்கருணை அப்பமும் ரசமுமாகிய பதார்த்தங்கள்
முன்போல அதனதன் சொந்த இயற்கையின்படி மாறாமலி
ருக்கிறது. மாறுகிறது என்று சொன்னால் அது இயற்கைப்
பிரமாணத்துக்கும், சாக்ஷிப்பிரமாணத்துக்கும் விரோதமாயி
ருக்கிறதே. மேலும் நமது இரக்ஷகராகிய கிறிஸ்துநாதரின்
இயற்கையான சரீரமும் ரத்தமும் இவ்விடத்திலில்லாமல் பர
லோகத்திலிருக்கிறது. கிறிஸ்துவின் இயற்கையான சரீரம்
ஒரேகாலத்தில் பலவிடங்களிலுமிருக்குமென்று சொன்னால்
அவருக்கு இயற்கையான சரீரம் உண்டென்கிற சத்தியத்திற்கு
விரோதமாயிருக்குமே. ஆகையால் அப்பமும் ரசமும் கிறிஸ்
துவின் சரீரமும் ரத்தமுமாக மாறிவிடுகிறதென்று சொல்வது
மிகவும் புத்தியீனம்.

20-வினா. கர்த்தருடைய இராப்போசனத்துக்கு யூக்கரிஸ்ற் (Eucharist.)
அல்லது தோத்திரஞ்செலுத்துதல் என்று பெயர் வந்ததென்ன?
விடை. கிறிஸ்துநாதர் இராப்போசனத்தை ஏற்படுத்தினபோது ஸ்தோ
த்திரஞ்செலுத்தினதினாலும் (1 கொரி. 11: 24.) நாமும் அவ
ருக்கொப்பாய் இந்தப் பந்தியில் அவரால் உண்டான நன்
மைகளை நினைவுகூர்ந்து அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்த
வேண்டியவர்களானபடியினாலும், ஸ்தோத்திரஞ்செலுத்துதல்
என்ற பெயர் வந்தது.

2
5-வினா. நமது இரக்ஷகர் இத்தருவாயில் ஸ்தோத்திரஞ்செய்யவேண்டிய
தென்ன ?
6-விடை. யூதருக்குள் பஸ்காவிருந்து புசிக்கப்படுகையில் குடும்பத்தலை
வன் அப்பத்தையும் திராக்ஷரசத்தையும் கையிலெடுத்து அவை
களை அருளின தேவனுக்கு நன்றியறிதலாய்த் துதிசெலுத்தின
வண்ணம் நமது ரக்ஷகரும் அப்பத்தையும் ரசத்தையும் எடுத்து,
அவைகளை அனுக்கிரகித்த தேவனுக்கு நன்றியறிதலாகவு.
இவைகளாற் குறிக்கப்படுகிற பொருளால் தமது ஜனங்களுக்கு
உண்டாகப்போகிற நன்மைகளுக்காகவும் ஸ்தோத்திரஞ்செய்
கிறார்.

22-வினா. இன்னமும் அவர் ஸ்தோத்திரஞ்செய்யவேண்டியதென்ன ?
விடை. கிறிஸ்துநாதருடைய ஜெபமானது அதிகமாய்த் தோத்திர
முறையாகவேயிருந்தது. இத்தருவாயில் ரக்ஷண்ணிய அதிபதி
யாகிய அவர் யுத்தக்களத்துக்குப்போக ஆயுதம் அணிந்தவ
ராயிருந்தபோதிலும், தாம் அடையும் வெற்றியைப்பற்றி நிச்
சயமுடையவராய் ஆயுதங்களைக் களைந்துவைத்து விட்டவர்
போல தோத்திரஞ்செய்கிறார்.

23-வினா. கர்த்தருடைய இராப்போசனமானது விருந்து என்று அழைக்
கப்படுவானேன் ?
விடை. பஸ்காப்பண்டிகையில் யூதரெல்லாரும் ஒருமித்து பஸ்கா
ஆட்டை விருந்தாகச் சாப்பிட்டதுபோல, கிறிஸ்தவர்களா
கிய நாமெல்லாரும் நமக்காக அடிக்கப்பட்ட நமது பஸ்கா
வாகிய கிறிஸ்துவை ஆவியின் பிரகாரம் இந்த இராப்போச
னத்தில் விருந்தாக அருந்துகிறதினால் இது விருந்து என்று
அழைக்கப்படுகிறது. 1 கொரி. 5: 7.

161994



24–வினா. இந்த விருந்துக்கு நம்மை அழைக்கிறதார்?

விடை. "எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள்" என்று அழைக்கிற இயேசுகிறிஸ்துநாதரும் அவருடைய நாமத்தினால் கூறி அறிவிக்கிற தேவஊழியக்காரருமே. லூக். 14: 17.

25–வினா. இது விஷயத்தில் நமது கடமை என்ன?

விடை. முதலாவது கிறிஸ்துவண்டை வந்து, அப்புறம் இந்த விருந்துக்கு வரவேண்டும்.

26–வினா. இந்த விருந்தில் நாம் எதை ருசிக்கிறோம்?

விடை. நமது இரக்ஷகராகிய கிறிஸ்துநாதரின் அன்பையும், அவருடைய கிருபையுமே ருசிக்கிறோம்.

27–வினா. இந்த விருந்தில் நமக்கு ஞாபகப்படுத்தப்படுகிற காரியம் என்ன?

விடை. பஸ்காவில் எகிப்தின் அடிமைத்தன விடுதலை நினைப்பூட்டப்பட்டதுபோல (யாத். 12: 14) இந்தத் திருவிருந்தில் பிசாசு, பாவம் உலகம் என்பவைகளினின்று உண்டான விடுதலையே ஞாபகப்படுத்தப்படுகிறது.

28–வினா. இராப்போசனமாகிய இந்த ஐக்கிய பந்தியில் நாம் யாரோடு ஐக்கியமாகிறோம்?

விடை. நமக்குத் தலைவராகிய கிறிஸ்துவோடு. 1 கொரி. 10: 16.

29–வினா. நாம் எதினால் அவரோடு ஐக்கியமாகிறோம்?

விடை. விசுவாசத்தினாலேயே ஐக்கியமாகிறோம்.

30–வினா. அவர் என்ன வகையாய் நம்மோடு ஐக்கியமாகிறார்?

விடை. தமது ஆவியைக்கொண்டு நமக்குள் வாசஞ்செய்கிறதினாலேயே ஐக்கியமாகிறார்.

31–வினா. இன்னும் நாம் யாரோடு ஐக்கியமாகிறோம்?

விடை. கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கையிடுகிற கிறிஸ்து சபை அனைத்தோடும் ஐக்கியமாகிறோம்.

32–வினா. சபையனைத்தோடும் ஐக்கியமாயிருக்குஞ் சலாக்கியம் எதினால் நமக்குக் கிடைத்திருக்கிறது?

விடை. நாம் கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருப்பதினால்தான்.

33–வினா. அப்படியானால் ஜாதி வித்தியாசம் பார்க்கவேண்டுமோ?

விடை. நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே அவயவமாயிருக்கிறதினால் பார்க்கக் கூடாது.

34–வினா. பல தேசத்தார், நிறத்தார், பாஷைக்காரராகிய கிறிஸ்தவர்கள் யாவரும் ஒரே அவயவமாயிருப்பதெப்படி?

விடை. ஒரே சிரசைச்சேர்ந்த அநேக அவயவங்கள் ஒரே சரீரமாகிறதுபோலவும், ஒரே வேரைச் சேர்ந்த பல கொடிகள் ஒரே திராக்ஷசெடியாகிறதுபோலவும், பூலோகம் எங்குமிருக்கப்பட்ட பல அவயவங்களாகிய கிறிஸ்தவர்கள் யாவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சபைக்குட்பட்டு, ஒரே ஆவியினாலும் ஒரே சட்டத்தினாலும் ஆளப்படுகிறதினாலும், ஒரே உடன்படிக்கைக்குட்பட்டு, ஒரே சாயலையும் வாக்குத்தத்தையுமுடையவர்களாய் முடிவில் ஒரே சுதந்தரத்திற்குப் பாத்திரப்பட்டவர்களாயிருப்பதினாலும், அநேகரான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக ஒரே அவயவமாயிருக்கிறார்கள். நிறிவிக்

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| 2 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |